ஸ்ரீ:



# ஸ்ரீராமாநுஜன் 85

வருடச்சந்தா ரூ. 5

---

## இராமானுச நூற்றந்தாதி பாசுரம்

ஓதியவேதத்தினுட்பொருளாய் * அதனுச்சிமிக்க
சோதியைநாதனெனவறியாதுழல்கின்ற தொண்டர் *
பேதைமைதீர்த்த விராமானுசனைத் தொழும்பெரியோர்
பாதமல்லாலென்றனாருயிர்க்கு * யாதொன்றும்பற்றில்லையே. (85)


ஆசிரியர் :

**P. B. அண்ணங்கராசாரியர்**



க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம்.

1956 ஜனவரி மன்மத வருஷம் மார்கழிமீ

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# நாலாயிர திவ்யப்பிரபந்தப் பதிப்பு விளம்பரம்

(ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்)

---

அடியேன் இதுகாறும் நாலாயிர திவ்யப்பிரபந்தங்களுக்கு உரைகள் வெளியிட்டிருந்தாலும் பொது மக்களுக்கு உபயோகமாம்படி மூலம் மட்டும் பதிப்பித்ததில்லை. நெடுநாளாகப் பல ஆப்தர்கள் இதனை அவசியம் நிறைவேற்றித்தரவேணுமென்று வற்புறுத்தி வந்ததினால் தமிழ் லிபியிலும் தெலுங்கு லிபியிலும் தனித்தனியே பதிப்பிக்கத் தொடங்கி, தெலுங்கு லிபியில் முதலாயிரமும் திருவாய்மொழியாயிரமும் பூர்த்திசெய்து வெளியிடப்பட்டன. தமிழ் லிபியில் நாலாயிரமும் பூர்த்தியாகப் பதிப்பித்தாயிற்று. விசேஷ அநுபந்தம் அச்சிடப்பட்டு வருகின்றது. தைமாத முடிவுக்குள் இது வெளியிடப்பெறும். நாலாயிரமும் ஒரே ஸம்புடமாகவுள்ளது. தனித்தனியாயிரமாகக் கிடைக்க வழியில்லை. இதன்விலை சிறந்த பயிண்டுடன் 5 ரூ. மட்டும். ஏககாலத்தில் 20 பிரதிகள் வாங்கிக்கொள்பவர்களுக்கு அதிகப்படியாய் இரண்டு பிரதிகள் கொடுக்கப்படும். 40 பிரதிகள் வாங்குமவர்களுக்கு, மேலே 5 பிரதிகள் கொடுக்கப்படும். இவ்வண்ணமாகப் பெற விருப்பமுள்ளவர்கள் முன்னடியே முன்பணம் செலுத்தி, ரைல்வே பார்ஸல் அனுப்புவதற்கு ஸ்டேஷனும் முழு விலாசமும் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும்.

இப்பதிப்பு இந்த விளம்பரத்தின் அளவான டபிள் கிரவுன் ஸைஸில் அமைக்கப்பட்டுள்ளது பூருவாசாரியர்களின் வியாக்கியானங்களில் ஆதரிக்கப்பட்டுள்ள பாடங்களைத் தள்ளிப் புதிய பாடங்களைக் கற்பனைசெய்து வெளியிடுமவர்களின் பதிப்புகளைக்கண்டு மிகவும் மனங்கலங்கிநிற்கும் ஆத்திகர்களின் ஸந்துஷ்டிக்காகவே இப்பதிப்பு அமைக்கப்பட்டது.

## இப்பதிப்பில் அடங்கியுள்ள விஷயங்களாவன;

1. பதிப்பாசிரியரின் முன்னுரை. இதுமட்டும் இந்தவிளம்பரத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது.
2. தனியன்கள்.
3. முதலாயிரம்.
4. பெரியதிருமொழியாயிரம்.
5. இயற்பாஆயிரம்.
6. திருவாய்மொழியாயிரம்.
7. இராமாநுச நூற்றந்தாதி.
8. உபதேச ரத்தினமாலை.
9. திருவாய்மொழி நூற்றந்தாதி.
10. இயல்சாத்து; சாத்துமுறை வாழிதிருநாமங்கள்.
11. ஆழ்வார்களின் சரித்திரம்.
12. திவ்யப்பிரபந்தப் பாசுரங்களின் அடைவு.
13. பாசுரங்களின் முதற் குறிப்பகராதி.
14. திவ்யதேச மார்க்கப்ரதர்சினி. (திவ்யதேசங்கள் ஸேவிக்க ரைல்மார்க்கம் காட்டுவது)
15. திவ்யதேசங்களுக்குப் பாடல் விசேஷ விவரணம்.
16. திவ்யப்ரபந்த பகவத்கதாம்ருதம். [நாலாயிரத்திலும் எடுத்தாளப்பட்ட பகவத்கதைகளின் விவரணம்.]

12 முதல் 16 வரையிலுள்ள விஷயங்கள் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டவை.

விலாஸம்:

**P. B.** அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

☞ இந்த விளம்பரத்தில் இரண்டாவது பக்கம் தொடங்கி எட்டாவது பக்கம் வரையிலுள்ள விஷயம் திவ்யப்ரபந்தப் பதிப்பில் சேர்ந்ததன்று; அது அன்பர்களுக்குத் தனிப்பட்ட அறிவிப்பு. மிகமுக்கியமாக நோக்கத்தக்கதாமது.

ஸ்ரீ:

# "திவ்யப்பிரபந்தம் முதலாயிரம்"

## (ஸ்ரீகாஞ்சீ, பிரதிவாதி பயங்கரம், அண்ணங்கராசாரியர்.)

பெருந்தமிழாசிரியராகப் புகழ் பெற்று விளங்கும் திருவாளர். எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் திவ்வியப் பிரபந்தங்களைத் திருத்தமான முறையில் பதிப்பிக்கவெண்ணி முதலாயிரம் மட்டும் இப்போது பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். அதன் பதிப்புரையில் (முடிவில்) "பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராச்சாரியர் அவர்களும் எனது வேண்டுகோள்படி ஒரு முறை வந்து இப்பதிப்பு விஷயமாகக் கலந்து தமக்குத் தோன்றிய சீர்திருத்தங்களைக் கூறினர்கள்; இப்பெரியார்களுக்கும் எனது நன்றி உரித்தாகிறது. இவ்வாறு எனது முயற்சியை ஊக்கி வந்த அன்பர்கள்........." என்று இனைய சில வார்த்தைகள் எழுதப்பட்டுள்ளன. அதனாலும், பொதுவாக உலகத்திற்குச் சில வுண்மைகளைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாட்டினாலும் இதனை யெழுத முன்வந்துளேன்.

மேலே குறித்த பெரியார் தமிழாராய்ச்சியில் புகழ்பெற்ற மேதாவிகள்; அவருடைய பரிசயம் எனக்கு ஸமீபகாலத்தில்தான் வாய்த்தது. அவர் தாம் பலவிடங்களிலிருந்து திவ்யப்பிரபந்தங்களின் ஏட்டுப் பிரதிகளை வரவழைத்திருப்பதாகவும், அவற்றைக்கொண்டு பாடங்களைத் திருத்தி அச்சிடப்போவதாகவும் தெரிவித்து ஒரு முறை நேரில் வந்து பேசவேணுமென்று கோரிக் கடிதமெழுதினர். அப்படியே ஸௌகரியமான வொருநாளில் நான் அவசியம் வருகிறேனென்று தெரிவித்து, எனது சில அபிப்பிராயங்களையும் ஸாரமாகத் தெரிவித்திருந்தேன். அப்பெரியார்க்கு நான் எழுதியகடிதத்திற்குப் பிரதி பிம்பம் வைத்துக்கொள்ளாமையினல் நான் அவர்க்குத் தெரிவித்த அபிப்பிராயம் இன்னதென்பதை மட்டும் இங்குத் தெரிவிக்கிறேன்.

> "தமிழ் வேதமென்று போற்றப்படும் திவ்யப் பிரபந்தங்கள் வடமொழி வேதம் போல் ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாயஸ்தர்களால் ஆசார்ய சிஷ்ய க்ரமேண பரம்பரையாக ஓதப்பட்டு வருவதால் இப்போது புதிதாக ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பாடங்களைத் திருத்த விரும்புவது உசிதமன்று. நாயன்மார்பாடல்கள், கம்பராமாயணம் முதலான ஏனைய தமிழ் நூல்கள் இங்ஙனே ஆசார்ய சிஷ்ய பரம்பரையில் ஓதப்பட்டு வாராமையின் அவற்றை ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு திருத்த முயல்வது யுக்தமாகக் கூடும். திவ்யப்பிரபந்தங்களில் அங்ஙனம் திருத்தங்கள் செய்ய முயல்வது தகாது. இவற்றுக்குப் பூருவாசாரியர்கள் பலரும், விசேஷித்துப் பெரியவாச்சான்பிள்ளையும் வியாக்கியானம் செய்தருளி யுள்ளார்கள். அந்த வியாக்கியானங்களுக்கு இணங்காத பாடங்களை ஆங்காங்குச் சிலர் ஓதிவருவதுண்டு; அவை சிறுபான்மை அச்சுப் பிரதிகளிலும் புகுந்திருப்பதுண்டு; அவற்றை நுட்பமான ஆராய்ச்சியினல் கண்டு பிடித்துத் திருத்தங்கள் செய்தால் இது மெச்சத்தக்கதாகும். இதற்குச் சேர வியாக்கியானங்களின் ஏட்டுப்பிரதிகளைச் சம்பாதித்து ஆராய்ச்சிகள் செய்வது நலம்."

என்கிற இவ்வபிப்பிராயமே அடியேன் தெரிவித்தது. பிள்ளையவர்களின் பல கடிதங்கள் கிடைத்த பிறகு ஒருநாள் அவரிடம் சென்று வார்த்தையாடின போதும் இவ்வபிப்பிராயத்தையே விரித்துரைத்ததுமல்லாமல், அவர்கள் தாம் செய்திருப்பதாகக் காட்டிய திருத்தங்கள் பலவற்றைப் பூர்வாசார்ய வியாக்கியான விருத்தமென்று விளக்கியும் வந்தேன். அவர்கள் கைக்கொண்ட வழியில் அவர்களது முயற்சியை நான் ஊக்கினவனல்லேன்.

18464

அவர்கள் தம்முடைய மனோரதப்படியே திவ்யப் பிரபந்தப்பதிப்பைத் தொடங்கி முதலாயிரம் என்னும் முதற்பகுதியை அச்சிட்டு வெளியிட்டு எனக்கும் ஒரு பிரதியை அன்புடன் அனுப்பியுள்ளார்கள். மார்கழித்திங்கள் பிறப்பதற்கு முன்னம் திருப்பாவையை மட்டும் தனியே பதிப்பித்துப் பல பெரியார்கட்கு அனுப்பித்தந்தார்கள்; எனக்கு மது கிடைத்தது. திருப்பாவையில் இரண்டாவது பாசுரமாகிய "வையத்து வாழ்வீர்காள்" என்னும் பாட்டை என்னுடைய உபந்யாஸ கோஷ்டியில் ப்ரவசனம் செய்ய நான் புறப்படுந்தருணத்திலேயே அஃது எனக்குக் கிடைத்தமையால் அப்பாட்டில் இவர்கள் செய்திருந்தவொரு திருத்தத்தின் பொருத்தமின்மையை அப்போதே நான் ஸபையில் விளக்கிப் பேச நேர்ந்தது; அதை யாவரும் தெரிந்துகொள்ள இங்குச் சிறிது விவரிக்கிறேன்.

*வையத்து வாழ்வீர்காள் பாசுரத்தின் மூன்றாமடியில் "பையிற் துயின்ற" என்று இவர்களது பதிப்பு உள்ளது; இதனால் இங்குப் பையில் என்கிற சொல் வடிவம் இவர்கள் கொண்டதாகத் தேறுகின்றது. இது பாடமன்று; *பையத் துயின்ற* என்பதே பூருவாசாரியர்கள் வியாக்கியானம் செய்தருளினதும் எங்கும் சேவிக்கப்படுவதுமான சுவைமிக்க பாடம். பெரியவாச்சான் பிள்ளையின் மூவாயிரப்படி வியாக்கியான பங்க்திகள் வருமாறு;—

> "[பாற்கடலுள் பையத் துயின்ற] பரமபதத்தினின்றும் ஆர்த்தரக்ஷணத்துக்காகத் திருப்பாற்கடலளவும் ஒரு பயணமெடுத்துவிட்டு ஜகத்ரக்ஷண சிந்தையிலே அவஹிதனாய் ஆர்த்தத்வனிக்குச் செவி கொடுத்துக் கொண்டு கிடக்கிறபடி.........[பையத்துயின்ற] பிராட்டிமாரோட்டைப் போகத்துக்கு இடங்கொடாதே, ஆராலே ஆருக்கு என்ன நலிவு வருகிறதோவென்று அதிலே அவஹிதனாய்க் கொண்டு சாய்ந்தபடி."

இனி, அழகியமணவாளப்பெருமாள்நாயனாரருளிச்செய்த ஆறாயிரப்படிஸ்ரீஸூக்தி:-

> "[பைய] *மெள்ளத்துயின்றானை* என்னுமாபோலே;
> ஆர்த்தநாதம கேட்கும்படி அசங்காதே கிடக்கிறபடி."

இந்த வியாக்கியான ஸ்ரீஸூக்திகளினால் 'பையத் துயின்ற' என்பது தான் பூருவர்கள் கொண்ட பாடமென்று நன்கு விளங்கும். இவர்கள், 'பூருவர்களின் வியாக்கியானத்தைப் பார்ப்பவர்களல்லோம் நாம்' என்று சொல்லவுங் கூடுமாதலால் அந்த வியாக்கியானத்தை விட்டிடுவோம். ஆண்டாள் திருவாக்கில் எவ்விதமான பாடம் அவதரித்திருக்குமென்று ஆராய்வோம். ஆண்டாள் செய்தருளும் பிரயோகங்கள் பெரும்பாலும் பெரியாழ்வாருடைய திருவாக்குக்களையநுசரித்தவை. அவருடைய திருமொழியில் திருமாலிருஞ்சோலை வருணனையில் (4—2—9) "இந்திரகோபங்கள் எம்பெருமான் கனிவாயொப்பான்" என்றுள்ளது; ஆண்டாளும் தமது திருமொழியில் திருமாலிருஞ்சோலைப் பதிகத்திலேயே (9—1.) "இந்திரகோபங்களே யெழுந்தும் பரந்திட்டனவால்" என்கிறாள். அன்றியும், அவர் (3—5—6) *குப்பாயமென நின்று காட்சி தரும்* என்றவிடத்துக் குப்பாயமென்னுஞ் சொல்லை அபூர்வமாகப் பிரயோகித்தார்; அதை யடியொற்றி ஆண்டாளும் (14—4.) *போர்த்த முத்தின் குப்பாயம்* என்றாள். அன்றியும், அவர் (5—2—5.) *பாணிக்க வேண்டா நடமின்* என்று, தாமதித்தலென்னும் பொருளில் பாணித்தலென்னுஞ் சொல்லைப் பிரயோகித்தார்; ஆண்டாளும் (12—2.) *பாணியாதென்னை மருந்து செய்து* என்னுமிடத்து அச்சொல்லைக் கையாண்டனள். இந்திரகோபம், குப்பாயம், பாணித்தல் என்னுமிவை வேறு ஆழ்வார்களின் திவ்யஸூக்திகளில் காணக்கிடைக்கா. இங்ஙனே மற்றும் பலவுமுள. பிரகிருதம் இவ்வளவு காட்டியது போதும். பெரியாழ்வார் திருமொழியில் (1—5—1.) *உய்யவுலகுபடைத்துண்டமணிவயிறா!—பைய வுயோகுதுயில் கொண்ட பரம்பரனே* என்றருளிச்

செய்திருப்பது பிரசித்தம். எம்பெருமான் துயில்கொள்ளுதலைப் பற்றிப் பேசுமிடத்து (பைய) என்றிட்டுப் பேசுவதுண்டென்பதைப் பிராமாணிகர்கள் இதனால் நன்கு தெளியலாம். 'பைய' என்பதற்கு மெள்ள என்று பொருள். பேயாழ்வார் தமது திருவந்தாதியில் (93) *கனைத்துலவு வெள்ளத்து ஓர்பிள்ளையாய் மெள்ளத்துயின்றானே* என்றார். இப்பாசுரத்தை மேற்கோளாக வெடுத்துக் காட்டியே (மேலே நாமுதாஹரித்த) ஆறாயிரப்படி வியாக்கியானம் அவதரித்துள்ளது. பெரியாழ்வாருடைய ஸுஸ்பஷ்டமான ப்ரயோகம் போதும். ஆக, பையத் துயில்கொண்ட பரம்பரன் என்ற திருத்தந்தையாரைப் பின்பற்றியே ஆண்டாள் *பையத்துயின்ற பரமன்* என்றாள் என்பது அறுதியிட வெளிது.

இங்ஙனே பலவாற்றினும் பொருத்தமுடைத்தாய்ச் சீரிய பொருளுமுடைத்தான அநாதி பாடத்தைத் தள்ளிப் "பையிற் துயின்ற" என்றொரு செவிக்கினாத பாடத்தைப் புகவைத்தது என்னோ? ஸதாசார்ய ஸேவை பண்ணாதார் சிலர் திவ்ய ப்ரபந்தப் பாசுரங்களை வாய்வந்தபடி சொல்லிப் போருவதுண்டு. அன்னவர்கள் "பையில் துயின்ற" என்று சொல்லி வருவதுண்டு போலும்; அவர்கள் திருப்பாவையின் முதற்பாட்டில் "ஏரார்ந்த கண்ணீர் அசோதை யெளஞ்சிங்கம்" என்றும் "பாரோர் பழகப் பணிந்தேலோரும்பாவாய்" என்றும்...இங்ஙனே பலபலவும் யதேஷ்டமாகச் சொல்லுவதுண்டு; இவையுங்கூட இனிப் பதிப்புகளில் ஏறும் போலும்.

பிள்ளையவர்களது முதலாயிரப் பதிப்பை இன்று நாம் சிற்சில விடங்களிற் பார்த்தபோது "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல காலவகையினானே" என்ற நன்னூற் சூத்திரத்தையே நினைக்க நேர்ந்தது. மாறுபடுத்தியிருக்குமிடங்களை யெல்லாம் ஒன்றுவிடாமல் எடுத்துக்காட்டி, அவற்றின் பொருத்தமின்மையையும் விளக்கிக்காட்ட நமக்குக் குதூஹலமுண்டெனினும் இது நமக்கு அவசியமற்ற பணியேயாகும்.

மதுரகவி யாழ்வாரருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பில் (10)*பயனன்றாகிலும் பாட்டின் ஈற்றடியை "முயல்கின்றேனுன்றன் மொய் கழற்கன்பையே" என்றே உலகமெல்லாம் ஸேவித்து வருகிறது. வியாக்கியானங்களில் ஆதரிக்கப்பட்ட பாடமும் அதுவே. இப்பதிப்பில் அது தள்ளப்பட்டு "அவன் மொய்கழற்கன்பையே" என்கிற புதியபாடம் புகுத்தப்பட்டது, கீழ் ஒன்பது பாசுரங்களிலும் ஆழ்வார் படர்க்கையாக வைத்துப் பேசப்பட்டிருக்க, இப்பாட்டிலொன்றில் மட்டும் முன்னிலையாக வைத்துப் பேசுவது பொருந்தாதென்று இங்ஙனே சில அற்ப காரணங்களைக் கருதி, உலகம் முழுவதும் வழங்கும் பாடத்தை ஸஹஸா தள்ளுவது மஹான்களுக்கு உற்றதன்று. இராமானுச நூற்றந்தாதியில் இராமானுசனைப் படர்க்கையாக வைத்துப் பலபாசுரங்கள்; முன்னிலையாக வைத்துப் பலபாசுரங்கள். ஆழ்வாரருளிச் செயல்களிலும் இங்ஙனே பலபல. திருப்பல்லாண்டில் (8)*உடுத்துக் களைந்த நின்பீதக வாடையுடுத்து*என்கிறமுதலடியில் முன்னிலை; *படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்கு*என்ற ஈற்றடியில் படர்க்கை. திருப்பாவையில் (10)'நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்' என்ற முதலடி முன்னிலை; 'மாற்றமுந் தாராரோ வாசல் திறவாதார்' என்ற இரண்டாமடி படர்க்கை. இவ்விடங்களில் இவர்தாமும் திருத்தம் செய்திலர். பிறகு ஸாவகாசமாக இவற்றை விமர்சிப்போம்.

பிள்ளையவர்கள் பதிப்புரையில் எழுதியுள்ள சில விஷயங்களைப்பற்றிச் சிறிது சொல்லுகிறோம். அவர் எழுதியுள்ளார்—"தற்காலத்துக் கொள்கைப்படி ஸ்வாபதேசத்தைக் காட்டிலும் அந்யாபதேசமே சிறந்ததாகும். உண்மைக் கவிதை இவ்வெளிப்படைப் பொருளில் தான் உள்ளது என்பர் தற்காலத்து அறிஞர்.

 18464

இதனை மட்டும் தெளிவாக விளக்கும் வியாக்கியானங்கள் மிகச் சிலவே. வடமொழி கலந்த மணிப்பிரவாளநடையில் எழுதப்பட்ட இவ்வியாக்கியானங்கள் பொது மக்களுக்கு உதவவில்லை''—என்று. இதற்குச் சொல்லுகின்றேன்.

திவ்வியப்பிரபந்தங்கள் ஸ்வாபதேசார்த்த மெனப்படும் உள்ளுறை பொருளையே உயிராகக்கொண்டு அவதரித்தவையென்பது பூருவாசாரியர்களின்கொள்கை. இது மிதமதிகளுக்கும் உடன்பாடேயாகும். இதனை மறுக்கப் புகுவது தகுதியன்று. ஆழ்வார்களும் உள்ளுறை பொருளையுட்கொண்டே பாசுரங்களைப் பாடியுள்ளார்களென்பது தெளிவாக விளங்கா நின்றது. சிறிதே யெடுத்துக் காட்டுகிறோமிங்கு. நம்மாழ்வார் தமது முதற்பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் (54) வண்டுகளை விளித்து ஒரு பாசுரமருளிச் செய்கிறார்—*வீசுஞ்சிறகாற்பறத்தீர்* என்று தொடங்கி. இதில் ''விண்ணோர்பிரானார் மாசில் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே!'' என்றது குறிக்கொள்ளத் தக்கது. எம்பெருமானுடைய பாதாரவிந்தத்திலே எம்மைக் கொண்டு கூட்டுகின்ற வண்டுகளே! என்றபடி. இவ்வடை மொழியை ஏற்றுக் கொள்ளுமாற்றல் சாதாரண வண்டுகளுக்கு உண்டாவென்று சிறிது விமர்சிக்க வேணும். பிராட்டிபோலே புருஷகார க்ருத்யத்தைச் செய்து எம்பெருமானுடைய பாதாரவிந்தங்களிலே நம்போன்ற ஸம்ஸாரிசேதநர்களைச் சேர்ப்பிக்கவல்ல ஆசாரியர்களையே இங்கு வண்டாக மறைத்துப் பேசுகிறாராழ்வார் என்பது எளிதாக விளங்கவில்லையா? இதற்கு அடுத்த பாசுரம் *வண்டுகளோ வம்மின், நீர்ப்பூ நிலப்பூ மரத்தி லொண்பூ உண்டு களித்துழல்வீர்......*என்பது. நீர்ப்பூக்களான தாமரை முதலானவற்றிலும், நிலப்பூக்களான மல்லிகை முதலானவற்றிலும், மரப்பூக்களான பாரிஜாதம் முதலானவற்றிலும் படிந்து வண்டுகள் மதுவுண்டு களிக்கின்றனவென்பது இயல்பே; *விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழ்ச் சேர்விக்கும் வண்டுகளுக்கு இத்தன்மையை யருளிச் செய்யாநின்ற ஆழ்வார்க்கு இப்பொருளா உத்தேச்யமாகும்? நீர்ப்பூவென்கிறது *பாற்கடலுள் பையத்துயின்ற பரமனை. நிலப்பூவென்கிறது *மண்மீதுழல்வாயெனப்பட்ட ராமக்ருஷ்ணாதி விபவமூர்த்திகளை. மரத்திலொண்பூவென்கிறது — *சேணுயர்வானத்திருக்கும் தேவபிரானெனப்பட்ட பரவாஸுதேவனை. ஆக, பரத்வ பரமான வேதங்களையும், ராமக்ருஷ்ணாதி விபவாவதார பரங்களான இதிஹாஸ புராணங்களையும், வ்யூஹபரமான பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களையும் அநுபவித்துக் களிக்கின்றவர்களென்ற பொருளே இங்கு உள்ளுறையாகவுள்ளதென்பதை அறியவல்ல பாக்யசாலிகள் ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியர்களே யன்றோ.

"வ்யங்க்யார்த்தங்களையே உயிராகக் கொண்டது உத்தம காவியம்' என்பர் வடநூலாரும். ஆண்டாளும் திருப்பாவையில் (7)* ஆனைச் சாத்தம் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ*என்கிறாள் 'பேசின பேச்சு கேட்டிலையோ' என்பதே போதுமாயிருக்க, 'பேச்சரவம் கேட்டிலையோ' என்றது—வெளிப் பேச்சுமட்டும் கேட்பதில் பயனில்லை; பேச்சின் தொனிப்பொருளும் கேட்கவேணும் என்று உணர்த்தியவாறு. (அரவம்—தொனி.)

பூருவாசாரியர்கள் வடமொழி கலந்த மணிப்ரவாள நடையில் வியாக்கியானங்களை எழுதி வைத்திருப்பதுபற்றிக் குறை கூறுவதும் ஏலாது. திவ்யப்பிரபந்தங்கள் வடமொழி வேதப் பொருள்களை மிகக் கொண்டனவாதலால் அத்தகைய நூல்களுக்கு உபய வேதாந்த ஸாகர பாரங்கதர்களான ஆசார்யர்களே வியாக்கியான மியற்றத் தகுதி பெற்றவர்கள். அவர்கள் மணிப்ரவாள நடையில் எழுதியிருப்பதுதான் ஏற்றது. அதன் அருமை பெருமைகளைக் கீர்த்திமூர்த்தியான மஹா மஹோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி. சாமிநாதையரவர்கள் ஒருவரே உள்ளபடி உணரவல்லார். அடுத்த பக்கத்தில் அவருடைய வியாஸம் காண்மின்,

சாமிநாதையரவர்கள் 1939-ஆம்வருடத்தில் எழுதி அச்சிட்டு வெளியிட்ட நல்லுரைக் கோவை நாலாம் பாகத்தில், தமது ஆசிரியரான வித்துவான் தியாகராச செட்டியார் அவர்களின் சரிதை யெழுதி வருகையில் அதில் 159-ஆம் பக்கத்தில் ஆரம்பமாகி 163-ஆம் பக்கத்தில் முடிகின்ற ஓர் பகுதி.

"பிறருடைய குறையைக் கண்டவிடத்துக் கண்டிக்கும் இயல்புடைய தியாகராச செட்டியார் தம்முடைய நிலையை நன்றாக உணர்ந்திருந்தார். தம்முடைய அளவுக்கு மிஞ்சிய காரியத்தைப் பிறர் வற்புறுத்தினாலும் செய்யார்; இது சிலரிடத்தில் மாத்திரம் காணப்படும் அருமையான குணம். திருச்சிராப்பள்ளியிலும் வேறு இடங்களிலும் சிரஸ்தேதாராகவும் டிப்டி கலெக்டராகவும் இருந்து விளங்கிய திரு. பட்டாபிராம பிள்ளை யென்பவர் தமிழபிமானம் மிக்கவர். தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் பாதுகாக்கும் இயல்பினர்; மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை நன்கு அறிந்தவர்; ஸ்ரீ தியாகராச செட்டியாரிடத்தில் மிக்க அன்பு பூண்டவர்; அறிவாளிகள் நிலையான காரியங்கள் செய்ய வேண்டுமென்பது அவருடைய விருப்பம். திவ்யப் பிரபந்தங்களுக்குப் பெரியோர்களால் வடமொழி தென் மொழியிற் செய்யப்பெற்ற வியாக்கியானங்கள் இருப்பது போலத் தேவார திருவாசகங்களுக்கு இல்லையே யென்ற வருத்தம் அவருக்கு உண்டு

தியாகராச செட்டியார் உபகாரச் சம்பளம் பெற்றுத் திருவானைக்காவில் சில ஆண்டுகள் இருந்தபோது பட்டாபிராமபிள்ளை அவர் வீட்டிற்கு அடிக்கடி சென்று பார்த்து வருவார். அப்போது அவரைத் திருவாசகத்திற்கு உரை எழுதவேண்டுமென்று வற்புறுத்திக் கூறுவார். அன்றியும் அங்கங்கே நிகழும் கல்யாணங்களை விசாரிக்கப் போன காலங்களிலும் மற்ற இடங்களுக்குச் சென்றிருந்த காலங்களிலும் அவரைச் சந்தித்தபோதெல்லாம் மேலும் மேலும் கூறுவார்; "எழுத ஆரம்பித்தீர்களா? எவ்வளவு ஆயிற்று" என்று கேட்பார்; அருகிலுள்ள கனவான்களிடம், "இவரிடம் எவ்வளவு நாளாகச் சொல்லி வருகிறேன்; கேட்க மாட்டேனென்கிறாரே!" என்று சொல்லுவார். ஒரு நாள் செட்டியார் திருச்சிராப்பள்ளியிலுள்ள உறவினரொருவர் வீட்டில் நிகழ்ந்த ஒரு துக்கத்துக்காக அங்கே சென்று விசாரித்து நீராடி விட்டு ஈரத்துணியோடு மீண்டு காவிரி யாற்றுப் பாலத்தின் மேல் நடந்து வந்தார். அப்பொழுது நடுப்பகல் பன்னிரண்டு மணி நேரம். செட்டியார் வெயிலாலும் பசியாலும் மிகவும் களைப்படைந்திருந்தார். அச்சமயம் பட்டாபிராம பிள்ளை ஸ்ரீரங்கம் சென்று பெருமாளைத் தரிசனம் செய்து விட்டு மார்பிற் சந்தனம் விளங்க உத்ஸாகமாக எதிரே ஒரு வண்டியில் வந்தார். செட்டியாரைக் கண்டவுடன் அவர் வண்டியை நிறுத்திக் கீழே இறங்கினர்; செட்டியாரை யணுகி க்ஷேம சமாசாரம் விசாரித்த பின்பு வழக்கம் போலவே 'திருவாசகவுரை எவ்வளவாயிற்' றென்று கேட்டார். செட்டியாருக்குக் கோபம் உண்டாயிற்று; "நீங்கள் கொஞ்சமாவது திருவாசகத்தின் பெருமையை அறிந்து கொள்ளவே யில்லை யென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன் அதற்கு என்னால் உரை எழுத முடியுமா? திருவாசகம் எவ்வளவு! என்னுடைய படிப்பு எவ்வளவு! அதற்கு உரையெழுத வேண்டுமென்றால் வேதம், உபநிஷதம், ஆகமங்கள், புராணங்கள், யோக சாஸ்திரங்கள் முதலியவை தெரிய வேண்டாமா? தமிழில் உள்ள இலக்கண இலக்கியங்களையும் சில சைவ சித்தாந்த சாஸ்திரங்களையுமே படித்த நான் எப்படி எழுத முடியும்?" என்றார்.

அதற்குப் பட்டாபிராம பிள்ளை:—"திவ்யப் பிரபந்தத்திற்கு அவர்கள் வியாக்கியானம் செய்ய வில்லையா?" என்று கேட்க, அதற்குச் செட்டியார் "என்ன ஐயா! உங்களுக்கு அவர்களுடைய படிப்பின் அளவு சிறிதேனும் தெரியாது போல் இருக்கிறது! அவர்கள் வடமொழி தென்மொழி இரண்டிலும் சிறந்த புலமையுடையவர்கள்; அவர்களது உரையினாலல்லவா நூலின் பெருமை அதிகமாகின்றது? நான் உரை எழுதினால் திருவாசகத்திற்கு எவ்வளவு குறைவு உண்டாகும் தெரியுமா? என்னுடைய உரையினால் அதற்குக் குறைவு ஏற்பட வேண்டுமென்பது தங்கள் எண்ணமோ?.........." (இதற்கு மேலுள்ள வாசகங்களும் அதிலேகாண்க)

பெரியாழ்வார் திருமொழியில் மூன்றாம்பத்தின் முதற்பதிகம் *தன்னேராயிரம் பிள்ளைகளோடு* என்று தொடங்குவது. இதில் பாட்டுத்தோறும் ஈற்றடியை உற்று நோக்கினால் ஒரு விசேஷம் தெரியவரும். அதாவது, ‘அன்னே யுன்னை யறிந்து கொண்டேன், அன்பாவுன்னை, அம்மாவுன்னை, அய்யாவுன்னை, அப்பாவுன்னை, அரம்பாவுன்னை, அரட்டாவுன்னை, ஆயாவுன்னை யறிந்து கொண்டேன்” என்றிப்படி அகர முதலதாகவே காணப்படுதல் இடையில் *வாளாவாகிலும் காணகில்லார்* என்கிற எட்டாம்பாட்டின் ஈற்றடி “காளாயுன்னை யறிந்து கொண்டேன்” என்றுள்ளது. எல்லாப் புத்தகங்களிலும் இங்ஙனமே பாடமுள்ளது; எங்கும் அத்யாபகர்களின் பாடமும் இதுவே. மூன்றாமடியின் இறுதியில் ‘நந்தன்’ என்கிற சொல் உள்ளது; அதைச் சேர்த்து “நந்தன்காளாயுன்னை யறிந்து கொண்டேன்” என்றோதி வருகிறார்கள். இங்கு நாம் ஓதி வருவது “நந்தற்காளாவுன்னை யறிந்து கொண்டேன்” என்றே. நந்தற்கு, ஆளாவுன்னை = இதுதான் கீழ்ப்பாட்டுக்களோடும் மேற்பாட்டுக்களோடும் மிகப்பொருந்தும். இதைப்பற்றி நம்முடைய திவ்யார்த்த தீபிகையுரையில் விசதமாகக் காணலாம். பிள்ளையவர்கள் செய்யும் திருத்தங்களில் இது தலையாக நிற்கத்தக்கது. ஆனால் இது சிந்தையில் கொள்ளப்படவேயில்லை. திருத்தங்களை அவசியமான விடங்களில் விட்டிட்டும், அவசியமற்ற விடங்களிற் செய்தும் போருவதனால் என்ன பயன்?

ஒரு சிறுவிஷயம் கேண்மின். அடியேன் இளம்பிராயத்திலேயே திவ்வியப் பிரபந்தங்களை வியாக்கியானங்களோடும் அதிகரித்து “மூலத்திலும் வியாக்கியானங்களிலும் ஸூர்க்கத்திப் பரீக்ஷை கொடுக்க ஸித்தமாயிருக்கிறேன்” என்று சொல்லிக்கொண்டிருந்தவன். ஸூர்க்கத்திப் பரீக்ஷையாவது, ‘கத்தியைத் தீட்டி எதிரே வைத்திட்டுப் பரீக்ஷை செய்யுங்கள், பரீக்ஷையில் தப்பினால் அந்தக் கத்தியினாலே நாக்கை யறுத்திடுங்கள்’ என்று சொல்லிப் பரீக்ஷை கொடுப்பது. இத்தகைய பரீக்ஷையை 19ஆம் பிராயத்தில் திருவல்லிக்கேணி வேதவேதாந்த வர்த்திநீ ஸபையில் கொடுக்கச் சென்றேன்- மூலத்தில் மட்டுமன்று, வியாக்கியானங்களிலும். அப்போது அந்த ஸபாவித்வான்கள் செய்த பரீக்ஷகளில் இரண்டுமட்டும் இங்குத் தெரிவிக்கப்படுகின்றன. கேண்மின் :—

(1) நாச்சியார் திருமொழியில் முதற்பதிகத்தில் ஒன்பதாம் பாட்டை [*தொழுது முப்போது முன்னடிவணங்கி யென்கிற செய்யுளை] எழுதிக் காட்டு என்றார்கள். உடனே அவர்களது கருத்தையறிந்த அடியேன் அப்பாட்டின் இரண்டாமடியில் முற்கூற்றைமட்டும் எழுதிக்காட்டினேன்—“பழுதின்றிப் பார்க்கடல் வண்ணனுக்கே” என்று எழுதிக்காட்டினேன். இங்கு, புத்தகங்களில் ‘பாற்கடல்’ என்றே பலரும் பதிப்பித்திருக்கின்றார்கள்; ‘பால்—கடல்’ என்று கருதி அங்ஙனம் பதிப்பித்தார்கள். அது பூருவாசாரியர்களின் வியாக்கியானத்திற்குச் சேராது: பார்—கடல் [பார் சூழ்ந்த கடல்] என்று ஸ்பஷ்டமாகக் காட்டிப் பெரியவாச்சான் பிள்ளை உரைவகுத்துள்ளார். அதை நான் கவனித்திருக்கிறேனா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே அவர்கள் இப்பாட்டை யெழுதிக் காட்டும்படி கட்டளையிட்டார்கள். அதைத் தெரிந்து கொண்ட வடியேன் ‘பாட்டை முழுவதும் எழுதுவது எதற்கு? அப்பகுதியைமட்டும் எழுதினால் அவ்வித்துவான்கள் உகப்பர்கள்’ என்றறுதியிட்டு அவ்வளவே யெழுதிக் காட்டினேன்.

(2) பெரியாழ்வார் திருமொழியில் (4-9-1) *மரவடியைத் தம்பிக்கு* என்னுஞ் செய்யுளை யெழுதக் கட்டளையிட்டார்கள். அச் செய்யுளில் மூன்றாமடியின் பிற்கூற்றை மட்டும் எழுதிக் காட்டினேன்—‘திருமங்கை மலர் கண்ணும்’ என்றெழுதிக் காட்டினேன். இங்கும் புத்தகங்களில் “மலர்க்கண்ணும்” என்றே பலரும் பதிப்பித்துள்ளார்கள். மலர்போன்ற கண் என்னும் பொருளில்தான் அங்ஙனே சந்தியாகும்; பூருவர்களின் வியாக்கியானம் அங்ஙனமில்லை; மலர்கின்ற கண் என்

றுள்ளதனால் [உவமைத் தொகையன்றிக்கே வினைத்தொகையாதலால்] 'மலர்கண்' என்று இயல்பாக எழுதினேன். பரீக்ஷகர்கள் இந்த மருமத்தை யுத்தேசித்தே பரீக்ஷை செய்திருந்தார்கள். இரண்டிலும் அடியேன் எழுதிக் காட்டியவற்றைக் கண்ட பரீக்ஷக வித்வான்கள் "இவனை நாம் பரீக்ஷைசெய்து பிழைக்க முடியாது" என்று பேசிக்கொண்டார்கள்.

ஆரியர்களே! இங்ஙனம் யானெழுதுவதைத் தற்புகழ்ச்சியின் பாற்படுத்த வேண்டா; பூருவர்களின் வியாக்கியானக் கடலில் இளமை தொடங்கியே யான் ஆழ அவகாஹித்தவன் என்பதை ஆனந்தமாக அறிவித்துக்கொண்டேனித்தனை. நமது பிள்ளையவர்களின் முதலாயிரப்பதிப்பில் மேலே காட்டின இரண்டிடங்களையும் முந்துறக் கண்ணுற்றேன்; 'மலர்க்கண்ணும்" என்றும் "பாற்கடல் வண்ணனுக்கே" என்றும் பழையபுத்தகங்களிற்படியேதான் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சியில் தலைசிறந்த இப்பெரியார் பூருவாசார்ய வியாக்கியானங்களிலே பரமப்ரதிபத்திகொண்டு இத்தகைய நுட்பங்களை இன்னமும் தோண்டித் தோண்டிக் கண்டறிந்து அவற்றை உலகுக்கு உதவினராகில் அது மிக மிகப் போற்றத்தக்கதாகும். அங்ஙனன்றிப் பூருவாசாரியர்களின் வியாக்கியானங்களிலே விப்ரதிபத்திகொண்டு, அவ்வுரைகளோடு சிறிதும் ஸம்பந்தப்படாத திருத்தங்களைச் செய்யவும் அவற்றைவெளியிடவும் மனங்கொண்டது ஆழ்வார்களின் திருவுள்ளத்திற்கு உகப்பாகாதென்று யான் கூசாது கூறுகின்றேன்.

பெரியாழ்வார் திருமொழியில் (3-6-8)*சிறுவிரல்கள் தடவி யென்னும் பாசுரத்தின் இரண்டாமடியில் "குறுவெயர்ப்புருவம் கூடலிப்ப" என்பதே எங்கும் வழங்கும் பாடம். இதில் அவத்யமொன்றுமிலது. லெக்ஸிகன் அகராதியிலும் 'கூடலித்தல்' என்றெடுத்து 'கிளர்ந்து வளைதல்' எனப் பொருளெழுதி 'குறுவெயர்ப்புருவங் கூடலிப்ப' என்று பெரியாழ்வார் திருமொழி—என்றெழுதப்பட்டுள்ளது. அப்பாடத்தைக் "குடிலிப்ப" என்று திருத்தியிருப்பது நேர்மையன்று. இதெல்லாம் குடிலச் செய்கையே யாகும்.

இருமொழிப்புலமைபெற்ற ஸ்ரீ வை. மு கோபால கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி ஸத்ஸம்ப்ரதாய பரம்பரையிற்படிந்து திவ்யப் பிரபந்தங்களை யோதினவர்: பூர்வாசார்ய வியாக்கியான ஸ்ரீஸூக்திகளில் பக்தியே வடிவெடுத்தவர். அந்த ஸ்வாமியும் இப்பதிப்பில் அச்சுத்தாள்கள் முதலியவற்றைக் கூர்ந்து நோக்கித் திருத்தங்களை உதவியவர் என்று பதிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப் பற்றின உண்மையை உணர்ந்துகொள்ள ஆவலுடையேன்.

இனி வெளிவரவிருக்கும் மூவாயிரப் பதிப்பிலாவது பூருவாசார்ய வியாக்கியானங்களோடு முரண்படாத பாடத்திருத்தங்களை உதவுவார்களென்று நம்பியிருக்கின்றது ஸ்ரீவைஷ்ணவவுலகம். பிள்ளையவர்கள் திருப்பல்லாண்டு தொடக்கத்திலேயே "அடியோமோடும் நின்னொடும்" என்றும் "அப்பாஞ்ச சனியமும்" என்றும் பதிப்பித்துள்ளார்கள். இவ்விரண்டு திருத்தங்களிலும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி விரோதம் யாதும் சங்கிக்க இடமில்லை. ஏட்டுப்பிரதிகளில் நின்னோடுமென்றிருக்கிறதா? நின்னொடும் என்றிருக்கிறதா? என்பது அறுதியிட முடியாததே. இத்தகைய திருத்தங்களிலே நாம் தலையிட்டு ஒன்று சொல்லுவோமல்லோம். ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய நிதியான நூல்களில் ஸ்ரீவைஷ்வணப் பேராசிரியர்களின் அருமருந்தன்ன ஸ்ரீஸூக்திகளுக்கு முரண்படத் திருத்தங்கள் செய்வது உற்றதன்று என்பதை வணக்கத்தோடு தெரிவித்துக்கொண்டு நிற்கிறேன். இராமநாதபுரம் வித்வான் ஸ்ரீ மு. ராகவையங்கார் சுவாமிகளுக்காகச் சிலவாண்டுகட்கு முன் யான் வெளியிட்டுள்ள செந்தமிழாராய்ச்சி யென்னும் நூலை நமது நண்பர்கள் மீண்டு மொருமுறை வாசிக்கவேணுமென்று நினைப்பூட்டுகிறேன்.

12—1—'56 ஸ்ரீகாஞ்சி. P. B. அண்ணங்கராசாரியர்

ஸ்ரீ

# பதிப்பாசிரியரின் முன்னுரை

18464

—)o(—

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் முந்துற முன்னம் அவதரித்த பொய்கையார் முதலான ஆழ்வார்கள் செய்தருளின மஹோபகாரங்களைப் பற்றி நாம் நிச்சலும் சிந்தனை செய்யவேண்டும். அவரவர்கள் ஜீவித்திருக்கும் நாளில் தம்மையடிபணிந்தவர்களுக்கு உஜ்ஜீவனோபாயமாக உபதேசங்களைச் செய்வது உபகாரமெனப்படும்; பிற்காலத்தவர்களும் நெடுநாள் வாழும்படி நூல்களை இயற்றி வைப்பது மஹோபகார மெனப்படும். இந்த உலகிலிருள் நீங்க அந்தமிழால் நற்கலைகளாய்த்துரைத்த ஆழ்வார்களின் மஹோபகாரம் உலகமறிந்ததேயாயினும் அறியாதார்சிலரு மறிந்துகொள்ள இங்குத் தெரிவிக்கிறோம்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்னுமிவ்வாழ்வார்கள் மூவரும் முதலாழ்வார்களென வழங்கப்படுவர்கள். இம்மூவரும் நூறுநூறு பாசுரங்கள் பணித்தார்கள். அம்மூன்று திவ்யப்ரபந்தங்களும் முறையே முதல் திருவந்தாதி, இரண்டாந்திருவந்தாதி, மூன்றாந்திருவந்தாதி எனப் பிரசித்தி பெற்றவை. இவை மூன்றாவதாயிரமான இயற்பாவில் 1,2,3 ஆம் பிரபந்தங்களாகப் பரிகணிக்கப் பட்டவை. நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் இவையே முதன் முதலவதரித்த நற்றமிழ் நூல்களாம். உபதேசரத்தினமாலையில் ' * மற்றுள்ள வாழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து, நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த—பெற்றிமையோர், என்று முதலாழ்வார்களென்னும் பெயரிவர்க்கு, நின்றதுலகத்தே நிகழ்ந்து * என்று மணவாள மாமுனிகளருளிச் செய்த பாசுரம் இங்கே அநுஸந்திக்கத் தக்கது.

மேலே சொன்ன முதலாழ்வார்களுக்கு அடுத்தவரும், பேயாழ்வாருடைய திருவடிகளைப் பணிந்து உய்ந்தவருமான திருமழிசையாழ்வார் (96 பாசுரங்கள் கொண்ட) நான்முகன் திருவந்தாதியும், (120 பாசுரங்கள் கொண்ட) திருச்சந்த விருத்தமும் ஆகிய இரண்டு திவ்யப் பிரபந்தங்களை யருளிச் செய்தார். இவற்றுள் முதற் பிரபந்தமானது "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்று தொடங்குவதனால் நான்முகன் திருவந்தாதி யெனப் பெயர் பெற்றது. இது முன்சொன்ன இயற்பா ஆயிரத்தில் நான்காவது பிரபந்தமாகவுள்ளது. திருச்சந்த விருத்தமெனும் மற்றொரு திவ்வியப் பிரபந்தம் முதலாயிரத்தில் ஆறாவது திவ்யப்ரபந்தமாகவுள்ளது. இவ்வாழ்வாரைத் திருமழிசைப் பிரானென்றும் வழங்குவர்; ஆசார்ய ஹ்ருதய திவ்ய சாஸ்த்ரத்தில் இவ்வாழ்வாருக்கு 'உறையிலிடாதவர்' என்கிற விருது அளிக்கப்பட்டுள்ளது. கண்டனம் செய்பவர்கள் கத்தியை உறையிலிடாமல் கண்டனமே தொழிலாயிருப்பது போல இவ்வாழ்வார் இதர தெய்வங்களுக்குப் பிறர் சொல்லும் பரத்வத்தைக் கண்டிப்பதிலேயே நோக்குடையவர் என்பது கருத்து. எம்பெருமானுடைய பரத்வத்தைத் தம்முடைய திவ்யப்பிரபந்தங்களில் ஆதிநடுவந்திகளில் நன்றாக ஸ்தாபித்தவரென்றபடி.

திருமழிசையாழ்வார்க்கு அடுத்தவர் நம்மாழ்வார். இவரே ஆழ்வார்களுள் தலைமை ஸ்தானம் பெற்றிருப்பவர். ப்ரபந்நஜநகூடஸ்தரென்று சிறப்பித்துக் கூறப்படுபவர். இவர் நான்கு வேதங்களின் ஸாரமாக நான்கு திவ்யப்ரபந்தங்களை யருளிச்செய்தவர். அவை முறையே (100 பாசுரங்கொண்ட) திருவிருத்தமென்றும், (7 பாசுரங்கொண்ட) திருவாசிரிய மென்றும், (87 பாசுரங்கொண்ட) பெரிய திருவந்தாதி யென்றும், (1102 பாசுரங்கொண்ட) திருவாய்மொழி யென்றும் வழங்கப்பெறும். * மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர் கோன் ஆறங்கங்கூற வவதரித்த * என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரப்படியே ஆறங்கமாகத் திருமங்கையாழ்வாரருளிச்செய்த ஆறு திவ்யப் பிரபந்தங்களுக்கு நம்மாழ்வாருடைய இந்நான்கு திவ்யப்ரபந்தங்களும் அங்கிகளாம். இவற்றுள் முந்தின மூன்று பிரபந்தங்களும் இயற்பா ஆயிரத்தில் 5, 6, 7 ஆம் பிரபந்தங்களாம். திருவாய்மொழியானது தனிப்பட்ட நான்காவதாயிரமாம்.

நம்மாழ்வார் திருவடிகளில் "தேவுமற்றறியேன்" என்று ஆச்ரயித்திருந்த ப்ராம்மணோத்தமரான மதுரகவிகளும் ஆழ்வார்கள் கோஷ்டியில் சேர்ந்தவராயினர். இவர் தம்முடைய திடமான அத்யவஸாயத்தின்படி எம்பெருமானைப் பாடாது நம்மாழ்வாரொருவரையே நோக்கிப் பதிகம் பாடினர். அப்பிரபந்தம் **கண்ணிநுண் சிறுத்தாம்பு** என்பதாம். அது பகவத் விஷயமல்லாவிடினும் பகவத் விஷயங்களான நாலாயிர திவ்யப்ரபந்தங்களினிடையே பரிகணிக்கப்பட்டதாயிற்று. * வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம்போல், சீர்த்த மதுரகவி செய்கலையை—ஆர்த்தபுகழாரியர்கள் தாங்கள் அருளிச் செயல் நடுவே, சேர்வித்தார் தாற்பரியந் தேர்ந்து * என்ற உபதேச ரத்தினமாலைப் பாசுரம் இங்கு நோக்கத்தக்கது. இது முதலாயிரத்தில் சரமப் பிரபந்தமாகவுள்ளது.

நம்மாழ்வார்க்கு அடுத்தவர் குலசேகராழ்வார். இவர் (105 பாசுரங்கொண்ட) பெருமாள் திருமொழியையருளிச்செய்தார். அது முதலாயிரத்தில் ஐந்தாவது பிரபந்தமாகவுள்ளது. இவ்வாழ்வார்க்குக் குலசேகரப் பெருமாளென்றும் திருநாமமுண்டாதலால் அதை மூலமாகக் கொண்டே இவருடைய பிரபந்தம் பெருமாள் திருமொழியென வழங்கப் பெற்றது. இவ்வாழ்வார் வடமொழியில் **முகுந்தமாலை** யென்று ப்ரஸித்தமாய்ப் பரமமதுரமான ஸ்துதியை யருளிச் செய்தாரென்றுஞ் சொல்லுவர்கள். அஃது இவரருளிச் செய்ததன்று; இவரது மரபில் தோன்றியவரும் இவருடைய திருநாமத்தையே கொண்டவருமான மற்றொரு பரமபக்தர் பணித்ததென்றும் சொல்லுவர்கள்.

குலசேகராழ்வார்க்கு அடுத்தவர் பெரியாழ்வார். இவர்க்குப் பட்டர்பிரானென்றும் பட்டநாதரென்றும், விஷ்ணுசித்தரென்றும் புதுவையர்கோனென்றும் மறு பெயர்களுமுண்டு. இவரே பாண்டிய ராஜஸதஸ்ஸில் பரதத்வநிர்ணயம் பண்ணிக் கிழியறுத்துப் பெற்ற பேராசிரியர். (12 பாசுரங்கள் கொண்ட) திருப்பல்லாண்டும், (473 பாசுரங்கள் கொண்ட) பெரியாழ்வார் திருமொழியும் இவரருளிச் செய்தவை. இவை முதலாயிரத்தின் 1, 2 பிரபந்தங்களாம். "கோதிலவாமாழ்வார்கள் கூறுகலைக் கெல்லாம், ஆதி திருப்பல்லாண்டானதுவும், வேதத்துக்கு-ஓமென்னுமதுபோல் உள்ளதுக் கெல்லாஞ் சுருக்காய்த் தான் மங்கலமாதலால்" என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரம் இங்கே அநுஸந்தேயம்.

"பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே" என்கிறபடியே பெரியாழ்வார் திருமகளாரான ஆண்டாள் (30 பாசுரங்கள் கொண்ட) திருப்பாவையும், (143 பாசுரங்கள் கொண்ட) நாச்சியார் திருமொழியும் அருளிச் செய்தாள். அவை முதலாயிரத்தில் 3, 4 ஆம் பிரபந்தங்களாக வுள்ளன. ஆண்டாள் பிராட்டிமார் கோஷ்டியைச் சேர்ந்தவளேயாயினும், திவ்யப்பிரபந்தங்களருளிச் செய்த காரணத்தினால் ஆழ்வார்கள் கோஷ்டியிலும் அந்வயம் பெற்றவளாவள்; ஸ்ரீ பெரும்பூதூரில் நடைபெறும் அத்தியயநோத்ஸவத்தில் ஆழ்வார்கள் கோஷ்டியில் ஆண்டாளும் திகழ்வது பிரசித்தம். இங்ஙனே மற்றுஞ் சில திவ்யதேசங்

களிலுமுண்டென்பர். ஆண்டாளுக்கு சூடிக்கொடுத்தநாச்சியார், கோதை என்னும் திருநாமங்களுமுண்டு.

பெரியாழ்வார்க்கு அடுத்தவரான தொண்டரடிப்பொடியாழ்வார் (45 பாசுரங்கொண்ட) திருமாலையும் (10 பாசுரம் கொண்ட) திருப்பள்ளியெழுச்சியும் அருளிச் செய்தார். "திருமாலை யறியாதவன் திருமாலையறியான்" (அல்லது) 'பெருமாளை யறியான்' என வழங்கும் பழமொழியினால் திருமாலையின் ஏற்றம் அறியத்தக்கது. இவ்விரண்டு பிரபந்தங்களும் முதலாயிரத்தில் 7, 8-ஆம் பிரபந்தங்களாகவுள்ளன.

தொண்டரடிப்பொடியாழ்வார்க்கு அடுத்தவரான திருப்பாணாழ்வார் (10 பாசுரங்கொண்ட) **அமலனாதிபிரா**னென்னும் திவ்ய ப்ரபந்த மருளிச் செய்தார். ஆழ்வார்களுள் இவரே மிகக் குறைந்த பாசுரமருளிச் செய்தவர்; ஆயினும் இவரது திவ்யப் பிரபந்தத்திற்குள்ள ஏற்றம் மற்றெந்த பிரபந்தத்திற்கு மில்லை. *காண்பனவு முரைப்பனவும் மற்றொன்றின்றிக் கண்ணனையே கண்டுரைத்த கடியகாதல், பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுமின்கள்* என்ற (முநிவாஹந போகத்திலுள்ள) தூப்புற்பிள்ளை பாசுரத்தினாலும் அவ்வேற்றம் அறியத்தக்கது.

திருப்பாணாழ்வார்க்கு அடுத்தவரான திருமங்கையாழ்வார், நம்மாழ்வாரருளிய நால் வேதஸாரமான நான்கு திவ்யப்ரபந்தங்களுக்கும் ஆறங்கம் போன்ற ஆறு திவ்யப்ரபந்தங்களை யருளிச்செய்தார். அவையாவன: (1084 பாசுரங்கொண்ட) பெரியதிருமொழி, (20 பாசுரங்கொண்ட) திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், (30 பாசுரங்கொண்ட) திருநெடுந்தாண்டகம்—என்பனவாம். இவற்றுள், 1, 2, 6-ஆம் பிரபந்தங்கள் இரண்டாவதாயிரமாக வகுக்கப்பட்டவை. 3, 4, 5 ஆம் பிரபந்தங்கள் இயற்பா ஆயிரத்தில் 8, 9, 10 பிரபந்தங்களாக அமைந்தவை. இவ்வாழ்வார்க்கு, கலியன், கலிகன்றி, பரகாலன், திருமங்கைமன்னன், குறையல்பிரான் என்பவை முதலான திருநாமங்களுமுள்ளன.

ஆழ்வார்களினுடைய திவ்யப்பிரபந்தங்கள் இவ்வளவே. மதுரகவியாழ்வாரையும் ஆண்டாளையும் சேர்த்துக் கணக்கிட்டால் ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களை விட்டுக் கணக்கிட்டால் ஆழ்வார்கள் பதின்மர். பிறகு ஆசார்ய ஸார்வபௌமரான எம்பெருமானாருடைய காலத்தில் தோன்றியிருந்த திருவரங்கத்தமுதனாரென்னும் பரமபக்தர் ஸ்வாசார்யரான கூரத்தாழ்வானுடைய முகோல்லாஸத்தின் பொருட்டு எம்பெருமானார் துதியாக (108 பாசுரங்கொண்ட) இராமாநுச நூற்றந்தாதியை யருளிச்செய்தார். இதற்குப் **ப்ரபன்ன காயத்திரி** யென்பது ஸம்ப்ரதாய வ்ருத்தர்களின் வ்யவஹாரம். நம்மாழ்வார் விஷயமாக மதுரக்விகள் அருளிச் செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பு போலவே இப்பிரபந்தமும் பூருவர்களால் நாலாயிர திவ்யப்பிரபந்தமாலையில் கோக்கப்பட்டதாயிற்று. திருக்கார்த்திகைக்குப் பின்பு திவ்யப்பிரபந்தங்களுக்குக் கொள்ளும் அநத்யயநக்ரமம் இவ்விரண்டு பிரபந்தங்களுக்குமொக்கும். இதனால் இவற்றுக்கு ஆழ்வாரருளிச்செயல்களோடு ஸர்வாத்மநா ஸாம்யம் பூர்வாசார்யஸம்மதமென்று தேறகிற்கும்.

* மணவாளமாமுனிகளின் காலம் வரையில் அநத்யயநகாலத்தில் திவ்யப்ரபந்தத் தனியன்களே ஸேவிக்கப்பட்டு வந்தன. சிஷ்யப்ரார்த்தனையாலும் பகவந்நியமநத்தாலும் மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையும் திருவாய்மொழி நூற்றந்தாதியும் அருளிச்செய்ய அவை அநத்யயநகாலத்திற்கும் மற்றும் விசேஷ திருநக்ஷத்ரோத்ஸவாதிகளுக்கும் அந்நாள் தொடங்கி அநுஸந்தேயமாகக் கொள்ளப்பட்டன. இவையும் திவ்யப்ரபந்தங்களோடொக்கப் பரிகணிதங்களாயின.

பாவங்களைப் போக்க வழிதேடுவதிற்காட்டிலும் போதைப்போக்க வழிதேடுவது மிக அவசியமென்பர் பெரியோர். போதும் இனிதாகக் கழிந்து பாவமும் எளிதாகத் தொலையும் விரகு ஏதென்று பார்ப்பர் ரஸிகர்கள். திவ்யப்ரபந்தாநுபவமே நல்விரகென்று கொண்டார்கள் ஆளவந்தார் எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் முதலான நம் பூருவர்கள். வடமொழியிலமைந்த வேதங்களையும் இதிஹாஸ புராணங்களையும் மற்றும் பலவகை நூல்களையும் அவர்கள் அநுபவித்தும் அவற்றில் த்ருப்தி பெறாமல் ஆழ்வார்களின் ஈரச் சொற்களை யனுபவித்தே அவர்கள் உள் கனிந்துருகி உரோமகூபங்களாய்க் கண்ணநீர்கள் துள்ளஞ் சோரத் துயிலணை கொள்ளாது தவித்தனர் என்று நாம் நன்கு அறிகிறோம். உண்மையில், நெஞ்சை நீர்ப்பண்ட மாக்கவல்லவை திவ்யப்ரபந்தங்களே யன்றி வேறில்லை. 'ஸம்ஸ்க்ருத நூல்களில் போதுபோக்கவறியாதவர்களுக்கல்லவோ தமிழ்ப் பாசுரங்கள்' என்று சொல்லுமவர்களைப் பற்றி நாம் "ஆரானு மாதானுஞ் செய்ய, அகலிடத்தை ஆராய்ந்து அது திருத்தலாவதே!" என்ற நம்மாழ்வார் பாசுரத்தையே அநுஸந்தித்து நிற்போம். அருளிச் செயல் என்றே பேர்பெற்ற திவ்யப்ரபந்தங்களில் ஈடுபடும் பாக்கியம் பெறுவதென்பது ஒரு விலக்ஷணமான செல்வம். அற்புதமான ஸுக்ருதம். இது ஸாமான்யமாகச் சிலர்க்கு விளையுமதன்று. ஜன்மாந்தரஸஹஸ்ர நற்றவங்களினாலேயே விளையவேண்டுமிது.

ஆழ்வார்களின் திருவவதாரக்ரமம் "பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை யையன் அருள்மாறன் சேரலர்கோன்—துய்ய பட்டநாதன் அன்பர்தாள் தூளி நற்பாணன் நன்கலியன், ஈதிவர் தோற்றத்தடைவாமிங்கு" என்ற உபதேச ரத்தினமாலைப் பாசுரத்தின்படி பொய்கையாழ்வார் முதலாகத் திருமங்கையாழ்வாரீறாக இருந்தாலும் திவ்யப்ரபந்தங்களின் அடைவு நம் பூருவாசாரியர்களால் ஒருவிதமாக அமைக்கப்பட்டுள்ளது. பெரியாழ்வாரருளிச்செய்த திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி என்னும் திவ்யப்ரபந்தங்களைத் தொடக்கத்திலே வைத்து, நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழியை முடிவாக வைத்து நாலாயிர திவ்யப்ரபந்த க்ரமத்தை நிர்வஹித்துள்ளார்கள். முதலாயிரம், பெரிய திருமொழியாயிரம், இயற்பா ஆயிரம், திருவாய்மொழியாயிரம் என நான்கு ஆயிரமாக வகுக்கப்பட்டுள்ளதனால் நாலாயிரமென வழங்குதலாயிற்று. ஒவ்வொரு ஆயிரத்திலும் ஏற்றக் குறைவின்றி ஆயிரம் பாசுரங்கள் இருந்து தீரவேணுமென்கிற நியதி கொள்ளப்படவில்லை. முதலாயிரத்திலும் இயற்பா ஆயிரத்திலும் ஆயிரத்துக்குக் குறைந்த பாசுரங்கள் உள்ளன. பெரிய திருமொழியாயிரத்திலும் திருவாய்மொழியாயிரத்திலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாசுரங்கள் உள்ளன. எனினும் இந்த ஏற்றக் குறைகளில் கணிசிப்பு இல்லை. பெரிய தொகையில் சிறிது ஏறினாலும் குறைந்தாலும் பெரிய தொகையையிட்டே வழங்குவது எங்குமுண்டே. சிறிய திருமடல் பெரிய திருமடல் என்னுமிரண்டு திவ்வியப் பிரபந்தங்களைப் பலபாட்டுக்களாக உடைத்துக் கணக்கிடுவது இலக்கண நெறிக்குச் சேராது. அவையிரண்டும் தனித்தனி இரண்டு பாட்டுக்களேயாகும். கலிவெண்பா வெனப்படும். நாலாயிரம் பாசுரங்கள் ஏற்றத்தாழ்வில்லாமல் தேறவேணுமென்னுங் கருத்தினால் அவற்றைப் பல பாட்டுக்களாகக் கணக்கிடுவது ஔசித்யம் என்ற ப்ரமாணத்திற்கு ஒக்குமென்னலாம்.

இங்ஙனம் :

**ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.**

---

[முக்கியமானவொரு குறிப்பு:—மேலே குறித்த ஸகல திவ்யப்ரபந்தங்களுக்கும் எளிய தெளிய நடையில் அடியேனால் எழுதப்பட்ட திவ்யார்த்த தீபிகையுரை பக்த பாகவத பண்டிதோத்தமர்களால் அநுபவிக்கத்தக்கது. அந்த தீபிகையில், மூலம் பதவுரை பொழிப்புரை விசேஷவுரை ஸ்வாபதேசார்த்தம் எல்லாம் அடங்கியுள்ளன. இவற்றைப் பூர்த்தியாக வாங்கிக் கொள்பவர்களுக்கு விலை 50 ரூ. மட்டுமே. தனித்தனி பிரபந்தங்களாகவும் கிடைக்கும். இதைப்பற்றி "க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்" என்கிற விலாசத்திற்கெழுதி விரிவான கியாடலாக் தருவித்துக் காண்க. மற்றும் பூர்வாசார்ய ஸகல ஸ்ரீஸூக்திகளின் வியாக்கியானங்களும் இங்கே கிடைக்கும்.]

# ஸ்ரீராமாநுஜன் 85

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் மூலமாக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சி. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

| ஸம்புடம் 8 | 1956 ஜனவரி மன்மத மார்கழி | மலர் 1 |
|---|---|---|

## ஸம்வத்ஸராரம்ப விஜ்ஞாபனம்.

அன்பார்ந்த ஆரியர்களே !

நமது ராமாநுஜ பத்ரிகை எழுபிராயம் நிரம்பப்பெற்று எட்டாவது பிராயத்தில் அடிவைக்கின்றதிப்போது. இதுவரையில் பேரருளாளனும் பெருந்தேவித்தாயாரும் விசேஷ கடாக்ஷம் செய்தருளி இப்பத்ரிகையை இடையூறென்றுமின்றி நடைபெறுத்தி வந்தபடியால் இனிமேலும் அந்த கடாக்ஷமே தாரகமாகவும் போஷகமாகவும் இருந்துவருமென்பதில் ஸந்தேஹமுடையோமல்லோம்.

பகவத் கடாக்ஷம் மட்டுமேயல்லாமல் பாகவதோத்தமர்களின் கடாக்ஷ வீக்ஷணத்தையும் விசேஷமாகப் பெற்றிருக்கின்றது நமது பத்ரிகை. ஆகவே இதன் அபிவிருத்தியைப் பற்றி நமக்கு விசாரலவலேசமுமில்லை யென்பதை ஆனந்தத்துடன் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறோம்.

ஸஹ்ருதயர்களான மஹான்களிடத்தில் இப்பத்திரிகையைப்பற்றி நாம் இரண்டு பிரார்த்தனைகள் செய்வதுண்டு. (1) வாசகர்கள் களித்து வாசிக்கும்படியான சிறந்த விஷயங்களை எழுதியனுப்பவேணுமென்பது முதல் பிரார்த்தனை. (2) சந்தாத்தொகையைக் காலகாலத்தில் அனுப்பித்தரவேணுமென்பது இரண்டாவது பிரார்த்தனை இவ்விரண்டில் இரண்டாவதான வேண்டுகோள் சில மஹான்களிடத்தில் நிறைவேறுவதுண்டு; விஷயதானத்தைப் பற்றின முதல் பிரார்த்தனையை ஒருவருமே அங்கீகரிப்பதில்லை. அதுபற்றி நமக்குச் சிறிது வருத்தமேயென்றாலும் அதை நாம் பாராட்டுவதில்லை. நமக்கு ப்ராப்தமாகிற கைங்கரியத்தை நாம் இழக்கவேண்டாமென்று எம்பெருமான் திருவுள்ளம் போலும் என்றே கொண்டு மனஸ்ஸமாதான மடைகிறோம். ஸ்ரீராமாநுஜன் போலவே அம்ருதலஹரீ பத்ரிகையும் நம்வழியாகப் பல வருஷங்களாய் நடந்துவருகின்றதென்பதைப் பெரும்பாலும் யாவருமறிவர். அது ஸ்ரீரங்கத்திலிருந்து மாதந்தோறும் தவறாமல் (இங்கிலீஷ் மாதம் 15 தேதியன்று) வெளிவந்துகொண்டிருக்கின்றது. அதற்கு பேனேஜிங் எடிடர் (நிர்வாஹ ஆசிரியர்) ஸ்ரீமான் உ வே பண்டிதராஜ. மெ. ஸுந்தரராஜாசாரியர் ஸ்வாமி அவருடைய ஊக்கத்தினாலேயே அப்பத்ரிகை நிரந்தரமாகவும் ஸமயம் தவறாமலும் நடைபெற்றுவருகின்றது. அதற்கு வருடச்சந்தாத்தொகை 3 ரூ. மட்டுமே. அந்தத்தொகை அந்த ஸ்வாமிக்கே அனுப்பப்படவேண்டும். ஸ்ரீவிலாஸம் பிரெஸ். அம்ருதலஹரீ ஆபீஸ், கீழச்சித்திரவீதி ஸ்ரீரங்கம். என்பது விலாஸம் அப்பத்திரிகையில் உபந்யாஸரூபமான வியாஸங்களை விசேஷமாக வெளியிட்டுக்கொண்டிருக்கிறோமாகையால் இப்பத்ரிகையில் சாச்வதமாகக் காப்பாற்றி வைத்துக்கொள்ளத்தக்க புத்தகரூபமான வியாஸங்களையே அதிகமாக வெளியிட்டுவருவோமென்று ஸங்கல்பித்துச் சிலவாண்டுகளாக அப்படியே நடந்துவருகிறது. நாலாயிரதிவ்யப்பிரபந்தங்களில் ஆழ்வார்கள் அனுஸந்தித்தருளின பக

வத்கதைகளின் விவரணமான "திவ்யப்ரபந்தபகவத்கதாம்ருதம்" என்னும்புத்தகம் இப்பத்ரிகையில் வெளியிடப்படுகிறது. இப்படியே மாதந்தோறும் முக்கியமான நூல்கள் வெயிடப்பட்டுவரும்.

இப்பத்திரிகைக்கு மேன்மேலும் விசேஷமான அபிவிருத்தியைப் பெருந்தேவிமணவாளனுன பேரருளாளன் ஆசாஸித்தருளியிருப்பதாகச் சிலநிமித்தவிசேஷங்களினுல் தெரிந்து கொள்கிறோம். அது க்ரமேண ப்ரஸித்தமாகுமென்று நிற்கிறோம். இப்படிக்கு,

பத்ரிகா ஸம்பாதகர்.

## ஸத்க்ரந்தப்ரகாசந ஸபா கார்யதர்சியின் விண்ணப்பம்

ஸ்ரீராமாநுஜனுக்கு இவ்வருஷத்தில் சந்தாசெலுத்தினவர்களின் பெயர்கள் 94. சென்ற இதழில் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியாகவே மிச்சம் பெயர்கள் இதன் கீழ் வெளியிடப்படுகின்றன;—

95 V. ராமாநுஜம் மதராஸ்
96 T. V. ரங்காச்சாரியர், மதராஸ்
97 S. R. ஸம்பத் மதராஸ்
98 G. அமிலு நாயுடு, மதராஸ்
99 K. ருத்ரகோடி ,,
100 C. வேணுகோல் நாயுடு ,,
101 K. S. கிருஷ்ணசாமி அய்யங்கார் ,,
102 ருக்மாங்கதன் ,,
103 P. கன்னியப்பன் ,,
104 P. R. பக்தவச்சலு நாயுடு ,,
105 T. வரதாச்சாரியார் ,,
106 A. N. பரசுராமன் அவர்கள் ப்ரின்ஸிபால் மினர்வாகாலேஜ் மதராஸ்
107 S. குப்புசாமி அய்யங்கார், பள்ளத்தூர்
108 A. N. ஜகன்னுத அய்யங்கார், மேலூர்
109 P. K. மாசிசெட்டியார், கு. புதூர்
110 R. N நாராயணன், C/o. கிரின்லேஸ் & Co. கல்கத்தா
111 S. எதிராஜராமாநுஜதாஸர் திருவாரூர்
112 S. K. பாஷியம் அய்யங்கார், சிங்கபெருமாள்கோவில்
113 முத்துகிருஷ்ண கரையாளர் பத்மநாபமங்கலம்
114 M. சீனிவாஸன், காட்பாடி டவுன்ஷிப்
115 T. சாம அய்யங்கார், ரிடையர்ட் ஜட்ஜ், பெங்களூர்
116 A. K. ரங்காச்சாரியார், குவாலியர்
117 T. P. வெங்கடாச்சாரியர், பாம்பே
1.8 C. S. பார்த்தஸாரதி ஐயங்கார், B.A., B.L., நியூடில்லி.
119 உபய வேதாந்த ப்ரகடந ஸபை மதுரை.

## முக்கியமான அறிவிப்பு

சந்தாத்தொகை செலுத்ாதவர்களுக்கு இனிப் பத்திரிகை அனுப்பவேண்டியதில்லையென்று ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபாதிகாரிகள் கடுமையான கட்டளை செய்துவிட்டார்கள். அதனுல், ஜீவியசந்தா செலுத்தின சாச்வத மெம்பர்களுக்கும், வருடச்சந்தா செலுத்தினவர்களுக்கும், கௌரவஸ்தர்களான சில வித்வான்களுக்கும் மட்டுமே இம்மாதம் முதலாக பத்ரிகையனுப்புவதென்று நிச்சயித்து அதை நடத்தையில் கொண்டுவந்தாயிற்று. அதனுலேயே தொடர்ச்சியாக வெளியிட்டுவந்த வால்மீகி ராமாயண வசனத்தின் [உத்தர காண்ட] சேஷம் இதில் சேர்க்கப்படவில்லை. பலபேர்களுக்குக் கிடைக்காமற் போகுமேயென்று. ஆனுலும் அது அவரவர்களுக்குக் கிடைத்தே தீரும். இப்படிக்கு,

ஸத்க்ரந்தப்ரகாசநஸபா கார்யதர்சி.

## கைசிகபுராண வெளியீடு.

கார்த்திகைமாதத்து சுக்லபக்ஷ த்வாதசிக்கு கைசிகத்வாதசியென்னும் பெயர் ப்ரஸித்தமானது. அன்று பெரும்பாலும் திவ்யதேசங்களில் ஸேவிக்கப்படுவது கைசிக புராணம். இது வராஹபுராணத்தின் உள்ளீடானது. இதற்கு பட்டாருளிச்செய்த மணிப்ரவாள வியாக்கியானம் துர்லபமாயிருந்தபடியால் க்ரந்தமாலா கார்யாலயத்தின் மூலமாக ஸமீபகாலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. மூலம் தேவநாகரலிபியிலும் தமிழ்லிபியிலுமுள்ளது. பக்கம் 48 விலை 0 6 0 மார்கழி விருந்து விலை 0 6 0

ஸ்ரீ.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

# திவ்யப்ரபந்த பகவத் கதாம்ருதம்

## நாலாயிர திவ்யப்பிரபந்தங்களில் எடுத்தாளப்பட்ட பகவத் கதைகளின் விவரணம்:—

(ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசாரியார் எழுதியது.)

எம்பெருமானுக்குள்ள திருநாமங்கள் பலவற்றினுள் 'பிறப்பிலி' என்பதும் ஒரு திருநாமம். பிறவாதவன் என்பது அதன் பொருள். இப்படிப்பட்ட எம்பெருமானை "உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா!" என விளிக்கின்றார்கள் ஆழ்வார்கள். "பலபிறப்பாய் ஒளிவரு முழுநலம்" என்கிறார்கள். "பிறந்தவாறும்! வளர்ந்தவாறும்!!" என்று மோஹிக்கிறார்கள். பிறப்பிலியான பெருமான் பல அவதாரங்களெடுக்கிறானென்றால் இஃது ஒன்றோடொன்று முரண்படுமன்றோ என்ன வேண்டா; நம்மைப்போலே கருமமடியாகப் பிறவாதவன்; (ஆயினும்) அநுக்ரஹமடியாகப் பல அவதாரங்கள் செய்தருள்பவன் என்பவாதலால் பொருந்தும். "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம். தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே" [சிஷ்டர்களை வாழ்விக்கும் பொருட்டும், துஷ்டர்களை ஒழிக்கும்பொருட்டும்; தருமநெறிகளை நிலை நிறுத்தும் பொருட்டும் அவ்வக் காலங்களில் நான் அவதரிக்கிறேன்] என்று கீதையில் எம்பெருமான் தானே சோதிவாய் திறந்து அருளிச்செய்துள்ளான்.

இப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருவவதாரங்களையும் அவ்வவதார சேஷ்டிதங்களையும் உள்ளபடி அநுஸந்திக்குமவர்கள் பிறப்பிலிகளாகப் பெறுவர்களென்பதை எம்பெருமான் தானே (பகவத்கீதையில்) அருளிச்செய்து வைத்தான்; "ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத:-த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந!" என்றது காண்க.

எம்பெருமானுடைய அவதாரங்களுக்கும் அவதார சேஷ்டிதங்களுக்கும் எல்லையில்லை; அவை ஸ்ரீராமாயண மஹாபாரதாதிகளான இதிஹாஸங்களிலும் அஷ்டாதச புராணங்களிலும் மற்றும் பலவற்றிலும் மிகவிரிவாகப் பேசப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமாகவும் ஸாரமாகவுமுள்ள சில அவதார சேஷ்டிதங்களை நம் ஆழ்வார்கள் உகந்தருளித் தமது திவ்யப்பிரபந்தங்களில் வாய்வெருவி யிருக்கின்றார்கள். அந்த பகவத்கதைகளை நன்றாகத் தெரிந்துகொண்டு நாடோறும் ஸ்மரித்துவருவது ஒவ்வொருவர்க்கும் அவசியமாதலால், வடமொழி யிதிஹாஸ புராண வுதவிகொண்டு அவ்வரலாறுகளை விரித்துரைப்போமிங்கு.

### 1. மத்ஸ்யாவதார வரலாறு.

ஒரு பிரமகல்பமுடிவில் பிராசம்பந்தமான நைமித்திக ப்ரளயம் உண்டாயிற்று; அப்பொழுது பூமிமுதலிய உலகங்கள் கடலாற் சூழப்பட்டு மூழ்கும் ஸமயத்தில் நித்திரை தெளிந்தெழுந்து அந்த ஜலத்தில் படுக்கயத்தனித்த பிரானதுமுகத்தினின்றும் வெளிக்கிளம்பிய நான்கு வேதங்களையும் ஹயக்ரீவனென்னுமோர் தானவன் அபஹரித்துக் கொண்டுபோய் விட்டான்; அப்போது வேதங்கள் தொலைந்தது கண்டு திருமால் ஓர் சிறிய மீன்வடிவு கொண்டார்; அக்காலத்தில் தவத்தின் பெருமையினால் ஜீவித்து, கிருதமாலா நதியின் கரையில் திருமாலை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்த ஸத்யவ்ரதனென்னுமோர் ராஜர்ஷி ஜலபானம் பண்

ணிக்கொண்டு பிழைத்திருந்தார்; அவர் ஜலதர்ப்பணஞ் செய்கையில் அவரது இரண்டு கைகளுக்குள் ஒரு சிறிய மீன் அகப்பட்டுக்கொண்டது; அதனை அவர் ஜலத்தில் விட்டார்; அப்போது அந்த மீன் 'ஓ தயாளுவான ராஜரிஷியே! என்னை இப்படி ஜலத்தில் விட்டீரே, என் இனத்தார் என்னை விழுங்கி விடுவார்களே; என்னை நீர் காப்பாற்றியருளவேணும்' என்ன; அவர் அதனைத் தன் கமண்டல தீர்த்தத்தில் எடுத்துவிட்டார்; அதனுட்புகுந்த அந்த மீன் ஓரிரவுக்குள் கமண்டலத்துக்குள் நிரம்பி மறுநாள் காலையில் 'ஓ தயாளுவே! நான் எப்படி உம்முடைய கலசத்துக்குள் கஷ்டப்பட்டு வஸிப்பது? என்மீது சிறிது அருள்புரியலாகாதா?' என்றது; உடனே அவர் அதனைக் கமண்டலத்தினின்றும் எடுத்துத் தன்னிடத்துள்ள சந்தன ஜலத்தில் புகவிட்டார்; உடனே மூன்றடி பிரமாணம வளர்ந்த அந்த மீன் "என்னை இப்படி கஷ்டப்படுமாறு விட்டுவைப்பது உமக்குத்தருமமா?' என்றது; அன்புகூர்ந்த அவர் உடனே அதையெடுத்து ஓர் குளத்தினுள் விட்டார்; அங்கும் மிகவளர்ந்த அந்த மீன் 'நான் சுகமாக வஸிக்க இடம்பெறாமல் வருந்துவது உமது திருவுள்ளத்திற்கு உகப்போ?' என்றது; உடனே அவர் அதை யெடுத்து ஏரியில் விட்டார்; அக்கணமே அந்த ஏரி நிரம்ப வளர்ந்த அந்த மீன் 'ஸ்வாமின்! என்னையிப்படி அலையவிடுவது நியாயமா?' என்றது; அதைக் கேட்டுக் கருணைகூர்ந்த அவர் அதனையெடுத்துக் கடலில் விட்டார்; அப்பால் அந்த ஸத்யவிரதர் அம்மீனிடத்துப் பெருமயல்கொண்டு அதனை நோக்கி 'ஓ மத்ஸ்யராஜனே! உன்னுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்ள மிக்க ஆவலுள்ளவனாயிருக்கிறேன்; நூறுயோஜனை நீளமும் அதற்குத் தக்க பருமனும் வாய்ந்துள்ள நீ யார்? உனது தத்துவத்தை வெளியிடவேணும்' என்று கைகூப்பிப் பிரார்த்திக்க, அந்த மத்ஸ்ய ராஜன் 'ஓ மஹாநுபாவரே! இன்று முதல் ஏழுநாட்களுக்குள் இந்த மூன்று உலகங்களும் மூழ்கிவிடப்போகின்றன; அந்தப் பெருநீரில் ஒரு விசாலமான ஓடம் வரப்போகிறது; அந்தப் படகில் ஸப்தரிஷிகளும் நீரும் எல்லா ஓஷதிகளும் ஸமஸ்த பிராணிகளும் ஏறி மனத்திற்கு வருத்தமொன்றுமின்றி உலாவக்கடவீர்கள்; இப்படி ஸஞ்சரித்துக்கொண்டிருக்குமளவில் ஓர் பெருங்காற்று அடிக்கப்போகிறது; அதனால் அந்த ஓடமானது பெருநீரில் அலையப்போகின்றது; அப்பொழுது எனது சிரஸ்ஸில் முளைத்துள்ள பெரியதொரு கொம்பில் பெரியதொரு ஸர்ப்பத்தினால் அந்த ஓடத்தைக் கட்டிவிடும்; பிறகு நான் அந்தப் படகுடன் உம்மையும் எல்லாப் பிராணிகளையும் ரிஷிகளையுஞ் சுமந்துகொண்டு அந்தப் பேரிருள் நீங்கும் வரையில் நான் கடலில் ஸஞ்சரிக்கப்போகிறேன்; அப்போது எனது பெருமையை நீர் உணர்வீர்' என்று உரைத்துவிட்டு மறைந்திடவே, ஆச்சரியமடைந்த அந்த ஸத்யவிரதர் பகவானாலே குறிக்கப்பட்ட அக்காலத்தை எதிர்பார்த்திருக்கையில் ஸப்த மேகங்களினுடைய ஆரவாரத்தால் கடல் கிளரத்தொடங்கிற்று; பகவான் குறித்த தினத்தில் ஒரு பெரிய ஓடம் அந்தக்கடலில் வரக்கண்டு மகிழ்ந்து எல்லாக்கொடி செடி பீஜங்களையும் அந்தப் படகிலேற்றித் தாமும் ஏறினார்; ஏறி, ஸப்த ரிஷிகளுந் தாமுமாய்ப் பகவானைச் சிந்தனைசெய்து கொண்டிருக்கையில், பெரிய கொம்புள்ள மத்ஸ்யரூபங்கொண்ட பகவான் காணப்பட்டார்; லக்ஷம் யோஜனை நீளமும் பதினாயிரம் யோஜனை பருமனும் ஒற்றைக்கொம்பும் ஸுவர்ணவர்ணமும் ஸகலலோகமனோஹர ரூபமும் வாய்ந்தவராகக் காணப்பட்டனர்; உடனே அந்த ஸத்யவிரதர் ஒரு பெரிய நாகத்தைக்கொண்டு அந்த மத்ஸ்யபகவானது கொம்பிலே அப்படகைக்கட்டிவிட, அப்பெருமான் அதனை வஹித்துக்கொண்டு அண்டகடாஹத்தளவும் செல்லத் துள்ளி விளையாடி, முன்பு அசுரர் கவர்ந்துசென்ற வேதங்களையும் மீட்டுக்கொணர்ந்தருளி, ஆக இவ்வண்ணம் பிரளயாபத்தில் நின்றும் பிரஜைகளைக் காத்தருளியதும் வேதங்களை உபகரித்தருளினதும் மத்ஸ்யாவதார வரலாறும்.

இவ்வரலாறு பெரிய திருமொழியில் (6-6-2.) "கொழுங்கயலாய் நெடு வெள்ளங் கொண்டகாலம் குலவரையின்மீதோடி அண்டத்தப்பால், எழுந்தினிது விளையாடுமீசனெந்தை" என்றும், (8-8-1.) "வானோரளவும் முது முந்நீர் வளர்ந்தகாலம் வலியுருவின் மீனாய்.

வந்து வியந்துய்யக்கொண்ட தண்டாமரைக் கண்ணன்" என்றுருள்ள பாசுரங்களில் சிறிது விரிவாக அநுஸந்திக்கப்பட்டுள்ளது.

முன் ஒரு கல்பத்தின் அந்தத்தில் பிரமதேவன் துயிலுகையில் அவன் முகங்களி னின்று வெளிப்பட்டுப் புருஷரூபத்துடன் உலாவிக்கொண்டிருந்த நான்கு வேதங்களையும் மஹாபலசாலியாய் நெடுங்காலந் தவஞ்செய்து பெருவரங்கள் பெற்றவனை சோமகனென னும் அசுரன் கவர்ந்துகொண்டு பிரளய வெள்ளத்தினுள் மறைந்து செல்ல, 'அதனை யுணர்ந்து திருமால் ஒரு பெருமீனைத் திருவவதரித்து அப்பெருங்கடலினுட்புக்கு அவ்வசு ரனைத் தேடிப்பிடித்துக்கொன்று அவன் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டுக்கொணர்ந்து அவற்றைப் பிரமனுக்குக் கொடுத்தருளினன் என்ற வரலாறும் உண்டு. இவ்வசுரன் பெயர் சோமக னென்றலும் ஹயக்ரீவ னென்றலும் உண்டு. ... ... ... (1)

## 2. ஹம்ஸாவதார வரலாறு.

முன்னொரு காலத்தில் மதுகைடபரென்ற அசுரர்கள் பிரமதேவனிடத்திலிருந்து வேதங் களை அபஹரித்துக்கொண்டு கடலில் முழுகிமறைந்துவிட ஞானவொளியைத்தரும் பெரு விளக்கான வேதங்கள் ஒழிந்தமைபற்றி உலகமெங்கும் பேரிருள் மூடி நலியாநிற்க, பிரமன் முதலியோரனைவரும் கண் கெட்டவர் போல யாதொன்றும் செய்யவறியாமல் திகைத்து வருந்துவது கண்டு திருவுள்ளமிரங்கித் திருமால் கடலினுட்புக்கு அவ்வசுரர்களைத் தேடிக் கண்டு பிடித்துக் கொன்று வேதங்களை மீட்டுக்கொணர்ந்து ஹம்ஸரூபியாய்ப் பிரமனுக்கு உபதேசித்தருளினன். இவ்வரலாறு சிறிது வேறுபடக் கூறுதலுமுண்டு. ... (2)

## 3. கூர்மாவதார வரலாறு

முன்னொருகாலத்தில், இவ்வண்டகோளத்திற்கு அப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத் துச்சென்று திருமகளைப் புகழ்ந்துபாடி அவளால் ஒரு பூமாலை ப்ரஸாதிக்கப்பெற்ற ஒரு வித்யாதரமகள், மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன் கை வீணையில் தரித்துக்கொண்டு பிரமலோகவழியாய் மீண்டுவருகையில் துர்வாஸமஹாமுனி எதிர்ப்பட்டு அவளை வணங்கித் துதிக்க, அவ் விஞ்சைமங்கை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள்; அதன் பெருமையையுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம்முனிவன் ஆனந்தத்தோடு தேவ லோகத்திற்கு வந்து, அப்பொழுது அங்கு வெகு உல்லாஸமாக ஐராவத யானையின்மேற் பவனிவந்துகொண்டிருந்த இந்திரனைக்கண்டு அவனுக்கு அம்மாலையைக் கைநீட்டிக் கொடுக்க, அவன் அதனை மாவட்டியினல் வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல் வைத்த வளவில் அம்மதயானை அதனைத் துதிக்கையாற் பிடித்திழுத்துக் கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத்தது; அதுகண்டு முனிவன் கடுங்கோபங்கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச்செருக்குற்ற உன்னுடைய ஐச்வரியங்களெல்லாம் கடலில் ஒளிந்துவிடக் கடவன' என்று சபிக்க, உடனே தேவர்களின் செல்வம் யாவும் ஒழிந்தன; ஒழியவே அசுரர் வந்து பொருது அமரரை வென்றனர். பிறகு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரண மடைந்து அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி அசுரர்களையுந் துணைக்கொண்டு மந்தரமலையை மத்தாக நாட்டி வாஸுகியென்னும் மஹா நாகத்தைக் கடைகயிறுகப் பூட்டிப் பாற்கடலைக் கடையலாயினர். அப்பொழுது மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்தி விட, தேவர்களின் வேண்டுகோளினல் திருமால் பெரியதோர் ஆமைவடிவெடுத்து அம் மலையின் கீழேசென்று அதனைத் தனது முதுகின்மீது கொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமல் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்த னன். இப்படி ஸ்ரீமந்நாராயணன் அக்கடலினிடையே மஹாகூர்மமாய் மந்தரபர்வதத்திற்கு ஆதாரமாய் எழுந்தருளியிருக்க, வாஸுகியின் வாலைப் பிடித்துக்கொண்ட தேவர்களும்

தலையைப் பிடித்துக்கொண்ட அசுரர்களும் ஆகிய இரு திறத்தாரும் அதனை வலியப்பிடித்து இழுத்துக் கடையவல்ல வலிமையில்லாதவராய் நிற்க, அது நோக்கி அத்திருமால் தான் ஒரு திருமேனியைத் தரித்துத் தேவர்கள் பக்கத்திலேயும், வேறொரு திருமேனியைத் தரித்து அசுரர்கள் பக்கத்திலேயும் நின்று வாஸுகியின் வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தனன். அப்பால் அந்த ஸ்ரீ மஹாவிஷ்ணு **தந்வந்தரி**யென்னும் தேவரூபத்தைத் தரித்து அம்ருதபூர்ணமான கமண்டலத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அந்த க்ஷீரஸமுத்ரத்திலிருந்து தோன்றினன். அப்பொழுது அசுரர்கள் தந்வந்தரியின் கையிலிருந்த அம்ருதகலசத்தை பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்ள அந்த எம்பெருமான் ஜகந்மோஹனமான ஒரு பெண்வடிவத்தைத் தரித்து அசுரர்களை மயக்கி வஞ்சித்து அமுதத்தைக் கைக்கொண்டு அமரர்களுடைய கோஷ்டிக்கு மாத்திரம் ப்ரஸாதித்தனன். ... ... ... ... (3)

## 4. வராஹாவதார வரலாறு

ஹிரண்யகசிபுவின் உடன் பிறந்தவனை ஹிரண்யாக்ஷனென்னுங் கொடிய அசுரன் தன் வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிச் சென்ற போது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மஹாவராஹரூபியாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை நாடிக் கண்டு பொருது கோட்டினாற் குத்திக் கொன்று பாதாள லோகத்தைச் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினாற் குத்தி அங்கு நின்று எடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளினன் என்பதாம். இப்பொழுது நடக்கிற ச்வேத வராஹ கல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளய ஜலத்தில் முழுகியிருந்த பூமியை மேலே யெடுக்க நினைத்து மஹாவராஹரூபியாகிக் கோட்டு நுனியாற் பூமியை எடுத்து வந்தனனென்ற வரலாறும் உண்டு. ... ... ... (4)

## 5. நரஸிம்ஹாவதார வரலாறு.

ஹிரண்யகசிபு என்பவன் தேவர் மனிதர் முதலிய எவ்வுயிர்களாலும் பகலிலும் இரவிலும் வானத்திலும் பூமியிலும் வீட்டின் அகத்திலும் புறத்திலும் தனக்கு மரணமுண்டாகாதபடி வரம்பெற்றான். இவன் தேவர் முதலிய யாவருக்கும் பலபல கொடுமைகளைப் புரிந்து அனைவரும் தன்னையே கடவுளாக வணங்கும்படி செய்து வருகையில், அவன் மகனான ப்ரஹ்லாதாழ்வான் இளமை தொடங்கி மஹாவிஷ்ணுபக்தனாய்த் தந்தையின் கட்டளைப்படி முதலில் அவன் பெயரைச் சொல்லிக் கல்விகற்காமல் நாராயணநாமம் சொல்லி வரவே கடுங்கோபங்கொண்ட இரணியன் ப்ரஹ்லாதனைத் தன் வழிப்படுத்துவதற்குப் பலவாறு முயன்றபின் அங்ஙனம் வழிபடாத அவனைக் கொல்வதற்கு எவ்வுபாயஞ் செய்தும் அவன் பகவானுடைய அநுக்ரஹபலத்தினால் ஒரு கேடுமின்றியிருக்க, ஒரு நாள் ஸாயங்காலத்திலே அந்த ஹிரண்யன் தன் புத்திரனை நோக்கி 'நீ சொல்லும் நாராயணனென்பான் எங்கேயுள்ளன்? காட்டு' என்ன, "தூணிலுமுளன் துரும்பிலுமுளன், எங்குமுளன்" என்று உறுதியாய்ச்சொல்ல, உடனே இரணியன் "இங்கு உளனோ?" என்று சொல்லி எதிரில் நின்ற தூணைப்புடைக்க, உடனே அதிலிருந்து திருமால் மநுஷ்யரூபமும் சிங்கவடிவுங்கலந்த நரசிங்கமூர்த்தியாய்த்தோன்றி இரணியனைப் பிடித்து வாசற்படியில் தன் மடிமீது வைத்துக் கொண்டு தன் திருக்கையில் நகங்களால் அவன் மார்பைப்பிளந்து அழித்திட்டு ப்ரஹ்லாதனுக்கு அருள்செய்தானென்பது பிரஸித்தம். "அளந்திட்ட தூணை அவன் தட்ட ஆங்கே, வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்கவுருவாய், உளந்தொட்டிரணியனொண்மார்வகலம், பிளந்திட்ட கைகள்" என்றும், "எங்குமுளன் கண்ணனென்ற மகனைக்காய்ந்து, இங்கில்லையாலென்றிரணியன் தூண்புடைப்ப, அங்கப்பொழுதே அவன் வீயத்தோன்றிய, என் சிங்கப்பிரான் பெருமை ஆராயுஞ் சீர்மைத்தே" என்றும் ஆழ்வார்கள் ஈடுபடுவர்கள்.

## (நரஸிம்ஹாவதார விசேஷங்கள்)

வேறேயொரு தூணிலிருந்து நரசிங்கமூர்த்தி தோன்றினால் முன்னமே ஒரு நரசிங்கத்தை உள்ளேவைத்து நாட்டிய தூண் அது என்று சொல்லிவிடக்கூடுமாகையாலே அந்தவார்த்தைக்கு இடமில்லாதபடி அந்த இரணியன் தானே தனது உயரம் பருமனுக்குப் பொருந்தப்பார்த்து அளந்து நாட்டிய அவன் வாசல் தூணிலிருந்தே திருமால் நரசிங்கமாய்த் தோன்றினனென்பதும், வேறு யாரேனும் கையால் தட்ட அத்தட்டியவிடத்திலிருந்து தோன்றினால் 'அவர் தம் கையில் நரசிங்கத்தை அடக்கிக்கொண்டுவந்து தூணிலே பாய்ச்சினர்' என்று சொல்லிவிடக்கூடுமாகையாலே அவ்வார்த்தைக்கு அவகாசமில்லாதபடி அவ்விரணியன் தானே தன்கையால் தட்டினவளவில் திருமால் தோன்றினனென்பதும்,—அவன் ஓரிடத்தில் தட்ட மற்றோரிடத்திலிருந்து நரசிங்கம் தோன்றினால் 'எங்குமுளன்' என்று ப்ரஹ்லாதன் செய்த பிரதிஜ்ஞை தவறி 'நீ சொல்லுகிறவன் இங்கில்லை' என்று இரணியன் செய்த பிரதிஜ்ஞை நிலைநிற்குமாகையாலே அதற்கு இடமில்லாதபடி அவன் தட்டின இடத்திலிருந்தே திருமால் தோன்றினனென்பதும்,—அவன் தட்டின பிறகு சிறிதுபோது கழித்து நரசிங்கம் தோன்றினால் 'நான் தட்டினபொழுது திருமால் அங்கில்லை' என்று அவன் சொல்லி திருமால் எங்கும் எப்பொழுதும் எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கிற உண்மை நிலையை மறுக்கக்கூடுமாகையாலே அதற்கு இடமறும்படி கர்ப்பம் கருமுதிர்தல் ப்ரஸவித்தல் முதலியனவும் குழந்தையாய் ஜனித்தல் பிறகு நாளடைவில் வளர்தல் என்பனவுமில்லாமல் அவ்வெதிரியினும் பருத்து வளர்ந்த வடிவையுடையனாய் அப்பொழுதே தோன்றினனென்பதும்,—அங்ஙன் தோன்றிய விடத்தும் ஹிரண்யன் ஜயசீலனாகவும் நரஸிம்ஹன் பராஜிதனாகவும் நேர்ந்தால் 'எங்குமுளன்' என்ற உண்மை நிலைத்தாலும் பரத்வம் ஸித்தியாமற்போய்விடுதல் பற்றி அதைவிடத் தோன்றாமலிருப்பதே நலமென்னும்படி யிருக்குமாதலால் அங்ஙனமாகாதபடி அக்கொடியவனைத் தவறாது அழித்தனனென்பதும்,—தேவர் மனிதர் விலங்குகள் தாவரம் என்னும் நால்வகைப் பிறப்புக்களிலுள்ளவற்றில் ஒவ்வொன்றினாலும் தனித்தனி சாகாதபடியும், ப்ரஹ்மஸ்ருஷ்டிக்கு உட்பட்ட எந்த பிராணியினாலும் சாகாதபடியும், ப்ரஹ்மருத்ராதிகளிடத்திற் பெற்றவரம் பழுதுபடாமைக்காக நரங்கலந்த சிங்கமாய் ப்ரஹ்மஸ்ருஷ்டியினுட்படாமல் தன்னைத்தானே தோற்றுவித்துக்கொண்டு தோன்றினனென்பதும்,—அஸ்த்ரசஸ்த்ரங்களொன்றினாலும் சாகாதபடியும் ஈரமுள்ளதனாலும் ஈரமில்லாததனாலும் இறவாதபடியும் பெற்றவரம் வீண்போகாமே நகங்களினால் கீண்டு கொன்றனனென்பதும், பகலிலு மிரவிலுஞ் சாகாதபடி பெற்றவரம் பொய்படாதபடி அப்பகலிரவுகளின் ஸந்தியாகிய மாலைப்பொழுதிலே கொன்றனனென்பதும், பூமியிலும் வானத்திலும் சாகாதபடி பெற்றவரம் மெய்யாம்படி தன் மடிமீது வைத்துக் கொன்றனனென்பதும்,—வீட்டின் அகத்திலும் புறத்திலும் இறவாதிருக்கும்படி பெற்றவரத்திற்கு விரோதமின்றி வாசற்படிமீது வைத்துக்கொண்டு கொன்றனனென்பதும் இவை போல்வன பல விசேஷங்கள் இவ்வவதாரத்திலே அருமையாக நோக்கத்தக்க விஷயங்களாம். "சுரராசுரர் முனிவர் நரர்கையில் பாரில் சுடர்வானில் பகலிரவில் உள்புறம்பில், பெருபடையில் தான் சாகா விரண்யன் றன்னைப் பிரகலாதன் தர்க்கித்துண்டென்ற தூணில், நரஹரியாய்ப் பொழுதுபுகு நேரந்தன்னில் நாடியுதித்துயர் வாசற்படிமீதேறி, இரணியனைத் தொடைமிசைவைத்துகிரினாலே இருபிளவாக்கினையரியே எம்பிரானே" என்றார் பின்னோரும்.

## 6, 7. வாமந, த்ரிவிக்ரமாவதார வரலாறு.

ப்ரஹ்லாதன் தனக்கு வயது சென்றபிறகு தன்னுடைய பகவத்தியானத்திற்கு இடையூறாயிருக்கிற ராஜ்யபரிபாலனத்தைத் தனது பௌத்திரனாகிய பலியினிடத்தில் ஒப்புவித்துத் தான தவஞ்செய்யப்போவதாகக் கருதி அந்தமாவலியை ஒரு நாள் ஏகாந்தத்தில் அழைத்து 'நான் வெகுகாலம் அரசாண்டு வந்தேன்; என் காலத்தில் ஒருவரும் அதர்மம்

செய்யாதபடி நோக்கிவந்தேன்; ஸ்ரீ விஷ்ணுவே முழுமுதற் கடவுள் என்கிற ஸித்தாந்தத்தை நான் உலகிற் பரவச் செய்து அனைவர்களையும் விஷ்ணுபக்தர்களாக்கி வந்தேன். இப்போது நான் கிழவனாய் விட்டபடியால் விதிப்படி தவஞ்செய்யப் போகின்றேன்; விஷ்ணுத்வேஷியாய் மாண்டுபோன உன் தந்தையை [விரோசனனை]ப் போலல்லாமல் நீ பரமவிஷ்ணு பக்தனாயிருந்து ராஜ்யமாளக்கடவை' என்று நன்மதிகூறிப் பட்டங்கட்டித் தான் இமயமலையேறித் தவஞ்செய்யச்சென்றான்.

பிறகு மாவலி அப்படியே சிலநாள் அரசாண்டுவந்து ஒரு நாள் மந்திரிகளை அழைத்து 'நான் சில நன்மைகளையடையத் தவஞ் செய்யச்செல்ல விரும்புகிறேன்; நான் மீண்டும் வருமளவும் இந்தராஜ்ஜியத்தில் விஷ்ணுபக்தி வழுவாதபடி நோக்கி வாருங்கள்' என்று கட்டளையிட்டுத் தான் இமயமலையருகில் போய் நான்முகக் கடவுளை நோக்கித் தவஞ் செய்து கொண்டிருக்கையில் பிரமன் பிரஸந்நனாய் வந்து காட்சி தந்து 'வரம் வேண்டிக்கொள்' என்ன, 'ஸ்வாமிந்! எனக்கு என் பாட்டனாருபதேசித்த விஷ்ணு பக்தியும் தருமசிந்தையும் எப்போதும் வழுவாதிருக்க வேணும்' என்றும் மூவுலகத்தையும் நான் வென்று வாழவேணும்' என்றும் இவை முதலான சிலவரங்களை வேண்டிப் பெற்றுக்கொண்ட மாவலி தனது ராஜதானியாகிய சோணிதபுரத்திற்கு வந்து சுக்கிராசாரியர் முதலிய ஆப்தர்களிடம் தான் பெற்ற வரங்களைச் சொல்லி அவர்களுடன் கூட மகிழ்ச்சியடைந்து ராஜ்யத்தைச் செங்கோல் செலுத்திக்கொண்டுவந்து பலபல யாகங்களையும் மற்றும் பலவிதமான தான தருமங்களையும் செய்துகொண்டு சுக்கிராசாரியரையும் ப்ரஸந்நராக்கி, தான் ஸகலலோகங்களையும் வெல்லத்தக்க விறுடையனாம்படி அவரிடத்திலும் ஆசிர்வாதம் பெற்று அதனால் செருக்குற்று ஒருவரையும் மதியாமல் திரிந்து கொண்டிருந்தான்.

சிலநாள் கழிந்தபின் ஸ்வர்க்கலோகத்தையும் வென்று ஆளவேண்டுமெனக் கருதி சுக்கிராசாரியரை யழைத்து 'நீர் ப்ருஹஸ்பதியிடஞ்சென்று நான் சொன்னதாகச் சொல்லும்; அதாவது—ஓ ப்ருஹஸ்பதி! உமக்கு இந்திரனைப் போல் நானுமொருசிஷ்யனே; எங்கள் குலத்தில் ஹிரண்யகசிபு ஆண்டுவந்த ஸ்வர்க்கலோகத்தைப் பின்பு ஒருவரும் ஆளத்தக்க பலசாலிகளாகப் பிறவாமையால் இந்திரன் பிடித்துக்கொண்டான்; இப்போது அதனை ஆளுகைக்கு எனக்கு வல்லமையுண்டு; ஆகையால் இப்போது அதை எனக்கு விட்டுவிட வேண்டியது; இல்லையாகில் போர் செய்யவேண்டியது; இதற்கு இந்திரன் என்ன சொல்லுகிறானோ அதை உணர்ந்து சொல்லும்' என்று சொல்லியனுப்பினான். சுக்கிரனால் இது கேட்ட ப்ருஹஸ்பதியும் இந்திரனோடு ஆலோசித்து ஒருமாதத்திற்குள் விடையளிப்பதாகச் சொல்லி சுக்கிரனை அனுப்பிவிட்டார். பிறகு இந்திரன் ஒன்றுந்தோன்றாமல் ப்ருஹஸ்பதியையுங் கூட்டிக்கொண்டு பிரமனிடஞ் சென்று செய்தியைச் சொல்ல, அதுகேட்ட நான்முகன் 'வரங்கொடுப்பதற்கு மாத்திரமே எனக்கு அதிகாரமுளது; கொடுத்த வரத்தினால் கெடுதி நேரிடுங்காலத்தில் வேறொரு உபாயத்தினால் அதை மாற்ற எனக்கு வல்லமை இல்லை' என்ன, பிறகு சிவனிடஞ் சென்று முறையிட, அச்சிவபிரானும் 'பிரமன் தந்த வரத்தை நான் அழிக்கவல்லேனல்லேன்; விஷ்ணுவிடஞ் சென்று முறையிடுதல் நன்று' என்று சொல்லிவிட, அவர்கள் விஷ்ணு பக்கலில் வந்து சொல்லிக்கொள்ள, அதற்கு விஷ்ணு 'ஓ ப்ருஹஸ்பதே! மாவலி எனக்குச் சிறந்த பக்தன், மிக்க தருமசிந்தையுள்ளவன், திடீரென்று அவனை நான் ஒன்றுஞ் செய்யலாகாது; தக்க உபாயத்தை நீங்களே ஆராய்ந்து சிறிதுகாலங் கழியுங்கள்' என்று சொல்லிவிட்டு மறைந்தார்.

முன்பு சுக்கிரனிடம் ப்ருஹஸ்பதி சொல்லியிருந்த ஒரு மாத அவதி கடந்து விட, ஸ்வர்க்கலோகத்தினின்றும் ஒரு ஸமாசாரமும் வரக்காணாமையால் மாவலி தன் படைகளையெடுத்துவிட்டு ஜயபேரி முழங்கப் புறப்பட்டு இந்திரனோடு போர் புரிவதென்று ஸ்வர்க்கஞ்

சென்று அங்கு ஒருவரையுங் காணாமல் அங்குள்ள சிங்காசனத்தின்மீது தான் ஏறி வீற்றிருந்து இந்திரனைப்போல் மூன்று உலகங்களையும் ஆண்டுவந்தான். அப்போது மூன்று உலகங்களிலுமுள்ள ஸகல பிராணிகளும் விஷ்ணுபக்தராயினர். தருமம் குறையற நடைபெற்றுவந்தது. ஒருநாள் ப்ருஹஸ்பதி மாவலியிடம் வந்து அரசனே! நீர் சுக்கிரனை வைத்துக்கொண்டு அரசுபுரியும்; நான் தவஞ்செய்யப் போகிறேன்' என்ன, அதற்கு மாவலி இந்திரனாக வருபவர்கட்கெல்லாம் உம்மைப் புரோகிதராக ஸ்ரீமஹாவிஷ்ணு நியமித்திருக்கிறாராகையாலிவ்விடம் விட்டு நீர் போகலாகாது' என்ன, அதற்கு அவர் 'நூறு அச்வமேதயாகஞ்செய்து எவனொருவன் இந்திர பட்டத்திற்கு வருகிறானோ அவனுக்கு நான் புரோஹிதனாம்படி விஷ்ணுநியமனமேயன்றி, கிரமமாக இருந்த இந்திரனை அச்சமுறுத்தித் துரத்திவிட்டு இந்த ஸ்தானத்திற்கு அநீதியாக வந்திருக்கிற உமக்கு நான் புரோஹிதனாகமாட்டேன்' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுக் கச்யபருடைய ஆச்ரமத்திற்கு வந்து அவருடைய தருமபத்தினியாகிய அதிதி தேவியிடததில் இந்திரனுடைய துக்கச் செய்திகளையுரைக்க, அவள் கேட்டு மனம் பொறாமல் அழுதுகொண்டு தன் புத்திரனாகிய இந்திரனுக்கு நன்மைகள் உண்டாகும்படி விஷ்ணுவிடம் பிரார்த்திக்க விரும்பி பகவானைத் துதித்துக் கொண்டிருக்கையில் ப்ரஸந்நரான ஸ்ரீமஹாவிஷ்ணு அதிதியின் முன்னே வந்து ஸேவைஸாதித்து அவளுடைய கோரிக்கையை அறிந்துகொண்டு 'அம்மா! நான் உனக்குப் பிள்ளையாகப்பிறந்து இந்திரனுடைய துயரத்தைப் போக்குகிறேன்' என்று சோதிவாய் திறந்து அருளிச்செய்து மறைந்துவிட்டார்.

பிறகு சிறிதுகாலங் கழிந்தபின் அதிதி கர்ப்பந்தரித்து வாமனனைப் பெற்றனள். கச்யபர் அப்புதல்வனுக்கு ப்ராஹ்மண ஸம்ஸ்காரங்களை யெல்லாம் கிரமமாகச் செய்வித்தார். வாமனனும் தபஸ்வியாக இருந்து வந்தான். அக்காலத்தில் மாவலி நர்மதாநதியின் கரையில் வைஷ்ணவயாகஞ் செய்யமுயன்று யாகத்தை நடத்திக்கொண்டிருக்கையில் இவ்வாமனன் 'இந்திரனுக்கு நாம் உதவி செய்ய இதுவே தக்கசமயம்' என்றெண்ணி அங்கிருந்து புறப்பட்டு மாவலியின் யாகசாலைக்குச் சென்றார். பரமவிலக்ஷணமான திருக்கோலத்தைக் கண்ட மாவலி பெருமகிழ்ச்சிகொண்டு வாமனனை உபசாரபூர்வமாக ஆஸனத்தில் இருத்தி, வந்த காரியத்தை விநயத்துடன் விசாரிக்க, வாமனன் 'ஓ மன்னவனே! நான் தவஞ்செய்ய விரும்புகிறேன்; பிறருடைய நிலத்திலிருந்து தவஞ்செய்தால் பயனில்லையாகையால் எனக்கு அறுதியாக என் காலால் மூவடிமண் தரவேண்டும்' என்ன, அது கொடுப்பதற்கு அவன் இசைந்தவுடனே திரிவிக்ரமனாக ஆகாயத்தை அளாவி வளர்ந்து ஓரடியால் பூலோகத்தையும் மற்றோரடியால் மேலுலகத்தையும் அளந்து மூன்றாமடிக்காக அவன் இசைவின்படியே அவன் முடியிற் காலை வைத்து அவனைப் பாதாளத்திலழுத்தி அடக்கினன். ... (7)

## 8. சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறியது.

வாமநமூர்த்தியின் வடிவழகாலும் மழலைச் சொல்லாலும் மனமகிழ்ந்த மஹாபலி மூவடிமண்ணைக் கொடுக்க யத்நித்தவளவிலே, சுக்ராசார்யன் எம்பெருமானது வடிவையும் வந்தவகையையும் பேச்சையும் ஊன்றிப் பார்த்து 'இவன் ஸர்வேச்வரன், தேவகாரியம் செய்யும் பொருட்டு உன் செல்வத்தை யெல்லாம் பறித்துப்போக வந்தான்; ஆகையால் நீ இவனுக்கொன்றும் தரத்தகாது' என்று தாநத்தைத் தடுக்க, அவன் அதை ஆதரியாமல் தாரைவார்த்து தத்தம் செய்யப்புக, ஜலபாத்ரத்தின் [திருக்காவிரி] த்வாரத்திலே அந்த சுக்ரன் புகுந்துகொண்டு நீர் விழவொட்டாமல் தடுக்க, ஸ்ரீவிஷ்ணு த்வாரம் சோதிப்பவன் போல, தன்னுடைய திருக்கையிலணிந்த தர்ப்ப பவித்ரத்தின் நுனியால் அவன் கண்ணைக் குத்திக் கலக்க, அவனும் கண்கெட்டு அங்குநின்றும் வெளிப்பட, பின்பு மாவலியினிடத்தில் நீரேற்றுப் பெற்றனன். ... ... ... ... ... (8)

## 9. நமுசியை வானிற் சுழற்றியது.

வாமநமூர்த்தி மஹாபலியிடத்தினின்றும் தானம் வாங்கினவுடனே திரிவிக்ரமனாய் மூன்றடிமண்ணையளக்கப்புக, அதைக்கண்ட மஹாபலிபுத்திரனான நமுசி யென்பவன் ஓடி வந்து 'இது என்ன அநியாயம்!' என்று சொல்லி வளருகின்ற திருவடியைத் தகைய, ஸ்ரீவிஷ்ணு 'நீ என் தகைகிறாய்? நான் தானம் பெற்றதை அளந்து கொள்ள வேண்டாவோ' என்ன; நமுசி 'நீ செய்கிறது கபடமன்றோ' என்ன; ஸ்ரீவிஷ்ணு 'உன்னுடைய தகப்பன் எனக்கு தாரைவார்த்து தத்தம் பண்ணினது பொய்யோ? என்ன; நமுசி 'என்னுடைய பிதா உன்னுடைய மோசவகை தெரியாமல் உன் வஞ்சனத்தில் அகப்பட்டுக் கொண்டான்' என்ன; ஸ்ரீவிஷ்ணு 'நான் செய்வதை வஞ்சகமென்று எதனாற் சொல்லுகிறாய்?' என்ன; நமுசி 'நீ செய்வது வஞ்சனமன்றாகில் நீ முன்பு யாசித்தபோதிருந்த வடிவத்தைக் கொண்டு அளந்து கொண்டு போ' என்ன, ஸ்ரீவிஷ்ணு, 'சரீரமென்பது எப்போதும் ஒரே தன்மையாக இருக்கமாட்டாதே; விகாரப்படுந் தன்மையுடையது காண்; முன்னைய வடிவத்தைக் கொண்டு எப்படி அளக்கமுடியும்?' என்ன, இப்படி ஸமாதானஞ் சொல்லவுங் கேளாமல் தான் பிடித்த திருவடியின் பிடியைவிடாமல் உறுதியாயிருந்த நமுசியை வளர்ந்த திருவடியினால் ஆகாயத்திலே கொண்டுபோய்ச் சுழன்று விழும்படி செய்தருளினன். ... ... (9)

## 10. உலகளந்த திருவடியில் கங்கை பெருகியது.

திருமால் உலகமளந்தகாலத்தில் மேலே ஸத்தியலோகத்திற்சென்ற அப்பிரானது திருவடியைப் பிரமன் தன் கைக்கமண்டல தீர்த்தத்தாற் கழுவி விளக்க, அந்த ஸ்ரீபாத தீர்த்தமாகப் பெருகித் தேவலோகத்திலிருந்த ஆகாயகங்காநதியை, ஸூர்யகுலத்துப் பகீரத சக்ரவர்த்தி கபிலமுனிவனது கண்ணின் கோபத்தீக்கு இலக்காகி உடலெரிந்து சாம்பலாய் நற்கதியிழந்த தனது மூதாதையரான ஸகர புத்திரர் அறுபதினாயிரவரை நற்கதிபெறுவிக்கும் பொருட்டு நெடுங்காலந் தவஞ்செய்து மேலுலகத்திலிருந்து கீழுலகத்துக்குக் கொணர்கையில், அவனது வேண்டுகோளாற் சிவபிரான் அந்நதியை முடியின் மேல் ஏற்றுச் சிறிது சிறிதாகப் பூமியில் விட்டனன். ... ... (10)

## 11. பரசுராமாவதார வரலாறு.

உலகத்தில் எவரும் அழிப்பவரில்லாமையால் கொழுத்துத்திரிந்து கொடுமை இயற்றி வந்த க்ஷத்திரிய வம்சங்கள் பலவற்றை நாசஞ் செய்தற் பொருட்டு நாராயணமூர்த்தி ஜமதக்கி முனிவரது மனைவியான ரேணுகையிடம் இராமனாய்த் திருவவதரித்துப் பரசு என்னுங் கோடாலிப்படையை ஆயுதமாகக் கொண்டு அதனாற் பரசுராமனென வழங்கப்பெற்று வருகையில், ஒருநாள் கார்த்தவீர்யார்ஜுநனும் அவனது குமாரர்களும் ஜமதக்கியின் ஆச்ரமத்தில் இளைப்பாறப் புகுந்தகாலத்து, அங்கே அம்முனிவனது ஹோமதேநுவானது வேண்டின வஸ்துக்களையெல்லாம் யதேஷ்டமாக அளித்துக்கொண்டிருப்பதைக் கண்ட இவர்கள் அப்பசுவைக் கொள்ளைகொள்ளவிரும்பி அதனைக்கவர்ந்து அம் முனிவனையுங் கொன்றிட்டது காரணமாக (பரசுராமன்) அக்கார்த்தவீர்யார்ஜுநனையும் அவனது குமாரர்களையுங் கொன்று அதனாலேயே க்ஷத்திரியவம்சம் முழுவதன்மேலும் கோபாவேசங்கொண்டு உலகத்திலுள்ள அரசர்கள் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டான். இப்பரசுராமன் ஏழுசிரஞ்சீவிகளில் ஒருவன். இவனது வலிமையும் வெற்றியும் அற்புதமானது. சிவபிரானது கைலாஸகிரியைப் பெயர்த்தெடுத்த இராவணன் மிகவலியவனென்றும், அவனிலும் கார்த்தவீரியன் வலியவனென்றும் அவனிலும் பரசுராமன் வலியவனென்றும் இதிகாஸங்களால் விளங்கும். சிவனை விஷத்தையுண்டு கங்கையைத்தரித்து மேரு வில்வளைத்துத்

திரிபுரமெரித்து மன்மதனை நீறுபடுத்தி யமனையுதைத்து ஸம்ஹாரத் தொழில்நடத்தும் பேராற்றலையுடைய உக்ரமூர்த்தியானவன்; அக்கடவுள் வீற்றிருக்கின்ற கைலாஸகிரியை இராவணன் ஒருகால் வேரோடு பெயர்த்தனன்; அங்ஙனம் மிகவலியவனாய் திக்விஜயஞ் செய்து திக்கஜங்களையும் வென்ற இராவணனைக் கார்த்தவீர்யார்ஜுநன் கட்டிச் சிறையிலிட்டனன்; அன்னவனைப் பரசுராமபிரான் தோள் துணித்துத் தொலைத்திட்டனனென்றால் இவனது ஆற்றல் பேச்சுக்கு நிலமன்றே. எம்பெருமானது தசாவதாரங்களுள் ஆறாம் அவதாரமாயிருப்பவனான பரசுராமன் ஏழாமவதாரமான தசரதராமன்மீது கோபித்தலும், இவ்விருவரும் ஒருவரோடொருவர் போர்செய்தலும், ஒருவர் மற்றொருவரை வெல்லுதலும் பொருந்துமோவெனின்; துஷ்டர்களாய்க் கொழுத்துத் திரிந்த அரசர்களைக் கொல்லும் பொருட்டுப் பரசுராமனிடத்தில் ஆவேசித்திருந்த விஷ்ணுசக்திவிசேஷமானது அக்காரியம் முடிந்தபின்பு அவ்விஷ்ணுவின் அம்சாவதாரமான தசரதராமனால் கவர்ந்து கொள்ளப்பட்டதாகையால் பொருந்துமென்க. இதனால் ஆவேசாவதாரத்திற்காட்டிலும் அம்சாவதாரத்திற்கு உள்ள ஏற்றம் விளங்கும்.

ஸ்ரீமந்நாராயணனது விபவாவதாரங்கள் அளவற்றவை; அவை முக்கியம் அமுக்கியம் என இருவகைப்படும். இவற்றில் முந்தியது சிறந்தது. பிந்தியது அதனிலும் தாழ்ந்தது. முக்கியமாவது ஸாக்ஷாதவதாரம். அமுக்கியமாவது ஆவேசாவதாரம். ஆவேசம் ஸ்வரூபாவேசமென்றும் சக்தியாவேசமென்றும் இருவகையதாம். ஸ்வரூபாவேசமாவது—சேதநருடைய சரீரங்களில் எம்பெருமான் தன்னுடைய ரூபத்துடன் ஆவேசித்து நிற்பது. பரசுராமன், பலராமன் போல்வார் இத்திறத்தார்கள். சக்தியாவேசமாவது-சேதநர்பக்கல் காரிய காலத்திலே எம்பெருமான் சக்திமாத்திரத்தால் தோன்றி விளங்குதல். கார்த்தவீர்யார்ஜுநன், அர்ஜுநன், வியாஸர்போல்வார் இத்திறத்தார். இவற்றில், சக்தியாவேசத்தைவிட ஸ்வரூபாவேசம் பிரபலம். இவற்றின் உண்மை நிலையை விஷ்வக்ஸேநஸம்ஹிதை முதலிய ஸ்ரீபாஞ்சராத்ரஸம்ஹிதைகளிலும் **தத்வத்ரய**த்திலும் அதன் வியாக்கியானத்திலும் பரக்கக் காணலாம். பரசுராமாவதாரம் ஸ்வரூபாவேசாவதாரம்.

முமுக்ஷுக்களுக்குப் பரசுராமாவதாரம் உபாஸநைக்கு உரியதன்றாகிலும் விரோதிகளைக் களைந்தொழித்த உபகாரத்துக்குத் தோற்றுத் துதிப்பது மாத்திரமுண்டு. '**வென்றிமாமழுவேந்தி முன் மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்றதேவா**" என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்வதும், 'மன்னடங்க மழுவலங்கைக்கொண்ட விராமநம்பீ" என்று பெரியாழ்வாரருளிச் செய்வதும், "கோக்குலமன்னரை மூவெழுகால் ஒரு கூர்மழுவால், போக்கிய தேவனைப் போற்றும் புனிதன்......இராமாநுசன்" என்று அமுதனார் (இராமாநுச நூற்றந்தாதியில்) அருளிச்செய்வதும் விரோதி நிரஸநஸ்வபாவத்துக்குத் தோற்றுத் துதித்த மாத்திரமேயென்க. ... ... ... (11)

# ஸ்ரீ ராமாவதார வைபவ ஸங்க்ரஹம்

## 12. ஸ்ரீராமாதிகளின் திருவவதாரம்

தசரத சக்ரவர்த்தி புத்ரகாமேஷ்டி செய்ய, அந்த யஜ்ஞஸமாப்தி ஸமயத்தில் அக்நி புருஷன் நான்முகனுடைய நியமநம்பெற்று ஸ்வர்ணபாத்திரத்தில் பாயஸத்தைப் பூரித்துக் கொண்டுவந்து யஜ்ஞகுண்டத்தில் கிளம்பித் தசரதனுக்கு அப்பாயஸத்தைக் கொடுத்தான்.

தசரதனும் அப்பாயஸத்தை மிக்க மனமகிழ்ச்சியுடன் வாங்கி இரண்டுபாகமாக்கி ஒருபங்கைத் தன் ப்ரதாநமஹிஷியான கௌஸல்யைக்குக் கொடுத்து, இரண்டாவது பாகத்தை இரண்டாக்கி ஒன்றை ஸுமித்ரைக்குக் கொடுத்து மற்றொரு பாகத்தையும் இரண்டாக்கி அதில் ஒன்றைக் கைகேயிக்குக்கொடுத்து மிருந்ததை மீண்டும் ஸுமித்திரைக்குக் கொடுத்துவிட்டு யஜ்ஞத்தை ஸாங்கமாகச் செய்துமுடித்து அவப்ருத ஸ்நாநஞ்செய்து, ருத்விக்கு முதலியவர்களைக் கிரமப்படி ஸம்மானித்து விடை கொடுத்தான். அதுமுதல் கௌஸல்யை முதலானோர் மூவரும் கர்ப்பலக்ஷணங்களைத் தரித்து மிக்க புகரை யுடையவர்களாய் விளங்கிவந்தனர். அக்காலத்தில் பகவான் தான் தேவர்களுக்குக் கொடுத்திருந்த வரத்தைத் தலைக்கட்டுகைக்காகத் தான் கௌஸல்யையின் கர்ப்பத்தில் ப்ரவேசித்தான். “சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்” என்றபடி பகவானுக்கு அவ்வக்காலங்களுக்கு உரிய கைங்கரியங்களை நடத்திக்கொண்டு எப்பொழுதும் இணைபிரியாதிருக்கிற ஆதிசேஷன் ஸுமித்திரையின் கர்ப்பத்தில் பிரவேசித்தான். எப்போதும் பகைவரை வென்றுகொண்டு பகவானது திருக்கைமீது பொலிந்து வாழ்கின்ற ஸுதர்சந பாஞ்சஜந்யாழ்வார்கள் இருவரும் கைகேயியின் கர்ப்பத்தில் பிரவேசித்தனர்.

இப்படி பதினொரு திங்கள் கழிந்தபின்னர் பன்னிரண்டாவது திங்களாகிய சித்திரை மாதத்தில் சுக்லபக்ஷ நவமி கூடிய புநர்வஸு நக்ஷத்திரத்தில் கர்க்கட லக்நத்தில் பராத்பரனாகிய எம்பெருமான் (ஸ்ரீராமனாகி) ஸ்ரீகௌஸலையாருக்குக் குமாரனாகத் திருவவதரித்தான். புஷ்ய நக்ஷத்திரத்தில் கைகேயிதேவியினிடத்தில் பரதனும், ஆயிலியத்தில் ஸுமித்ரா தேவியிடத்தில் லக்ஷ்மணனும், மகத்தில் அந்த ஸுமித்ரா தேவியிடத்தில் சத்ருக்நனும் அவதரித்தனர். இப்புத்ர ஜந்மோத்ஸவத்தை மேலுலகத்தவர்களும் நிலவுலகத்தவர்களும் மிக்க சிறப்பாகக் கொண்டாடினர். பிறகு தசரதமகாராஜன் அப்புதல்வர்கட்குக் குலகுருவாகிய வஸிஷ்டரைக் கொண்டு விதிபூர்வமாக அவ்வக்காலங்களில் ஜாதகர்ம நாமகரணம் முதலிய வைதிகச் சடங்குகளை நடத்திவந்தனன். அந்த ராஜ குமாரர்களும் சுக்லபக்ஷத்துச் சந்திரன்போல நாள்தோறும் கலைகளினால் நன்கு விளங்கினர். தாய்தந்தையரும் மற்றுமுள்ள ப்ரஜைகளும் ஆநந்தத்தின் எல்லையிலே நின்றனர். இக்குமாரர்கள் வேதங்களை ஸாங்கோபாங்கமாகக் கற்று தநுர் வித்தையில் ஒப்புயர்வற்றதேர்ச்சியைப் பெற்றனர். (12)

## 13. விச்வாமித்ர யாகஸம்ரக்ஷணம்

தாசரதிகள் இங்ஙனே வளர்ந்துவருங் காலத்தில், ஒருநாள் விச்வாமித்ர மஹர்ஷி தசரதனிடம் வந்து, தான் ஸங்கல்பித்திருக்கும் யாகத்தை இடையூறின்றி நிறைவேற்றுதற் பொருட்டு இராமபிரானை இலக்குமணனோடு கூட்டித் தன்னுடன் அனுப்புமாறு கேட்டுக் கொண்டார்; அச்சொல்லைக்கேட்ட தசரதன் நஞ்சுதிற்றிய நாராசத்தினால் அடியுண்டவன் போல மிகவருந்தி மறுமொழிகூறமாட்டாது மனமழிந்து நெடும்போது கழித்துத் தெளிந்து “ஓ! மஹர்ஷியே! நான் அறுபதினாயிரம் வருஷம் மலடிருந்து இப்பொழுதுதான் இவ்வருமந்த பிள்ளைகளைப் பெற்றேன்; இவர்களை ஒரு க்ஷணகாலமாகிலும் காணேனாகில் நான் உயிர் துறந்திடுவேனே; அதுவுமன்றி இவர்கள் சிறுகுழந்தைகள்; யுத்தத்திற்கு உரியபருவம் இல்லை; வருத்தம் பொறுக்ககில்லாத ஸுகுமாரர்கள்; இவர்களை அழைத்துக்கொண்டு போவதனால் உமக்கு யாதொரு பயனும் விளையாது. அந்த முரட்டு அசுரர்களோடு போர் செய்யவல்ல நான் படைகளைத் திரட்டிக்கொண்டுவந்து அவர்களை வென்று வேள்வியை நிறைவேற்றுவிக்கிறேன். என்னிடம் அருள்கூர்ந்து இச்சிறுவர்களை மறந்துவிடும்” என்று வெகு நயப்புடனே கேட்டுக்கொண்டான். பிறகு விச்வாமித்திரன் ‘ஓ அரசனே! இவர்களுடைய வல்லமையை நான் அறிவேன்; என்னைப்போன்ற மற்றவர்களும் அறிவார்கள்;

DR. U.V

உனக்கு இவர்களுடைய மஹிமை தெரியாது. தெரிந்துகொள்ளவேணுமாகில் உன்னுடைய நன்மையையே நாடிநிற்கும் இந்த வஸிஷ்டபகவானைக் கேள்' என்றார். இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் வஸிஷ்டபகவான், 'ஓ வேந்தனே! விச்வாமித்திரர் சொல்வது உண்மையே; அவர் உன் பிள்ளைகளுக்கு நன்மையை விளைவிக்க நினைத்து உன்னிடம் வந்து இவர்களை யாசிக்கிறார்; ஒரு குறையும் நேரிடாது; நன்மைகள் நன்குமிகும்; ஆகையால் இவருடன் உன்பிள்ளைகளை அனுப்பிவிடு' என்று போதித்தனர். அதைக்கேட்டு அரசன் மனக்கவலை தீர்ந்து ராமலக்ஷ்மணர்களை அழைத்து விச்வாமித்ர மஹர்ஷியிடம் அர்ப்பணம் செய்துவி , அம்மஹர்ஷி இருவரையும் கூட்டிக்கொண்டு போகையில் இவர்களுக்கு இளைப்பு உண்டாகாமைக்காக 'பலை அதிபலை' என்கிற இரண்டுவித்யைகளை உபதேசித்து அழைத்துக்கொண்டு போகும்வழியில் தாடகையென்ற ஓர் அரக்கி பெருங்கூச்சலிட்டுக் கொண்டு ஓடிவந்து வழியைத் தகைந்து வெருட்டிக்கொண்டு எதிரே பயங்கரமான உருவங்கொண்டு மலைபோல் நின்று இவர்களைக் கொல்லக்கருதினள். மாமுனிவர் ஒரு உங்காரத்தினால் அவளைத்தகைந்து ஸ்ரீராமனை ஏவ, இராகவன் மஹர்ஷியின் நியமநத்தினால் ஸ்த்ரீ என்று பாராமல் அங்கொடியிலே வில்லை வளைத்து நாணேற்றி அம்புதொடுத்து அவ்வரக்கியின் மீது எய்து அவளை உயிர் தொலைத்திட்டான். பின்பு விச்வாமித்திரர் இராமபிரானுக்குச் சில அஸ்த்ரங்களை உபதேசித்துத் தனது ஸித்தாச்ரமம்சேர்ந்து யாகஞ்செய்யத் தொடங்குகையில், அதனையறிந்த தாடகையின் பிள்ளைகளாகிய ஸுபாஹு, மாரீசன் என்கிற இருவரும் சில துஷ்டர்களுடன் வந்து யாகபூமியில் மாம்ஸம் முதலிய அசுத்தவஸ்துக்களை இறைக்கத் தொடங்கினர். அப்போது ராமலக்ஷ்மணரிருவரும் ஆடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு மிக்கபரபரப்புடன் ஆகாயத்தை நோக்கி வில்லை வளைத்து அம்புகளைப் பொழிந்து ஸுபாஹுவைக் கொன்று மாரீசனை ஓரம்பினால் கடலின் நடுவே தள்ளியழுத்தி மற்றவர்களைச் சின்னபின்னமாக அடித்து விழவிட்டு நிர்விக்நமாக யாகத்தை நிறைவேற்றுவித்தனர். பிறகு விச்வாமித்திரர் அவபிரதம் நீராடிப் பூரணகாமராயினர். யாகத்திற்காக வந்திருந்த ரிஷிகளும் தத்தம் இருப்பிடம்போய்ச் சேர்ந்தனர்.

## 15. ஸீதா விவாஹம்

இராமபிரானுடைய அவதார ரஹஸ்யமறிந்த மஹாநுபாவராகிய விச்வாமித்திரர், எம்பெருமானை எக்காலும் இணைபிரியாத பூமகளார் ஜநகமஹாராஜனுடைய யஜ்ஞவாடத்தில் அயோநிஜையாய் அவதரித்து வளர்ந்துவருகிற ஸீதாபிராட்டியை இராமனுக்கு விவாஹஞ் செய்துவைத்து க்ருதார்த்தராகக்கருதி இருவரையுங் கூட்டிக்கொண்டு மிதிலா நகரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் ஜநகனை நோக்கி 'நீர் கந்யாசுல்கமாக வைத்திருக்கிற வில்லை இராமனுக்குக் காட்டும்' என்ன; ஜநகன் சென்று ருத்ரனுடையதாகிய அவ்வில்லைப் பூஜித்து எடுத்துக்கொண்டுவந்து இராமன்முன்னே நிறுத்தி 'நான் யாகஞ்செய்கைக்காகப் பூமியை உழுங்காலத்தில் அந்தப்பூமியில் மிகக அழகுவாய்ந்தவளாய் ஸகல லக்ஷண ஸம்பந்நையாய்த் திருமகள் போன்றவளான ஒருமகள் கிடைத்தாள்; அவளை நான் வெகு ஆதரத்துடன் எடுத்துக்கொண்டு வந்து உயிரோடொப்ப வளர்த்துவருகிறேன். அவள் இப்போது விவாஹத்துக்கு உரிய வயது உடையவளாயினள். இவளுக்குத் தக்க வரனைக் காணமல் இவ்வில்லை நாணேற்றும் மஹாபுருஷனுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதாக நிச்சயித்தேன், இதைப் பலர் வந்து பார்த்து அசைக்கவும் முடியாமல் மீண்டு போயினர்' என்றுரைத்தான்.

அதைக்கேட்டு ஸ்ரீராகவன் எழுந்து முனிவருடைய ஆஜ்ஞையைப் பெற்றுக்கொண்டு அந்த வில்லையெடுத்து அவலீலையாக நாணேற்றும்போது அந்தவில் இராமனுடைய பலத்தைப் பொறாமல் முறிந்து விழ்ந்தது. அதனால் ஸ்ரீராகவனுடைய மஹிமையை ஒப்புயர்வற்றதாக ஜநகமஹாராஜன அறிந்து இவரை மஹாபுருஷனென்று அறுதியிட்டு ஸீதாதேவியை இராமனுக்குக் கொடுத்து விவாஹம் செய்விப்பதாக ப்ரதிஜ்ஞை பண்ணி, தனது கர்ப்பத்தில் உதித்த ஊர்மிளையை லக்ஷ்மணனுக்குக் கொடுப்பதாகவும் நிச்சயித்து, தசரதமஹாராஜனுக்கு மணவோலை எழுதிவிட்டு மிதிலாபுரியில் விவாஹ கோலங் கோடித்தான். தசரத சக்கரவர்த்தி திருமணப்பத்திரிகையைக் கண்டு மிக மகிழ்ந்து பரத சத்ருக்நரிருவரையுங் கூட்டிக்கொண்டு புரோஹிதர் மந்திரிகள் முதலிய பரிவாரங்களுடன் பத்நீஸமேதனாய்ப் புறப்பட்டு மிதிலை சேர்ந்து ஜநகனால் பூஜிக்கப் பெற்று, மஹாராஜன் நேரில் மொழிந்த இராமனது வைபவத்தையும் ஸீதாதேவியின் மஹிமையையும் இவ்விருவர்கட்கும் விவாஹம் செய்விக்க முயன்றதையும் ஆனந்தமாகக்கேட்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்களைத் தழுவிக்கொண்டு உச்சிமோந்து ஜநகனை மிகவுங் கொண்டாடி, குசத்வஜருடைய பெண்களாகிய மாண்டவி, ச்ருதகீர்த்தி என்பவர்களை பரதசத்ருக்நர்களுக்குக் கொடுப்பதாக நிச்சயித்தபடியையுங் கேட்டுப் பிள்ளைகள் நால்வர்க்கும் கோதாநவ்ரதத்தை ஸாங்கமாக நடத்தினபின் விவாஹமஹோத்ஸவம் இனிது நடைபெற்றது.

## 17. பரசுராம பங்கம்

பின்பு தசரதசக்ரவர்த்தி புத்திரர்கள் நால்வரையும் மணாட்டுப்பெண்களுடன்கூட அழைத்துக்கொண்டு ஸபரிவாரமாகப் புறப்பட்டு அயோத்திக்கு மீண்டுவருங்கால் இச்செய்திகளையெல்லாம் அறிந்த பரசுராமன் வெகு கோபத்துடன் எதிர்வந்து ஸ்ரீராமனை நோக்கி 'ஓ பாலனே! நீ ஒரு சொத்தை வில்லை முறித்துத் தன்னைப் பலவானாக நினைத்துச் செருக்கியிருக்கிறாய்; அஃது ஒரு பொருளல்ல; நீ ஆண்பிள்ளையாகில் இவ்வில்லை முறி, பார்ப்போம்,' என்று தன் கையிலுள்ளதொரு வில்லைத் தந்தார். அதை இராமன் அவலீலையாக வாங்கி நாணேற்றி அம்பு தொடுத்துக் கோபத்துடன் 'ஓ பரசுராமா! உம்மை அந்தணனென்று பொறுத்தேன்; ஆகையால் உம்மைக் கொல்லவில்லை; இந்த அம்புதொடுப்பு வீணாகப்போகாது; இவ்வம்பு கொண்டு, நீர் தபோபலத்தினால் ஸம்பாதித்திருக்கும் லோகங்களையாவது அழித்துவிடுகிறேன்; அல்லது உம்முடைய அந்தரிக்ஷத்தில் வாயுவேகமாய்ப் போகிற வழியையாவது அழித்துவிடுகிறேன்; இவ்விரண்டில் உமக்கு எது இஷ்டம்?' என்று கேட்க, பரசுராமன் 'நீர் ஸாக்ஷாத் விஷ்ணுவே; மற்றொருவனால் இது நாணேற்ற முடியாது; நான் இப்பூமியைக் காச்யபருக்குக் கொடுக்கும்போது அவர் என்னை இப்பூமியிலிருக்கக்கூடாதென்று சபதம்பண்ணி வாங்கிக்கொண்டாராகையால் நான் இந்நிலத்தில் அடிவையாமலே மஹேந்திரத்திற்குப் போய்விடுகிறேன்; இனி இவ்வம்பை என்னுடைய லோகங்களில் விட்டுவிடும்' என்று வெகு தீநஸ்வரமாய்ச் சொல்ல, இராகவனும் அப்பாணத்தினால் அவருடைய லோகங்களை அழித்துவிட்டார். பின்பு பரசுராமன் ஒளிமழுங்கி மஹேந்திரத்திற்குப் போய்விட்டான். முன் மூவெழுகால் மன்னரைக் கொன்ற மழுவேந்திய பரசுராமனைக் கண்டு 'நம் பிள்ளைகளுக்கு என்ன தீங்குவருகிறதோ!' என்று திகிலடைந்து மூர்ச்சித்திருந்த தசரதன் பயந்தீர்ந்து மகிழ்ந்து யதாக்ரமமாக அயோத்தி எய்தி நெறி வழுவாது ராஜ்ய நிர்வாஹம் செய்துகொண்டு வந்தான். திருக்குமாரர்கள் நால்வரும் தங்கள் தங்கள் மனைவிகளுடன்கூடி உல்லாஸமடைந்து இனிமையாக வாழ்ந்து வந்தனர்.

## 18, 19. இராமனுக்கு முடிசூட்ட முயற்சியும் கைகேயி வரம் வேண்டலும்:

தசரதாத்மஜர்களுக்கு விவாஹமான பின்பு கேகயராஜனுடைய மகனாகிய 'யுதாஜித்' என்பவன் தன்னுடைய மருமகனாகிய பரதனைத் தன் தேசத்துக்கு அழைத்துக்கொண்டு போனான். அந்தப் பரதனிடத்தில் மிக்க அன்புற்ற சத்ருக்னன் பரதனைவிட்டு நொடியளவும் பிரியமாட்டாத தன்மையனாகையாலே தானும் அவருடன் கூடவே பரிசர்யை பண்ணிக்கொண்டு கேகயதேசம் சென்றான். தசரதசக்ரவர்த்தி வயது முதிர்ந்தவனாகையால் ராஜ்ய பாரத்தை ஸ்ரீராமபிரானிடம் ஒப்புவித்துத் தான் ஸுகமாகக் காலக்ஷேபம் பண்ணிவரக் கருதி மந்திரிகளையும் புரோஹிதர்களையும் ப்ரஜைகளையும் திரட்டித் தன்மனக்கருத்தை வெளியிட்டான். அதைக்கேட்டு அனைவரும் அளவற்ற ஆநந்தமடைந்து 'ஓ அரசரே! நீர் எங்களை இதுவரை வெகு ஒழுங்காகவே ஆண்டுவந்தபோதிலும் எங்கள் மனம் உம்முடைய பிள்ளை பக்கலிலேயே ஊன்றியழுந்திக் கிடக்கிறது. அவருடைய குணங்கள் எண்ணிறந்தவை; எங்களுடைய பாக்கியத்தினால்தான் அவரை முடிசூட்ட உமக்குக் கருத்து உண்டாயிற்று. ஆநந்தம்! பரமாநந்தம்!!; விரைவில் தானே இக்கருத்தை நீர் நிறைவேற்றவேண்டும்' என்று தங்கள் ஆசையை அறிவித்தனர். அரசன் அதைக்கேட்டுக் களித்து அடுத்த புஷ்ய நக்ஷத்திரத்தில் இராமபிரானுக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய நிர்ணயித்தான். கோஸலநாடு முழுதும் ஒரே ஆநந்தமயமாகக்கிடக்கிறது. விசித்திரமான நகராலங்காரங்கள் நடைபெறுகின்றன.

பிறகு கைகேயி மந்தரையின் கலஹச்சொற்களைக் கேட்டு மனங்கலங்கி இராமனுடைய திருவபிஷேக மஹோத்ஸவத்தைக் கலைத்துவிடக்கருதி, அரசனை! நீர் முன்பு ஒரு காலத்தில் சம்பராஸுரனோடு போர்புரியப்போனீர்; அப்போது உம்முடைய தேரை நடத்தவல்ல பாகனில்லாமையால் நான் இருந்து உமக்கு வெற்றியுண்டாகும்படி தேரை நடத்தினேன். அதனால் நீர் அந்தச் சம்பராஸுரனை வென்று என்மீது மகிழ்ச்சியுற்று 'உனக்கு இரண்டு வரம் தருகிறேன்; உனக்கு இஷ்டமானதை வேண்டிக்கொள்' என்று எனக்குச் சொன்னீர்; அதற்கு நான் அவ்வரங்களை வேண்டும்போது மற்றொரு ஸமயம் பெற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறேனன்றோ? அவ்விரண்டு வரங்களையும் இப்போது எனக்குத் தரவேணும்; இராமனுக்கு இவ்வபிஷேகத்தைத் தவிர்த்துத் தபஸ்வி வேஷத்துடன் அவனைக் காட்டுக்கு அனுப்பவேணுமென்பது முதல்வரம்; என் பிள்ளையாகிய பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்விக்கவேணுமென்பது இரண்டாவது வரம். ஸத்யம் தவறாத நீர் இதைத் தவறவொண்ணாது. தவறினால் நான் உயிரை விட்டிடுகிறேன்' என்றாள். சக்கரவர்த்தி இக்கொடுஞ்சொல்லைக்கேட்டு இடி விழுந்தவன்போல மூர்ச்சித்துக் கிடந்து சிறிதுநேரங் கழித்து ப்ரஜ்ஞையடைந்து கண்கள் சுழன்று கண்ணீர்வழிந்து உடலம் விதிர்விதிர்த்து நாத்தழதழத்து தீனஸ்வரத்துடன் பலவும்பேசி, முடிவாக இராமபிரானைக் காட்டுக்குப் போக்க நேர்ந்தது.(19)

## 20. வனவாஸப் புறப்பாடும் குகனுக்கு அருள் செய்தலும்

பிராட்டியையும் இளையோனையுங் கூட்டிக்கொண்டு ஸ்ரீராமன் சக்கரவர்த்தியிடஞ் சென்று 'நாங்கள் மூவரும் வநவாஸம் போகிறோம்; விடை கொடுக்கவேணும்' என்று பாதங்களிற்பணிந்து கைகூப்பிப் பிரார்த்திக்க, கைகேயி இவர்களுக்குக் காய்கிழங்குகள் வெட்டி வைத்துக்கொள்ளக் களைக்கொட்டும் சிறிய கூடையும் உடுக்க மரவுரியும் கொண்டுவந்து வைத்தாள். அம்மரவுரியை அவர்கள் மூவரும் அணிந்துகொண்டு ஆபரணங்களையும் பீதாம்பரங்களையும் விட்டுவிட்டு நிற்கக்கண்டு அந்தப் புரத்திலுள்ள ஜனங்களெல்லாம் கண்ணீர் விட்டுக் கூக்குரலோடு புலம்பின. பின்பு சக்கரவர்த்தி தனது கட்டளையின்படி ஸுமந்

திரன் கொண்டு நிறுத்தின தேரின்மேலேறி இம்மூவரும் அயோத்தியை விட்டுத் தென்திசை நோக்கி நடந்தார்கள். தசரதன் பரிஜநங்களுடன் சிறிதுதூரம் வந்து அத்தேரைப் பார்த்துக்கொண்டிருந்து தேர் கண்ணுக்கு மறைந்தவுடனே புலம்பிக்கொண்டு திரும்பி வந்து அரண்மனையை அடைந்தான். நகரத்து ஜனங்களெல்லாம் ஸ்ரீராகவனுடன் கூடவே காடுசெல்ல நிர்ணயித்து அத்தேரைப் பின்தொடர்ந்து சென்று, அன்றிரவு தேரை ஓரிடத்தில் நிறுத்த, அதைச்சுற்றி அனைவரும் படுத்துக்கொண்டு உறங்குகிற ஸமயத்தில் இராகவன் ஸுமந்திரனை ஏவித் தேரைப் புல்மூடிக்கிடந்த வழியல்லா வழியே நடத்திக்கொண்டு வெகுதூரஞ் சென்று சிருங்கிபேரமென்ற ஊரை அடைந்தனர். கூட வந்திருந்து வழியிடையே உறங்கிப்போன ஜனங்கள் காலையில் விழித்துக்கொண்டு தேரைக் காணுமல் சிறிது தூரஞ்சென்று தேடித் தேர்போன வழியையும் அறியாதே 'இராமபிரான் நம்மை வஞ்சனை செய்து விட்டுப்போனுர்' என்று சொல்லி வருந்திக்கொண்டு தத்தம் விடேற வந்து சேர்ந்தனர். பின்பு இராமனும் இளையவனும் மரப்பாலை விட்டுத் தலைமயிரைச் சடையாகக் கட்டிக்கொண்டு அந்த சிருங்கிபேரபுரத்தில் நின்றும் புறப்பட்டுக் கங்கைக் கரையில் வந்து தேரை விட்டிழிந்து ஸுமந்திரனுக்கு விடை கொடுத்துவிட்டு, அங்கிருந்த வேடர் தலைவனுகிய குஹனென்பவனுடன் நேசித்து அவன்கட்டின தெப்பத்திலேறிக் கங்காநதியைத் தாண்டி, மறுநாள் பரத்வாஜ மஹா முனிவருடைய ஆச்ரமத்துக்குச் சென்று அவரைப் பணிந்து, அம்மஹா முனிவர் மிக ஆதரத்துடன் செய்த ஸத்காரங்களை ஏற்று அங்கு நின்றும் புறப்பட்டு அம்முனிவர் காட்டிக்கொடுத்த வழியே சென்று, அதிவிசித்திரமாய் அதிரமணீயமாயிருந்துள்ள சித்ரகூட பர்வதத்தையடைந்து அம்மலைச்சாரலில் மூவரும் இனிமையாக வஸித்துக்கொண்டிருந்தனர். (20)

## 21. பரதன் இராமனை அழைத்துவரச் சென்று பாதுகைபெற்று மீளுதல்.

ஸுமந்த்ரன் முதலிய மந்த்ரிகளும் வஸிஷ்டர் முதலிய ரிஷிகளும் சேர்ந்து பரதனை ஸபையில் வருவித்து 'ஓ ராஜகுமாரனே! சக்ரவர்த்தி பரலோகமடைந்தார்; ஸ்ரீ ராமன் கானகமே மிக விரும்பிப்போந்தான்; அரசனற்ற நாட்டில் நியாயம் நடவாது; மழை பெய்யாது; துர்ஜனங்கள் ஸாதுஜனங்களைப் பீடிப்பர்கள்—இவை முதலான பல தீங்குகள் விளையும்; ஆகையால் நீர் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளவேணும்' என்று சொன்னுர்கள். பரதன் கர்ணகடோரமான அப்பேச்சைக்கேட்டு 'ஓ வஸிஷ்டமஹரிஷியே! நீ எல்லாமறிந்திருந்து இங்ஙனம் சொல்லலாமா? இவ்வம்சத்தில் மூத்தாரிருக்க இளையார் முடிசூடுவதுண்டா? இதற்கு மேற்பட்ட அநீதியுண்டோ? இதற்கு நான் இசைந்தேனுகில் எனக்கு மேற்பட்ட கள்ளன் உண்டோ? நன்று சொன்னீர்கள்? இது ஒருநாளும் நடவாத காரியம்; நான் இப்போதே இராமபிரானெழுந்தருளி யிருக்குமிடம் விடைகொண்டு அவரை வணங்கி வேண்டி மீட்டுக்கொண்டுவரப்போகிறேன்' என்று சொல்லி ஸகல பரிஜனங்களையும் திரட்டிக்கொண்டு போவதற்காக் வழிகளைச் செப்பனிடும்படி கட்டளையிட்டு, தாய்மார்களையும் வஸிஷ்டாதிகளையும் ஸுமந்த்ராதிகளையும் மற்றுமுள்ள பரிஜநங்களையும் கூட்டிக்கொண்டு சத்ருக்நனும் தானுமாய்ப் புறப்பட்டு ஸ்ரீராமன்சென்ற வழியைப் பிடித்துக்கொண்டு சென்று சித்திரகூடமலைச்சாரலில் சென்று சேர்ந்து மிக்க பரபரப்புடன் இராமபிரானுடைய திருவடிவாரத்தில் வந்து வீழ்ந்து ப்ரலாபிக்க, இராமன் பரதனை எடுத்தணைத்துக்கொண்டு பரமப்ரீதியுடன் யோகக்ஷேமம் வினவி, சக்ரவர்த்தி பரலோகமடைந்ததைத் தெரிந்துகொண்டு மனம்வருந்தி மந்தாகிநிக்குப்போய் நீராடித் தர்ப்பணம் முதலிய மேற்காரியங்களை யெல்லாம் நடத்தி மீண்டும் தமது ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தவளவிலே, பரதன் பெருமானைத் திருவயோத்திக்கு எழுந்தருளும்படி பிரார்த்தித்துத் தன் மாதாவாகிய கைகேயியும் இதற்கு இசைந்தமையைச் சொல்லி, மற்றும் பல நியாயங்களையும் எடுத்துரைத்து, அப்படி எழுந்தருளாவிடில்

தான் அங்கேயே ப்ராயோபவேசம் செய்வதாகவும் சொல்ல, அதற்கு இராமபிரான் பித்ரு வாக்ய பரிபாலனத்தின் ஆவச்யகதையையும் அதனைத் தவறுவதால் விளையக்கூடிய பெருந் தீங்குகளையும் எடுத்துரைத்துப் பரதனுடைய வேண்டுகோளுக்காகத் தமது திருவடி நிலைகளைக்கொடுத்து 'இதைக்கொண்டு ராஜ்யம் செலுத்து' என்று நியமித்து விடைகொடுத்தார். பரதன் அப்பாதுகைகளைத் தன் முடிமீது தரித்துக்கொண்டு 'க்ருதார்த்தனானேன், தந்யனானேன்" என்று ஸந்தோஷ ஸம்ப்ரமங்களைப் பண்ணிக்கொண்டு தேரின்மேலேறிக் கூடவந்த பரிவாரங்களுடன் திரும்பி அயோத்தியுள்ளே புகுதற்கு மனம்விரும்பாமல் அந்நகரத் தருகிலுள்ள நந்திக்ராமத்தில் ஸ்ரீராம பாதுகைகளுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்துத்தான் தாபஸ வேஷங்கொண்டு வாஸஞ்செய்து கொண்டு அப்பாதுகைகளுக்குத் தான் மந்திரியாயிருந்து ராஜ்யநிர்வாஹஞ் செய்துவந்தான். (21)

## 22. காக விருத்தாந்தம்

சித்திரகூடமலைச்சாரலிலே பெருமாளும்பிராட்டியும் ஏகாந்தமாக இருக்கிறபோது இந்திரன் மகனான ஐயந்தன் பிராட்டியினழகைக்கண்டு அவளை ஸ்பர்சிக்கவேண்டுமென்னும் தீய கருத்தினனாயும் மாம்ஸார்த்தியாயும் தேவ வேஷத்தை மறைத்துக் காக வேஷத்தைப்பூண்டு கொண்டுவந்து, பிராட்டியின் மடியிலே பெருமாள் பள்ளிகொண்டருளுகையில் பிராட்டியின் திருமார்பிற்குத்த, அவ்வளவிலே பெருமாள் உணர்ந்தருளி மிகக் கோபங்கொண்டு ஒரு தர்ப்பைப்புல்லை யெடுத்து அதில் ப்ரஹ்மாஸ்த்ரத்தைப் பிரயோகித்து அதனை அந்தக் காகத்தின்மேல் மந்தகதியாகச் செலுத்த, அக்காகம் அந்த அஸ்த்ரத்திற்குத் தப்ப வழி தேடிப் பல விடங்களிலும் ஓடிச் சென்று சேர்ந்த விடத்தும் ஒருவரும் ஏற்றுக்கொள்ளாமையாலே மீண்டும் பெருமானையே சரணமடைய, அப் பெருமாள் அருள்கொண்டு அக்காகத்துக்கு உயிரைக்கொடுத்து அந்த அஸ்த்ரம் வீண்படாமல் காகத்தின் ஒரு கண்ணை அறுத்த வளவோடு விடும்படி செய்தருளினன். (இந்த வரலாறு பிராட்டியினால் அனுமானுக்கு ரஹஸ்யமான அடையாளமாய்ச் சொல்லப்படுவதாக ஸுந்தரகாண்டத்திலுள்ளது. இதனைப் பிராட்டிக்கு அனுமான் அடையாளமாகச் சொல்லுவதாய்ப் பெரியாழ்வார் திருமொழியில் (3-10-6ல்) உள்ளது. அங்கே நமது திவ்யார்த்ததீபிகை காண்க.

## 23. விராதவதம்

ராமலக்ஷ்மணஸீதைகள் தண்டகாரணியம் சேர்ந்து பல மஹர்ஷிகளின் ஸத்காரங்களைப் பெற்று அவர்களிடம் நியமனம் வாங்கிக்கொண்டு அப்பால் ஓர் அரண்யத்திற்போகும்போது விராதனென்பானோர் அரக்கன் தன் சூலத்தில் பல மிருகங்களைக் குத்தியெடுத்துக் கொண்டு வந்து வழியில் இவர்களைப்பார்த்து விரைந்தோடிவந்து ஸீதையை எடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டு 'இவளை நான் பக்ஷித்துவிடுகிறேன்" என்று சொல்லித் தாசரதிகளைப் பலவிதமாக நிந்திக்க அவர்கள் அவன்மேல் அம்புகளை எறிய அவன் பிராட்டியை விட்டுவிட்டு இவர்களைக் கொல்லக்கருதி இவர்கள்மேல் சூலம் முதலிய பல ஆயுதங்களைப் போட்டுக்கொண்டு வந்து இவ்விருவரையும் தனது தோளின்மேல் ஏற்றிக்கொண்டு போகையில் இதைக்கண்டு பரிதபித்த பிராட்டியின் வருத்தம் தீருமாறு இருவரும் தங்கள்கத்தியை எடுத்து விராதனுடைய புஜங்களை வெட்டிவிட்டார்கள். இராமபாணம் பட்ட மஹிமையினால் விராதன் தனது பூர்வஜந்ம சரிதங்களை நினைத்துச் சொல்லிவிட்டு இவர்களுக்கு சரபங்கமா முனிவருடைய ஆச்ரமத்திற்கு வழிகாட்டிவிட்டுத் தான் சுவர்க்கமடைந்தனன். இராமலக்ஷ்மணர்கள் அங்கு ஓர் பெரிய குழிவெட்டி விராதனுடலை அதில் தள்ளித் தூற்றுவிட்டுப் பிராட்டியுடன் கூடச் சரபங்காச்ரமஞ் சென்று பஞ்சவடியும் சேர்ந்தார்கள். (23)

## 24. சூர்ப்பணகையை அங்கபங்கஞ் செய்தல்.

பஞ்சவடியில் எழுந்தருளியிருக்கும்போது ஹேமந்த காலத்தில் சூர்ப்பணகை யென்ரெரு அரக்கி அழகிய வடிவமெடுத்து வந்து இராகவனைக்கண்டு காமவிகாரமடைந்து தன்னை மனைவியாகக் கொள்ளுமாறு விரும்ப, இராகவன் 'எனக்கு ஒரு மனைவி இருக்கிருள்; என் தம்பியாகிய லக்ஷ்மணனை அடைந்தாயாகில் ஸுகமடையலாம்" என்று சொல்ல, அப்படியே அவள் லக்ஷ்மணனிடம் செல்ல, 'நான் ஒருவர்க்கு வேலைக்காரன்; என்னை அடைந்தால் நீயும் வேலைக்காரியாவாய்; ஆகையால் அவரையே அடைவது உனக்கு நலம்' என்று லக்ஷ்மணன் சொல்ல, இப்படி அங்குமிங்குமாய்த் திரிந்து இஷ்டத்தைப்பெருமல், "நம் இஷ்டத்தை இந்த ஸீதை நிறைவேறவொட்டாமல் செய்கிருளாகையால் இவளைத் தின்றுவிடுவோம்" என்று அவ்வரக்கி ஸீதாதேவியிடம் ஓட, உடனே இலக்குமணன் இராமபிரானது ஆஜ்ஞையினால் அவளைத்தகைந்து காதையும் மூக்கையும் அறுத்திட்டான [இங்கே சூர்ப்பணகையை அங்கபங்கஞ் செய்தது இளையபெருமாளின் செய்கையாயினும் இதனை இராமபிரான் மேல் ஏற்றி அநுஸந்திப்பர் ஆழ்வார்கள், "சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கு அவள் ஆர்க்க அரிந்தானைப் பாடிப்பற" "கலைவணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கி" இத்யாதி அருளிச்செயல்கள் காண்க. இங்ஙனம் அருளிச்செய்வது—இராமனது கருத்துக்கு ஏற்ப அவன் கட்டளையிட்டபடி இவன்செய்தனனாதலின் ப்ரயோஜ்ய கர்த்தாவின் வினையாதல் பற்றியென்க. அன்றியும், "ராமஸ்ய தக்ஷிணோபாஹு:" என்றபடி இராமபிரானுக்கு லக்ஷ்மணன் வலத்திருக்கை எனப்படுதலால் அங்ஙனம் கையாகிற லக்ஷ்மணனுடைய செயலை ராமன் மேல் ஒற்றுமை நயம்பற்றி ஏற்றிச் சொல்லுதலும் தகுதியே. [பலராமன் செய்தருளிய ப்ரலம்பாஸுரவதத்தைக் கண்ணபிரான் செய்தருளியதாக அநுஸந்திப்பதும் இதுபோன்றதேயாம்.] ... ... ... ... (24)

## 25. கரதூஷணாதி வதம்.

சூர்ப்பணகை மூக்கறுப்புண்டு ஜநஸ்தானத்திலிருந்த தன் தமையனாகிய **கரன்** பக்கல் சென்று இச்செய்தியைச் சொல்லிப் புரண்டழுது அவனுக்குக் கோபத்தை உண்டாக்கினள். பிறகு அக்கரன் பதினாலாயிரம் ஸேநாதிபதிகளையும் பல ஸேனைகளையும், தூஷணன் த்ரிசிரஸ் என்பவர்களையும் இராமபிரானோடு போர் செய்ய அனுப்பினன். இராமன் அவர்களத்தனை பேரையும் தாம் ஒருவராகவே கொன்று வென்றிட, பிறகு இதனையறிந்த கரன் தானே நேரில் வந்து எதிர்க்க, இராமன் பிராட்டியை ஒரு மலைக்குகையில் வைத்து லக்ஷ்மணனைக் காவலிட்டு வந்து அக்கரனுடன் போர்செய்து, அகஸ்த்யர் கொடுத்த வைஷ்ணவ தநுஸ்ஸில் நாணேறிட்டு அம்பு தொடுத்துவிட்டு அவன் தலையை அறுத்துவிட்டு விஜயலக்ஷ்மியுடன் பிராட்டி பக்கல் செல்ல, அவள், அவ்வளவு சூரர்களையும் ஒருவராய் நின்று வென்றிட்ட தன் ப்ராணநாதரை, போர்க்களத்திற்பட்ட அம்புகளினாலுண்டான உள் வெதுப்பெல்லாம் ஆறும்படி வெகு மகிழ்ச்சியுடன் தழுவிக்கொண்டாள். ... ... (25)

## 26. இராவணன் மாரீசனோடு ஆலோசித்தலும் மாரீசன் மரணமடைதலும்.

ஜநஸ்தாநத்தில் இராமபாணத்துக்குத் தப்பிப் பிழைத்து ஒளித்து ஓடிப்போன **அகம்பநன்** இலங்கைக்குச் சென்று ஜநஸ்தாநமடங்கலும் பாழ்பட்ட செய்தியையும் இராமன் ஒருவராலும் வெல்லமுடியாதவனென்பதையும் சொல்லி, 'ஸீதையை அபஹரித்துக்கொண்டு வந்தால் அந்த வருத்தத்தினால் இராமன் முடிந்துவிடக்கூடும்' என்றான். இராவணன் அவனது சொற்படியே 'ஸீதையைக் கொள்ளைகொள்ள உபாயமென்?' என்று யோசித்து,

அங்கு நின்றும் புறப்பட்டு மாரீசனிருக்குமிடத்திற்கு வந்து 'நீ எனக்கு ஒருதவி செய்ய வேணும்' என்று சொல்லித் தன் கருத்தை வெளியிட, அதுகேட்ட மாரீசன் 'அப்பா இராவணா! அந்த மஹாநுபாவனுடன் உனக்கு த்வேஷம் உதவாது; இந்த இராமன் சிறு பிள்ளையாயிருக்கும்பொழுதே விச்வாமித்ர யாகத்தில் அவனுடைய பாணத்துக்கு இலக்காகி நான் பட்டபாடு இன்னும் மறக்க முடியவில்லை; அத்திருநாமம் செவிப்படும்போதே என் உடல் நடுங்குகின்றது; இப்பேச்சை விட்டுவிடு; இதை நெஞ்சிலும் நினையாதே" என்று ஒழுங்காக உபதேசிக்க, அதைக்கேட்டு இராவணன் இலங்கைக்குப் போய்விட்டான். பிறகு சூர்ப்பணகை சென்று, தான் மூக்கறுப்புண்டபடியையும், தாசரதிகளுடைய ஸௌந்தர்ய பராக்ரமாதிகுண விசேஷங்கள் எல்லைகடந்திருக்கிறபடியையும், ஸீதையின் பெருமையையும்சொல்லி 'இராகவனை நீ எவ்விதத்திலாவது பங்கஞ் செய்யாவிடில் நீ ஆண்பிள்ளையே அல்லை' என்று கூறி இராவணனை நிந்தித்துக் கீழே விழுந்து புரண்டு அழ, இராவணன் மறுபடியும் மாரீசனிடம் சென்று நய பயங்களினால் அவனைத் தன் சொல்வழிப் படுத்திக்கொண்டு அம்மாரீசனும் தானுமாய்ப் புறப்பட்டு வந்து தானோரிடத்தில் ஒளித்திருந்தான். மாரீசன் பொன் மானின் வடிவெடுத்துக்கொண்டு ஸீதையின் பார்வையில் மேயத் தொடங்கினான். அப் பொன்மானை ஸீதை கண்டு அதைப்பிடித்துத் தர வேணுமென்று ஒரே பிடிவாதமாக இராமனிடம் சொன்னாள். அதற்கு இணங்கிய இராகவன் இளையோனைப் பிராட்டிக்குக் காவலாக வைத்துவிட்டுத் தான் வில்லையும் அம்புகளையு மெடுத்துக்கொண்டு மானின் பின்னேபோக, அந்தமான் கொஞ்சங் கொஞ்சமாக ஒதுங்கி ஒதுங்கிப்போய் அக்காட்டில் நெடுந்தூரம் இராகவனை இழுத்துக்கொண்டு போய்விட்டது, அப்பொழுது இராகவன் 'இவன் அரக்கன்' என்று தெளிந்து அம்புகளை அவன்மீது எறிந்தார். அதனால் அடியுண்ட மாரீசன் மானுருவை விட்டு நிஜரூபத்துடன் கீழே விழுந்து 'ஹா லக்ஷ்மணா! ஹா ஸீதே! கெட்டேன்' என்று இராகவனைப்போல் கூச்சலிட்டுக்கொண்டு மரணமடைந்தான்.

## 27. லக்ஷ்மணன் ஸீதையைப் பிரிந்து செல்லல்.

அந்தக் கூக்குரலை ஸீதாதேவி கேட்டு 'லக்ஷ்மணா! உன் தமையனாருக்கு அரக்கனால் ஏதோ தீங்கு நேரிட்டிருக்கிறது; அதனால் அவர் நம்மை நினைக்கிறார்; நீ விரைந்து சென்று ஆராய்ந்துவா' என்ன; அதற்கு லக்ஷ்மணன் 'அம்மா! இராமனுக்கு ஒரு தீங்குமில்லை பொன்மானாக வந்த ராக்ஷஸன் இராகவனால் கொல்லப்பட்டு அவரைப்போல் இப்படிக் கூக்குரலிடுகிறான்; உன்னை நான் தனியே விட்டுப்போனால் ராக்ஷஸர்களினால் உனக்கு ஏதாவது தீங்கு விளையும்; ஆகையால் நான் போகமாட்டேன்' என்ன; பிராட்டி இதைக் கேட்டு லக்ஷ்மணனை நோக்கி, சொல்லத்தகாத கடுமையான வார்த்தைகளைச் சொல்ல, லக்ஷ்மணன் அதைப் பொறுக்கமாட்டாமல் ஸீதையை விட்டுவிட்டுத் தான் இராமபிரான் போனவழியே போனான்.

## 28. இராவணன் பிராட்டியைக் கவர்ந்து போதல்.

அப்பொழுது இராவணன் ஸந்நியாசி வேஷம்பூண்டு ஸீதை யிருக்குமிடம் வந்து பிக்ஷைகேட்டு அவளுடைய வடிவைக்கண்டு மோஹித்துத் தன் செல்வங்களையும் வீரங்களையும் விஜயங்களையும் விஸ்தாரமாகச் சொல்லித் தன்னைக் கணவனாகக் கொள்ளுமாறு பிதற்ற, பிராட்டி அதைக்கேட்டு மிகுந்த கோபத்துடன் அவனை நோக்கிப் பல அவமானச் சொற்களைச்சொல்ல, பின்பு இராவணன் ஸந்நியாஸி வேஷத்தை விட்டுத் தன்னுடைய பயங்கரமான நிஜரூபத்தைக் காட்டி இவளைப்பிடித்தெடுத்துத் தேரேற்றிக்கொண்டு போகையில், ஓர் மரத்திலுட்கார்ந்திருந்த ஜடாயுவென்கிற பக்ஷி இவ்வநீதிச் செய்கையைக்கண்டு இராவ

ணுடு வெகுநேரம் பெரும்போர் செய்து அவனுடைய தேரை முறித்து மானபங்கஞ் செய்ய, பின்பு இராவணன் அந்த ஜடாயுவைத் தன் கத்தியினால் உயிர் நிலையில் அடித்துத் தள்ளிவிட்டு, செந்நாயின் கையில் அகப்பட்ட மான்பேடைபோல அஞ்சி நடுங்கிக் கதறுகின்ற ஸீதையைத் தூக்கிக்கொண்டு தேரின்மேலேறி இலங்கைக்குக் கொண்டுபோய்த் தனது அசோகவநிகையில் வைத்து ராக்ஷஸிகளைச் சுற்றும் பாதுகாக்க வைத்து 'இவளை எவ்விதத்திலாவது வசப்படுத்துங்கள்' என்று அவ்வரக்கிகட்குக் கட்டளையிட்டுத் தான் அரண்மனை சேர்ந்தான்.

## 29. இராமன் ஜடாயுவுக்கு முத்தியளித்தல்.

இராமன் மாயமானை முடித்துவிட்டு மீண்டுவருகையில் வழியிடையே இளையோனைக் கண்டுஸீதையைத் தனியே விட்டுஏன் வந்தாய்? என்று கோபித்துக்கொண்டு பஞ்சவடிக்குக் கடுநடையிட்டு வந்து அங்கு ஸீதையைக்காணமல் மிகவும் வருந்தி லக்ஷ்மணனும் தானுமாகச் சுற்றுந் தேடியுங்காணுமல் ஸகல இந்திரியங்களும் தளர்ந்து மனம்வாடி உடல்கருகி ஏங்கி ப்ரலாபித்துக்கொண்டிருக்கையில், அங்குள்ள மான்கள் ஸீதை போனவழியைச் சிறிதுதூரம் ஓடிக் காட்ட, "இவ்வழியே போயிருப்பதாக மிருகங்கள் சொல்லுகின்றன; ஆகையால் இவ்வழியே போய்த் தேடுவோம்" என்று புறப்பட்டுத் தேடிக்கொண்டு வருகையில், அடியுண்டு குற்றுயிருடன் விழுந்து கிடந்த ஜடாயுவின் அருகே செல்ல, அக்கழுகரசன் இராகவனை நோக்கி ஸீதையை இராவணன் எடுத்துக்கொண்டு போனுனென்றும், அவனை எதிர்த்த தன்னை இப்படி உயிர்மாய அடித்தானென்றும் சொல்லி உடனே உயிரை விட்டுவிட, இராகவன் தனக்காகச் சண்டைசெய்து பிராணனை விட்ட ஜடாயுவுக்கு மோக்ஷப்ராப்தியை அநுக்ரஹித்து மிகவும் வருந்தி அந்த ஜடாயுவை தஹநஞ்செய்து தர்ப்பணமுஞ் செய்துவிட்டு அங்கு நின்றும் புறப்பட்டுப்போனுர்.

## 30. கவந்தனைக் கொல்லுதல்

தநுவென்னும் யக்ஷனது மகனுய், ஸ்தூலசிரஸ் என்னும் முனிவனது சாபத்தால் அரக்கனுகி, பிரமனருளால் தீர்க்காயுசு பெற்று, தேவேந்திரனோடு எதிர்த்து அவனது வஜ்ஜிராயுதத்தால் புடைப்பட்டுத் தனது தலை வயிற்றில் அழுந்தியமை பற்றிக் கபந்தம் போலுந் தோற்றமுடையவனுனதால் கபந்தனென்று பெயர்பெற்ற அரக்கன் தண்டகாரணியத்தில் ஒருபக்கத்திலேயிருந்து தனது நீண்ட கைகளிரண்டையும் எட்டியமட்டில் பரப்பித் துழாவி அவற்றிற்குள் அகப்பட்ட ஜீவராசிகளையெல்லாம் வாரிவாய்ப்பெய்து விழுங்கிக் கொண்டிருக்க, அங்குச் சென்று இவன்கைகளினிடையே அகப்பட்டுக்கொண்ட ராமலக்ஷ்மணர்கள் இவன் தோள்களைத் துணித்துத் தள்ளிய வளவில் இவன் முன்னையசாபமும் முற்பிறப்பின் தீவினையுந் தீர்ந்தவனுகி ராக்ஷஸசரீரத்தை யொழித்து திவ்யசரீரம் பெற்றுப் பெருமாளைப் பலவாறு துதித்துச் சபரியினிடம் செல்லும்படியும் ஸுக்ரீவனையநுக்ரஹிக்கும்படியும் சொல்லி நற்கதிக்குச் சென்றனன்.

## 31. ஸுக்ரீவ ஸக்யம்

பம்பாஸரஸ்ஸைச் சுற்றி நாற்புறங்களிலுமுள்ள அதிரமணீயமான வனப்ரதேசங்களையும் அவற்றில் நானுவகைப் பறவைகளினுடையவும் மிருகங்களினுடையவும் ஆடல் பாடல் முதலிய உல்லாஸ விலாஸங்களையும் இராமபிரான் கண்டு பிராட்டியின் பிரிவுக்கு இரங்கி ஆற்றுதானுய் மிக்க வருத்தத்துடன் ரிச்யமூகமென்னும் மலையை அடைந்தான். அம்மலையி

ருச்சியில் மதங்காச்ரமத்தில், அனுமான் நீலன் முதலிய சிலருடனே வாலிக்கு அஞ்சி மறைந்து வாழ்கிற ஸுக்ரீவன் இவ்விராம லக்ஷ்மணர்களைக் கண்டு 'இவர்கள் நம்மைக் கொல்லும்பொருட்டு வாலியினால் ஏவியனுப்பப்பட்டவர்கள் போலும்' என்று நடுங்குமளவில் அநுமான் ராமலக்ஷ்மணரருகிற்சென்று சாதுர்யமாகப்பேசி அவர்களை இன்னரென்று அறிந்துகொண்டு அவர்கட்குத் தங்கள் செய்தியையுங் கூறி அவர்களை ஸுக்ரீவனிடம் அழைத்து வந்து அவர்களோடு ஸுக்ரீவனுக்கு அக்நிஸாக்ஷிகமாக ஸ்நேஹம் செய்வித்தான்.

## 32. மராமரமேழெய்தது.

ஸுக்ரீவன் இராமனால் அபயப்ரதானஞ் செய்யப்பெற்ற பின்பும் மனம் தெளியாமல் வாலியின் பேராற்றலைப்பற்றிப் பலவாறு சொல்லி, வாலி மராமரங்களைத் துளைத்ததையும், துந்துபியின் உடலெலும்பை ஒரு யோஜனை தூரம் தூக்கியெறிந்ததையுங் குறித்துப் பாராட்டிக் கூறி, இவ்வாறு பேராற்றலமைந்தவனை வெல்லுவது கூடுமோ?' என்று சொல்ல, அதுகேட்ட லக்ஷ்மணன் 'உனக்கு விச்வாஸம் இல்லையாயின் இப்போது என்ன செய்ய வேண்டுவது?' என்ன, ஸுக்ரீவன் 'இராமபிரான் நீறு பூத்த நெருப்புப் போலத் தோன்றினும், வாலியின் வல்லமையை நினைக்கும்போது சங்கையுண்டாகின்றது; ஏழு மராமரங்களைத் துளைத்து இந்தத் துந்துபியின் எலும்பையும் இருநூறு விற்கடைதூரம் தூக்கியெறிந்தால் எனக்கு நம்புதலுண்டாகும்' என்று சொல்ல, ஸுக்ரீவனுக்கு நம்புதலுண்டாகுமாறு அவனது வார்த்தைக்கு இயைந்து இராமபிரான் துந்துபியின் உடலெலும்புக் குவியலைத் தனது காற்கட்டை விரலினால் இலேசாய்த் தூக்கிப் பத்து யோஜனை தூரத்துக்கு அப்பால் எறிய, அதனைக் கண்ட ஸுக்ரீவன், 'முன்பு உலராதிருக்கையில் வாலி இதனைத் தூக்கியெறிந்தான்; இப்போது உலர்ந்துவிட்ட இதனைத் தூக்கி எறிதல் ஒரு சிறப்பன்று' என்று கூற, பின்பு இராமபிரான் ஒரு பாணத்தை ஏழு மரங்களின் மேல் ஏவ, அது அம்மரங்களைத் துளைத்ததோடு ஏழுலகங்களையுந் துளைத்துச்சென்று மீண்டு அம்பறாத் தூணியை அடைந்தது.

## 33. வாலியை வதைத்தது.

பின்பு ஸுக்ரீவன் இராமபிரானுடைய நியமநத்தினால் கிஷ்கிந்தைக்குச் சென்று வீரநாதஞ் செய்ய, அதைக்கேட்டு வாலி பொறுக்கமாட்டாதவனாய் வெளிக்கிளம்பி வந்து ஸுக்ரீவனோடு யுத்தஞ்செய்யத் தொடங்கினான். அப்போது இராமன் அவ்விருவரில் இன்னான் ஸுக்ரீவன், இன்னான் வாலி என்று வாசி கண்டறியாமையால் வாலிமேல் அம்பு எய்யாதொழியவே, ஸுக்ரீவன் வாலியிடத்துப் பராஜயப்பட்டு வேதனை பொறுக்கமாட்டாமல் நிச்யமுக பர்வதத்துக்கே மீண்டு ஓடிவந்து சேர, இராமன் அவனைப் பார்த்து 'அப்பா! நான் உங்களிருவரில் பேதமறிந்திலேன்; பாணம் உன்மேலே விழுந்து உனக்கே தீங்கை விளைத்திடுமோ என்றஞ்சி அம்பு எய்யாதொழிந்தேன்; இப்போது உனக்கு ஓர் அடையாளமிடுகிறேன்; மறுபடியும் வாலியை யுத்தத்துக்கு அழை' என்று சொல்லி அவன் கழுத்தில் பூமாலையைச் சுற்றிக் கிஷ்கிந்தைக்குப் போகவிட்டார், ஸுக்ரீவன் சென்று முன்போலவே வீரநாதஞ் செய்ய, அதைக்கேட்ட வாலி போர்க்குப் புறப்பட, அப்போது அவன் மனைவியாகிய தாரை 'ஓ ப்ராணநாதா! சற்று முன்பு அடிபட்டு ஓடினவன் திரும்பி இப்போதே சண்டைக்கு அழைக்கின்றமையால் இது வெறுமனன்று; ஏதோ ஒரு பெருத்த ஸஹாயத்தை அண்டைகொண்டு வந்திருக்கவேணும்; நீ இப்போது திடீரென்று போருக்குப் போவது தகுதியல்ல' என்று சொல்லித் தடுத்தவளவிலும் அவள் வார்த்தையைச் செவியிலுங் கொள்ளாமல் சடக்கெனப் புறப்பட்டு வந்து ஸுக்ரீவனுடன் பிணங்கினான். அந்த

வாலி ஸுக்ரீவர்களிருவரும் ஒருவருக்கொருவர் கீழே தள்ளுவது மேலே பாய்வது கட்டிக்கொண்டு நெருங்குவது கடிப்பது குத்துவது அடிப்பதாய் வலிதான யுத்தஞ் செய்யுங்காலத்தில், இராகவன் ஒரு மரத்தடியில் மறைந்திருந்து வாலியைப் பாணத்தினலடித்தார். அந்த பாணத்தினல் வாலி மார்பு பிளந்து கீழே விழுந்துவிட்டான். இதைத் தாரை கேள்விப்பட்டு அங்கதனென்னும் புத்திரனுடன் கூட ஓடிவந்து வாலியைத் தழுவிக்கொண்டு பலவாறு புலம்பி, பிறகு எதிரில் நின்ற இராமனைப்பார்த்து அவருடைய மஹாபுருஷ லக்ஷணங்களைக் கண்டு இவர் ஸாக்ஷாத் பரமாத்மா வென்று நிச்சயித்துத் துதித்தனள். வாலியும் இராமனேடு வாதாடிப் பல ஸமாதானங்கள் சொல்லக்கேட்டு நன்மதி பெற்றுக் கையைக் கூப்பி இராகவனைத் தொழுது ஸுக்ரீவனைப்போல் அங்கதனையும் நோக்கிக் கொள்ளவேணும்' என்று பிரார்த்தித்துவிட்டுப் பிராணனையும் விட்டான்.

## 34. அனுமன் இலங்கையிலே பிராட்டியைக் கண்டுவருதல்

வாலிவதமான பிறகு பெருமாள் இரண்டு மாதம் மழைகாலத்தை மால்யவானிலே போக்கிப் பிறகு வானர சேனைகளை வரவழைத்துத் திசைதொறும் விடுக்க, விசேஷித்து நியமிக்கப்பெற்ற சிறிய திருவடி ஆகாச மார்க்கத்தினல் கடலைக்கடந்து இலங்கையிலே வந்து பிராட்டியைக்கண்டு அவள் கையிலே ராமநாமாங்கிதமான மோதிரத்தைக் கொடுத்து, அவளிடமிருந்து சூடாமணியைப்பெற்று, எதிரிகள் வலிமை எப்படிப்பட்டது?' என்று பெருமாள் கேட்டால் அது தெரியாதென்று சொல்ல வொண்ணுதாகையாலே அதையும் தெரிந்து கொண்டு செல்வோமென்று கருதி அதற்காகப் பொழிலிறுத்தல் முதலியன செய்து இராவணனை நேரில்கண்டு இதமுரைத்த', தன்வாலில் வைக்கப்பட்ட நெருப்பாலே இலங்கையை தஹித்து, கண்டேன் சீதையையென்று மீண்டு வந்தனன்.

## 35. ஸ்ரீ விபீஷணனுக்கு அரசளித்தது.

இலங்கையில் இராவணன் ஸபை கூட்டி "ஸுக்ரீவனுடைய மந்திரியாகிய ஓர் குரங்கு வந்து இலங்கையை அழித்துவிட்டுப் போயிற்று; இனி நாம் வெறுமனிருக்கலாகாது. இப்போது நான் செய்யத்தக்க உபாயமென்ன? எனக்கு ஸீதையை இராமனுக்குக் கொடுக்க இஷ்டமில்லை. உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்" என்ன, ப்ரஹஸ்தன் முதலிய மந்திரிகளும் இந்திரஜித்து முதலிய புதல்வர்களும் மற்றும் பந்துவர்க்கங்களும் தாமஸப்ரக்ருதிகளாய் நல்வழியறியாமல் இராவணன் சோற்றையுண்டு அவன் வழியே போமவர்களாகையால் இராவணன் சொன்னதையே அநுமோதித்து அதற்குத் தக்க யுக்திகளையுஞ் சொன்னர்கள். தர்மாத்மாவாகிய விபீஷணுழ்வான் "அண்ணு! நான் சொல்லும் ஹிதத்தைக் கேளும்" என்று தொடங்கிப் பலவாருக உஜ்ஜீவிக்கும் வழிகளைக் கூறியவிடத்தும் இராவணன் யமனுக்கு ஆட்பட்டபடியாலே அந்த ஹிதோபதேசங்களை ஆதரியாமல் வெகுவாகத் திரஸ்கரித்தான். பிறகு விபீஷணுழ்வான் 'இனி நமக்கு இப்பாவியின் ஸஹவாஸம் நொடிப்பொழுதும் தகாது. ஸ்ரீராமனையே சரணமடைந்து உஜ்ஜீவிக்கத்தகும்' என்று நிச்சயித்து உடனே அந்த ஸபையில் நின்றும் கதாபாணியாய் ஆகாசத்தில் உயரக் கிளம்பினர். அவருடன்கூட அவருடைய நான்கு மந்திரிகளும் கிளம்பினர்கள். விபீஷணன் அந்த மந்திரிகள் நால்வருடன்கூட வந்து தென்கடலுக்கு வடகரையில் இராகவனெழுந்தருளியிருக்குமிடத்தில் ஆகாசத்தில் நின்றவண்ணமாகவே ஸுக்ரீவாதி வாநரவீரர்களை முன்னிட்டு, தன் வரலாறுகளை யெல்லாம் சொல்லித் தன்னைப் பெருமாள் கைக்கொண்டருளுமாறு பிரார்த்தித்துச் சரணம் புகுந்தான். இதைக்கேட்ட வாநரர்கள் இராமபிரானிடமோடிச் சென்று "ஸ்வாமிந்! இராவணனுடைய தம்பியாம்; கையில் கதையை எடுத்துக்கொண்டு நான்கு அரக்கர்களுடன் கூட வந்திருக்கிறன். தேவரீரைச் சரணம் புகுந்ததாகச் சொல்லுகிறன். இவனை உள்ளே புகவிட்டால் ஸமயம் பார்த்துத் இங்கு விளைத்திடுவான். இவனை இப்போதே

கொன்றுவிடுவதே நலம். இவனை ஏற்றுக்கொள்வதாகத் திருவுள்ளமுண்டாகிலும் பரிசோதனை செய்யாமல் ஏற்றுக்கொள்ளலாகாது" என்று அவரவர்கட்குத் தோன்றியபடியே தனித்தனி வானர முதலிகள் சொல்ல, பிறகு இராமபிரான, திருவடியின் கருத்தை உணர்ந்து கொண்டு 'இவ்விபீஷணன் அங்கீகரிக்கத்தகக நற்குண நற்செய்கைகளை யுடையவனே' என்று நிர்த்தாரணஞ்செய்து அவனைத் தன்னருகே அழைத்துக்கொண்டுவரும்படி ஸுக்ரீவ மஹாராஜர்க்கு அருள்பாடிட, அவன் விபீஷணனும்வானை இராமபிரானிடமழைத்துக்கொண்டு செல்ல, விபீஷணன் பெருமாளுடைய பாதாரவிந்தங்களிற் டணிந்து லங்காவ்ருத்தாந்தங்களையெல்லாம் விண்ணப்பஞ் செய்து யுத்தத்தில் இராகவனுக்கு வேண்டும் உதவிகளையெல்லாம் செய்வதாகப் பிரதிஜ்ஞை செய்ய, இராமபிரான் அந்த விபீஷணனுக்குக் கடலினின்றும் ஜலம் வரவழைத்து "லங்காராஜ்யத்தில் உமக்குப் பட்டாபிஷேகம் பண்ணினேம்" என்று அபிஷேகம் செய்வித்தார்.

## 36. கடலில் அணைக்கட்டினது.

விபீஷணன் பெருமாளைப் பார்த்து "ஸ்வாமி! இந்த நம்முடைய ஸேனைகள் கடலைக் கடந்து அப்பாற் செல்லவேண்டுமாதலால் அதற்காகக் கடலரசனை நீர் சரணம்புகவேணும்" என்ன; இராமபிரான் "கடலைக்கடக்க உபாயம் சொல்ல வேண்டும்" என்று கடலரசனாகிய வருணனைப் பிரார்த்தித்துத் தர்ப்ப சயநத்திலும் படுத்து மூன்று நாளளவும் ப்ராயோபவேசம் போல் கிடக்க; ஸமுத்ர ராஜன் அப்பெருமானது மஹிமையைக் கருதாமல் உபேக்ஷையாயிருந்துவிடவே ஸ்ரீராமன் அதுகண்டு கோபங்கொண்டு 'அனைவரும் நடந்தே செல்லும்படி கடலை வற்றச் செய்வேன்' என்று ஆக்நேயாஸ்த்ரத்தைத் தொடுக்கத் தொடங்கிய வளவிலே வருணன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து இராமபிரானைச் சரணமடைந்து கடல் வடிவமான தன் மேல் அணைகட்டுதற்கு உடன்பட்டு, நளன் கையினால் நீரில் போகட்ட கற்களும் மிதக்குமென்று அவனுக்கு அவன் தகப்பனார் வரமளித்திருக்கிறாராகையால் அவனைக்கொண்டு ஸேது கட்டவேணுமென்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டான். இராகவனும் அப்படியே மற்ற வானரங்கள் சுற்றுமுள்ள மலைகளைப் பிடுங்கிக்கொண்டு வந்து நளன் கையில் கொடுக்கச் செய்து நளன் கையினால் அம்மலைகளை நீரில் போகவிடுத்து ஸேது கட்டுவித்தான். அவ்வழியாய் வானர ஸேனைகளெல்லாம் சென்று இலங்கைக்கருகிலுள்ள மலைச்சாரலில் சேர்ந்தனர்.

## 37. அணை கட்டுகையில் அணில்களின் தொண்டு

ஸேதுபந்தஞ் செய்யும்போது அணில்கள் நீரிலே மூழ்கி மணல் தரையிலே புரண்டு உடலில் ஒட்டிக்கொண்ட மணலைக் கடலிலே உகுத்து ஸேதுபந்தனத்திற்கு ஸேவை செய்ததாகத் திருமாலையில் (27 ஆம் பாட்டில்) உள்ளது.

## 38. கும்பகர்ணனும் இந்திரஜித்தும் பட்டுப்போனது

மற்றொருநாள் இராவணன் யுத்தத்திற்கு வந்து இராமனை எதிர்த்துச் சண்டைசெய்து பின்பு ஸ்ரீராமபாணத்தினால்அடிபட்டு முன் நிற்கமாட்டாமல் ஓடிப்போய், உறங்கிக்கொண்டிருந்த கும்பகர்ணனையெழுப்பி யுத்தத்துக்கனுப்பினான். அவனைக்கண்டு வானரஸேனைகள் அஞ்சியோடின; இராமபிரான் அவனுடைய கைகால்களைத் துண்டம் துண்டமாகத் தறித்துவிட்டு அவனை யமலோகத்துக்கு அதிதியாக்கினார்.

மற்றொருநாள் இந்திரஜித்து யுத்தத்திற்கு வந்து சிறிதுநேரம் எதிரில் நின்றும் சிறிதுநேரம் மாயையினால் ஆகாசத்தில் மறைந்திருந்தும் யுத்தஞ் செய்து பின்பு சென்று இவர்கள் முன்னே மாயாஸீதையின் தலையறுத்து இவர்களுக்கு வ்யஸநத்தை யுண்டாக்கிவிட்டுத் தான் நிகும்பிலை யென்னும் யாகஞ் செய்யத் தொடங்கினான். இதை விபீஷணனறிந்து ஓடி

வந்து ஹநுமான்மேல் லக்ஷ்மணனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு தானும் ஸஹாயமாய்ப் போய் அவனுடைய யாகத்தை அழித்து யுத்தஞ்செய்யத் தொடங்க, லக்ஷ்மணன் இந்திரஜித்துடன் மூன்று நாள் யுத்தஞ்செய்து மூன்றாம்நாள் ஸாயங்காலம் இந்திரஜித்தினுடைய தலையை அறுத்துத் தள்ளிவிட்டார்.

## 39. இராவணனை முடித்து இலங்கை பாழ்படுத்தியது.

பின்பு கடைசிநாள் யுத்தத்தில் இராவணன் தேரேறி யுத்தத்திற்கு வர, இராமபிரான் கீழே நின்று யுத்தஞ்செய்வது தகுந்ததல்லவென்று தேவேந்திரன் மாதலியோடுகூட அனுப்பிய திவ்ய ரதத்தின்மேலேறி யுத்தஞ்செய்து அவனுடைய பொன்முடிகள் பத்தையும் அறுத்துத் தள்ளிவிட்டு அவனை யமபுரிக்கு அனுப்பிவிட்டார்.

## 40. அனுமனோடுடனுண்டது

ராவணஸம்ஹாரமான பின்பு விபீஷணன் முதலிய அரக்கர்களோடும் ஹநுமான் ஸுக்ரீவன் முதலிய வாநரர்களோடும் ஸீதாலக்ஷ்மணர்களுடனும் புஷ்பக விமானத்திலேறி ஸ்ரீராமபிரான் ஆகாயமார்க்கமாக அயோத்திநோக்கி மீண்டெழுந்தருளும்போது கங்காநதியும யமுநாநதியும் சேருமிடமான ப்ரயாகையில் வஸிக்கின்ற பரத்வாஜ முனிவரது விருப்பத்தின்படி அவராச்ரமத்திலிறங்கி ஸேனைகளுடன் அங்கு விருந்துண்ணச் சம்மதித்து நின்றவ்வளவிலே பரத்வாஜ முனிவர் தமது தவப்பெருமையால், அத்திரளிலுள்ள எல்லார்க்கும் வேண்டியவளவு உண்கலங்களையும் உணவுகளையும் தெய்விகமாக வருவித்து வெகு ஸம்ப்ரமமாக விருந்து செய்தனர். அங்ஙனம் இராமனும் அவனைச்சார்ந்தவரனைவரும் தம்தமக்கென்று பறிமாறிய வாழையிலையில் உண்ணுகின்ற பொழுது, ஏற்கெனவே தவணை கடந்துவிடுகின்றதென்று பரதன் வருந்தித் தீக்குதித்து உயிர் துறந்து விடுவனோ வென்பதைச் சிந்தித்து, தாம் மீண்டுவந்த செய்தியைப் பரதனிடஞ் சொல்லி அவன் கருத்தை உணர்ந்துகொண்டு விரைந்து வருமாறு அனுப்பப்பட்டுப் பரதனிடஞ் சென்றிருந்த அனுமான் செய்திகூறி மீண்டனனாக, அச்சமயத்தில் அனுமானுக்காக முனிவன் தனியே ஓரிலையை மறுபடியும் வருவிக்க வேண்டாதபடி ஸ்ரீராமன் அனுமானைத் தனது எதிரில் இருந்து தனது இலையிலேயே ஒருபகுதியில் உண்ணும்படி நியமித்து அங்ஙனமே அவனுடன் ஸஹபோஜனஞ் செய்தனன். [இதைப்பற்றின விசேஷ விவரணங்கள் பெரிய திருமொழி 5—8—2 பாசுரத்தின் நமது திவ்யார்த்த தீபிகையில் காணலாம்.]

## 41. ஸ்ரீராமபட்டாபிஷேகம்.

ப்ரதிஜ்ஞைப்படி பதினான்கு வருஷம் நிரம்பியும் இராமபிரானெழுந்தருளக் காணாமையாலே துடித்துக் கொண்டிருந்த பரதாழ்வான் (முதல்நாள் திருவடிமூலமாக ஸ்ரீராமஸமாகமத்தை அறிந்து நகரமுழுதும் தோரணங்கள்கட்டிக் கொடிகளைத் தூக்கித் தெருக்களில் நீர் தெளித்துக் கோலமிட்டு மாளிகைகள்தோறும் பூர்ணகும்பங்களையும் மங்கள தீபங்களையும் வைப்பித்து அபரிமிதமான அலங்காரங்களைச் செய்வித்து, பேரி சங்கம் முதலிய வாத்யங்களை எங்கும் முழங்குவித்து மங்களார்த்தமாகப் பொரிகளையும் மோதகங்களையும் பூர்ணகும்பங்களையும் புது வஸ்த்ரங்களையும் புஷ்பங்களையும் பழங்களையும் எடுத்துக்கொண்டு நகரத்திலுள்ள மஹா ஜனங்களோடு கூடி ப்ராஹ்மணர் ஸ்வஸ்திவாசநஞ் சொல்லத் தாம் எதிர்கொண்டு சென்று இராமபிரானையும் ஸீதாதேவியையும் திருவடிதொழுது இலக்குமணனை ஆரத்தழுவி, சிலர் ஸ்தோத்ரங்கள் சொல்ல, சிலர் காஹளங்களூத, சில பெண்கள் வெண்சாமரம் வீச, சிலர் மயில் தோகை சுருட்டிகளைப் பிடிக்க, சிலர் விசிறிகளெடுத்து வீச, சிலர் கீழ்விரி விரிக்க, முத்துக்குடைகள் பிடிக்க, பெண்கள் மங்களம்பாட, வெகு கோலா

ஹலத்துடன் இராகவனை நகரப்ரதக்ஷிணமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய் நவரத்நமயமான மஹாமண்டபத்தில் திவ்ய ஸிம்ஹாஸநத்தில் இராமபிரான் வீற்றிருக்க, தானும் சத்ருக்நனும் கைகூப்பி நிற்க, அவ்வளவில் வஸிஷ்டமஹாமுனிவர் புண்ய தீர்த்தங்களினின்றும் தீர்த்தங்களை வரவழைத்து இராகவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார், ஸ்ரீராமன் பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு கௌஸலையார் முதலிய தாய்மார்களையும் தம்பிகளையும் பரிஜநங்களையும் பௌரஜநங்களையும் ஒருமிடருக உகப்பித்துக்கொண்டு தீய வழிகளைச் சிதைத்து நல்வழிகளை விளக்கிக்கொண்டு பதினோராயிரம் வருஷகாலம் ராஜ்ய நிர்வாஹஞ்செய்து ஸுகமாக வாழ்ந்திருந்தார்.

## 42. மாலியை மடித்ததும் சுமாலி முதலானோரைப் பாதாளலோகம் செலுத்தியதும்

ஸுகேசனென்னும் இராக்கதனுக்கு மாலியவான், மாலி, ஸுமாலி என மூன்று பிள்ளைகள் பிறந்ததும், அவர்கள் தவம்புரிந்து பெருமை பெற்று இலங்கையிற் குடிபுகுந்து விவாஹஞ் செய்துகொண்டு பல மக்களைப் பெற்றதும், தேவர்கள் சிவபெருமானை அடைக்கலம் புகுந்து அவர் சொன்ன உபாயத்தினால் ஸ்ரீமந்நாராயணனைச் சரணமடைந்ததும், அவர் அவர்கட்கு அபயமளித்ததும்' அது தெரிந்து ராக்ஷசர்கள் கோபங்கொண்டு படையெடுத்துத் தேவலோகஞ் சென்றதும், அப்பொழுது கருடவாஹநாருடராய்க் கேசவன் அங்கு வந்து தோன்ற அவரைச் சூழ்ந்து அரக்கர் அம்புமாரி பொழியப் புகுந்ததும், பிறகு அரக்கர்கட்கும் திருமாலுக்கும் பெருத்த யுத்தம் நடந்ததும், அதில் மாலி மரணமடைந்ததும், மற்ற மாலியவான் சுமாலி யென்னுமிருவரும் திருமாலுடன் போர்புரிந்து பராஜயமடைந்து மற்றுமுள்ள இலங்கையரையும் கூட்டிக்கொண்டு பாதாளலோகம் போய்ச் சேர்ந்ததும் உத்தர ஸ்ரீராமாயணத்தில் 5, 6, 7, 8 ஸர்க்கங்களில் விரிவாகக் கூறப்பட்டவை.

## 43. பலராமாவதாரம்

ஸ்ரீராமாவதாரத்தில் ஆதிசேஷனது அம்சமாய்த் தோன்றிய லக்ஷ்மணன் தனக்குச் செய்த அரிய பெரிய பணிவிடைக்கு உவந்து பகவானாகிய ஸ்ரீமந்நாராயணன் அவ்வாதிசேஷனை நோக்கி 'மற்றோரவதாரத்தில் உமக்கு நான் தமபியாய்ப்பிறந்து உம்மைப் பூஜிக்கக் கடவேன்' என்று வரமளித்திருந்தார். அவ்வவதாரங்கழிந்த வெகுநாளைக்குப் பின்னா த்வாபரயுகத்தில், இப்பூமியில் முன் ராமாவதாரத்தில் ராமபாணங்களால் அடிபட்டு மரணமடைந்த அரக்கர்கள் க்ஷத்ரிய ஜாதியிற் பிறந்து ஜனங்களை நலிந்துகொண்டிருக்கையில் பகவான் மீண்டும் அவதரித்து முன்போலவே அவர்களையழிக்கக் கருதி ஆதிசேஷனை நோக்கி 'எனக்குமுன் நீர்போய் வஸுதேவர்க்குப் பிள்ளையாகப் பிறக்கவேணும்' என்ன ஆதிசேஷனும் அப்படியே வடமதுரையில் வஸிக்கும் வஸுதேவரென்கிற யதுவம்சத்து க்ஷத்ரியனுடைய மனைவியாகிய தேவகியின் கருவில் புகுந்தார். பின்பு பகவான் தனது யோகமாயையையழைத்து 'நம்முடைய ஆதிசேஷன் தேவகியின் கருவிற் புகுந்திருக்கிறார். நீ போய் அந்தக் கருப்பிண்டத்தை அப்படியே யெடுத்து வஸுதேவருடைய முதல்மனைவியும் நந்தகோபருடைய கோகுலத்தில் வஸிப்பவளுமான ரோஹிணியின் கர்ப்பத்தில் வைத்திடு' என்று கட்டளையிட, அப்படியே தேவகியின் ஆறுமாதத்துக் கருப்பிண்டத்தை யோகமாயை பெயர்த்தெடுத்துக்கொண்டுபோய் ரோஹிணியின் வயிற்றிற் சேர்த்துவிட, சரத்காலத்துத் திங்கள்போன்ற வடிவுடையவராய்ப் பலராமன் அவதரித்தார். பிறகு, ஒருத்திமகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்தி மகனாய் ஒளித்து வளருங் கண்ணபிரானிடத்தில் மிகவும் விருப்பமுற்றவராய் அப்பெருமானுக்கு ஒருவகைத் தீங்கும் நேரிடாதபடி பாதுகாவலாக இருந்துகொண்டு இணைபிரியாது வாழ்ந்துவந்தார். இவர்க்கு **நம்பிமூத்தபிரான்** என்பது ஸம்ப்ரதாயத்

திருநாமம். இவர்க்குக் கலப்பை ஆயுதம். அதனால் இவர்க்கு 'ஹலீ' என்றும் 'ஹலாயுதன்' என்றும் திருநாமங்கள் வழங்கும். ஒரு காலத்தில் பலராமர், பக்கத்தில் ஓடுகின்ற யமுனா நதியை நோக்கி, 'ஓ யமுனாய்! நீ இங்கேவா நான் நீராடவேண்டும்' என்றழைக்க, அவ்யமுனை அவர் மதுபான மயக்கத்தினால் இப்படிச்சொல்லுகிறாரென்று அவரது வார்த்தையை அவமதித்து அங்கே வாராதொழிய, அதுகண்டு அவர் வெகுண்டு தமது கலப்பையைக் கையிலெடுத்து அதன் நுனியாலே அந்நதியை இழுக்க, அந்நதி தான் போகும்வழியை விட்டு அவரெழுந்தருளியிருக்கும் வனத்தில் வந்து பெருகியதன்றியும், தன்னுடைய சரீரத்தோடு அவர்க்கெதிரில் வந்து பயத்தினாலே மிகவும் நடுநடுங்கி விசேஷமாகவேண்டிக் கொள்ள, பின்பு அந்நதியை க்ஷமித்து அதில் நீராடினரென்றும்,—ஒருகால் ஹஸ்திநாபட்டணத்தில் துரியோதனன் தன்மகளான லக்ஷணைக்கு ஸ்வயம்வரம் கோடிக்க, அக்கன்னிகையை ஸ்ரீகிருஷ்ணனது மஹிஷிகளுள் ஒருத்தியாகிய ஜாம்பவதியின் குமாரனான ஸாம்பனென்பவன் பலாத்காரத்தால் தூக்கிக் கொண்டுபோக, துரியோதனாதியர் எதிர்த்துயுத்தஞ்செய்து அவனைப் பிடித்துக் காவலிலிட்டுவைக்க, அச்செய்திகேட்ட பலராமன், தான் அவனை விடுவித்து வருவதாய்ச் சொல்லிப் புறப்பட்டு அஸ்தினாபுரத்திற் கெழுந்தருளி 'நம்முடைய ஸாம்பனை விடவேண்டும்' என்றருளிச்செய்ய, அக்கௌரவர்யாவரும் 'துஷ்டகாரியஞ்செய்த அவனை நாங்கள் விடமாட்டோம்' என்று ஒரே கட்டுப்பாடுடையவர்களாய் இகழ்ந்துபேச, பலராமர் அளவுகடந்த கோபங்கொண்டு எழுந்திருந்து 'குருகுலத்தார் வாஸஞ் செய்து கொண்டிருக்கின்ற இந்நகரத்தைக் கங்கையிற் கவிழ்த்துவிட்டுப் பூமியிற் கௌரவப்பூண்டில்லாமற் செய்துவிடுகிறேன், பாருங்கள்' என்று சொல்லித் தமது கலப்பையை மதிலின்மேலுள்ள நாஞ்சிலென்னும் உறுப்பில் மாட்டியிழுக்க அதனால் அப்பட்டண முழுவதும் அசைந்து சாயவே, அதுகண்ட கௌரவரெல்லாரும் மனங்கலங்கி வணங்கி வேண்ட, நம்பிமூத்தபிரான் அவ்வளவோடு கலப்பையை வாங்கியருளினன் என்றுமுள்ள பலகதைகளினால் இவரது கலப்பையின் ஆற்றல் அறியத்தக்கது.

# ஸ்ரீக்ருஷ்ணாவதாரவைபவஸங்க்ரஹம்

## 44. தந்தைகாலில் விலங்கறக் கண்ணன் திருவவதரித்தது.

பூமிதேவிக்குத் தன்மீது ஸஜ்ஜனங்கள் எத்தனை கோடிக்கணக்காக இருந்தாலும் அவர்களைச் சுமப்பது இலவம்பஞ்சைச் சுமப்பதுபோல் வருத்தமற்றிருக்கும். ஒரு துஷ்டனுண்டாகிலும் இரும்பு மூட்டையைத் தாங்குவதுபோல் மிக வருத்தமாம். ஆதலால், த்வாபரயுகத்தில் இப்பூமியின்கண் பிறந்த கம்ஸன் சிசுபாலன் முதலிய அஸுரர்களின் பாரத்தைப் பொறுக்கமாட்டாமல் பூமிப்பிராட்டி கோரூபத்தைத் தரித்து மேருமலையி னுச்சியிலுள்ள தேவர்களின் ஸபையை அடைந்து, அச்சபைநடுவில் வீற்றிருக்கும் நான்முகனை வணங்கித் தனது துயரத்தை முறையிட்டு இவ்வஸுரர்களைத் தொலைத்துத் தன்னை ஸுகப்படுத்தவேணுமென வேண்டிக்கொள்ள, அதற்கு நான்முகன் சிறிதுகாலம் யோசித்து 'இது நம்மாலாகாது; ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாய் ஸர்வலோக பிதாவாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு அறிவித்து அவர் மூலமாக இக்காரியத்தை நிறைவேற்றுவிக்கவேணும்' எனக்கருதி அந்தப்பூமியையும் மற்றுமுள்ள தேவர்களையுங் கூட்டிக்கொண்டுபோய்ப் பாற்கடலுள்பள்ளி கொள்கின்ற பரமனைத் தொழுது துதித்தனர். பின்பு திருமால் அருள்புரிந்த சிந்தை கொண்டு அவர்கட்குக் காட்சி தந்து யோக க்ஷேமங்களை விசாரித்து அவர்கள் வந்த வரலாற்றை உணர்ந்தருளி "ஓ தேவர்களே! உங்கள் கருத்தை அறிந்துகொண்டேன்; முற்காலத்தில் வருணனுடைய சாபத்தினால் கச்யபரும் அவரது மனைவியான அதிதியும் இப்பொழுது வஸுதேவ தேவகிகளாகப் பிறந்திருக்கின்றனர்: இப்பிறவியில் அவர்களுக்கு நான பிள்ளையாகப் பிறக்கிறேனென்று முன் வரமளித்திருக்கிறேன்; அங்ஙனமே நான் அவர்களுடைய கர்ப்பத்தில் தோன்றி ஸாதுபரித்ராணமும் துர்ஜந விநாசமும் தர்ம ஸம்ஸ்தாபநமும்

செய்யக்கடவேன்; நீங்கள்போகலாம்" என்று சோதிவாய்திறந்து அருளிச்செய்ய: அவர்கள் பரமாநந்தத்துடன் விடைபெற்று தத்தம் ஸ்தானங்களை அடையலாயினர். அக்காலத்தில் மதுராநகரத்தில் யதுவம்சத்தாரில் உக்ரஸேநன் என்றொரு தார்மிகன் அரசனுயிருந்தான். அவனது மகன் கம்ஸனென்பான். இக்கஞ்சன் துஷ்டர்களில் தலைவனுயிருந்துகொண்டு பெரியோர்கட்குத் தீமையும் புல்லியர்கட்கு நன்மையும் செய்துகொண்டு தன் பலத்திஞல்தனது தந்தையாகிய உக்ரஸேநனைச் சிங்காதனத்தினின்று தள்ளிவிட்டுத் தான் அரசாண்டு வருங்காலத்து:—கம்ஸன் தனது உடன்பிறந்தவளாகிய யுக்தவயதுவாய்ந்த தேவகியை வஸுதேவருக்கு விவாஹம் செய்வித்து அவ்விவாஹம் முடிந்தபின் அவளை வஸுதேவர் மாளிகையிற் கொண்டுவிடுகைக்காகத் தேரேற்றிக்கொண்டு தேவகியிடத்தில் மிக்க அன்பு ஆதரத்துடன் ஸாரதியாயிருந்து தேரைநடத்திக்கொண்டு வரும்போது, ஆகாயத்தில், ‘அறிவு கேடனே! நீ யாரிடத்தில் அன்பு பூண்டிருக்கின்றனையோ, அத்தேவகியின் எட்டாவதுகர்ப்பம் உன்னைக் கொல்லப்போகிறது’ என்று ஒரு அசரீரவாக்குப் பிறக்க, அதனைக்கேட்ட கம்ஸன் மிகவும் திடுக்கிட்டு, ‘இனி நாம் தப்ப வழி யாது?’ என்று யோசித்து, ‘இவள் பிழைத்திருந்தாலன்றோ இவளது எட்டாவது பிள்ளை நம்மைக் கொல்லப்போகிறது; இப்போதே இவளைக் கொன்றுவிடுவோம்’ எனறறுதியிட்டுக் கத்தியை உருவிக்கொண்டு தேவகியைக் கொலைசெய்யப்புக, வஸுதேவர் அவனுக்குப் பல தருமங்களையும் காலகதியையும் பரக்க உபதேசிக்கவும் அவன் அதை மதியாமல் ஒரே பிடிவாதமாய் நிற்க, பின்பு வஸுதேவர் ‘அப்பா! உனக்கு இவள்கையால் சாவு இல்லை; இவளுடைய பிள்ளை கையினுலல்லவோ சாவு நேரிடப்போகிறது; இவளுக்குப் பிள்ளை பிறந்தவுடன் அப்பிள்ளைகளை உன்னிடம் கொடுத்துவிடுகிறேன், நீ அவற்றைக் கொன்றுவிடு’ என்று சொல்ல; கம்ஸன் அதை யுக்தமென்றுகொண்டு அத்தம்பதிகளை விலங்கிட்டுச் சிறையிலடைத்திட்டான். திருமால் தேவகியிடம் எட்டாவது கர்ப்பத்தில் [ஆவணி மாதம் க்ருஷ்ணஷ்டமி கூடிய ரோஹிணீ நக்ஷத்திரத்தில் இரவு விருஷபலக்கினத்தில்] ஸ்ரீகிருஷ்ணனுய் அவதரிக்க, அப்போதே வஸுதேவ தேவகிகளின் கால்விலங்கு இற்று முறிந்து விழுந்தொழிந்தது.

## 45 பூதனையின் முலையைச் சுவைத்து உயிருண்டது.

ஸ்ரீகிருஷ்ண சிசுவை நாடியுணர்ந்து கொல்லும்பொருட்டுக் கஞ்சன் பல அசுரர்களை ஏவ, அவர்களில் ஒருத்தியான பூதனை யென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து, அங்குத் தூங்கிக்கொண்டிருந்த கிருஷ்ண சிசுவையெடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்லமுயல, பகவானுகிய குழந்தை அவ்வரக்கியின் ஸ்தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்கிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தருளினன்.

## 46 தாளைநிமிர்த்துச் சகடு முறித்தது

நந்தகோப கிருஹத்தில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்திலே கண்ணனைத் தொட்டிலிலிட்டுக் கண்வளர்த்தி யசோதை யமுனை நீராடப் போனுள். கம்ஸனுல் ஏவப்பட்ட அசுரனொருவன் அச்சகடத்தில் வந்து ஆவேசித்து ஸ்ரீகிருஷ்ணசிசுவின்மேலே விழுந்து கொல்ல முயன்றதை அறிந்த அப்பகவான், பாலுக்கு அழுகிற பாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலேதூக்கி உதைத்தருள, அவ்வுதைபட்டமாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழே விழுந்து அசுரனுட்பட அழிந்தது.

## 47 மருதம் முறிய நடை கற்றது

குழந்தைப்பருவமுள்ள கண்ணன் துன்பப்படுத்துகின்ற பல விளையாடல்களைச் செய்யக்கண்டு கோபித்த யசோதை கிருஷ்ணனைத் திருவயிற்றிற் கயிற்றினாற் கட்டி ஒருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை இழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமர [யமளார்ஜுந]த்தின் நடுவே எழுந்தருளியபோது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவில், முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன், மணிக்ரீவன் என்னும் குபேர புத்திரர் இருவரும் சாபந்தீர்ந்து சென்றனர். இந்த மருதமரங்களில் அஸுராவேசமுமிருந்ததாகப் பெரியாழ்வார் திருவுள்ளம். "பொய்ம்மாய மருதான வசுரரை" என்ற பாசுரம் காண்க.

## 48 கண்ணன் வாயினில் வையமேழுங்கண்டது

ஒருநாள் கண்ணன் விதியில் விளையாடிக்கொண்டிருக்கையில் பலராமன் வந்து 'அம்மா! கிருஷ்ணன் மண்ணைத் தின்கின்றான்' என்று சொல்லக்கேட்ட யசோதை ஓடிப் போய்க் கண்ணனை வாரியெடுத்துக்கொண்டு உள்ளே வந்து 'என் மண்ணைத் தின்றாய்?' என்று வெருட்ட, அதற்குக் கண்ணன் 'அம்மா! நான் மண்ணைத் தின்னவில்லை; பலராமன் என்மேல் விணாகக் கோள் சொல்லுகிறான்; வேணுமாகில் என் வாயைப் பார்' என்று தன் வாயைத் திறந்து காட்ட, யசோதை அவ்வாய்வழியாக அவனுடைய திருவயிற்றில் ஏழு குலபர்வதங்களையும் ஏழு கடல்களையும் ஏழு தீவுகளையுமுடைய இப்பூமி முழுவதையுங்கண்டு "இவன் ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம்" என்று நிர்ணயித்துப் பின்னையும் சிறிது நேரத்தில் அந்த புத்திமாறித் தன்னுடைய பாலனாகவே எண்ணிக் கொண்டிருந்தாள்.

இக்கதையைப் பெரியாழ்வார் அநுஸந்திக்கும்போது "கையுங் காலும் நிமிர்த்துக் கடாரநீர், பையவாட்டிப் பசுஞ் சிறுமஞ்சளால், ஐயநாவழித்தாளுக்கங்காந்திட, வையமேழுங் கண்டாள் பிள்ளைவாயுளே" என்று குழந்தைப்பருவமாயிருக்கிற கண்ணனை யசோதைப் பிராட்டி நீராட்டும்போது முடிவில் மஞ்சள்தேய்வையைக்கொண்டு, அக்குழந்தையின் நாக்கை வழிக்கப்போகையில், அக்குழந்தையின் திறந்தவாயிலே ஸமஸ்தலோகங்களையும் ஸாக்ஷாத்கரித்தாள் என அநுஸந்தித்தனர். "என்னை நான் மண்ணுண்டேனாக, அன்புற்று நோக்கி அடித்தும் பிடித்து மன்னவர்க்குங் காட்டிற்றிலையே" என்ற அப்பெரியாழ்வார் திருமொழியிலேயே முன்குறித்தவாறு கதையையும் யோஜித்துக் கொள்ளலாம். யசோதைப்பிராட்டி இப்படிக்கண்டது ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுநனுக்கு ஞானக்கண்ணைக் கொடுத்துத் தனது விச்வரூபத்தைக் காட்டினாற்போல, யசோதைப்பிராட்டிக்குத் தன்னுடைய தெய்வத்தன்மையைக் காட்டவேணுமென்று கொண்ட ஸ்வதந்த்ரேச்சையினாலே அவ்யசோதைக்கு ஞானக் கண்ணைக் கொடுத்ததனாலாகியது. [கண்ணன் முலைப்பாலுண்ணும்போது கொட்டாவி விடுகிற வியாஜத்தினால் வாயைத்திறந்து யசோதைக்கு விச்வரூபங்காட்டினானென்பதும் சில புராணங்களிலுண்டு.]

இப்படி சிறிது நாள் கழிந்தபின் கிருஷ்ணன் தன்னேராயிரம் பிள்ளைகளோடு சேர்ந்து கன்றுகளை மேய்க்கக் காட்டுக்குப்போய் "சீலைக்குதம்பை ஒரு காது ஒரு காது செந்நிறமேல் தோன்றிப்பூ, கோலப்பணைக்கச்சுங் கூறையுடையும் குளிர்முத்தின் கோடாலமும், காலிப் பின்னே வருகின்ற கடல்வண்ணன் வேடம்" "தழைகளுந் தொங்கலும் ததும்பியெங்கும் தண்ணுமை எக்கம் மத்தளி தாழ்பீலிக், குழல்களுங் கீதமுமாகி யெங்குங் கோவிந்தன் வருகின்ற

கூட்டம்" என்றபடி பல்வகை அலங்காரங்களுடன் வேணுநாதஞ் செய்து பசுக்களையுங் கன்றுகளையுங் களிக்கச்செய்து ஆய்ச்சிமார்களின் கண்ணையும் நெஞ்சையுங் கவர்ந்துகொண்டு தாய் தந்தையர்க்கு மிக்க அன்பனாயிருந்தான்.

## 49 பிலப்பாசுரனைப் பிணமாக்கியது.

ப்ரலம்பனென்னும் பெயரையுடைய ஒரு கொடிய அஸுரன் ஸ்ரீக்ருஷ்ண பலராமர்களையும் மற்றுமுள்ள கோவலர் யாவரையும் வதைசெய்து தான் வெற்றிபெறக் கருதித் தனது மாயையினால் ஒரு கோபால குமாரனைப்போல் வேஷம் பூண்டு, அக்கோபாலரனைவர்க்கும் தன்னிடத்தில் ஸஜாதீயபுத்தி பிறக்கும்படி அவர்களை மயக்கி, நெஞ்சிற் கபடத்துடன் அவர்களுடன் கலந்து நேசித்திருந்தான்; ஸர்வஜ்ஞனாகிய கண்ணபிரான் இக்கபடச்செய்தியை நன்குணர்ந்து அவனைச் சிக்ஷித்தொழிப்பதற்குத் தக்க சூழ்ச்சிகளைச் செய்துகொண்டிருந்தும், 'இவன் நம்மிடத்தில் மிக்க அன்புகொண்டேயிருக்கிறான்' என்று தோற்றும்படி நடனஞ்செய்து, ஒருநாள், கோபால குமாரர்களனைவரையும் விளித்து 'நாமனைவரும் ஒன்றுசேர்ந்து இரவி மறையுமளவும் சில சிலைகளை ஓரிடத்தில் ஸ்தாபித்துக் குறிவைத்துப் பந்துகளடித்து அவ்விளையாட்டினால் வருகிற ஜயாபஜயங்களையடைந்து அவற்றுக்குத்தக்க பந்தயங்களையும் அநுபவிப்போம் வாருங்கள்' என்றழைக்க, அனைவரும் அதற்கு உடன்பட்டுவர, பின்பு கண்ணபிரான் தான் பேருத்தியும், ஸ்ரீதாமனென்னும் கோபாலன் தனக்கு எதிர்ப்பேருத்தியும், தன்னுடைய பக்ஷத்தில் மாயா கோபாலப்ரலம்பன் ஒரு பேருத்தியும், அவனுக்கெதிர் பலராமன் ஒரு பேருத்தியுமாக ஏற்படுத்தி, மற்ற கோபாலர்களைச் சிறிய உத்திகளான சேவகர்களாக வகுத்து அவர்கள் யாவரையுங் கணக்குசெய்து இரண்டு பக்ஷத்திற்கும் ஸமமாகப் பாவித்து இரண்டு இனமாகப் பிரிந்தவர்களுடன் ஸ்ரீப்ருந்தாவனத்தின் மஹாவிசால மார்க்கங்களிற் சென்று மஹாவிருக்ஷங்களையும் பெரிய சிலைகளையும் குறிகளாக்கிக் கைகளிற் பந்துகளேந்திப் பாண்டீரமென்கிற ஆலமரத்தின் நிழலிற் சேர்ந்து "இவ்வாட்டத்தில் தோற்றவர்கள் ஜயித்தவர்களைச் சுமந்துகொண்டு, பசுக்கூட்டங்கள் பிரிந்து அப்புறம் சிதறிப்போகாமல் அம்மந்தைகளை ப்ரதக்ஷிணமாக வந்து மடக்கவேண்டியது; மஹாவ்ருக்ஷ சிலாலக்ஷ்யங்களைத் தொட்டு அத்தானத்தில் வந்து இறங்கவேண்டியது; என்று எல்லாரும் சபதமேற்படுத்திக்கொண்டு விளையாடிக்கொண்டிருக்கையில், ஒருகால் கண்ணன்வகுப்பில் தோல்வி நேரிட, அப்போது ஸ்ரீதாமனென்பவனைக் கண்ணபிரானும், பலராமனைப் பிரலம்பனும் வாஹநமாகிச் சுமந்துகொண்டு ஸமயபந்தத்தின்படி லக்ஷ்ய ப்ரதக்ஷிணஞ் செய்யப்போனார்கள், பலராமனைச் சுமந்துகொண்டு செல்லுகிற பிரலம்பன் மாத்திரம் தீயகருத்தினனாய் லக்ஷ்ய ஸ்தானத்தைத் தாண்டிப்போக, பலராமன் தனது சக்தி விசேஷத்தினால் அவனுக்குச் சுமக்க முடியாத பாரமாகிவிட, அவன் மிகவும் வருந்தி நடக்கமாட்டாதவனாய் அந்தக்கோபால வேஷத்தைவிட்டு நிஜாகாரமாகிய கொடிய ராக்ஷஸ ரூபத்தைப் பூண்டு ஊழிப்பெருங்காற்றினுங் கடியனாக விரைந்து ஆகாயமார்க்கத்திற் செல்ல, பலராமன் அவனது கோரமான வடிவைக்கண்டு இவன் அஸுரனேயென்று நிச்சயித்துத் தனது ஸங்கர்ஷணாம்ச பலத்தினால் முஷ்டிபிடித்து அவனது சிரோபாகத்திற்குச் சரியாகப்பாய்ந்து, கைமுட்டியினால் அவன் சிரம் பிளந்து சின்னபின்னமாய் அழியும்படி ஓர் அறை அறைந்து ஒரே குட்டாகக் குட்டினார். உடனே அவ்வஸுரன் தலைபிளந்து சின்னபின்னமாகச் சிதைய, அவனது சரீரமெங்கும் செந்நீராய்ப்பெருக முகத்தினின்றும் ரக்தமாம்ஸங்கள் ஒழுக, கதறிக்கொண்டு பூமியில் விழுந்து உயிரொழிந்தனன். [இங்ஙனம் பலராமனாற் செய்யப்பட்ட அவ்வஸுரவதத்தைக் கண்ணபிரான் செய்தருளியதாகவே சில ஆழ்வார்கள் அநுஸந்தித்துப் போருவர், அது ஒற்றுமைநயம் பற்றியாம்.]

## 50 காளியனுச்சியில் நட்டம் பாய்ந்தது.

இப்படியிருக்கையில் ஒருநாள் கிருஷ்ணன் கன்றுகளை ஓட்டிக்கொண்டு ஒருவரும் ஸஞ்சரியாத வழியே போகத்தொடங்க, மற்ற இடைப்பிள்ளைகள் அழைத்து 'க்ருஷ்ணா! அவ்வழி நோக்கவேண்டா; அவ்வழியிற் சென்றால், யமுனா நதியில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்நியினாற் கொதிப்படைந்த நீருள்ளதாய்ப் பானத்துக்கு அநர்ஹமாம்படி செய்த **காளிய** னென்னும் கொடிய ஐந்தலை நாகம் குடும்பத்தோடும் வாஸஞ்செய்துகொண்டு அணுகினவர்களனைவரையும் பிணமாக்கி விடுதலால் நாங்கள் அஞ்சுகின்றோம்' என்ன; அதைக்கேட்ட கண்ணபிரான் உடனே அக்காளிய நாகத்தைத் தண்டிக்க வேண்டுமென்ற திருவுள்ளங் கொண்டு அம்மடுவிற்குச் சமீபத்திலுள்ளதொரு கடம்ப மரத்தின் மேலேறி அம்மடுவிற் குதித்து, கொடிய அந்நாகத்தின் படங்களின்மேல் ஏறித் துவைத்து நர்த்தனஞ்செய்து நசுக்கி வலியடக்குகையில், மாங்கலிய பிக்ஷை இட்டருள வேண்டுமென்று தன்னை வணங்கிப் பிரார்த்தித்த நாக கன்னிகைகளின் விண்ணப்பத்தின் படி அந்தக் காளியனை உயிரோடு கடலிற்சென்று வாழும்படி விட்டருளினன்.

## 51 தேநுகாஸுரனைத் தொலைந்தருளியது.

பின்பொருநாள் கண்ணபிரான், பலராமனோடும் ஆயர் சிறுவர்களோடும் ஆநிரை மேய்த்துக்கொண்டு, பழங்கள் அழகாக மிகுதியாய்ப் பழுத்து வாஸனை வீசிக்கொண்டிருந்த ஒரு பனங்காட்டையடைந்து, அப்பனம்பழங்களை விரும்பி உதிர்த்துக்கொண்டு வருகையில், அவ்வனத்துக்குத் தலைவனும் கம்ஸன் பரிவாரத்தில் ஒருவனுமாகிய கழுதைவடிவங்கொண்ட தேநுகாஸுரன கோபமூண்டு ஓடிவந்து எதிர்த்துப் போர்செய்ய, உடனே கண்ணன் அதிலாகவமாய்ப் பின்னங்காலிரண்டையும் பற்றி அவ்வசுரக் கழுதையைச் சுழற்றி உயிரிழக்கும்படி பனைமரத்தின்மேல் எறிந்து அழித்து, பிறகு எல்லாருமாய் அங்குள்ள இனிய கனிகளை அருந்திப் பொழுதுபோனவாறே விடுபோய்ச் சேர்ந்தனர்.

## 52 அரிஷ்டாஸுரனை அழித்தருளியது.

பின்பொருநாள், கம்ஸனாலேவப்பட்ட அசுரர்களில் அரிஷ்டனென்பவன் எருது வடிவங்கொண்டு பசுக்களையெல்லாம் முட்டி இடைச்சேரியைப் பயப்படுத்திக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனது திருவயிற்றின்மேற் கண்வைத்துக் கொம்புகளை நீட்டிப் பாய்ந்துவர, கண்ணபிரான் அவனைக் கொம்புகளிற் பிடித்து அசைய வொட்டாமற் செய்து தன் காலினால் அவன் வயிற்றில் ஓரிடி இடித்து அவன் கழுத்தைப்பிடித்துக் கசக்கி அவனுடைய கொம்புகளில் ஒன்றைப்பறித்து அதனாலேயே அவனை அடித்துக்கொன்றனன். [கண்ணனுடைய சரிதைகளில் எருதடர்த்ததாக ஆழ்வார்கள் அநுஸந்திக்குமிடங்களில் இக்கதையும் கொள்ளத்தகும். ஏழ்விடை செற்றதாகவும் ஏழெருதுகள் தழுவினதாகவும் அருளிச்செய்யுமிடங்களில் நப்பின்னைக்காகச் செய்த செயல் அநுஸந்திக்கத்தக்கது.]

## 53 ஏழ்விடை செற்றுப் பின்னைதோள் புணர்ந்தது.

கும்பனென்னும் இடையர் தலைவனது மகளாயும் நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் **நீளா** என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப்பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யாவருக்கும் அடங்

காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன்"

## 54 கேசியின் வாயைக் கீண்டெறிந்தது.

பின்பொருநாள் கம்ஸனலேவப்பட்ட **கேசி** என்பானோர் அஸுரன் குதிரையினுருவத்தோடு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படி கனைத்துத் துரத்திக்கொண்டு கண்ணபிரான்மேற் பாய்ந்துவர அப்பெருமான் தன் திருக்கையை நன்றாகப் பெருக்கி நீட்டி அதன் வாயிற் கொடுத்துத்தாக்கிப் பற்களையுதிர்த்து உதட்டைப் பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளினன்.

## 55 கொக்கின் வாயைக் கிழித்தெறிந்தது.

மற்றொருநாள் **பகன்** என்னும் ஓரஸுரன் கொக்குவடிவங்கொண்டு கண்ணபிரானைக் கொல்வதாக நெருங்கிவர, அப்பொழுது கண்ணன் அப்பறவையின் வாயலகுகளை இருகையாலும் பிடித்துக்கிழித்து அதனை **அழித்தனன்.**

## 56 கன்றினால் விளவெறிந்தது.

கம்ஸனலேவப்பட்ட அசுரர்களில் கபித்தாசுரன் விளாமரத்தின் வடிவமாய் கண்ணன் தன்கீழ்வரும்போது மேல்விழுந்து கொல்வதாக எண்ணிவந்து நிற்க, அதனையறிந்து கிருஷ்ணபகவான் அவ்வாறே தன்னை முட்டிக்கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு வந்த வத்ஸாஸுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மேல் எறிய, இருவரும் சிதைந்து தமது அசுரவடிவத்துடனே விழுந்து இறந்தனர். (இது முள்ளைக்கொண்டே முள்ளைக் களைவது போலாம்.)

## 57 குருந்தமரமொசித்தது.

மற்றொருநாள் வேறொரு அஸுரன், கண்ணபிரான் மலர்கொய்தற்பொருட்டு விரும்பியேறும் குருந்தமரத்திற் பிரவேசித்து அப்பெருமான் வந்து தன்மீது ஏறும்போது தான் முறிந்து விழ்ந்து இவனை விழ்த்திக்கொல்லக் கருதியபோது,மாயவனை கண்ணபிரான் அம்மரத்தைக் கைகளாற் பிடித்துத் தன் வலிமைகொண்டு முறித்து அழித்தனன்.

## 58 கோவர்த்தனத்தைக் குடையாக வெடுத்தது.

கண்ணபிரானுடைய இப்படிப்பட்ட அதிமாநுஷ சேஷ்டிதங்களைக்கண்டு ஆயர்களனைவரும் 'இவனே நம குலக்கொழுந்து, இவன் கட்டளைப்படியே நாம் ஒழுகவேண்டும்' என்று அறுதியிட்டனர். இங்ஙனமிருக்கையில் சரத்ருது வந்தது. அப்போது இடையர்கள் வருஷந்தோறும் நடத்துவதுபோல் வழக்கப்படி இந்திரனுக்குப் பூஜைசெய்யப் பற்பல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் மற்றுமுள்ள பூஜாத்ரவ்யங்களுமாகிய இவைகளைச் சேகரிப்பதைக்கண்டு கிருஷ்ணன் 'ஓ பெரியோர்களே! நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் ஜீவிக்கிறோமோ அதற்கே பூஜைசெய்வது தகுதி; இக்கோவர்த்தனகிரியே பசுக்களுக்குப் புல்லும் தண்ணீரும் கொடுத்துக் காப்பாற்றுகின்றது. இந்திர

னால் நமக்கு என்ன பயனுண்டு? ஒன்றுமில்லை, ஆகையால் நீங்கள் இப்பூசனையனைத்தையும் இம்மலைக்கே இடுங்கள்' என்ன, இடையர்கள் இதைக்கேட்டு அங்ஙனமே செய்ய, கண்ணபிரான் தானே ஒரு தேவதாரூபங்கொண்டு அவற்றை முற்றும் அமுதுசெய்தருள அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களை ஏவி, கண்ணன் விரும்பி மேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையர்க்கும் இடைச்சியர்க்கும் தீங்கு தரும்படி கல் மழையை ஏழுநாள் இடைவிடாது பெய்வித்தபொழுது, கண்ணன் கோவர்த்தநமலையை யெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையும் காத்தருளினன்.

## 59 திருக்குரவை கோத்த — ராஸக்ரீடை

மற்றொருகால், கண்ணபிரான் தன்னிடத்து விருப்பமுற்ற ஆயர் மாதருடைய ஆவலைத் தீர்க்கக்கருதி சரத்காலத்தில் ஓரிரவில் யமுனைக்கரையில் நின்று வேணுநாதம் செய்ய. அதனைக்கேட்ட இடைப்பெண்களெல்லாரும் மாமியார் மாமனார் முதலியோரையும் மதியாமல் காவல் கடந்து புறப்பட்டுச் சென்று க்ருஷ்ண கோஷ்டியில் அந்வயிக்க, அன்றிரவு அவர்களுடன் பரம போக்யமாகக் குரவைக் கூத்தாடினன். (குரவையாவது-ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்தில் ஒவ்வொரு கண்ணனாகப் பலவடிவெடுத்து நின்று மண்டலித்தாடும் ராஸக்ரீடை.) அப்பொழுது கோபிமார்கள் பரமாநந்தத்தின் எல்லையிலே நிற்பதைக்கண்ட கண்ணபிரான் "இது வெள்ளக்கேடாக வொண்ணாது: இந்த ரஸத்தை மாற்றவேணும்" என நினைத்து அவ்வாயர் மங்கையரைவிட்டுப் பிரிந்துபோய் ஒளிக்க, கோபிகள் கண்ணனைத்தேடிக் காணாமல் காதல்மீதூர்ந்து அப்பிரானைக் காணுமளவும் தாங்கள் உயிர்த்தரித்திருக்கைக்காக, ஒருத்தி க்ருஷ்ணனாகவும் மற்றொருத்தி காளியனாகவும் வேறொருத்தி வேறொன்றாகவும் பாவனைகள் செய்துகொண்டு க்ருஷ்ணனுடைய செயல்களையெல்லாம் அநுகரித்துத் தரித்திருக்கையில் "தாஸாமாவிரபூத் சௌரி: ஸ்மயமாந முகாம்புஜ:, பீதாம்பரதரஸ் ஸ்ரக்வீ ஸாக்ஷாந் மந்மதமந்மத:" என்றபடி—புன்முறுவல்செய்து பீதகவாடை யுடுத்துப் பரமவிலக்ஷணமான திருக்கோலத்துடனே எழுந்தருளி அவர்களுக்கு ஸேவைஸாதித்து அப்பொழுதே அவர்களது தாபமெல்லாம் ஆறும்படி பலவித லீலைகளைச்செய்து ஆனந்தப்படுத்தினன்.

## 60 கோபீ வஸ்த்ராபஹரணம்

திருவாய்ப்பாடியிலுள்ள கோபஸ்த்ரீகள் கண்ணபிரானிடங்கொண்ட வேட்கை மிகுதியினால் அவன் தம்மிடம் காதல் விஞ்சுமாறு நோன்புநோற்று அந்நோன்பின் முடிவில் யமுநாநதியிலே நீராட, அப்பொழுது அவர்கள இடைச்சாதி யொழுக்கத்தின்படி கரையில் அவிழ்த்து வைத்துவிட்டுப்போன ஆடைகளையெல்லாம் கண்ணன் ரஹஸ்யமாகவந்து எடுத்துக்கொண்டு அருகிலிருந்ததொரு மரத்தின்மே லேறியிருந்து சிறிதுபோது அவர்களை அலைக்கழித்துப்பின்பு அவர்கள் கைகூப்பி வணங்கி மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதனால் அவர்களுக்கு அத்துகில்களை அளித்தருளினன்.

## 61 வடமதுரையில் வில்விழ வழித்தது

ஸ்ரீக்ருஷ்ண பலராமர்கள் திருவாய்ப்பாடியில் வாழ்ந்து கொண்டிருக்கையில், கம்ஸன் தனது நகரமான மதுரையில் தான் தநுர்யாகமொன்று செய்வதாக வைதது அதைக் காண்பதற்காக ஸ்ரீக்ருஷ்ண பலராமர்களை-கோகுலத்திலிருந்து அழைத்து வரும்படி

அக்ரூரரை யனுப்பி யிருந்தான். அவர் கோகுலஞ் சென்று அவ்விருவரையும் அழைத்து வர, அவர்கள் வடமதுரையில் வந்து சேர்ந்தனர். கண்ணன் கம்ஸனுடைய தீயபுத்தியை அறிந்தவனாகையாலே வில்விழா நடக்கிற ஆயுதசாலையிலே புகுந்து 'இவனுக்கு வில்லொரு கேடு, விழாவொருகேடு' என்று சொல்லி அந்த வில்லையெடுத்து முறித்தெறிந்தனன். [திருப்பல்லாண்டில் (10) *திருமதுரையுள் சிலைகுனித்து *என்றவிடத்து அநுஸந்தித்த கதை இது. *விற்பெருவிழவுங் கஞ்சனும மல்லும் *இத்யாதி பாசுரங்களும் காண்க.]

## 62 சாந்து பெற்றுக் கூன் நிமிர்த்தது

வடமதுரையில் ராஜவீதியில் செல்லுகின்ற கண்ணன் சந்தனக்கிண்ணத்தைக் கையிலேந்தி வருகிற மங்கைப்பருவமுடைய ஒரு கூனியைக்கண்டு 'நங்காய்! யாருக்கு நீ இந்தப் பூச்சுக்கொண்டு போகிறாய்?' என்று விலாஸத்தோடு கேட்டருள, அந்தகூனி இவ்வாறு காதலுடையவன் போலக் கண்ணன் அருளிச்செய்தது கேட்டு அவனது திருக்கண்களினாலே மனமிழுக்கப்பட்டவளாய் "அழகனே! நான் **நைகவக்கிரை** யென்பவளென்றும் கம்ஸனாலே சந்தநாதிப் பூச்சுக்கள் ஸித்தஞ்செய்யும் வேலையில் வைக்கப்பட்டவளென்றும் நீ அறியாயோ?" என்ன: கண்ணன் எங்கள் திருமேனிக்கு ஏற்ற வெகு நேர்த்தியான இந்தப் பூச்சை எங்கட்குக் கொடுக்கவேண்டும்' என்று சொன்னவுடனே, அவள் 'அப்படியே திருவுள்ளம் பற்றுங்கள்' என்று மிக்க அன்போடு ஸமர்ப்பிக்க, அப்பூச்சைத் திருமேனியில் அணிந்து ஸ்ரீ க்ருஷ்ணன் இவளிடத்து மிகவும் ப்ரஸந்நனாய், நடுவிரலும் அதன் முன்விரலுங்கொண்ட நுனிக்கையினாலே அவளை மோவாய்க்கட்டையைப் பிடித்துத் தன் திருவடிகளினால் அவள் கால்களை அமுக்கி இழுத்துத் தூக்கிக் கோணல் நிமிர்த்து அவளை மகளிரிற் சிறந்த உருவினளாக்கியருளினன்.

## 63 குவலயாபீட பஞ்ஜநம், மல்லவதம், கம்ஸவதம்

பின்பு கம்ஸனுடைய அரண்மனையை நோக்கிச் செல்லுகையில் வழியில் தம்மைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீட மென்னும் மதயானை கோபித்து வர, அவ்யாதவவீரர் அதனை எதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை எடுப்பதுபோல எளிதிற்பறித்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அவற்றால் அடித்து அவ்யானையை உயிர்தொலைத்து விட்டு உள்ளே செல்லுகையில், அவர்களை எதிர்த்துப் பொருது கொல்லும்படி கம்ஸனால் ஏவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் வந்து எதிர்த்து உக்ரமாகப் பெரும்போர்செய்ய, அவர்களையெல்லாம் அவ்யாதவவீரர் இருவரும் மற்போரினாலேயே கொன்று வென்றிட்டுப் பிறகு மஞ்சத்தின்மீது வீற்றிருந்த கம்ஸன்மேல் வேகமாக எழும்பி கிரீடம் கழன்று கீழே விழும்படி அவனைத் தலைமயிர்பிடித்துத் தரையில் தள்ளி அவன்மேல் தான்வீழ்ந்து அவனைக் கொன்றிட்டனன் கண்ணபிரான்.

## 64 ஸாந்தீபிநி புத்திரனை மீட்டுக்கொடுத்தது

பலராம கிருஷ்ணர்களிருவரும் வேதாத்யயநஞ் செய்ய விரும்பி அவந்தி நகரத்திற்குச் சென்று அங்கிருந்த **ஸாந்தீபிநி** என்னும் ப்ராஹ்மணோத்தமர் பக்கல் ஸகல சாஸ்திரங்களையும் அறுபத்துநான்கு நாளைக்குள் அதிகரித்து விடைபெறுங் காலத்திலே குருதக்ஷிணை

ஸமர்ப்பிக்கத் தேடுமளவில், அவ்வாசாரியரும் கண்ணபிரானுடைய அதிமாநுஷ சேஷ்டித சக்தியை அறிந்தவராகையாலே 'பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு ப்ரபாஸதீர்த்த கட்டத்திற் கடலில் மூழ்கி இறந்துபோன என் புத்திரனைக் கொண்டுவந்து தரவேண்டும்' என்று அபேக்ஷிக்க, கண்ணன் 'அப்படியே' என்று, அப்புத்திரனைக் கொண்டுபோன, சங்கின் ரூபந்தரித்து ஸமுத்திர ஜலத்தில் வாஸஞ்செய்கின்ற பஞ்சஜநன் என்கிற அஸுரனைக் கொன்று, யமபட்டணத்துக்கு எழுந்தருளி அங்கு யாதனையிற் கிடந்த அக்குமாரனைப் பூர்வ தேஹத்தில் ஒன்றும் விசேஷமறக் கொண்டுவந்து கொடுத்தருளி ராமகிருஷ்ணரிருவரும் மதுராநகரம் போய்ச் சேர்ந்தனர்.

## 65 ருக்மிணீ பரிணயம்

விதர்ப்பதேசத்தில் குண்டினமென்கிற பட்டணத்தில் பீஷ்மகனென்கிற அரசனுக்கு ருக்மி என்கிற பிள்ளையும் ருக்மிணி என்கிற பெண்ணுமிருந்தனர். அந்த ருக்மிணியானவள் ஸாக்ஷாத் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அவதாரம். அவளுக்கு யுக்தவயது வந்தவுடன் கிருஷ்ணன் சென்று இப்பெண்ணை எனக்கு விவாஹஞ் செய்துகொடுக்கவேணுமென்று கேட்க, ருக்மி என்பவன் அவளைச் சேதிதேசத்தரசனான சிசுபாலனுக்குக் கொடுக்கவிரும்பியவனாதலால் கிருஷ்ணனுடைய விருப்பத்திற்கு உடன்படாதொழிந்தான். சிலநாள் கழிந்தபின் அந்த ருக்மிணியின் கல்யாணத்துக்காக ஸ்வயம்வரம் கோடித்து ஸகல தேசத்தரசர்களையும் ருக்மி வரவழைத்தான். அவர்கள் வந்து சேர்ந்தவுடனே கிருஷ்ணனும் பலராமன் முதலியவர்களைக் கூட்டிக்கொண்டு அப்பட்டணத்துக்குப்போய் கல்யாணத்துக்கு முதல்நாள் அந்த ருக்மிணியை உபாயமாய் அபஹரித்துக்கொண்டு வந்துவிட்டான்; தந்தவக்த்ரன் முதலிய பல அரசர்கள் போர்செய்ய எதிர்த்துவர அவர்களைப் பலராமனும் கண்ணபிரானும் முதுகு காட்டி ஓடும்படி செய்துவிட்டனர். பிறகு ருக்மிணிப்பிராட்டியின் தமையனான ருக்மியானவன் 'இப்படி செய்கையாவது என்?' என்று எதிர்ப்பொருது மீட்பதாக நினைத்துவந்து கண்ணனைத்தகைய, அப்போது ஸ்ரீகிருஷ்ணன் 'இவனைக்கொன்றால் ருக்மிணி மனம்வருந்துவள்' என்று அவனைப் பிடித்துத் தனது தேர்க்காலிலேகட்டி அப்பால் அவனது தலையைச் சிரைத்திட்டு மானபங்கம் செய்துவிட்டுப் பின்பு ருக்மிணியை விதிபூர்வமாகக் கல்யாணஞ்செய்துகொண்டு அவளிடத்தில் ப்ரத்யும்நனென்ற பிள்ளையைப் பெற்றார். அதனால் காமர்தாதையாயினர்.

## 66 நரகாஸுர வதமும், பாரிஜாதாபஹரணமும்

எம்பெருமான் வராஹாவதாரஞ் செய்து பூமியைக்கோட்டாற் குத்தியெடுத்தபொழுது எம்பெருமானுடைய ஸ்பர்சத்தால் பூமிதேவிக்குக் குமாரனாய்ப் பிறந்தவனும் அஸமயத்திற் சேர்ந்து பெறப்பட்டதனால் அஸுரத்தன்மை பூண்டவனுமான நரகனென்பவன் ப்ராக்ஜோதிஷ மென்னும் பட்டணத்திலிருந்து கொண்டு ஸகல ப்ராணிகளையும் நலிந்து தேவ ஸித்த கந்தர்வாதிகளுடைய கன்னிகைகளையும் பற்பலரைப் பலாத்காரமாய் அபஹரித்துக்கொண்டுபோய்த் தான் மணம் புணர்வதாகக் கருதித் தன் மாளிகையிற் சிறைவைத்து, வருணனது குடையையும் மந்தரகிரி சிகரமான ரத்நபர்வதத்தையும் தேவர் தாயான அதிதி தேவியின் குண்டலங்களையும் கவர்ந்து போனதுமன்றி இந்திரனுடைய ஐராவத யானையையும் அடித்துக் கொண்டுபோகச் சமயம் பார்த்திருக்க, அஞ்சிவந்து பணிந்து முறையிட்ட இந்திரனது வேண்டுகோளால் கண்ணபிரான் கருடனை வரவழைத்துப் பூமிதேவியின் அம்சமான ஸத்யபாமை யுடனே தான் கருடன்மேலேறி அந்நகரத்தை யடைந்து சக்ராயுதத்தைப் பிரயோகித்து அவனது மந்திரியான முரன் முதலிய பல அஸுரர்களையும் இறுதியில் அந்த

நரகாஸுரனையும் அறுத்துத்தள்ளி அழித்து, அவன் பல திசைகளிலிருந்து கொண்டுவந்து சிறைப்படுத்தியிருந்த பதினாறுயிரத்தொரு நூறு கன்னிகைகளையும் அட்கொண்டு அந்த நரகனால் முன்பு கவரப்பட்ட (இந்திரன் தாயான அதிதி தேவியின்) குண்டலங்களை அவ்வதிதிதேவிக்குக் கொடுக்கும்பொருட்டு ஸத்யபாமையுடனே கருடனது தோள்மேலேறிக் கொண்டு தேவலோகத்துக்குச் செல்ல, அங்கு இந்திராணி ஸத்யபாமைக்கு ஸகல உபசாரங்களைச் செய்தும் தேவர்க்கே உரிய பாரிஜாத புஷ்பம் மானிடப் பெண்ணாகிய இவளுக்குத் தகாதென்று ஸமர்ப்பிக்கவில்லை யாதலின், அவள் அதனைக்கண்டு விருப்புற்றவளாய் நாதனை நோக்கி 'பிராணநாதனே! இந்தப் பாரிஜாத தருவை த்வாரகைக்குக் கொண்டு போகவேண்டும்' என்றதைக் கண்ணபிரான் திருச்செவி சார்த்தி உடனே அந்த வ்ருக்ஷத்தை வேரோடு பெயர்த்துக் கருடன் தோளின்மேல் வைத்தருளி, அப்பொழுது இந்திராணி தூண்டிவிட்டதனால் வந்து மறித்துப் போர்செய்த இந்திரனை ஸகலதேவ ஸைந்யங்களுடன் சங்கநாதத்தினாலே பங்கப்படுத்தி, பின்பு பாரிஜாத மரத்தை த்வாரகைக்குக் கொண்டுவந்து ஸத்யபாமை வீட்டுப் புழைக்கடைத் தோட்டத்தில் நாட்டியருளினன்.

## 68. பந்தவிலோசனத்து வேண்டடிசிலுண்டது

(நாச்சியார் திருமொழியில் 12–6 பாட்டில் அநுஸந்தித்த கதை)

ஒருநாள் கண்ணபிரானும் பலராமனும் பசுக்களுடனும் இடையர்களுடனும் யமுனை யாற்றின் கரையிலே சென்று நெடும்போது பசுக்களை மேய்த்துக் களைத்து ஆற்றங்கரையில் ஓரிடத்திலே உட்கார்ந்தவளவில், இடைப்பிள்ளைகளெல்லாரும் ஸ்ரீக்ருஷ்ண பலராமர்களை நோக்கித் தங்களுடைய பசியின் கொடுமையைக்கூறி 'இப்போதே நீங்கள் இப்பசியைப்போக்கியருளவேணும்' என்று மிக்க ஆர்த்தியுடன் பிரார்த்திக்க, அவர்களுடைய பரிதாபத்தை யறிந்த கண்ணபிரான், 'ஓ பிள்ளைகளே! ஸமீபத்தில் சில மஹரிஷிகள் ஆங்கிரஸ மென்னும் வேள்வியை அநுஷ்டித்துக்கொண்டிருக்கிறார்கள், நீங்கள் அவர்களிடம்போய் என்பெயரையும் என்தமையனார் பெயரையும் சொல்லி, இன்னாரால் நாங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றோமென்று கூறி அன்னம்விரும்புங்கள், பசிதீரும்' என்று கட்டளையிட்டனுப்பினான். அவர்களும் அங்ஙனமே அவ்விடஞ் சென்று விநயத்துடன் இவ்வண்ணம் விண்ணப்பஞ்செய்து அடிசில் வேண்ட, அவ்வந்தணர்கள் இவ்வாயர்களின் பேச்சைச் செவிகொடுத்துங் கேளாதொழியவே ஆய்ப்பிள்ளைகள் க்ருஷ்ண பலராமர்களிடம் மீண்டுவந்து செய்தியைச் சொல்ல, அதுகேட்ட கண்ணபிரான் புன்முறுவல்செய்து, 'பிள்ளைகாள்! அந்த மஹரிஷிகளுடைய தர்மபத்தினிகள் இருக்கிறார்களே, அவர்களிடஞ் சென்று நானும் பலராமனும் இங்கே இருப்பதாகச் சொல்லி ப்ரஸாதம் கேளுங்கள், அப்பெண்டிர் தவறாது தந்திடுவர்கள்' என்று சொல்லி அவர்களை ரிஷிபத்னிகளிடமனுப்ப, உடனே அவர்கள் அவ்விடஞ்சென்று அந்த ரிஷிபத்னிகளை நமஸ்கரித்து 'அம்மனைமீர்! இதோ ஸமீபத்தில் கண்ணபிரானும் நம்பி மூத்தபிரானும் பசுக்களை மேய்த்துக் களைத்திருக்கின்றனர், அவர்களோடு அநுசரர்களாக வந்த அஸ்மதாதிகளும் களைத்திருக்கின்றோம், எல்லாரும் பசிதீர்ந்து மகிழும்படி ப்ரஸாதம் தரவேணும்' எனவேண்ட, அப்பெண்டிர்கள் ஸ்ரீக்ருஷ்ண நாமச்ரவண மாத்திரத்திலே பரமாநந்தமடைந்து உடம்பு மயிர்க்கூச்செறிந்து உடனே பக்ஷ்யம், போஜ்யம், லேஹ்யம் சோஷ்யம்—என நான்குவகைப்பட்ட அன்னவர்க்கங்களையும் நல்ல நல்ல பாத்திரங்களிலெடுத்துக் கொண்டு ஸ்ரீக்ருஷ்ண பலராமர்களிருக்கு மிடத்தை நோக்கிப் புறப்படுகையில், தந்தையர் தாய்மார் மக்கள் உடன்பிறந்தார் பர்த்தாக்கள் முதலானோர் எவ்வளவு தடுத்தும் அவர்களுடைய தடைக்கு உடன் படாதாராய் நிலைநின்ற பக்திநிஷ்டையையுடையவர்களாய் விரைந்து வந்து யமுனையாற்றங்கரைச்சோலையிலே நம்பிமூத்தபிரானையும், கண்ணபிரானையும்

ஸேவித்து, கொணர்ந்த அன்னவர்க்கங்களை ஸமர்ப்பித்துவிட்டுப் பரமாநந்த பூரிதர்களாய் மீண்டுசென்றனர். அவ்வடிசிலைக் கண்ணபிரான் அவ்வாயர் பிள்ளைகளுக்குத் தந்துதானும் அமுதுசெய்தான். அவ்வடிசில் நாடோறும் குறிப்பிட்ட காலத்தில் வரும்.

## 69 வாணனாயிரந் தோள் துணித்ததும், வாணனுக்கு அருள்புரிந்ததும்

பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்த பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள், ஒருநாள் ஒரு புருஷனோடு தான் கூடியிருந்ததாகக் கனாக்கண்டு, முன் பார்வதி அருளியிருந்தபடி அவனிடத்தில் மிகுந்த ஆசைபற்றியவளாய், தன் உயிர்த்தோழியான சித்திரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து, அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு 'அவனைப் பெறுவதற்கு உபாயஞ் செய்யவேண்டும்' என்று அத்தோழியை வேண்ட, அவள் தன் யோகவித்தை மஹிமையினால், துவாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டு வந்து அந்தப்புரத்திலே விட, உஷை அவனோடு போகங்களை அநுபவித்துவர, இச்செய்தியைக் காவலாளராலறிந்த அந்தப் பாணன் தன் சேனையுடன் அநிருத்தனையெதிர்த்து மாயையினாலே பொருது நாகாஸ்திரத்தினாற் கட்டிப்போட்டிருக்க, துவாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்தபோது, நாரத முனிவனால் நடந்த வரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீக்ருஷ்ணபகவான், பெரிய திருவடியை நினைத்தருளி, உடனே வந்து நின்ற அக்கருடாழ்வானது தோள்மேலேறிக்கொண்டு பலராமன் முதலானவரோடுகூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளும்போதே, அப்பட்டணத்தின் சமீபத்திற் காவல் காத்துக்கொண்டிருந்த சிவபிரான் பிரமத கணங்கள் எதிர்த்துவர, அவர்களையெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும்பொருட்டுத் தன்னோடு யுத்தஞ்செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தை உண்டாக்கி, அதன் சக்தியினாலே அதனைத் துரத்திவிட்ட பின்பு சிவபிரானது அநுசரராகையாற் பாணாஸுரனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்த அக்நிதேவர் ஐவரும் தன்னோடு எதிர்த்துவர, அவர்களையும் நாசஞ்செய்து, பாணாஸுரனோடு போர்செய்யத் தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரஹ்மண்யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்திரத்தைப் ப்ரயோகித்துச் சிவனை ஒன்றுஞ்செய்யாமற் கொட்டாவி விட்டுக்கொண்டு சோர்வடைந்து போம்படி செய்து, ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் உங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர் அநேகமாயிரஞ் சூரியர்க்குச் சமானமான தனது சக்ராயுதத்தையெடுத்துப் ப்ரயோகித்து, அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாக விருக்கையில், பரமசிவன் அருகில் வந்து வணங்கிப் பலவாறு ப்ரார்த்தித்ததனால் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளி, பின்பு அவன் தன்னைத் தொழுது அநிருத்தனுக்கு உஷையைச் சிறப்பாக மணம்புரிவிக்க, அதன்பின் மீண்டுவந்தனன்.

## 70 பௌண்ட்ரகவாஸுதேவனைப் பரிசழித்தது.

க்ருஷ்ணாவதார காலத்தில் பௌண்ட்ரகவாஸுதேவன் என்பானொரு அரசன் பிறந்திருந்தான்; பலமூடர்கள் திரண்டு 'நீ தான் வாஸுதேவன்' என்று அவனைப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள். அதனால் அவனும் 'நானே வாஸுதேவன்' என்று மயங்கி மார்பு பெருத்துச் சங்கு சக்கரம் கிரீடம் முதலியவற்றைச் செய்வித்துத் தானணிந்துகொண்டு, தூதனையழைத்து "நீ கிருஷ்ணனிடம்போய் என் பெயரைச்சொல்லி 'இன்னான் வாஸுதேவ

னாயிருக்க, நீ அவனுடைய சங்கு சக்கரங்களைத் தரிக்கக்கூடாது! இன்று முதல் விட்டுவிடவேண்டியது; இல்லையாகில் அவனோடு யுத்தஞ்செய்து அவனை வென்றாயாகில் தரிக்கலாம்' என்று சொல்லவேண்டியது" என்று சொல்லியனுப்ப, அங்ஙனமே அந்தத்தூதன் வந்து கிருஷ்ணனிடம் அச்செய்தியைச் சொல்ல, கண்ணபிரான் சினமுற்றுப் பெரிய திருவடியின் மீதேறிச் சென்று போர்செய்து அப்பௌண்ட்ரகனைத் தனது திருவாழியினால் தலையறுத்துக் கொன்றொழித்தனன்.

## 71 காசி நகரத்தைக் கொளுத்தியது.

பிறகு பௌண்ட்ரகன் இறந்துபோனதை அவனுடைய தோழனாகிய காசி மன்னன் கேள்விப்பட்டு க்ருஷ்ணனையும் மற்றும் யாதவர்களையும் த்வாரகையையும் அழித்திடுவதாகச் சங்கற்பித்து ஒரு பிசாசத்தை ஸ்ருஷ்டித்து ஏவவிட்டான்; அப்பிசாசம் த்வாரகைக்கு வந்து ஜநங்களைப் பாதிக்கத்தொடங்கிற்று. இச்செய்தியைச் செவியுற்ற கண்ணபிரான் தனது திருவாழியை ப்ரயோகிக்க, அந்தச் சக்கரம் அந்தப் பிசாசத்தைத் துரத்திக்கொண்டு காசியளவும் போய் அப்பிசாசத்தையும் அத்துடன் சேர்ந்து வந்த கணங்களையும் அந்தக் காசி பட்டணத்தையும் நீறாக்கிவிட்டு ஸ்ரீக்ருஷ்ணபகவானருகில் வந்து சேர்ந்தது.

## 72 சிசுபாலனைச் சிரமறுத்தது.

சிசுபாலன், பிறந்தபொழுது, நான்கு கைகளையும் மூன்று கண்களையுமுடையனாயிருந்தான்; அப்பொழுது அனைவரும் இது என்னவென்று வியக்கும்போது ஆகாயவாணி 'யார் இவனைத் தொடுகையில் இவனது கைகளிரண்டும் மூன்றாம் விழியும் மறையுமோ, அவனால் இவனுக்கு மரணம்' என்று கூறிற்று; அவ்வாறே பலரும் தொடுகையில் மறைபடாத கைகளும் கண்ணும், கண்ணபிரான் தொட்டவளவிலே மறைபட்டன; அதனால் 'இவனைக் கொல்பவன் கண்ணனே' என்றறிந்த இவன்தாய் 'யாது செய்யினும் என் மகனைக் கொல்லலாகாது' என்று கண்ணனைவேண்ட; அந்த அத்தையின் நன்மொழிக்கு ஒரு சார் இணங்கிய கண்ணன் 'இவன் எனக்கு நூறுபிழை செய்யுமளவும் இவன் பிழையைப் பொறுப்பேன்' என்று கூறியருளினன். பின்பு, சிசுபாலன், தனக்குக் கண்ணன் சத்துருவென்பதை இளமையிலேயே யறிந்து அதனாலும் பூர்வஜந்ம வாஸனையாலும் வளர்ந்த மிக்க பகைமையைப் பாராட்டி, எப்பொழுதும் அப்பெருமானுடைய திவ்ய குணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் நிந்திப்பதே தொழிலாக இருந்தான். இவனுக்கு மணஞ்செய்து கொடுப்பதென்று நிச்சயித்திருந்த ருக்மிணியைக் கண்ணன் வலியக் கவர்ந்துமணஞ்செய்துகொண்டது முதல் இவன் கண்ணனிடத்து மிக்க வைரங்கொண்டனன். பின்பு இந்த்ரப்ரஸ்த நகரத்தில் நடந்த ராஜஸூய யாகத்தில் தர்மபுத்திரனால் கண்ணபிரானுக்கு அக்ரபூஜை செய்யப்பட்டதைக் கண்டு அளவிறந்த வசைச்சொற்களைப் பிதற்றி அதுபற்றிக் கண்ணபிரானது சக்ராயுதத்தால் தலை துணிக்கப்பட்டு இறந்து தேஜோமயமான திவ்ய சரீரம் பெற்று எம்பெருமானது திருவடியை அடைந்தனன்.

## 73 காண்டவ வனத்தைத் தீமூட்டிவிட்டது.

ஒரு நாள் அக்நிபகவான் ஒரு அந்தணவேடம் பூண்டு, அர்ஜுநனும் கண்ணபிரானும் கூடியிருக்குமிடத்திலே வந்துசேர, அவ்வந்தணனைக் கிருஷ்ணார்ஜுநர்கள் நன்கு உபசரிக்க, அவன் உணவுவேண்ட, 'வேண்டிய உணவை அளிப்போம்' என்று அவ்விருவரும் உறுதிமொழி கூற, உடனே அவ்வந்தணன் தான் இன்னானென்று உண்மை தெரிவித்துக் காண்

டவவனத்தைத் தனக்கு இரையாக அளிக்குமாறு வேண்ட அவர்களும் பல கொடிய அசுரர்களும் அரக்கர்களும் துஷ்டமிருகங்களும் நிரம்பியிருக்குமிந்தக் காடு அழிந்தொழிவது நன்றே' என்று நிச்சயித்து அக்நிபகவானை நோக்கி 'அங்ஙனமே உண்பாயாக' என்று அநுமதிதந்ததின்பேரில் அக்நி அக்காடு முழுவதையும் ஆக்கிரமித்துப் பூர்ண திருப்தியாக உண்டனன் [என்ற கதை மஹா பாரதத்தில் ஆதிபருவத்தில் விரித்துரைக்கப் பட்டுள்ளது.] *மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தவனை கண்ணபிரான் தனது அன்பனை இந்திரன் வருந்தும்படி அவனது காட்டை யழிக்குமாறு அநுமதித்தது அவதார ப்ரயோஜனம் நிறைவேறுதற்காகவேயாம; அக்காட்டிலுள்ள அளவற்ற துஷ்ட ஜந்துஸமூஹங்கள் தொலைந்தொழியும் முகத்தால் பூமியின் பாரத்தைக் குறைத்தருளினனென்றுணர்க. இவ்வனத்தின் தன்மையைப்பற்றி வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தில் காண்டவவனதகனச் சருக்கத்தில்—"மிடைந்த நால்வகை மகிருகங்களூ நெடு வெற்பினங்களுந் துன்றி, அடைந்த தானவரரக்கர் பேருரகருக்காலயங்களுமாகிக், குடைந்துசோரி கொள் வாளுகிரரி முதற்கொடு விலங்கினமிக்குக், கடைந்த கூரெயிற்றுல் தக்ககனும் வாழ் கானனமது கண்டீர்" என்ற செய்யுள் இங்குக் குறிக்கொள்ளத்தக்கது.

## 74 பாண்டவர்க்குத் தூது சென்றது:

பாண்டவர்களையும் கௌரவர்களையும் எவ்வகையினாலும் ஒருங்கவிட்டு வாழ்வித்தற் பொருட்டுக் கண்ணபிரான் துரியோதனனிடம் தூது சென்றது உலகப் பிரசித்தம்.

## 75 துரியோதனன் பொய்யாஸனமிட்டபோது கண்ணபிரான் விச்வரூபமெடுத்து மல்லரை முடித்தது

(பெரியதிருமொழி 9—1—8 பாட்டில் அநுஸந்தித்த கதை.)

கண்ணபிரான் பாண்டவர்கட்குத் தூதனாய்த் தன்னிடம் வரப்போகிறானென்பதை யறிந்த துரியோதனன் எவ்வகையினாலேனும் க்ருஷ்ணனை முடித்துவிடுவதே கருமமென்று துணிந்து ரஹஸ்யமாகத் தனது ஸபாமண்டபத்தில் மிகப்பெரிய நிலவறை யொன்றைத் தோண்டுவித்து அதில் அனேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் உள்ளே யிருக்கவைத்து அப்படுகுழியைப் பிறர் அறியவொண்ணாதபடி மூங்கிற் பிளப்புகளால் மேலே மூடி அதன் மேற் சிறந்த ரத்நாஸந மொன்றை யமைத்து அவ்வாஸநத்தின்மீது கண்ணபிரானை வீற்றிருக்கச்சொல்ல, கண்ணன் அங்ஙனமே அதன்மேலேறின மாத்திரத்திலே மூங்கிற் பிளப்புக்கள் முறிபட்டு ஆஸனம் உள்ளிறங்கிப் பிலவறையிற் செல்லுமளவில் மல்லர்கள் எதிர்த்துவர, பெருமாள் மிகப்பெரிதாக விச்வரூபமெடுத்துப் பல கைகளையுங் கால்களையுங் கொண்டு எதிர்த்து அந்த மல்லர்களை மடிவித்தான்.

## 76 பார்த்தன் தேரில் பாகனாய் நின்றது.

கண்ணபிரான், பாண்டவர் துரியோதனாதியர் என்ற இருவகுப்பினரையும் ஸந்தி செய்விக்கைக்காகத் துரியோதனாதியரிடம் தூதாகச் சென்று 'பாண்டவர்களும் நீங்களும் பகைமைகொள்ளவேண்டாம்; ராஜ்யத்தில் இருவகுப்பினர்க்கும் பாகமுண்டு; ஆதலால் ஸமபாகமாகப் பிரித்துக்கொண்டு சமாதானமாக அரசாட்சி செய்து வாழுங்கள்' என்று பலவாறாக அருளிச்செய்ய, அவர்கள் அந்த நல்லவார்த்தைகட்குச் சிறிதும் உடன்படாமல் 'பராக்ரமமிருந்தால் போர்செய்து ஜயித்துக்கொள்ளட்டும்; இந்தப் பூமி வீரர்க்கே உரியது' என்று மிக்க செருக்குக்கொண்டு சொல்லவே, தான் பாண்டவபக்ஷபாதியாயிருந்து அவர்கட்கே வெற்றி யுண்டாக்கும் பொருட்டுப் பார்த்தன் தேரில் பாகனாய் நின்றனன்,

## 77 அர்ஜுநனது தேர்க்குதிரைகளின் விடாயை மோழையெழுவித்துத் தீர்த்தது

(பெரியாழ்வார் திருமொழி 4—2—7 பாட்டில் அநுஸந்தித்த கதை.)

அர்ஜுனனுடைய தேர்க்குதிரைகள் தண்ணீர்க்கு விடாய்த்து இளைத்தவளவில் அவன்பக்கல் பக்ஷபாதியான கண்ணபிரான், கடினமான ஸ்தலத்திலும் நீர் நரம்பு அறிய வல்லவனாதலால், அங்கு வாருணாஸ்திரத்தைப் பிரயோகித்துக் கீழுள்ள நீரை வெளிக்கிளப்பிக் குதிரைகளைவிட்டு நீரூட்டிப்புரட்டி யெழுப்பிக் கொண்டுபோந்து பூட்டிக்கொண்டுவந்து முன்னே நிறுத்த, இதைக்கண்ட மாற்றரசரெல்லாம் 'அர்ஜுநன் பக்கல் இக்கண்ணனுக்குப் பக்ஷபாதமிருந்தபடி யென்!, இனி நாம் இவனை வெல்லுகையென்று ஒன்றுண்டோ?' என்று குடல் மறுகினர்.

## 78 ஆழியால் இரவியை மறைத்தது. (ஜயத்ரதனை மடித்தது)

மஹாபாரத யுத்தத்திற் பதின்மூன்றாநாளிலே அர்ஜுன புத்திரனான அபிமன்யுவைத் துரியோதனனது உடன்பிறந்தவள் கணவனான ஸைந்தவன் கொன்றுவிட, அங்ஙனம் தன் மகனைக்கொன்ற அந்த ஜயத்ரதனை மற்றைநாள் ஸூர்யாஸ்தமனத்திற்குள் தான் கொல்லாவிடின் தீக்குதித்து உயிர்விடுவதாக அர்ஜுநன் சபதஞ்செய்ய, அதனையறிந்த பகைவர்கள் பதினான்காநாட் பகல் முழுவதும் ஜயத்ரதனை வெளிப்படுத்தாமல் ஸேனையின் நடுவே நிலவறையில் மறைத்து வைத்திருக்க, அர்ஜுநனது சபதம் பொய்த்துவிடுமே யென்று சிந்தித்த கண்ணபிரான் ஸூர்யனை அஸ்தமிப்பதற்குச் சில நாழிகைக்கு முன்னமே தன் சக்ராயுதத்தால் மறைத்துவிட, அப்பொழுது எங்கும் இருள் அடர்ந்ததனால் அர்ஜுநன் அக்நிபிரவேசஞ் செய்யத் தொடங்க, அதனைக் களிப்போடு காணுதற்குத் துரியோதனாதியருடனே ஜயத்ரதன் வந்து எதிர்நிற்க, அச்சமயத்திற் கண்ணன் திருவாழியை வாங்கிவிடவே, பகலாயிருந்ததனால் உடனே அர்ஜுநன் ஜயத்ரதனைத் தலைதுணித்தான்.

## 79 அபிமந்யுவின் மகனை உயிர்மீட்டருளியது

பண்டு பாரதப்போரில், அர்ஜுநன் மகனான அபிமந்யுவின் மனைவியாகிய உத்தரை என்பவளுடைய கருவை நோக்கி அசுவத்தாமாவினால் பிரயோகிக்கப்பட்ட அபாண்டவாஸ்திரத்தினால் அக்கருவிலிருந்த சிசு [பரிக்ஷித்] நீறாயொழிய, அச்சிசுவை மீண்டும் உயிர் பெறுத்த வேணுமென்று ஸுபத்திரையினால் பிரார்த்திக்கப்பட்ட கண்ணபிரான் தனது செந்தாமரை மலர்போன்ற திருவடியினால் அச்சிசுவை அடிதொடங்கி முடியீறாக ஸ்பர்சித்தருள, உத்தரக்ஷணத்திலேயே அச்சிசு உயிர்பெற்றது. பிறகு ப்ராப்தகாலத்தில் ஜனித்தது.

## 80 வைதிகன் பிள்ளைகளை மீட்டுக் கொடுத்தது

ஒரு பிராமணனுக்கு முறையே பிறந்த மூன்றுபிள்ளைகள், பிறந்த அப்பொழுதே பெற்றவளுமுட்பட முகத்தில் விழிக்கப்பெறாதபடி இன்னவிடத்திலே போயிற்றென்று தெரியாமல் காணவொண்ணாது போய்விடுகையாலே நான்காம் பிள்ளையை ஸ்த்ரீ ப்ரஸவிக்கப் போகிறவளவிலே அந்த அந்தணன் கண்ணபிரானிடம் வந்து 'இந்த ஒருபிள்ளையையாயினும் தேவரீர் பாதுகாத்துத் தந்தருள வேண்டும்' என்று பிரார்த்திக்க, கிருஷ்ணன் 'அப்படியே செய்கிறேன்' என்று அநுமதிசெய்த பின்பு, ஒருயாகத்திலே தீக்ஷிதனாயுள்ள கண்ணபிரான் எழுந்தருளக் கூடாதென்பதுபற்றி அர்ஜுனன் "நானேபோய் ரக்ஷிக்கிறேன்" என்று ப்ரதிஜ்ஞைபண்ணி, ப்ராஹ்மணனையுங் கூட்டிக்கொண்டுபோய், ப்ரஸவிக்கிற க்ரு

றத்தைச் சுற்றும் காற்றுமுட்படப் பிரவேசிக்கவொண்ணாதபடி சரக்கூடங்கட்டிக் காத்துக்கொண்டு நிற்கையில் பிறந்த பிள்ளையும் வழக்கப்படியே பிறந்தவளவிற் காணவொண்ணாது போய்விடவே, ப்ராஹ்மணன் வந்து அர்ஜுநனை மறித்து 'க்ஷத்ரியாதமா! உன்னாலேயன்றோ என் பிள்ளை போம்படியாயிற்று; க்ருஷ்ணன் எழுந்தருளிக்காப்பதை நீயன்றோ தடுத்தாய்!' என்று நிந்தித்துக் கிருஷ்ணன் பக்கலிலே இழுத்துக்கொண்டுவர, கண்ணபிரான் கண்டு புன்சிரிப்புக்கொண்டு 'அவனைவிடு; உனக்குப் பிள்ளையை நான் கொண்டு வந்து தருகிறேன்' என்றருளிச் செய்து, ப்ராஹ்மணனையும் அர்ஜுநனையும் தன்னுடன் கொண்டு தேரிலேறி, அர்ஜுநனைத் தேர்செலுத்தச்சொல்லி, அத்தேர்க்கும் அவர்கட்கும் திவ்யசக்தியைத் தனது ஸங்கல்பத்தால் கற்பித்து', இவ் வண்டத்துக்கு வெளியே நெடுந்தூரமளவுங் கொண்டுபோய், அங்கு ஓரிடத்தில் தேருடனே இவர்களை நிறுத்தி, தேஜோரூபமான பரமபதத்திலே தன் நிலமாகையாலே தானேபோய்ப் புக்கு, அங்கு நாச்சிமார் தங்கள் ஸ்வாதந்திரியங் காட்டுகைக்காகவும் கண்ணபிரானது திவ்ய ஸௌந்தர்யத்தைக் கண்டு களிக்கைக்காகவும் அழைப்பித்து வைத்த அந்தப் பிள்ளைகள் நால்வரையும் அங்கு நின்றும் பூர்வரூபத்தில் ஒன்றுங்குலையாமற் கொண்டு வந்து கொடுத்தருளினன்.

## 81 அர்ஜுநன் கண்ணபிரானது சேவடிமேல் அர்ச்சித்த புஷ்பங்களைச் சிவபிரானது முடிமேற் கண்டது

பாரதயுத்தம் நிகழுங்காலத்தில் அர்ஜுநனுக்குப் பாசுபத அஸ்திரம் வேண்டியிருந்தது; அது பசுபதியாகிய சிவபெருமானது அஸ்திரமாதலால் அப்பெருமானை ஆராதித்துப் பெறவேண்டியதாயிருந்தது. அதற்காக அர்ஜுனன் புறப்படப்புகுமளவிலே கண்ணபிரான் தனது முழுந்தாளைக் காட்டி 'அர்ஜுந! நீ சிவபிரானுக்குச் செய்ய நினைத்திருக்கும் பூசனையை இங்கே செய்வாயாக' என்று நியமிக்க, அர்ஜுநனும் அங்ஙனமே செய்திட, அன்றிரவு சிவபெருமான் அந்த ஆராதனையைத் தனது முடிமேல் தாங்கிக் கொண்டுவந்து அர்ஜுநனுக்குக் காட்சிதந்து பாசுபதாஸ்திரத்தை அளித்துச் சென்றனன். (இதனால் சிவபிரான் எம்பெருமானது அவயவ ஏகதேசமென்பது விளங்கிற்றும்.) (இக்கதை திருவாய்மொழி 2—8—6ல் நம்மாழ்வார் அநுஸந்தித்தது.)

## 82 ரைவதகிரியில் கண்ணபிரானை நாரத முனிவர் புகழ்ந்தது

துரியோதநாதியருடைய யாகத்தில் வந்த அரசர்களனைவரும் ஸ்ரீத்வாரகையின் மஹிமையையும், அங்கு ஸ்ரீக்ருஷ்ணன் எழுந்தருளியிருக்கிற மதிப்பையுமெல்லாம் துரியோதநாதிகளின் முகமாகக் கேட்டுத் தாங்கள் கண்ணபிரானோடு உறவு பண்ணிக்கொள்ள விரும்பி, அத்துரியோதநாதியருடனும் பாண்டவர்களுடனும் ஸபரிவாரராய்ப் புறப்பட்டு ரைவதகபர்வதத்திற்குப் போந்து, தாங்கள் க்ருஷ்ணஸேவார்த்தமாக வந்திருக்கிறபடியைக் கண்ணபிரானுக்குத் தெரிவிக்க, அதையறிந்த கண்ணனும், 'இவர்கள் பரிவாரங்களுடன் திரண்டுவருகைக்குக் காரணம்யாதோ' என்று சிந்தித்து, ஸ்ரீபலராமனையும் ஸாத்யகியையும் முன்னிட்டுக்கொண்டு ஸேனைகளுடனும் ஆயுதங்களுடனும் அவர்களிருப்பிடத்திற் கெழுந்தருளி எல்லாரையும் குசலங்கேட்டு, அவரவர்களுடைய வயஸ்ஸுக்கும் வலிவுக்கும் அறிவுக்கும் பெருமைக்கும் தக்கவாறு ஆஸநமிடுவித்துத் தானும் தனக்கேற்றதொரு சிரியசிங்காசனத்தில் எழுந்தருளியிராநிற்கச்செய்தே ஸ்ரீ நாரத மஹரிஷிவந்து வணங்கி ஸ்ரீக்ருஷ்ண பகவானை நோக்கி "ஸர்வதேவர்களிற் காட்டிலும் நீர் ஆச்சரியகரும் தந்ய [தந்யன்—க்ருதார்த்தன்.] ருமாகாநின்றீர்; இங்ஙனிருப்பார் இவ்வுலகில் வேறு யாருமில்லை" என்று விண்ணப்பஞ்செய்ய, கண்ணபிரான் அதைக்கேட்டுப் புன்முறுவல்செய்து, "முனிவனே! தக்ஷிணா

களோடுகூட நான் ஆச்சரியனாகவும் தன்யனாகவும் சொல்லப்பட்டவன்" என்றருளிச்செய்ய அதனைக்கேட்ட முனிவன் மிகவும் மனமகிழ்ந்து, 'பிரானே! தேவரீர் அருளிச்செய்த வாக்கியத்தினால் அடியேன் மிகவும் மகிழ்வுற்றேன்; இனி வந்தவழியே விடைகொள்ளுகிறேன்" என்று விண்ணப்பஞ்செய்து போக நினைத்தவளவில், அங்குள்ள அரசர்கள் இப்படி ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் நாரதமுனிவற்கும் நடந்த ஸம்வாதத்தின் உட்பொருளைத் தாங்கள் அறியாமையாலே ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருமுகமண்டலத்தைநோக்கி "நாரதமுனிவன் தேவரைக் குறித்துச் சொன்னவாக்கியமும், அதற்கு உத்தரமாகத் தேவர் அருளிச்செய்த வாக்கியமுமாகிற இந்த மஹாரஹஸ்யம் எங்களுக்கு இன்னதென்று விளங்கவில்லை; இதனை விரித்துரைக்கவேணும்" என்று பிரார்த்திக்க, கண்ணபிரானும் அம்முனிவன்றன்னையே கூறுமாறு நியமித்தருள, அம்முனிவன் அவ்வரசர்களை நோக்கி இவ்வண்ணம் கூறத் தொடங்கினான்;—

நான் ஒருகால் கங்கைக்கரையிலே த்ரிஷவண ஸ்நாநாதிகளைப் பண்ணி வர்த்தியாநிற்கச்செய்தே, ஒருநாள் இரவு கழிந்து சூரியனுதித்தவளவில், கூப்பீடுவழியளவு அகலமும் அதில் இரட்டிநீளமுமாய் நீரினுள்ளே நனைந்து உடம்புமுழுவதும் பாசி பற்றிக் கண்ணுக்கு இனிதாயிருப்பதொரு ஆமையைக் கண்டு "இப்படி நீரினுள்ளே ஒன்றையும் சிந்தியாமல் சங்கையற்றுத் திரியா நின்ற நீ அற்புதமான சரீரத்தையுடையனாகா நின்றாய், தந்யனாகா நின்றாய் என்று யான் அறுதியிட்டிருக்கின்றேன்" என்று நான் சொல்ல; அதனைக்கேட்ட அந்த ஆமை என்னைப்பார்த்து, ஒரு மநுஷ்யன் சொல்லுவதுபோல, "வாரீர் முனிவரே! என்னிடத்தில் ஆச்சரியமேது? நான் எங்ஙனே தந்யனாகாநின்றேன்? என்னைப்போன்ற பதினாயிரம் ஸத்வங்கள் ஸஞ்சரிக்கப்பெற்ற கங்காநதியன்றோ அங்ஙனாவது" என்றுசொல்ல; பிறகு நான் அக்கங்கையைக் குறித்து அங்ஙனே சொல்ல; அதுகேட்ட அக்கங்கையானது ஒரு வடிவுகொண்டு நின்று ஆமையைப் போலவே சொல்லி, "என்னைப்போற் பல்லாயிரம் நதிகள் சென்று சேர்தற்கிடமான கடலன்றோ ஆச்சரியமும் தந்யமுமாவது" என்று சொல்ல; பிறகுநான் அக்கடலைநோக்கி அங்ஙனே சொல்ல; அக்கடல் என்னைப்பார்த்து, "நீர் சொன்னவையிரண்டும் எனக்கில்லை; யாதொரு பூமியின்மேல் நான் வாஸம்பண்ணாநிற்கிறேனோ அப்பூமிக்கன்றோ அவையிரண்டு முளது" என்ன; பிறகு நான் பூமியை நோக்கிப் புகழ்ந்துகொண்டு "ஆச்சரிய பூதையாகா நின்றாய், தந்யையாகாநின்றாய்" என்று சொல்ல; அதுகேட்ட பூமி "யான் அங்ஙனுள்ளவளல்லள், எனக்கு ஆதாரமாயிருக்கின்ற பர்வதங்களன்றோ அப்படிப்பட்டவை" என்ன; பிறகுநான் அப்பர்வதங்களைக்கிட்டி அங்ஙனே சொல்ல; அவை என்னைப்பார்த்து "அப்படிப்பட்டவை நாம் அல்லோம், பிரஜாபதியான பிரமனன்றோ இவையிரண்டையுமுடையான்" என்ன; பிறகு நான் பிரமனைச் சென்று கிட்டி அடைவுபட அநுவர்த்தித்துப் புகழ்ந்துகொண்டு "பிரமதேவனே! ஆச்சரியனாகாநின்றாய், தன்யனாகா நின்றாய், உன்னையொப்பவர் ஆருமில்லை" என்ன; அதைக்கேட்ட பிரமன் என்னைப்பார்த்து "இங்ஙனே என்னைப் புகழ்வதென்? ருக், யஜுஸ் ஸாமம், அதர்வணம் என்னும் பெயருடையனவும் தத்துவங்களை உணர்த்துவனவும், உலகங்களையும் என்னையும் தரியாநின்றனவுமான வேதங்களன்றோ அப்படிப்பட்டவை" என்ன; பிறகு நான் வேதங்களைக்கிட்டி "நீங்களன்றோ ஆச்சரிய பூதரும், தன்யரும்" என்ன; அந்தவேதங்கள் என்னைப்பார்த்து "நாங்கள் யஜ்ஞார்த்தமாகப் படைக்கப்பட்டவர்களாதலால், எமக்குப் பராயணங்களான [பராயணம்—சிறந்தகதி·] அந்த யஜ்ஞங்களன்றோ அப்படிப்பட்டவை" என்ன; பின்பு நான் அந்த யஜ்ஞங்களைப் பார்த்துப் புகழ்ந்து "உலகத்தில் உங்களிற்காட்டில் ஆச்சரியங்களுமில்லை, தந்யங்களுமில்லை" என்ன; அந்த யஜ்ஞங்கள் என்னைப்பார்த்து "ஆச்சரியசப்தமும், தந்யசப்தமும் எங்கள் பக்கலில் இல்லை; விஷ்ணுவிடத்தில் அவை உள்ளன; அவ்விஷ்ணுவே எங்களுக்குச் சிறந்த கதி; தீயில் ஹோமம் பண்ணப்பட்டு எம்மால் ஸ்வீகரிக்கப்படும் நெய்யை அவ்விஷ்ணுதானே கொடுக்கிறார்" என்ன; அதனைக்கேட்டயான் பூமியில் வந்து உங்கள் திரளின்

நடுவே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கிருஷ்ணபகவானைக் கண்டு ஸேவித்து "நீர் ஆச்சரியருமாகாநின்றீர், தந்யருமாகாநின்றீர்" என்று நான் விண்ணப்பஞ்செய்ததற்கு உத்தரமாக- "தக்ஷிணைகளோடேகூட நான் ஆச்சர்யனாகவும் தந்யனாகவுஞ் சொல்லப்பட்டவன்" என்று கண்ணபிரானருளிச் செய்த வார்த்தை என்னை மகிழ்வித்தது.

எங்ஙனே யென்னில்;—எல்லா யஜ்ஞங்களுக்கும் தக்ஷிணையோடே கூடியிருந்துள்ள ஸர்வேச்வரன் கதியாகையாலே, "தக்ஷிணையோடுகூட நான் ஆச்சரியனாகாநின்றேன், தந்யனாகாநின்றேன்" என்று கண்ணபிரான் அருளிச்செய்த இவ்வாக்யத்தினால் என்னுடைய ப்ரச்நம் நிறைவேறிற்று என்றுசொல்லி. முதலில் ஆமையினிடத்துச் சொல்லப்பட்டு, அநந்தரம் பரம்பரையாக இவ்வளவும் வந்த "ஆச்சரியனாகாநின்றாய், தந்யனாகாநின்றாய்" என்ற வாக்கியம் தக்ஷிணையோடு கூடின இக்கண்ணபிரானைக் குறித்து என்னால் ப்ரதிபாதிக்கப்பட்டது; இந்த ரஹஸ்யார்த்தத்தை உங்கட்கு நான் சொல்லித் தலைக்கட்டினேன். இனி நான வந்தவழியேபோகிறேன் என்று, ஸ்ரீ ஹரிவம்ச—விஷ்ணுபர்வத்தில் நூற்றுப்பதினோராவது அத்தியாயத்தில் சொல்லப்பட்ட கதை. பெரியாழ்வார் திருமொழி 4—9—5ல் காண்க.

## 83 மாலிகன் தலையைச் சக்ரத்தாலறுத்தது

[பெரியாழ்வார் திருமொழி 2-7-8 பாட்டில் அநுஸந்தித்த கதை இது]

மாலிகன் என்பானொருவன் கண்ணபிரானுக்கு உயிர்த்தோழனாய் அப்பிரானிடத்திற் பலவகை ஆயுதங்களையும் பயின்று ஒருவர்க்கும் அஞ்சாமல் அஹங்காரியாய் ஸாதுஜநங்களை ஹிம்சித்துக் கொண்டிருக்க, கண்ணபிரான், நண்பனாகிய இவனை நாம் கொல்வது தகாதே! என்ன செய்யலாம்' என்று வியாகுலப்பட்டு ஒரு நாள் அவனை நோக்கி 'நீ இப்படி செய்வது தகாது' என்ன, ஆஸுரப்ரக்ருதியான அந்த மாலிகன் தன் வாயில் வந்தபடி பிதற்றி 'நீ எல்லா ஆயுதங்களையும் எனக்குக் கற்பித்தும் சக்ராயுதப் பயிற்சிமாத்திரம் செய்விக்கவில்லையே' என்று கண்ணன் மேற் குறைகூற 'இதில் பழகுவது உனக்கு முடியாது, எனக்கே அஸாதாரணமானது' என்ன, என்னால் முடியாதது மொன்றுண்டோ? நீ அவச்யம் அதைக் கற்பிக்கவேணும்' என்று அவன் நிர்ப்பந்திக்க, கண்ணன் 'இதுதான் தக்கசமயம்' என்று திருவுள்ளத்திற் கொண்டு சக்ராயுதத்தை யெடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையிலேற்க, 'இது உனக்கு அரிதே' என்று கண்ணன் சொல்லவும் அதை அவன் கேளாமல் அச்சக்ராயுதத்தை வாங்கிச் சுழற்றியெறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன்கைவிரலைக் கழுத்துக்கு அடுத்து வைத்துநிற்க, அச்சக்கரம் சுழன்று வருவதற்கு இடம்போதாமையாலே அதன் விச்சு இவன் கையிற்பிடிபடாமல் இவன் தலையை அரிந்துவிட்டது.

## 84 கற்கியவதாரம்

புருஷோத்தமனாகிய ஸ்ரீமந்நாராயணன் க்ருஷ்ணாவதாரம் செய்தருளி மண்ணின் பாரத்தை நீக்கித் தருமநெறிகளை நிலைநிறுத்தித் தன்னடிச் சோதிக்கெழுந்தருள, உடனே இப்புவியில் கலிபுருஷன் செங்கோல்செலுத்தப் புகுந்து அதர்மம் அவிவேகம் அநாசாரம் முதலியவற்றை யெல்லா ஜனங்களிடத்தில் உண்டுபண்ணிக்கொண்டு வந்து நெடுநாள்வரையில் முற்றிவிட்டான். இங்ஙனம் கலி முற்ற முற்ற ஜனங்கள் அல்பாயுஸ்ஸுக்களாவார்கள்; சரீரத்தில் வளர்த்தியும் வலிவும் குறைந்துவிடப்போகிறது; அழகும் தெளிவும் தேஜஸ்ஸும் அடியோடே அழியப்போகிறது; அல்பபுத்திகளாகவும் ஆசாரஹீனர்களாகவும் கல்வியற்றவர்களாகவும் ஆகப்போகிறார்கள். பல சொல்லியென்? எல்லாம் தலைகீழாகப்போகிறது. பாவிகள் எல்லையில்லாமல் நிறகப்போகிறார்கள். அப்போது நிலமங்கை தாங்கமாட்

டாமல் முன்போலவே எம்பெருமானிடம் சென்று முறையிடவும் அதற்கு அவர் நானே மீண்டும் வந்து அவதரித்துத் துயர்தீர்ப்பேன் என்று அபயமளிக்கவும் நேரப்போகிறது. பிறகு பகவான் வடதிசையின்கணுள்ள சம்பளகிராமத்தில் வாஸம் செய்கிற வைதிகோத்தமனை விஷ்ணுயசஸ் என்பவருடைய மனைவியாகிய ஸுமதியினுடைய கருவிற் புகுந்து பன்னிரண்டாண்டு உறைந்து வைசாகசுக்லத்வாதசியினன்று திருவவதரிக்கப்போகிறார். பிறகு வ்யாஸர் முதலியபெரியோர்கள்சென்று அக்குழந்தைக்கு கல்கியென்று பெயரிடப்போகிறார்கள். பிறகு கல்கிபகவான் வேதமோதுகைக்காகப் பரசுராமனை நாடிச் சிறிது நாள் குருகுலவாஸஞ் செய்து வேதங்களையும் அஸ்த்ரசஸ்த்ரங்களையும் கற்று "தர்மபரிபாலனஞ் செய்வதே குருதக்ஷிணை' என்று அப்பரசுராமனளிப்பதைக் கொண்டாடி அதிலே கண்ணுங்கருத்துமாயிருந்து அவதார காரியத்தை முடிக்கைக்காக ஸங்கல்பம் செய்துகொண்டு, விச்வஜித் அச்வமேதம் முதலிய யாகங்களைச்செய்ய வேண்டுமென்று தந்தையிடம் அநுஜ்ஞைபெற்று அதற்காகத் திக்விஜயஞ் செய்யப் புறப்பட்டு, முந்துறமுன்னம் பௌத்தர்களின் ராஜ்யத்தை நோக்கிச்சென்று அவர்கள்மேல் படையெடுத்து அங்குள்ளாரை யெல்லாம் தொலைத்திட்டு அங்குநின்றும் யவனர்களுடைய ராஜ்யத்திற்குச் சென்று அங்குள்ள மிலேச்ச சேனைகளையும் அரசர்களையும் தான் குதிரைமேலேறிக் கத்தியைக் கையில்பிடித்துத் துண்டுதுண்டாக வெட்டியெறிந்து அத்தேசமெங்கும் ரத்தவெள்ளமும் பிணக்காடுமாக ஆக்கி, அத்தேசங்களில் தன்னை அநுவர்த்தித்துவரும் அரசர்களைப் பட்டாபிஷேகம் செய்வித்துத் தருமமார்க்க பரிபாலனம் செய்விக்கப்போகிறார். பிறகு கலிபுருஷன் மிக்க கோபத்துடனே உருவமெடுத்துக்கொண்டு அதர்மம் அஜ்ஞானம் முதலியவற்றுக்கு அதிஷ்டான தெய்வங்களையுங் கூட்டிக்கொண்டு கோரரூபியாய்ப் படையெடுத்து வந்தெதிர்ப்பான். பின்பு பகவான் குதிரைமீதேறி அதிவிசித்திரமாக அச்சேனைத்திரளில் ஸஞ்சரித்துத் தான் பிடித்த கத்தியினால் அவர்களுடன் யுத்தஞ்செய்து அவர்கள் பிரயோகிக்கும் ஆயுதங்களையும் மாயைகளையும் நிருக்கிச் சேனைகளை ஒன்றொழியாமற் கொன்று கலிபுருஷனைப் பலவகைகளிலும் பங்கப்படுத்தி அவனுடைய பராக்கிரமத்தை யெல்லாம் ஓய்வித்துப் பின்பு அவன் குடுமியைப் பிடித்திழுத்து அவனது கழுத்தின்மேற் கத்தியையெறிந்து வெட்டப்புகுங்காலத்தில் அக்கலிபுருஷன் பகவானைப் பலவகையாக வேண்டிக்கொண்டு பாதங்களிற்பணிந்து தன்னுயிரை மாத்திரம் தப்பவைத்துக்கொண்டு இவ்வுலகைவிட்டு ஓடிப்போய் ஒளித்துக்கொள்வான். அதன்றியும் அவனுடைய தோழர்களாகிய சோகன் விசோகன் என்ற இரண்டு பெயர் கலிபுருஷனோடிப்போனதைக் கேட்டுக் கல்கி பகவான்மீது வெகு கோபங்கொண்டு எதிர்த்து வந்து யுத்தஞ்செய்ய, அவர்களை எத்தனையடி அடித்தாலும் அவர்கள் சாவின்றியே யிருப்பதைக்கண்டு இதற்கென்ன காரணமென்று யோசித்துக்கொண்டிருக்கையில் பிரமதேவன் வந்து 'ஸ்வாமின்! இவர்களிருவரையும் ஒருபொழுதே கொல்லவேணும்; தனித்தனியே இவர்கட்கு மரணமுண்டாகாதபடி நான் வரங்கொடுத்திருக்கிறேன்' என்று சொல்லக்கேட்டுக் கல்கிபகவான் தன்னுடைய வஜ்ராயுதத்தை யெடுத்து ஓங்கி இருவர் தலையிலும் அடிக்க அவர்கள் கீழேவிழுந்து மாண்டுபோவார்கள். இப்படி கல்கிபகவான் உலகத்திலுள்ள துஷ்டர்களையெல்லாம் ஸம்ஹரித்து அதர்மத்தை வேரறுவித்துத் தருமத்தை எங்கும் பரவச்செய்து கிருதயுகத்தைப் பிரவர்த்திப்பித்துத் தன் தாய் தந்தையர்க்கும் முக்தியளித்து, இங்ஙனம் தன்னுடைய 'அவதாரப்ரயோஜனம்' தலைக்கட்டினவாறே பதரிகாச்ரமத்துக் கெழுந்தருளி மற்றவர்களைப்போல் யோகாப்யாஸஞ் செய்து திருவாழி திருச்சங்கு முதலிய ஸகல லக்ஷணங்களோடுங் கூடிய தனது அப்ராக்ருத திவ்ய ஸ்வரூபத்தை ஆவிஷ்கரித்துப் பின்பு, பரமபதத்திலிருந்து அநந்தகருட விஷ்வக்ஸேனாதி நித்யஸூரிகள் பூர்ணகும்பமேந்தி ஸாமகானம் கோஷித்துக்கொண்டு வந்து திருவடிதொழ, சிறப்புடனே தன்னுடைச்சோதிக் கெழுந்தருளப்போகிறார்—என்பது கல்கியவதார கதைச்சுருக்கம். ...

———

# விடுதியான இதிஹாஸங்கள்

(இவையும் திவ்யப் பிரபந்தங்களில் அநுஸந்திக்கப்பட்டவையே.)

---

## மார்க்கண்டேயனுக்கு நீண்ட வாழ்ச்சிதந்தது.

மிருகண்டுவென்னும் முனிவர் பிள்ளையில்லாக் குறையால் பிரமனைக் குறித்துத் தவஞ்செய்தபோது, பிரமன் ப்ரத்யக்ஷமாகி 'முனிவரே! அறிவில்லாமையும் அங்கஹீநத்வமும் பெரும்பிணியும் தீய குணங்களுமுடையனாய் நூறு பிராயம் உயிர்வாழ்பவனான புத்திரனை விரும்புகின்றீரோ? அன்றி, கூர்மையான புத்தியும் அழகுபொலிந்த வடிவமும் ஆரோக்யமும் நற்குணமுமுடையனாய்ப் பதினாறு பிராயமே வாழ்பவனான குமாரனை விரும்புகிறீரோ? சொல்லும்' என்ன; முனிவர் சிறிதேனும் அறிவும், ஆயுள் அழகும் குணமும் சிறந்து பிணியிலனாகும் ஸத்புத்ரனையே வேண்டுகின்றேன்' என்று தம் கருத்தைக்கூற, நான்முகக்கடவுள் அவ்வாறே அநுக்ரஹித்தனர். அங்ஙனம் ஊழ்வினையாற் பதினாறு பிராயம் பெற்றுப் பிறந்த புத்திரனான மார்க்கண்டேயன் தனது அல்பாயுஸ்ஸைக்குறித்து வருந்திய தாய் தந்தையரைத் தேற்றித் தான் விதியைக் கடந்து வருவதாகச்சொல்லி, தீர்க்காயுஸ்ஸு பெறுதற்பொருட்டுத் தினந்தோறும் சிவபூஜை செய்துவருகையில், ஒருநாள் யமன் தூதரை யனுப்ப, அவர்கள் மார்க்கண்டேயனது தவக்கனலால் அவனை அணுகமாட்டாது அவன் செய்யும் சிவபூஜைச் சிறப்பைக்கண்டஞ்சி வெருண்டோடி யமனிடஞ்செய்தி சொல்ல, யமனும் கோபித்துத் தனது மந்திரியான காலனை ஏவ, அவன் வந்து நயபயங்களாலழைக்கவும் மார்க்கண்டேயன் வரமாட்டேனென்று சொல்லிவிட, பிறகு யமன் மிகக்கோபித்துத் தானே நேரில்வந்து மார்க்கண்டேயனைக் காலபாசத்தாற் கட்டியிழுக்கத் தொடங்குகையில் அம்முனிகுமாரன் சிவலிங்கத்தைத் தழுவிக்கொள்ள, யமன் சிவலிங்கமுமுட்பட வலித்திழுக்கும்போது சிவபிரான் ஸ்ரீமந்நாராயணனைச் சிந்தைசெய்து அவனது திருவருள்பெற்று அங்கு நின்று வெளிப்பட்டு யமனைக் காலாலுதைத்துத்தள்ளி முனிமகனுக்கு என்றும் பதினாறு பிராயமாகவே அனேககல்பகாலமளவும் இனிதுவாழும்படி தீர்க்காயுஸ்ஸைக் கொடுத்தனன்.

## 86 முதலையைத்துணித்துக் கஜேந்திரனைக் காத்தது.

மஹாவிஷ்ணு பக்தனான இந்த்ரத்யும்நனென்னும் அரசன் வழக்கப்படி ஒருநாள் விஷ்ணு பூஜை செய்துகொண்டிருந்தபோது அகஸ்திய மஹாமுனிவன் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவ்வரசன் தன் கருத்து முழுவதையும் திருமாலைப் பூஜிப்பதில் செலுத்தியிருந்ததனால் அம்முனிவனது வருகையை அறியாதவனாய் அவனுக்கு உபசாரமொன்றுஞ் செய்யாதிருக்க, அம்முனிவன் அரசன் நம்மை அலக்ஷியஞ் செய்தானென்று மாறுகக் கருதிக்கோபித்து, நீ, யானைபோலச் செருக்குற்றிருந்ததனால் யானையாகக்கடவை, என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒருகாட்டில் யானையாகத் தோன்றினனாயினும் முன் செய்த விஷ்ணு பக்தியின் மஹிமையினால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந் தாமரை மலர்களைக்கொண்டு திருமாலை அர்ச்சித்துப் பூஜித்துவருகையில், ஒருநாள் பெரியதொரு தாமரைத்தடாகத்தில் அர்ச்சனைக்காகப் பூப்பறிப்பதற்குப் போய் இறங்கிற்று; முன்பொருகால் தேவலனென்னும் முனிவன் ஒரு நீர்நிலையில் நின்று தவஞ்செய்துகொண்டிருந்தபோது அவனது காலைப்பற்றி யிழுத்து அதனாற்கோபங்கொண்ட அவனது சாபத்தாற் பெரிய முதலையாய்க்கிடந்த ஹூஹூவென்னுங் கந்தர்வன் அவ்வானையின் காலைக்கௌவிக்கொள்ள, அதனை விடுவித்துக்கொள்ள முடியாமல் கஜேந்திராழ்வான் 'ஆதிமூலமே!'

என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அப்பொய்கைக் கரையிலே அலை குலையத் தலைகுலைய விரைந்தெழுந்தருளித் தனது திருவாழியைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன் வாயினின்று விடுவித்து இறுதியில் அதற்கு முக்தியை அருளினன்.

## 87 கோவிந்தஸ்வாமிக்குக் கருத்தறிந்து காரியஞ்செய்தது.

(பெரிய திருமொழி 5–8–5ல்மாக மாநிலம் முழுதும் வந்திறைஞ்சுமென்கிற பாட்டில்மட்டும் அநுஸந்திக்கப்பட்ட கதை இது.)

கோவிந்தஸ்வாமி யென்பானொரு பிராமணன் இதிஹாஸ புராணங்களைப் பலகாலுங் கேட்டு அதனாலே கண்ணபிரானுடைய பால்ய சேஷ்டிதங்களையும் ராஸக்ரீடை [குரவை கோத்தல்] முதலிய திருவிளையாடல்களையும் ஸாக்ஷாத்தாகக் கண்டு களிக்கக் கருத்துக் கொண்டவனாய், 'இதை எம்பெருமான் பக்கல் நாம் பிரார்த்தித்தால் அப்பெருமான் அருள் செய்யக் குறையில்லை' என்றெண்ணி *ஊன்வாடவுண்ணாது உயிர்காவலிட்டு உடலிற் பிரியாப்புலனைந்தும் நொந்து தான்வாடவாடத் தவஞ்செய்கையில், எம்பெருமான் இவனது நினைவின்படியே க்ருஷ்ணாவதார க்ருத்யங்களையெல்லாம் அவ்வண்ணமே ஸாக்ஷாத்கரிப்பித்து 'இன்னமும் உனக்கு வேண்டுவதென்?' என்று கேட்டருளினன்; அதற்கு இவன் 'தேவரீரோடு கூடவே அத்தாணிச் சேவகனாயிருந்து நித்யாநுபவம் பண்ணிக்களிக்க விரும்பியிருக்கிறேன்' என்றான்; இவன்றான் வாயாலே இங்ஙனே கூறினானாயினும் *உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறியுமெம்பெருமான் அவனுடைய நாபியிலுள்ள உண்மைக்கருத்தை உள்ளபடியே கண்டறிய வல்லவனாதலால் 'இவனுக்கு நம்மோடு நித்யாநுபவம் பண்ணுகை தான் உண்மையான விருப்பமோ?' என்று ஆராய்ந்து பார்த்தான்; பார்த்ததில், 'இவனுக்கு சப்தாதி விஷயபோகங்களில் இன்னமும் நசை விட்டபாடில்லை' என்றறிந்து, 'அந்தணா! நீ இன்னம் சிறிதுகாலம் இந்நிலத்திலேயேயிருந்து விஷயபோகங்களை ஆசை தீரச் செய்து தலைக்கட்டி, பின்பு நம்மோடே வரக்கடவாய், என்றருளிச்செய்து அந்தர்த்தானமடைந்தனன்.

## 88 ஸுமுகனுக்கு அபயமளித்தது.

தேவேந்திரனுக்கு நண்பனும் மந்திரியும் ஸாரதியுமான மாதலியானவன் அழகிலும் குணத்திலும் மிகச்சிறந்த தன் புத்திரியான குணகேசியென்னுங் கன்னிகைக்குத் தக்க வரனைத் தேடுபவனாய்ப் புறப்பட்டு வழியில் நாரதமுனிவரைச் சந்தித்துத் துணையாகக் கொண்டு பலவுலகங்களிற்சென்று பார்த்துத் தக்க வரனைக் காணாமல் பாதாளலோகத்தில் வாஸுகியினாலாளப்படுகின்ற போகவதி யென்னுஞ் சிறந்த நகரத்தையடைந்து அங்கேயிருக்கின்ற அனேக நாககுமாரர்களைப் பார்க்கின்றபொழுது ஸுமுகனென்னும் நாகக்குமாரனை நோக்கி அவனது ரூபலாவண்யங்களிலீடுபட்டு அவனுக்குத் தன்மகளைக் கொடுக்கக் கருதி அவனது பாட்டனாரைக்கண்டு பேச, அவர் மகிழ்ச்சியோடு துயரமுங் கொண்டவராய் 'இவனது தந்தையைக் கருடன் பக்ஷித்து இந்த ஸுமுகனையும் ஒரு மாதத்திற்குள் பக்ஷிப்பேனென்று சொல்லியிருக்கின்றானாதலால் இவனுக்கு மணஞ்செய்தல் ஏற்றதன்று' என்று தெரிவித்தார். அதுகேட்ட மாதலி 'என்னால் மருமகனாக வரிக்கப்பட்ட உனது பௌத்திரன் என்னுடன் வந்து தேவேந்திரனைக் காண்பனாயின் இவனுக்கு ஆயுளைத் தந்து கருடனைத் தடுக்க முயல்வேன்' என்று சொல்லி ஸுமுகனை யழைத்துக்கொண்டு இந்திரனிடஞ்சென்று சேர, அங்கு இந்திரனுடனே உபேந்திர மூர்த்தியான திருமாலும் வீற்றிருக்கையில், நிகழ்ந்த செய்திகளையெல்லாம் நாரதமுனிவர் சொல்லக்கேட்ட திருமால் இந்திரனை நோக்கி, இவனுக்கு அமிர்தத்தைக் கொடுக்கலாம்; அதனால் இவர்கள் இஷ்டஸித்தியடைந்தவராவர்

என்று சொல்லியருள, இந்திரன் கருடனது பராக்ரமத்தை ஆலோசித்துத் திருமாலை நோக்கி 'தேவரீரே அவனுக்கு அமுதத்தையும் ஆயுளையும் தந்தருள்க' என்றதற்கு, திருமால் 'ஸகலலோகாதிபதியான நீ கொடுப்பதே போதும்; அதனை மாற்றுபவர்யார்?' என்றுகூற, பிறகு இந்திரன் ஸுமுகனுக்குஅமிர்தமுண்பியாமல் நீண்ட ஆயுளை வரமளிக்க,உடனே மாதலி ஸுமுகனுக்குத் தன்மகளை மணம்புரிவித்தான். இச்செய்தியைக் கேள்வியுற்ற கருடன் கோபங்கொண்டு இந்திரனோடு மாறுபட்டுத் தனது இரையை அவன் தடுத்துவிட்டதற்காகப் பல்பல நிஷ்டுர வார்த்தைகள் கூறுகையில், ஸுமுகன் தான் நீண்ட ஆயுளை வரம்பெற்றிருந்தாலும் கருடனுடைய கறுவுதலைக்கண்டஞ்சிப் பாம்பு வடிவமாய்த் திருமாலினருகிற் சேர்ந்து அப்பெருமானது கட்டிலின் காலைக்கட்டிக்கொண்டு சரண்புக, பின்பு கருடன் திருமாலை நோக்கி 'ஸகல தேவர்களினுள்ளும் மஹாபலசாலியான வுன்னைச் சிறிதும் சிரமமின்றி இறகு முனையாற் சுமக்கின்ற என்னினும் வலிமையுடையார் யார்? இதனைச்சற்று ஆலோசித்துப் பார்' என்று செருக்கிப்பேச, அக்கடுஞ்சொற்கேட்ட திருமால் கருடனை நோக்கி 'மிகவும் துர்ப்பலனை நீ உன்னைத் தானே மஹாபலசாலியாக எண்ணி எமது முன்னிலையில் தற்புகழ்ச்சி செய்துகொண்டது போதும்; மூவுலகமும் எனது உடம்பை வகிக்க முடியாதே; யானே எனது சக்தியால் என்னை வஹித்துக்கொண்டு உன்னையும் வஹிக்கின்றேன்; எனது இந்த வலக்கையொன்றை மாத்திரமாவது நீ தாங்கவல்லையாயின் உனது செருக்குமொழி பயன்பட்டதாகும்' என்று சொல்லிக் கருடனது தோளில் தனது வலக்கையை வைத்த மாத்திரத்தில் அவன் அதன் அதிபாரத்தைத் தாங்கமாட்டாமல் வருந்தி வலிமையொழிந்து மூர்ச்சித்து விழுந்து பின்னர் அரிதில் தெளிந்து திருமாலை வணங்கிப் பலவாறு பணிமொழி கூறி 'எல்பிழையைப் பொறுத்தருளவேண்டு'மென்று பிரார்த்திக்க, திருமால் திருவுள்ள மிரங்கி அவனுக்கு ஸமாதானங்கூறித் தனது திருவடியின் பெருவிரலால் ஸுமுகனையெடுத்துக் கருடன் தோளிலிட்டு 'இவனை நீ உனது அடைக்கலமாகக்கொண்டு பாதுகாக்கக் கடவை' என்று குறிப்பிக்க, அது முதல் கருடன் ஸுமுகனோடு நண்புகொண்டு அவனைத் தோளில் தரிக்க, அவனும் அச்சமின்றி 'கருடா! ஸுகமா' என்று க்ஷேமம் விசாரிப்பவனாயினன்.

## 89 அரனது சாபத்தை அகற்றினது.

ஒருகாலத்திலே பரமசிவன் தன்னைப்போலவே பிரமனும் ஐந்து தலையுடையனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குதற்கு இடமாயிருக்கின்றதென்று கருதி அவனது சிரமொன்றைக் கிள்ளியெடுத்துவிட, அக்கபாலம் அப்படியே சிவன் கையில் ஒட்டிக்கொள்ளுதலும், அவன் 'இதற்கு என் செய்வது' என்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் 'இப்பாவம் தொலையப் பிச்சையெடுக்க வேண்டும்: என்றைக்குக் கபாலம் நிறையுமோ, அன்றைக்கே இது கையைவிட்டு அகலும்' என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பலதலங்களிலுஞ் சென்று பிச்சை யேற்றுக்கொண்டே வருந்தித் திரிந்தும் அக்கபாலம் நீங்காதாக, பின்பு ஒருநாள் பதரிகாச்ரமத்தை யடைந்து அங்கு எழுந்தருளியுள்ள நாராயணமூர்த்தியை வணங்கி இரந்தபோது, அப்பெருமான் 'அக்ஷயம்' என்று பிக்ஷையிட, உடனே அது நிறைந்து கையைவிட்டு அகன்றது.

## 90 உரோமசனால் நான்முகனது செருக்கை நீக்கினது

(பெரிய திருமொழி 3-4-2 பாசுரத்தில் அநுஸந்தித்த கதை இது.)

ரோமசரென்பவர் சரீரமுழுவதும் (காடுபோல்) அடர்ந்த மயிர்களையுடைய ஒரு மாமுனிவர். இவர் நீண்டகாலம் வாழ்ந்திருந்து எம்பெருமானைச் சிந்தனை செய்யவேண்டுமென்று குதூஹலமுடையராய், தீர்க்காயுஸ் பெறுவதற்காக ஒரு புண்ய நதிக்கரையிலிருந்து

தவஞ்செய்து கொண்டிருக்கையில் அளவு கடந்த ஆநந்தங்கொண்ட ஸ்ரீமந் நாராயணன் இவர் முன்னேவந்து ஸேவைதந்தருளி 'உம்முடைய விருப்பத்தைக் கூசாதே வேண்டிக் கொள்ளும்' என்று சோதிவாய் திறந்தருளிச்செய்ய, மாமுனிவரும் 'இவ்வுடம்போடே உன்னை வெகுகாலம் வழிபடவேணுமென்று பேராசை கொண்டிருக்கிறேன் நான்; அநேகமாயிரம் ப்ரஹ்மாக்களுடைய ஆயுளை என்னொருவனுக்குக் கல்பித்தருளினால் மஹாப்ரஸாதமாகும்' என்று கைகூப்பி விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமான் அப்படியே திருவுள்ளமுவந்து "மாமுனிவரே! ப்ரஹ்மாவினுடைய ஆயுளின் அவதி உமக்குத் தெரிந்ததே; ஒரு ப்ரஹ்மா காலஞ்சென்றால் உம்முடைய உடம்பினின்றும் ஒரு ரோமம் இற்றுவிழக்கடவது; இப்படி ஒவ்வொரு ப்ரஹ்மாவின் முடிவிலும் ஒவ்வொரு மயிராக இற்றுவந்து 'இனி உம்முடைய உடம்பில் ஒரு ரோமமும் இல்லை' என்று சொல்லத்தக்க நிலைமை நேருமளவும் நீர் ஜீவித்திருக்கக்கடவீர்" என்று வரந்தந்தருளி மறைந்திட்டனன், [இக்கதையின் விவரணத்தை வேறுவகையாகவும் சிலர் கூறுவர்; வல்லார்வாய்க் கேட்டுணர்க.]

## 91 தொண்டைமன்னனுக்கருள் செய்தது

(பெரியதிருமொழி 5–8–9 பாட்டில் அநுஸந்தித்த கதை இது.)

சோழநாட்டரசனுடைய குமாரனும் தொண்டைநாட்டரசனுமான தொண்டைமான் சக்ரவர்த்தி திருவேங்கடமலையில் எம்பெருமானையடுத்து மிக்கபக்தியுடனே சிந்தித்து வந்தித்து வாழ்த்தி வழிபாடு செய்ய, திருவுள்ளமுவந்த அத்திருவேங்கடமுடையான் மெய்த் தொண்டனான அவ்வரசனை நண்பனாகக்கொண்டு அவன் வரும்பொழுதெல்லாம் தனது அர்ச்சாவதாரஸ்வரூபமலைக்கடந்து அவனுடன் பேசுவானாயினனென்றும், அவ்வரசனுக்கு அஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தையும் அதன் அருமையான பொருள்களையும் மற்றும் பல ஹிதங்களையும் உபதேசித்தருளினதுமன்றி, அவனுக்குப் பகைவெல்லுதற்பொருட்டுத் தனது சங்குசக்கரங்களையும் கொடுத்தருளினனென்றும், அவ்வரசன் அந்தப்பெருமானுக்குக் கோபுரம் மண்டபம் திருமதில் முதலிய பல திருப்பணிகளைச் செய்து மஹாவிபவத்துடன் நித்ய நைமித்திக உத்ஸவங்களையெல்லாம் நடத்திவைத்ததுமன்றி நாள்தோறும் ஸ்வர்ண மயமான ஆயிரத்தெட்டு தாமரைகளைக் கொண்டு ஸ்ரீநிவாஸனுக்கு ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்துவந்து இறுதியில் அப்பரமனருளால் பரகதியடைந்தனனென்றும் அறிக.

[தொண்டைமான் என்பது] அக்குலத்து அரசரில் ஒருவனது பெயராயிருந்து பிறகு அந்நாட்டரசர்க்கெல்லாம் வழங்குகின்றதென்றும் தொண்டைமானது நாடு தொண்டை நாடென வழங்கலாயிற்றென்றுங் கூறுவர். தொண்டைமானென்ற பெயரின் காரணம்:— தொண்டைநாட்டின் ராஜதானியான காஞ்சிபுரத்திலிருந்து தொண்டையானிளந்திரையனைக் குறித்துப் பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படையில், "அந்நீர்த் திரைதருமரபின்......பல்வேல் திரையன்" என்றவிடத்து நச்சினார்க்கினியருரையில்—"நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தில் நாகலோகத்தே சென்று நாககன்னிகையைப் புணர்ந்தகாலத்து அவள் "நான் பெற்ற புதல்வனை என்செய்வேன்?' என்றபொழுது, தொண்டையை [தொண்டை-ஓர்கொடி] அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிட, அவன்வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாட்டாசி கொடுப்பன், என்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிட, திரைதருதலின் திரையனென்று பெயர்பெற்றகதைகூறினான்" என்றும், "தொண்டையோர் மருக" என்றவிடத்து உரையில் "தொண்டையைக் குடிக்குமுதலுடைய குடியிலுள்ளவனே!' என்றும் உரைத்தவாற்றால் விளங்கும். இனி, பூமியாகியபெண்ணுக்குத் தொண்டை (கழுத்து) ஸ்தானமாயிருப்பதால் தொண்டைநாடென்றும், "தொண்டைநன்னாடு சான்றோருடைத்து" என்றபடி எம்பெருமானது தொண்டர்கள் பலர் வஸிக்கின்ற நாடு தொண்டை நாடு என்று காரணங்கூறுதலுமுண்டு. "மேற்குப் பவளமலை வேங்கடம்.

நேர்வடக்காம், ஆர்க்கு மூவரி யணிகிழக்குப்—பார்க்குளுயர் தெற்குப் பினுகி திகழிருப தின்காதம், நற்றொண்டைநாடெனவே நாட்டு" என்றதனல் தொண்டைநாட்டின் எல்லையை உணர்க.]

## 92 நரநாராயணனுய்ச்அறநூல் விரித்தது.

ஸ்ரீபதரிகாச்ரமத்தில் ஸர்வேச்வரன் தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்தை வெளியிட்டருளினது பிரஸித்தம்.

## 93 மதிகோள் விடுத்தது.

சந்திரன் தக்ஷமுனிவனது புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழு நக்ஷத்ரங்களையும் மணஞ்செய்துகொண்டு அவர்களுள் ரோஹிணி யென்பவளிடத்து மிகவுங் காதல் கூர்ந்து அவளுடனே எப்பொழுதுங்கூடி வாழ்ந்திருக்க, மற்றை மகளிரின் வருத்தத்தை நோக்கிச் சினங்கொண்ட அம்முனிவன் அவனை 'க்ஷயமடைவாயாக" என்று சபிக்க, அச் சாபத்தால் சந்திரன் பதினாறு கலைவடிவாகவுள்ள தனது உடல் நாளடைவிற் குறைபவனாகி அங்ஙனம் தனக்கு விரைவில் நேரக்கடவதான அழிவைப் போக்கிக்கொள்ளுதற்கு வேறு புகலிடமொன்றுங் காணுமல் சிந்தித்து ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை யடைந்து அங்குள்ள நவதீர்த்தங்களிலொன்றும் கோயிலின் வடபுரத்தே யுள்ளதுமான புண்யதீர்த்தத்தில் நீராடி அதன் கரையில் ஒரு புன்னைமரத்தின் நிழலில் இருந்து ஸ்ரீரங்கநாதனைக் குறித்துத் தவஞ்செய்ய, அந்நம்பெருமாள் அவனுக்குப் பிரத்யக்ஷமாகி, மீண்டும் கலைகள் நாளந்தோறும் வளர்ந்து வரும்படி அநுக்ரஹித்தனனென்பதாம். அத்திவ்ய தீர்த்தம் இதனல் சந்த்ரபுஷ்கரணி யென்று பெயர் பெற்றது. ஸ்ரீபட்டர் அருளிச்செய்த ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் இப்புஷ்கரிணியைப்பற்றின ச்லோகத்தில் யஸ்யா:, அப்யாஸதோபாமகமர்ஷணீநாம் சந்த்ரஸ் ஸ்""தாதிதி தாமவாப." என்றது காண்க. "கோள்வாய்மதியம் நெடியான் விடுத்தாங்கு" (சிவகசிந்தாமணி) எனப் பிறவிடத்து திருமால் சந்திரனுக்கு உதவியாகக் கூறுதல் காண்க. சந்திரன் தர்மகசிபருடைய சாபத்தினல் தனது கலைகள் குறையப்பெற்று வந்து தவஞ்செய்து ஸ்ரீரங்கநாதனின் கிருபையினுற் பழையபடி கலைநிரம்பப்பெற்றனனென்ற வரலாறு வழங்குதலுமுண்டு.

## 94 மதுகைடபர்களைமாய்த்தது.

பிரமதேவனது திநப்ரளயத்தில் இவ்வுலகமெல்லாம் பெருங்கடலினல் சூழப்பட்டு எங்கும் நீர்மயமாயிருந்தபொழுது அவ்வெள்ளத்தில் திருமால் அரவணையில் அயர்ந்திருக்கையில், அத்திருமாலினிடத்தினின்று ரஜஸ்தமோகுணங்களின் வடிவாகத் தோன்றி "எம்மை நீ கொலைபுரிக என்று தமவாயாற் சொல்லிய பின்னரே தம்மைப்பிறர் கொல்லலாகும்" என்று வரம் பெற்ற மதுகைடபரிருவரும் அப்பிரளயநீரைக் குழப்பிக்கொண்டு பேராரவாரத்துடன் சென்று பிரமதேவனைக் கண்டு அவனிடத்தினின்று வேதங்களையெல்லாம் பறித்துக் கொண்டு அப்பிரளய வெள்ளத்தில் மறைந்தனராக, அப்போது தான் செய்யவேண்டுவது இன்னதெனத் தெருந்து திகைப்புக்கொண்ட அப்பிரமன் பின்னர்ச் சிறிது தெளிந்து திருமாலைத் துதித்துத் தனக்கு நேர்ந்த ஆபத்தை முறையிட, அக்கடவுள் ஹயக்ரீவாவதாரஞ் செய்து அக்கடலிற்புக்கு இனியதோரிசையைப் பாட, அவ்வினிய கீதத்தைக்கேட்ட அவ் வசுரர்கள் அவ்வேதங்களை ஓரிடத்து வைத்திட்டு அவ்வொலி வந்தவழியைப் பிடித்துச் செல்லுமளவில் திருமால் அவ்வேதங்களுள்ளவிடத்திற் சென்று அவற்றைக் கொணர்ந்து பிரமனுக்குத் தந்தருள, அப்போது ஒருவரையுங் காணுதவராய் வேதங்களும் எடுத்துக்

கொண்டுபோகப்பட்டதை யுணர்ந்த அவ்வசுரர்கள் மிகச்சினந்து அரவணையில் அறிதுயிலாரும் பரம்பொருளைக்கிட்டிப் போர்செய்யத் தொடங்கவே திருமாலுக்கும் அவ்வசுரர்க்கும் வெற்றிதோல்விகளின்றி நெடுங்காலம் பெரும்போர் நிகழ்ந்ததாக, முடிவில் திருமாலை நோக்கி அவர்கள் 'உனது ஆற்றலுக்கு உவந்தோம்; வேண்டும் வரம் பெற்றுக்கொள்' என்ன; அக்கடவுள் 'யான் உங்களைக் கொல்லவேண்டும்' என்று வரம்வேண்ட, அவர்களும் அதற்கு இணங்குகையில், திருமாலும் 'உங்கட்கு வேண்டும் வரம் கொண்மின்' என்ன; 'ஒருவரும் இறவாத இடத்தில் நாங்கள் இறக்கவேண்டும்' என்று அவர்கள் வேண்ட, திருமாலும் அங்ஙனமே வரமளித்துத் தனது துடையைக்கொண்டு அவர்களை இறுக்கிக் கொன்றிட்டனன். (இவ்வரலாறு சிறிது வேறுபடக் கூறப்படுதலுமுண்டு.)

## 95 உலகுண்டதும் ஆலிலைத்துயின்றதும்.

முடிவில் மஹாப்ரளயப் பெருங்கடல்வெள்ளத்தில் உலகங்களெல்லாம் அழியப்புக, திருமால் அவற்றை யெல்லாம் தனது விசித்ரசக்தி விசேஷத்தாலே சிறிய திருவயிற்றிலே விசாலமாக இருத்தி, ஆதிசேஷாம்சமான சிறியதோர் ஆலந்தளிரிலே யோகநித்திரை புரிவதாக நூற்கொள்கை.

## 96. "ஈசனைவென்ற சிலைகொண்ட" என்றவிடத்தடங்கிய வரலாறு.

[திருமழிசைப்பிரானருளிய நான்முகன் திருவந்தாதியில்]

ஒரு ஸமயத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணு ருத்ரனை ஒரு சிலையால் வென்றார்; அந்த வில் பரசுராமனிடத்தில் வந்து சேர்ந்திருந்தது; அதனை ஸ்ரீராமாவதாரத்தில் மிதிலையில் நின்று மீண்டெழுந்தருளும்போது அப்பரசுராமனிடத்திற் கொண்டார்; (இவ்வரலாற்றை விரித்துரைப்போம்.) முன்னொருகாலத்தில் தேவ சில்பியான விச்வகர்மாவினால் நிருமிக்கப்பட்ட சிறந்த இரண்டுவிற்களுள் ஒன்றைச் சிவபிரானும் மற்றொன்றைத் திருமாலும் எடுத்துக் கொண்டார்கள். பின்பு ஒரு காலத்தில் அவ்விற்களுள் சிறந்தது இன்னதென்பதை அறிய விரும்பிய தேவர்களின் வேண்டுகோளால் பிரமன் அரனுக்கும் அரிக்கும் போரை மூட்டிவிட அங்ஙனமே அவர்கள் அவ்விற்களைக்கொண்டு போர்புரிகையிற் சிவபிரானது வில் சிறிது முறிபட்டது; அவ்வாறு இற்றவில்லைச் சிவபிரான் ஜநககுலத்துத் தேவராதனென்னும் அரசனிடம் கொடுத்திட, அது வம்ச பரம்பரையாய் ஜநகமஹாராஜனளவும் வந்தது; இது நிற்க; இறாத வலிய வில்லை விஷ்ணு ரிசிக முனிவனிடம் கொடுத்துச் செல்ல, அது அவன் குமாரனான ஜமதக்நியினிடத்தும் அவன் குமாரனான பரசுராமனிடத்தும் பரம்பரையாய் வந்தது. முற்கூறிய சிவதநுஸ்ஸை ஸீதைக்குக் கந்யா சுல்கமாக ஜநகன் வைத்திருந்தான்; இராமபிரான் அந்தவில்லை முறித்துத் தன் பேராற்றலை விளங்கச்செய்து பிராட்டியை மணந்து கொண்டு மிதிலாபுரியினின்றும் புறப்பட்டு அயோத்திக்கு வரும்போது வழியிடையே செருக்கிவந்த பரசுராமனது கையிலிருந்த விஷ்ணுதநுஸ்ஸைவாங்கி எளிதில் வளைத்து நாணேற்றிக் கணைதொடுத்து 'இவ்வம்புக்கு இலக்கு என்?' என்று வினவ, பரசுராமன் அதற்கு இலக்காகத் தனது தபோபலம் முழுவதையுங்கொடுக்க அவன் க்ஷத்ரிய வம்சத்தைக் கருவறுத்தவனாயிருந்தாலும் வேதவித்தும் தவவிரதம் பூண்டவனுமாயிருத்தல் பற்றி அவனைக் கொல்லாமல் அவனது தவத்தைக் கவர்ந்த மாத்திரத்தோடு ஸ்ரீராமன் விட்டருளினன் என்ற வரலாறுகள் இதிஹாஸ ப்ரஸித்தம்.

## 97 பிரமனிடம் மறைந்துவந்த இராவணனைக் காட்டிக்கொடுத்தது.

(முதல் திருவந்தாதியிலும் மூன்றாந் திருவந்தாதியிலும், நான்முகன் திருவந்தாதியிலும்)

முன்பு இராவணன் பத்துத் தலைகளை மறைத்துக்கொண்டு நான்முகனிடஞ் சென்று வரம் வேண்டிக்கொள்ளுமளவில் எம்பெருமான் ஒரு சிறு குழந்தை வடிவாய் அப்பிரமனுடைய மடியிலே உறங்குவான்போலே கிடந்து 'இவன் பத்துத்தலைகளையுடைய இராவணன்; ஸ்வஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டு உன்னை வஞ்சித்து வரம் வேண்டிக்கொள்ள வந்திருக்கிறான்; இவனுக்கு நீ வரமளித்தால் பெருந்தீங்காக முடியும்' என்று தெரிவிப்பவன்போன்று தன் திருவடியால் அவ்விராவணனுடைய பத்துத்தலைகளையும் எண்ணிக்காட்டினன்.

## 98 சிவபிரானுக்குத் திருமேனியில் கூறு கொடுத்தது

தாமஸதெய்வமான ருத்ரனுக்கும் தனது திருமேனியின் வலப்பக்கத்தில் இடங் கொடுத்து ஆதரிக்குமவனும் எம்பெருமான்; திருவாய்மொழியில் "வலத்தனன் திரிபுர மெரித்தவன்" (1—3—9) என்ற பாசுரத்தின் வியாக்கியானத்தில் "பச்யைகாதச மே ருத்ராந் தக்ஷிணம் பார்ச்வமாச்ரிதாந்" என்ற மோக்ஷ தர்ம வசனத்தை எடுத்துக் காட்டியிருப்பது காணத்தக்கது. "தபஸா தோஷிதஸ் தேந விஷ்ணுநா ப்ரபவிஷ்ணுநா—ஸ்வ பார்ச்வே தக்ஷிணே சம்போர் நிவாஸ: பரிகல்பித:" என்றொரு வசனமும் இருபத்திநாலாயிரப் படியிற் காண்பதுண்டு. [சிவன் பண்ணின தவத்தினால் திருவுள்ளமுவந்த திருமால் அவனுக்குத் தனது வலவருகிலே வாஸஸ்தானம் அமைத்துக் கொடுத்தருளினன்—என்பது இதன்பொருள்.]

"ஏறாளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும் கூறாளுந்தனியுடம்பன்' என்றும், "அக்கும்புலியினதளு முடையாரவரொருவர், பக்கம் நிற்க நின்ற பண்பர்" என்றும ஆழ்வார்கள் அடிக்கடி அருளிச்செய்கிறார்களே, சிவன் முதலானோர் எப்போதும் எம்பெருமானுடைய திருமேனியைப் பற்றியிருக்கிறார்களோ? என்றொரு சங்கை பிறக்கக்கூடும்; இந்த சங்கையும் இதற்குப் பரிஹாரமும் பூருவர்களுரைத்த வியாக்கியானங்களிலேயே உள்ளன. கீழ் உதாஹரித்த திருவாய்மொழிப் பாசுரத்தின் வியாக்கியானங்களிலேயே—"ஸர்வகாலமும் இவர்கள் எம்பெருமானுடைய திருமேனியிலே யிருப்பர்களோ வென்னில்; ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுத்தருளும்; அது மற்றை குணங்களாலே ஆழ்வார்கள் எப்போது மொக்க அருளிச்செய்துகொண்டு போருவர்கள்." "ஸாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கிடக்க வுண்டாகிலும் மாளிகைக்குள்ளே செம்பாலே நாழியரிசியிட்டுத் தங்களுக்கு வரிசையாக நினைத்திருப்பர்களிறே; அப்படியே இவர்களும் திருமேனியில் பண்ணிவைக்கும் ப்ராப்தியிட்டார்களிறே. ஓரோ கலஹங்களிலே அண்டையவனந்தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து கலஹந் தெளிந்தவாறே புறம்பே புறப்பட்டாலும் 'இவ்விடம் இன்னார் பற்று' என்று பின்னும் ப்ராப்தி சொல்லிவைக்குமா போலே" என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் அறிக.

## 99. முதலாழ்வார்கட்குத் திருக்கோவலிடைகழியில் காட்சி தந்தது

[முதல் திருவந்தாதியில் "நீயுந்திருமகளும் நின்றாயால்" என்ற பாசுரத்தில் ஸூசிப்பிக்கப்பட்டதிது.]

ஸ்ரீராம பரதலக்ஷ்மணர்போல அடுத்தடுத்த நாள்களில் அவதரித்தவர்களும் அயோநிஜர்களுமாகிய முதலாழ்வார்களென்று ப்ரஸித்தர்களான பொய்கையார் பூதத்தார் பேயார் என்கிற மூவர்க்கும், ஸ்ரீ வைகுண்டநாதனுடைய திருவாணையினால் ஸேனை முதலியார் இந்

நிலத்திற் கெழுந்தருளிப் பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்து திருமந்திரப் பொருள்களையும் உபதேசித்தருளினர். அதனால் இவர்கள் "முக்குணத் திரண்டவையகற்றி, ஒன்றினிலொன்றி நின்று" என்றாற்போல ரஜோகுணமும் தமோகுணமும் சிறிதுமற்று சுத்த ஸாத்விகர்களாய் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்வதையே பெரும பேறாகக்கொண்டு ஞான பக்திவிரக்திகளுக்குப் பிறப்பிடமென்னலாம்படி விளங்கி "உண்ணுஞ்சோறு பருகுநீர்த்தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன" என்றாற்போல பகவத் குணாநுபவத்தையே தாரகமும் போஷகமும் போக்யமுமாகக்கொண்டு அந்நபானாதிகளை யொழித்து, உண்டியே உடையே உகந்தோடுகின்ற இம்மண்டலத்தாரோடு கூடகில்லாமல் ஒருநாளிருந்தவிடத்தில் மற்றொருநாளிராதபடி ஓடித்திரியும் யோகிகளாய், தம்மில் ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே ஸஞ்சரித்துக்கொண்டிருந்தனர்.

இப்படி ஸஞ்சரித்துக்கொண்டிருந்த இம்மூவரையும் ஓரிடத்திலே சேர்த்து ஆட்கொண்டு இவர்கள் மூலமாக உலகத்தை வாழ்விக்க வேணுமென்கிற குதூஹலம் எம்பெருமான் திருவுள்ளத்திலுண்டாயிற்று.

ஸத்யகாமனும் ஸத்யஸங்கல்பனுமான எம்பெருமானுடைய மநோரதம் பழுதுபடுமோ? அவனுடைய திருவுள்ளம் நிறைவேறுதற்கு வழியுண்டாயிற்று. அதாவது—ஒருநாள் ஸூர்யன் அஸ்தமித்தபின்பு **பொய்கையாழ்வார்** திருக்கோவலூரையடைந்து அங்கு **ம்ருகண்டு மஹர்ஷியின்** திருமாளிகையிற்சென்று அதன் இடைகழியிற் பள்ளிகொண்டிருந்தார். பிறகு **பூதத்தாழ்வாரும்** அங்கே வந்துசேர, "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத் புவி" என்கிற சாஸ்திர முறைப்படி ஒருவரை யொருவர் வந்தனை வழிபாடுகள் செய்தவுடன், "இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் உட்காரந்திருக்கலாம்" என்று பொய்கையார் விண்ணப்பஞ்செய்ய, அவ்விதமே இருவரும் அங்கு உட்கார்ந்திருந்தனர். அதன் பிறகு பேயாழ்வாரும் அவ்விடத்திற்கே வந்துசேர, ஒருவரையொருவர் தண்டன் ஸமர்ப்பித்து உபசரித்துக்கொண்ட பின் "இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்" என்று பொய்கை பூதத்தாரிருவரும் சொல்ல, அவ்விதமே மூவரும் அவ்விடத்திலே நின்றுகொண்டு பரஸ்பரம பகவத்குணங்களைச் சொல்லுதலும் கேட்டலுஞ் செய்து களித்திருந்தனர்.

அப்பொழுது உலகளந்த மூர்த்தி அவர்கள் திறத்திலே திருவருள் செய்யும் பொருட்டுப் பெருத்த இருளையும் கனத்த மழையையுமுண்டாக்கி, பெரிய வடிவத்தோடு அவர்களிடையே சென்று நின்று பொறுக்கமுடியாத மிக்க நெருக்கத்தைச் செய்தருளினன். அதன்மேல் இவர்கள் 'இதுவரையிலும் இல்லாத நெருக்கம் இப்போது உண்டானதற்குக் காரணமென்கொல்!; பிறரெவரேனும் இங்கு வந்து புகுந்தவருண்டோ?' என்று சங்கிக்கையில், பொய்கையாழ்வார் பூமியாகிய தகழியில் கடல் நீரையே நெய்யாகக்கொண்டு ஸூர்யனை விளக்காக ஏற்ற, பூதத்தாழ்வார் அன்பாகிய தகழியில் ஆர்வத்தை நெய்யாகவும் சிந்தையைத் திரியாகவுங்கொண்டு ஞானதீபத்தை ஏற்ற, இவ்விரண்டினொளியாலும் இருளற்றதனால், பேயாழ்வார் எம்பெருமானைத் தாம ஸேவித்தமை கூறியவளவிலே மூவரும் பகவத் ஸ்வரூபத்தை நன்கறிந்து அநுபவித்து ஆநந்தப் பெருவெள்ளமெய்தி அதனுக்குப் போக்குவிடாகப் பிரபந்தங்களருளிச்செய்து உலகத்தாரை உய்விக்கத் திருவுள்ளம்பற்றினர்.

### 100 சிவபிரான் திரிபுரமெரித்ததும் அப்போது திருமால் நிர்வாஹகராய் அமைந்ததும்

முற்காலத்தில் தாரகாஸுரனுடைய புத்திரர்களாகிய வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்க தவஞ்செய்து பிரமனிடம் பெருவரம் பெற்று வானத்துப் பறந்துசெல்லுந் தன்மைவாய்ந்த மூன்று பட்டணங்களை யடைந்து மற்றும் பல அசுரர்

களோடு அஹங்காரங்களுடனே தாம் நினைத்த விடங்களிற் பறந்துசென்று பலவிடங்களின் மேலும் இருந்து அவ்விடங்களைப் பாழாக்கி வருகையில் அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்த்ர ஸூர்யர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் மஹாமேருவை வில்லாகவும் ஆதிசேஷனை வில்நாணியாகவுங் கொள்ள, வாயுவாகிய சிறகமைந்த அக்நியை முனையாகவுடைய அம்பின் ஸ்தானத்திலே விஷ்ணு நிற்க, இவ்வளவு அமைப்புடனே யுத்தஸந்நத்தனாய்ச் சென்று போர் தொடங்கும்போது சிரித்து அச்சிரிப்பில் நின்று உண்டான நெருப்பினால் அவ்வசுரர்களை அந்நகரங்களுடனே எரித்திட்டனன்—என்பது சிவபிரான் திரிபுரமெரித்த வரலாறு. இந்த த்ரிபுரஸம்ஹாரம் செய்தது சிவனேயாகிலும் இது நிறைவேறியதற்கு முக்கிய காரணம் திருமாலேயென்க. மஹாபாரதத்தில் கர்ணபருவத்தில் இருபத்துநான்கா மத்தியாயம் முதலாக நான்கு அத்யாயங்களில் இவ்வரலாறு விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது; எம்பெருமான் சிவனுக்கு அந்தராத்மாவாக இருந்ததினாலும் அம்பாக அமைந்ததினாலும் இக்காரியம் எளிதாக கைகூடிற்றென்றது. திருவாய்மொழியில் "புரமொரு மூன்றெரித்து" (1—1—8,) என்று த்ரிபுரதஹநத்தை எம்பெருமானுடைய காரியமாகவே சொல்லிற்றும் இது பற்றியே.

## 101. சிவபிரான் தக்கன் வேள்வி தகர்த்தது

[பெரிய திருமொழி 5—2—6 பாட்டில் காணும் கதை.]

முன்பொருகால் தக்ஷப்ரஜாபதி யென்பவர் ஒரு யஜ்ஞஸதஸ்ஸிலே செல்ல. அப்போது அங்கிருந்த தேவர்களும் மஹர்ஷிகளு மெல்லாரும் சடக்கென எழுந்து கௌரவிக்க, பிரமனும் சிவனும் எழுந்திராமல் இருந்தபடியே யிருக்க, தக்ஷன் பிரமனை 'லோககுரு' என்னும் ப்ரதிபத்தியாலே நமஸ்கரித்துவிட்டு, தன்னுடைய பெருமை விளங்குமாறு சிவன் தன்னை வணங்கி வழிபாடுகளொன்றுஞ் செய்திலனென்று சீற்றங் கொண்டவனாய் 'இந்த ருத்ரன் எனக்கு மாப்பிள்ளையானபோதே எனக்கு சிஷ்யனாய்வைத்து இங்ஙனே ஸ்தப்தனாய்க் கிடக்கிறானே, இவனில் மிக்க பாபி உலகிலுண்டோ? க்ருத்யாக்ருத்ய விவேகசூந்யனான இந்த மூர்க்கனுக்கு அநியாயமாய் அருமருந்தன்ன பெண்ணைக் கொடுத்துக் கெட்டேன்;' என்று பலவாறாக நிந்தித்து, "இந்த ருத்ரன் யாகங்களில் தேவதைகளோடுகூட ஹவிர்ப்பாகம் அடையக்கடவனல்லன்" என்று சபித்துவிட்டு மஹா கோபத்துடனே எழுந்து தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தான். பிறகு நெடுநாளைக்கப்பால் அந்த தக்ஷன் ப்ருஹஸ்பதிஸவ மென்றொரு யஜ்ஞம் பண்ணத்தொடங்கின செய்தியைப் பார்வதி கேள்விப்பட்டு 'தந்தை நிகழ்த்தும வேள்வியின் விபவங்களை நாமும் கண்டுவருவோம்' என விரும்பிப் புறப்பட, ருத்ரன் பழைய வைரத்தை நினைத்து 'அங்கே நீ போகலாகாது' என்று தடுத்தவளவிலும் அவள் கேளாதே குதூஹலாதிசயத்தினால் விரைந்து புறப்பட்டுத் தந்தையின் மாளிகையில் வந்து சேர, அங்கே இவளைக்கண்டு தந்தை நல்வரவு கூறுதல் யோகக்ஷேமம் வினவுதல் ஒன்றுஞ் செய்யாது விமுகனாயிருக்கு மிருப்பையும் ருத்ரபாகமில்லாமல் யாகம் நடைபெறுவதையுங் கண்டு அளவு கடந்த கோபமடைந்தவளாய் 'இந்த மஹாபாபியான தக்ஷனிடத்தில் நின்று முண்டான இந்த என் சரீரம் இனி முடிந்துபோவதே நன்று' என்று அறுதியிட்டு யோகபலத்தினால் ஒரு அக்நியையுண்டாக்கி அதுதன்னிலே சரீர த்யாகம் பண்ணிவிட, இங்ஙனே பார்வதி அவமானம் பொறுக்ககில்லாமல் இறந்தொழிந்தாளென்றுணர்ந்த சடையான் மிகச் சினந்து தக்கன் வேள்வியைப் பலபடிகளாலும் தகர்த்துவிடக்கடவோமென்று நிச்சயித்துத் தனது சடையில் நின்றும் ஒரு மயிரையெடுத்துக் கீழே எறிய, அதில் நின்றும் கோரரூபியான வீரபத்ரன் கிளம்பி ருத்ரனுடைய ஆஜ்ஞையைப்பெற்று தக்ஷயாக பூமியிலே சென்று வீரமாமகோரமான ஆடோபங்களை யுண்டுபண்ண, ருத்ரனும் கூடச்சென்று தக்ஷனைத் தலை

யறுத்து ஸ்வாஹாகாரங்களை யெல்லாம் ஹாஹாகாரமாக்கி, 'தக்ஷாத்வரத்வம்ஸி' என்றும் 'தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்' என்றும் பெயர் பெற்றருளினனென்கிற வரலாறு ஸ்ரீபாகவதத்தில் நான்காம் ஸ்கந்தத்தின் ஆதியில் விரித்துரைக்கப்பட்டுள்ளது.

## 102. சிவபிரான் நால்வர்க்கு உபதேசித்தது

[பேய்கையாழ்வாரும் திருமழிசையாழ்வாரும் தமது திருவந்தாதிகளில் அநுஸந்தித்த கதை இது.]

சிவன் ஒருகாலத்திலே அகஸ்தியர் புலஸ்தியர் தக்ஷர் மார்க்கண்டேயர் என்கிற நான்கு முனிவர்களைச் சிஷ்யர்களாக அமைத்துக்கொண்டு ஆலமரத்தடியிலே ஸ்ரீமந்நாராயண தத்வோபதேசம் செய்தருளினன்.

## 103. மந்தேஹரென்னும் அசுரர் மாய்வது

[திருவிருத்தத்தில் "எரிகொள் செஞ்ஞாயிறு" என்னும் பாசுரத்தில் அநுஸந்தித்தது.]

மந்தேஹாருண மென்னும் த்வீபத்தில் வாழும் மந்தேஹரென்னும் அசுரர்கள் உக்ரமான தவத்தைச்செய்து பிரமனிடத்து வரம்பெற்று அதனாற் செருக்கடைந்து எப்பொழுதும் ஸூர்யனை வளைந்து எதிர்த்துத் தடுத்துப் போர் செய்கின்றனர்: அந்தணர் முதலியோர் செலுத்தும் அர்க்கியத்தின் ஆற்றலால் ஸூர்ய மண்டலத்திலிடையே ஒரு செந்தீ எழுந்து ஜ்வலிக்க, (விளக்கில் விட்டில்போல்) அத்தீயில் அவ்வசுரர்கள் விழுந்துமாள்வர்.

## 104. வாசவதத்தை தலைக்காலன் பின்சென்றது

[சிறிய திருமடலில் காணும் கதை.]

ஸுபந்து என்னுமொரு மஹாகவியால் இயற்றப்பட்ட **வாஸவதத்தா** என்று ப்ரஸித்தமான ஸம்ஸ்க்ருத—ஆக்யாயிகாப்ரபந்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்ட வாஸவதத்தை யென்ற கதாநாயகிதான் சிறிய திருமடலில் உதாஹரிக்கப்பட்டவளென்று பலர் ப்ரமித்திருக்கின்றனர். அந்த வாஸவதத்தை கவியினால் கல்பித்துக் கொள்ளப்பட்டவளேயன்றி ஒரு புராண நாயகியல்லள்; காதம்பரி, மாலதி, வஸந்தா என்று சில வ்யக்திகளைக் கவிகள் தாமே கல்பித்துக்கொண்டு நாவல் போன்ற க்ரந்தங்களை எழுதினாற்போல் ஸுபந்துகவியும் வாஸவதத்தை யென்ற பெயரால் ஒரு வ்யக்தியைக் கல்பித்துச்கொண்டு தனது புத்தி சமத்காரத்தால் ஒரு கதை எழுதிவைத்தான். அர்வாசீநமாகிய அந்த நூலில் வருணிக்கப்பட்ட வாஸவதத்தை திருமடலில் உதாஹரிக்கப்பட்டவளல்லள்; அந்த வாசவதத்தையின் சரிதையே வேறு. அவள் ஒரு சாப விசேஷத்தால் கல்லுருவமடைந்ததாகவும் தனது காதலனாகிய கந்தர்ப்பகேதுவின் கரஸ்பர்சத்தாலே சாபம் நீங்கிப் பெண்ணுருவம் பெற்று அக்காதலனைக் கூடி மகிழ்ந்ததாகவும் அதிற் சொல்லப்பட்டுள்ளது. திருமடலில் ஆழ்வார் எடுத்துக்காட்டும் வாஸவதத்தையின் சரிதை அங்ஙனன்று; காதலனும் அப்பெயருடையனல்லன், "தோழிமாருடைய பெரிய திரளைக் கடுக விட்டு, விலங்கிட்டிருக்கிற வத்ஸராஜன் பின்னே போனாள்" என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்துள்ளமையால், இவளது காதலனுடைய பெயர் வத்ஸராஜனென்றும், இவளது வரலாறே வேறுவகையானதென்றும் நன்கு விளங்கக் குறையில்லை. இவளுடைய சரித்திரம் ஏதோ ஒரு புராணத்தில் கூறப்பட்டிருக்கவேணும்; ஸ்ரீமஹாபாரதம் முதலிய சில புராண இதிஹாஸங்களை ஆராய்ந்து பார்த்ததில் அடியேனுடைய சிற்றறிவிற்கு இவளுடைய வரலாறு எட்டவில்லை. இவளது கணவனான வத்ஸராஜனுடைய பெயர் மாத்திரம் மஹாபாரதத்தில் ஒரு மூலையில் படிக்கப்பட்டுள்ளது.

எங்கேயெனில்; ஆதிபர்வத்தில் த்ரௌபதியின் ஸ்வயம்வரத்திற்காகத் திரண்ட அரசர்களின் பெயர்களைச் சொல்லிவரும் ப்ரகரணத்தில், இருநூற்றோராமத்தியாயத்தில் இருபத்திரண்டாம் ச்லோகத்தில் [வத்ஸராஜச்ச மதிமாந்] என்றுள்ளதுகாண்க, அந்த வத்ஸராஜனே திருமடலில் "தாரார் தடந்தோள் தளைக்காலன்" என்று ப்ரதிபாதிக்கப்பட்டானாகக் கொள்க. இந்த வரலாறு விரிவாக வந்தவிடத்தே கண்டுகொள்க. அரும்பதவுரைகாரரொருவர்—"வாஸவதத்தையான ராஜபுத்ரி வத்ஸராஜனென்பானோடே ஸங்கதையாக, அவனை ராஜா சிறையிலே வைக்க, அவனையுங் கூட்டிக்கொண்டு அவன் பின்னே போனாளென்கிற கதை" என்றெழுதி வைத்திருக்கக் காண்கிறோமித்தனை. ஆனால், "கதாஸரித்ஸாகரம்" என்கிற வடமொழிப் புத்தகமொன்றில் பன்னிரண்டாவது தரங்கத்தில் இந்த வாஸவதத்தையின் சரித்திரம் இவ்விடத்திற்குச் சிறிது பொருத்தமாக மிகவும் விரிவாயெழுதப்பட்டுள்ளது; கண்டுகொள்க. அப்புத்தகத்திற்கு எந்தப் புராணம் மூலமென்று ஆராயவேண்டும்.

## 105. வேகவதி யென்பாள் தன் கணவனுடன் சேர்ந்தது

[பெரிய திருமடலில் காணும் கதை.]

வேகவதி என்னும் தெய்வமாதின் சரிதையை எடுத்துக் காட்டுகிறார் பெரிய திருமடலில். சிறிய திருமடலிற் சொல்லப்பட்ட வாஸவதத்தையின் சரித்திரத்துக்கு மூலமாகிய புராணம் இன்னதென்று தெரியாதது போலவே இவ்வேகவதியின் சரிதைக்கு மூலமான புராணமும் இன்னதென்று தெரியவில்லை. தமிழ்நாடுகளில் ப்ரஸித்தமான பெருங்கதை என்ற தொகுதியில் உதயணன் சரித்திரப் பகுதியில் இத்தெய்வமாதுகளின் வரலாறு ஒருவிதமாக எழுதப்பட்டுள்ளது. வடமொழியிலும் கதாஸரித்ஸாகரம் என்ற கதைப்புத்தகத்தில் இவர்களின் சரித்திரம் சொல்லப்பட்டுள்ளது. பிற்காலத்தவர்கள் எழுதிய அப்புத்தகங்களை ஆழ்வார் ஸ்ரீஸூக்திகட்கு மூலமாகச் சொல்லவொண்ணாது. கதைப்போக்கிலும் வேறுபாடு உள்ளதுபோலும். ஆகையாலே இக்கதையை இங்கு விரித்துரைக்க விரும்புகின்றிலோம்.

அழகிற் சிறந்த வேகவதி என்னுமோர் தேவகன்னிகை தனது கணவன் முகத்திலே தான் விழிக்கவொண்ணாதபடி தன்னைத் தனது தமையன் தடைசெய்து இழுத்துக்கொண்டு போக, அவள் அவனை லக்ஷியம் பண்ணாமல் திரஸ்கரித்து உதறித் தள்ளிவிட்டுத் தனது காதலன் ஒரு போர்க்களத்திலே யுத்தம் செய்துகொண்டிருப்பதாகத் தெரிந்து அங்கே போய் 'இப்படித்தானா என்னை நீ கைவிட்டுத் திரிவது!' என்று தார்க்காணித்து அந்தப் போர்க்களத்திலே பலருமறிய அவன் கையைப் பிடித்திழுத்துத் தன்னூர்க்குக் கொண்டு சென்று இஷ்டமான போகங்களை அனுபவித்து வாழ்ந்தாள்—என்பதாக இவளது கதை ஏற்படுகிறது. இதன் விரிவை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

## 106. பன்னகராயன் மடப்பாவை பார்த்தனைப் புணர்ந்தது

[இதுவும் பெரிய திருமடலில் காணும் கதை.]

அர்ஜுனன் தீர்த்த யாத்திரையாகச் செல்லும்போது ஸ்நாநஞ்செய்யக் கங்கையில் இறங்கி நீராடிக் கரையேறப் புகும்போது உலூபி யென்னும் நாககன்னிகை அவனைக்கண்டு காமமோர்றுமடைந்து ரமிக்க இவனைத் தண்ணீரினுள்ளே இழுத்துக்கொண்டுசெல்ல இவனும் உள்ளேசென்று 'நீ யார்? என்னை எதுக்காக இங்கே கொணர்ந்தாய்? என்று கேட்க, அவ்வுலூபி 'ஐராவத குலத்திற் பிறந்த கௌரவ்யனென்னும் ஸர்ப்பராஜனுடைய பெண் நான், உன்னைக் கண்டவாறே மன்மத பாணங்களுக்கு இலக்கானேன்; எப்படியாவது நீ

என்னைப் புணர்ந்து மகிழ்விக்க வேணும்' என்று வேண்ட; அதற்கு அர்ஜுநன் 'அம்மா! நான் இப்போது ஸம்வத்ஸர ப்ரஹ்மசர்ய வ்ரதத்தில் நிஷ்டனாயிருக்கிறேன்; ஆகையால் எங்ஙனே புணர்ச்சி செய்வேன்? உனது விருப்பை நிறைவேற்ற வேணுமென்கிற ஆசையும் எனக்கு உளது; என்செய்வேன்? என் விரதமும் கெடாமல் உன் விருப்பமும் பழுதுபடாமல் காரியமாகும்படியான உபாயத்தை நீயே சொல்' என்ன, அதற்கு அவ்வுலூபிகை 'உன் விரதத்தின் வரலாறு எனக்குத் தெரியும்; நான் காம வேதனையைத் தாங்கமுடியாது உன்னைச் சரணமடைகிறேன்; அடைக்கலம் புகுந்தவர்களைக் கைவிடுதல் அதர்மமன்றோ; என்னை ரக்ஷிப்பதற்காக நீ புணர்ச்சி செய்வாயாகில் இது உன் வ்ரதத்தைக் கெடுக்கமாட்டாது; என்னைக் கைவிடுவாயாகில் இப்போதே என் உயிர் அற்றொழியும்படி பாராய்' என்று மிக்க ஆர்த்தியுடன் சொல்ல, அர்ஜுநன் அதற்கிணங்கி அன்றிரவு அவளோடே கலந்திருந்து இராவாந் என்கிற அழகிய ஒருபுத்திரனையும் அவளிடத்திற் பிறப்பித்து மீண்டுசென்றனன்— என்கிற கதை மஹாபாரதத்தில் ஆதிபர்வத்தில் இருநூற்று முப்பத்துநான்காமத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது.

## 107. உஷை அநிருத்தனைப் புணர்ந்தது

[இதுவும் பெரிய திருமடலில் காணும் கதை.]

பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்தவனான பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷை யென்பவள், ஒருநாள் ஒரு புருஷனோடு தான் கூடியதாகக் கனாக்கண்டு, அவனிடத்தில் மிக்க ஆசைபற்றியவளாய்த் தன் உயிர்த்தோழியான சித்ரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து, அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு, 'அவனைப் பெறுதற்கு உபாயஞ் செய்யவேண்டும்' என்று அத்தோழியை வேண்ட, அவள் தன் யோகவித்தை மஹிமையினால் த்வாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டு வந்து அந்தப்புரத்திலே விட, உஷை அவனோடு போகங்களை அநுபவித்து வந்தாள் என்கிற கதை அறியத்தக்கது. (இதற்குமேல் நடந்த வரலாறு வாணனைத் தோள் துணித்த வரலாற்றில் காணத்தக்கது.)

## 108. பார்வதி பரமசிவனைத் தவஞ்செய்து பெற்றது

[இதுவும் பெரிய திருமடலில் காணும் கதை.]

**"சிவபிரான் தக்கன் வேள்வி தகர்த்தது"** என்னுங் கதையிற்கண்ட விவரணத்தின்படி ருத்ர பத்நியானவள் அக்நியிலே சரீரத்யாகம் பண்ணிவிட்ட பிறகு மலையரசனாகிய ஹிமவானுக்குப் பெண்ணாய்ப் பிறந்து [பர்வத புத்ரீ என்னுங் காரணத்தால்] பார்வதியென்று பெயர் பெற்று அப்பிறப்பிலும் அந்தப் பரமசிவனையே கணவனாகப் பெறவேணுமென்று ஆசைகொண்டு கடுந்தவம் புரிந்து அத்தவத்தின் பயனாக அங்ஙனமே மனோரதம் நிறைவேறி மகிழ்ந்தாள்.

மற்றொரு ஸமயத்திலும் பார்வதி தவம் புரிந்ததுண்டு; முன்பொரு காலத்திற் கைலாஸ மலையிலே சிவபிரானும் தானும் ஏகாஸநத்தில் நெருக்கமாக வீற்றிருந்தபொழுது ப்ருங்கி யென்னும் மாமுனி சிவனைமாத்திரம் பிரதக்ஷிணஞ் செய்யவிரும்பி ஒரு வண்டுவடிவமெடுத்து அந்த ஆஸனத்தை இடையிலே துளைத்துக்கொண்டு அதன் வழியாய் நுழைந்து சென்று அம்பிகையை விட்டுச் சிவனை மாத்திரம் பிரதக்ஷிணஞ் செய்ய, அது கண்ட பார்வதி தேவி தன் பதியைநோக்கி 'முனிவன் என்னைப் பிரதக்ஷிணஞ் செய்யாமைக்குக் காரணம் என்ன? என்று கேட்க, அதற்குச் சிவன் 'இம்மை மறுமைகளில் இஷ்டஸித்திபெற விரும்பு

மவர்கள் உன்னை வழிபடுவார்கள்; முத்திபெற விரும்புமவர்கள் என்னை வழிபடுவார்கள்; இது நூல் துணிபு' என்று சொல்ல, அது கேட்ட பார்வதி 'இறைவன் வடிவத்தைப் பிரிந்து தனியே யிருந்ததனாலன்றோ எனக்கு இவ்விழிவு நேர்ந்தது' என்று வருந்தி, தான் சிவபிரானைவிட்டுப் பிரியாதிருக்குமாறு கருதி, புண்ணிய க்ஷேத்திரமான கேதாரத்திற் சென்று தவம் புரிந்து வரம்பெற்று அப்பிரானது வடிவத்திலே வாமபாகத்தைத் தனக்கு இடமாக அடைந்து அவ்வடிவிலேயே தான் ஒற்றுமைப்பட்டு நின்றனள் என்று சைவ புராணங்களிற் சொல்லிப்போரும் கதையுமுண்டு.

## 109. பாண்டியநாடன் மேருமலை முடியில் மகரகேது நாட்டியது

[பெரியாழ்வார் திருமொழியில் 5—4—7 பாட்டிலுள்ள கதை.]

பாண்டியகுலத்துத் தலைவனாயிருந்த ஒரு அரசன் தனது நாட்டில் நின்றும் மஹாமேருகிரியளவும் வழியிலுள்ள காடுகளைக் களைந்து, பகைவர்களைப் பாற்றித் தனக்கும் தனது பரிஜனங்களுக்கும் நடை எளிதாம்படி பெருவழியாக்கிக்கொண்டு சென்று, தனது வெற்றி தோற்றும்படி அம்மேருகிரியின் சிகரத்தில் தனது மகரகேதுவை நாட்டிப்போயினன்.

## 110. மலயத்வஜராஜன் திருமாலிருஞ்சோலையில் மண்டியது

[பெரியாழ்வார் திருமொழியில் 4—2—7. பாட்டின் பிற்பாதியிலுள்ள
கதை இது.]

அகஸ்தியமுனிவன் வீற்றிருக்கும் மலய பர்வதத்திற்சென்று 'தர்மமே நடத்தக்கடவேன்" என்று மலயபர்வதத்தை யெழுதிக் கொடியெடுத்த 'மலயத்வஜன்' என்ற அரசன் தேரேறிக் கங்கைநீராடப் போகாநிற்கச் செய்தே, *மதிதவழ் குடுமியளவிலே சென்றவாறே தேர் வடக்கு ஓடாமல் நிற்க, அவ்வரசன் அவ்விடத்திலே தேரை நிறுத்தி, 'இங்கே தீர்த்த விசேஷமும் எம்பெருமானும் ஸந்நிதிபண்ணி யிருக்கவேணும்" என்று நினைத்து இறங்கி ஆராய்ந்து பார்க்க, அவ்விடத்தில் நித்யஸந்நிஹிதரான அழகர் அவ்வரசனை நோக்கி, 'இவ்வாற்றிலே நீராடு" என்று நியமித்தருள, நாமங்கேட்டுணர்ந்து நீராட வேண்டுகையால் இவ்வாற்றுக்குப் பெயர் என்?" என்று அரசன் கேட்க, முன்பு நாம் உலகளந்தபோது பிரமன் திருவடி விளக்கின காலத்தில் நம் பாதச்சிலம்பில் நீர் இதிலே தெறித்துச் 'சிலம்பாறு' என்று பெயர்பெற்றது என்று அழகர் அருளிச்செய்ய, அதுகேட்ட அரசன் அவ்வாற்றில் நீராடி, கங்காஸ்நாநவிருப்பத்தையுந் தவிர்ந்து அத்திருமாலிருஞ்சோலைமலையிற் றானே பேரன்பு பூண்டிருந்தனன்.

## 111. மல்லிகை மாமாலையால் பிராட்டி பெருமானைக் கட்டியது

(பெரியாழ்வார் திருமொழியில் 3—10—2 பாட்டில்மட்டும் அநுஸந்திக்கப்பட்ட கதை)

அயோத்தியிலிருந்த காலத்தில் பிராட்டியும் பெருமானும் ராத்ரி வேளையில் ஏகாந்தமான இடத்தில் உல்லாஸமாக இருக்கையில், பிரணய ரோஷத்தினால் பிராட்டி பெருமானை மல்லிகைமாலையைக்கொண்டு கட்டியதை அநுமான் அடையாளமாகக் கூறுவதாகப் பெரியாழ்வார் அருளிச் செய்கிறார். இந்த வ்ருத்தாந்தம் இதிஹாஸ புராணங்களில் இல்லையென்றும் ஆழ்வார் தாமே ஸாக்ஷாத்கரித்ததென்றும் பெரியோர் கூறுவர்.)

## 112. க்ஷத்ரபந்து பரகதி கண்டது

(திருமாலையில் நான்காவது பாட்டில் மட்டும் அநுஸந்திக்கப்பட்ட கதை இது.)

மிகக்கொடிய நடத்தைகளையுடையனாய், பல்வகைப் பாவங்களும் உருவெடுத்து வந்தன னென்னும்படி மஹாபாபியான **க்ஷத்ரபந்து** என்பானொருவன் இருந்தான்; அவன் தனது கொடுமையினால் தாய்தந்தை மக்கள் மித்திரர் அனைவராலும் கைவிடப்பட்டவனாய், காட்டிலே திரிந்துகொண்டு ஜீவஹிம்ஸையினால் வயிறுவளர்த்து வந்தான். இங்ஙனம் நெடுநாள் சென்றவளவில், ஒருநாள் ஒரு மாமுனிவர் கொடிய வெய்யில் வேளையில் வழிபோகா நிற்கையில் வழிதப்பி, இப்பாவி திரியுங் கானகத்திலே புகுந்து இவனது கண்ணுக்கு இலக்காயினர். அவரைக்கண்டதும் அவருடைய பரிதாபத்தைக் கண்ட இவனுக்குத் தன்னையுமறியாமல் அம்முனிவர் விஷயத்திற் காருண்யமுண்டாகி, 'மாமுனிவரே! இஃது உம்முடைய வழியன்றே; வழிதப்பிவந்தீர்போலும்; உற்றுநோக்கிப்பாரும்' என்று முனிவரை நோக்கிக் கூற, அவரும் உணர்ந்து, பொறுக்க முடியாத தாஹத்தையுடையராய் ஒரு தடாகத்தைத் தேடிச்செல்லுகையில் அருகே ஒரு அழகிய பொய்கையைக்கண்டு, தாபமிகுதியால் சடக்கென அக்குளத்திற்போய் விழுந்திட்டார். அப்போது அருகிருந்த க்ஷத்ரபந்து தனது கையிலிருந்த வில்லையும் அம்புகளையும் எறிந்துவிட்டு, அம்முனிவரைப் பிடித்துத் தூக்கித் தேற்றித் தாமரைக் கிழங்குகளை உணவாகக்கொடுத்து விடாயைப் போக்கி மகிழ்வித்தான். பிறகு அவர் கரைமீதேறி ஒரு மரத்தடியில் உட்கார, அவரது கால்களின் நோவுதீர நன்றாகப் பிடித்து உபசாரங்களைச் செய்த க்ஷத்ரபந்துவை நோக்கி அம்முனிவர், 'பேருபகாரம்புரிந்த பெரியோனே! யாருடைய சிறந்த குலத்திற் பிறந்தவன் நீ? உனது வரலாறுகளைக் கேட்க விரும்புகிறேன்' என்ன; அதுகேட்ட அவனும் 'முனிவர்கோமானே! நான் ஸூர்யவம்சத்தில் **விச்வரதன்** என்பவற்கு மகனாய்த்தோன்றியவன், என்று தொடங்கித் தனது கொடுமைகளையெல்லாம் ஒன்றும் ஒளிக்காமல் உள்ளபடி சொல்ல; அவற்றைச் செவியுற்ற முனிவர் இவனை நல்வழியிற் செலுத்தவேணுமென்ற கருத்துக்கொண்டு 'அப்பா! இனி இத்தீய குணங்களையெல்லாம் விட்டிட்டு ஜீவகாருண்யத்தையே பரமதர்மமாகக் கடைப்பிடிக்க உன்னாலாகாதோ?, என்று கேட்க; அதற்கு அவன் 'காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம என்னும் தீக்குணங்கட்குப் பிறப்பிடமான நான் அவற்றைவிட்டுப் பிரிந்து ஒரு க்ஷணகாலமும் இருக்ககில்லேன்; என் மனம் என்வசமன்று; இது தவிர வேறு நியமமுண்டாகில் சிரமேற்கொள்ளக் காத்திருக்கிறேன், என்ன; எப்படியாவது இவனை வழிபடுத்த வேணுமென்னும் பேரவாக்கொண்ட முனிவர் 'இது மாட்டாயாகில், எப்போதும் **கோவிந்த! கோவிந்த!** என்று சொல்லிக்கொண்டிருக்கவாவது உன்னால் முடியுமோ? இருமினாலும் தும்மினாலும் **கோவிந்த!** என்றே சொல்லிக்கொண்டிருப்பாயாகில் உனக்கு மிக்க நன்மையுண்டாம், என்று சொல்லிவிட்டுப் போயினர். அது முதலாக க்ஷத்ரபந்து கோவிந்த நாமத்தை இடைவிடாது ஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருந்தான். சிலகாலங் கழித்து அவன் மரணமடைந்து அந்தணர் குலத்தில் பூர்வஜந்ம ஸ்மரணத்துடன் பிறந்தான். உடனே அவனுக்கு இக்கொடிய ஸம்ஸாரத்தில் மிக்க நிர்வேதம் உண்டாயிற்று. இப்படிப்பட்ட உத்தமோத்தமமான ப்ராஹ்மண குலத்தில் எனக்குப்பிறவி நேர்ந்ததும் பூர்வஜந்ம ஸ்மரணமுண்டானதும் நான் முன்பு பண்ணின கோவிந்தநாமஸங்கீர்த்தனத்தின் பயனன்றோ? ஆகவே எனக்கு மேலான நன்மையை விளைத்த அந்த ஸ்ரீகோவிந்தனையே நான் ஆராதனஞ்செய்து, * திண்டாவழும்புஞ் செந்நீருஞ் சீயுநரம்புஞ் செறிதசையும் வேண்டா நாற்றமிகு முடலைவிட்டு* மாயவன்சேற்றுள்ளற் பொய்ந்நிலத்தைக் கடந்து நலமந்தமில்லதோர் நாடாகிய பரமபதத்தை அடையக்கடவேன என்பதாகத் துணிந்து அங்ஙனமே செய்து பரமபாகவதனாகி வீடுபெற்றனன்.

## 113. நமனும் முற்கலனும் பேசினது

(திருமாலையில் 12-ஆவது பாட்டில்மட்டும் அநுஸந்திக்கப்பட்ட கதை இ௲)

முத்கலோபாக்யாநம் ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலே தொண்ணூறாவது அத்யாயத்திற் கூறப்பட்டுள்ளது. அதன் சுருக்கம் வருமாறு. முத்கலனென்பவன் பெரும்பாவிகளில் தலைவன்; அவன் ஒருநாள் கோதாநம் பண்ணும்போது, “க்ருஷ்ணாய” என்று சொல்லி தாநஞ் செய்தான். பின்பு அவன் மாண்ட பிறகு யமகிங்கரர் வந்து நெருக்கி அவனை யமன் பக்கலிலே கொண்டு செல்ல. யமன் இவனை எதிர்கொண்டு ஸம்பாவனை செய்தான். அதுகண்ட முத்கலன், “உன்னுடைய படர்கள் என்னை நெருக்கிக் கொண்டுவராநிற்க, நீ என்னை கௌரவிப்பதற்கு என்ன காரணம்?” என்றுகேட்க; “உன்னுடைய மேன்மையை அவர்களுமறிந்திலர், நீயுமறிந்திலை,—க்ருஷ்ண நாமத்தை நீ ஒருகால் சொன்னாய் காண்!” என்று யமன் அதனைப் புகழ்ந்துகூற, இப்படி ப்ரஸக்தாநு ப்ரஸக்தமான இந்த ஸம்வாதம் நரகாநுபவம் பண்ணுகிறவர்களுடைய காதிலே விழுந்தவாறே அந்த நரகந்தானே துக்காநுபவத்திற்குரிய நிலமாயிருந்த நிலைமாறி ஆநந்தாநுபவ நிலமாய்விட்டதென்றால் இத்திருநாமத்தின் வைபவம் எப்படிப்பட்டதாயிருக்க வேணும்?” “என்னை நீ ஸத்கரிப்பதற்குக் காரணமென்ன?” என்று முத்கலன் கேட்க, “முன்பு க்ருஷ்ணநாமம் சொன்னாய்” என்று யமன் உத்தரமுரைத்த இவ்வளவேயாய்த்துப் பிறந்தது; யமன் தனக்குப்பாவநமாக அத்திருநாமத்தை உச்சரித்தவனல்லன் முற்கலன் ப்ரார்த்திக்க அவனுக்கு உபதேசித்தவனுமல்லன்; நரகாநுபவம் செய்கிறவர்களின் காதிலே இதுவிழுந்து அவர்கள் உய்வுபெறவேணுமென்று நினைத்துச் சொன்னவனுமல்லன்; இனி இதனைக் கேட்டவர்களோ பாபம் பண்ணுகிற ஸமயத்திலே அநுதபித்து மீண்டு ப்ராயச்சித்தம் செய்துகொள்ளக் கூடிய காலத்திலே கேட்டவர்களல்லர்; பாபத்தினுடைய பலன்களை அநுபவிக்கும்போதாயிற்றுக் கேட்டது. அப்போது தானும் இச்சையோடு கேட்டாருமல்லர்; யாத்ருச்சிகமாகத் திருநாமம் செவிப்பட்ட வித்தனையே; இப்படிப்பட்ட திருநாமமே இவ்வளவு பெருமையுடைத்தானால், பின்னை என் சொல்லவேண்டும்? ... ... ... ... ... *

—

ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசாரியர் எழுதிய

திவ்ய ப்ரபந்த பகவத்கதாம்ருதம்

முற்றுப்பெற்றது.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

———

யுனைடெட் அச்சகம், காஞ்சிபுரம்.

# திருவேங்கடமுடையான் மஹோத்ஸவம்.

(ப்ர—அ.)

நிகழும் புரட்டாசித் திங்களில் ஹஸ்த நக்ஷத்திரத்தில் தொடங்கித் திருவோண நன்னாளில் அவபிரதமும் த்வஜாவரோஹணமுமாகப் பெற்ற திருவேங்கடமுடையான் மஹோத்ஸவத்தை ஒன்றிரண்டு நாள் உடனிருந்து அநுபவிக்க ப்ராப்தமாயிற்று. திருவேங்கடமுடையானுடைய ஐச்வரியமும் ஸாம்ராஜ்யமும் ஆண்டுதோறும் திங்கள் தோறும் (கிம் பஹுநா?) க்ஷணந்தோறும் அபிவிருத்தி பெற்று விளங்கு மதிசயத்தைப் பற்றி என் சொல்லுவது! ‘நெஞ்சால் நினைப்பரிதால்’ என்றும், ‘வாசாமகோசரம்’ என்றும், ‘அவாங்மநஸ கோசரம்’ என்றும் சில சொற்களுண்டே; அவற்றுக்கு ஸத்தியமாகவும் முக்கியமாகவும் இதுதான் இலக்கு என்னத் தட்டில்லை. திருவரங்கச் செல்வனாரான பெரிய பெருமாளுடைய விபூதி விஸ்தாரங்கள் அப்ரமேயங்களாய் ஈடு மெடுப்புமில்லாதவையாய் விளங்கா நிற்பது தனிப்பட்ட விஷயம். ப்ராகார கோபுரமண்டபங்களின் ஸம்ருத்திகளும் வீதி நதி விபவங்களும் திருநாட்டிலும் காணக் கிடைக்கமாட்டாதவையன்றோ. நம் ஆசார்ய ஸார்வபௌமர்களனைவரும் படுகாடு கிடந்த விடமென்னு மேற்றும் அநிதர ஸாதாரணமன்றோ அரங்கநகர்க்கு, அஃதிருக்க,

சிலவாண்டுகட்கு முன்பு லக்ஷாதிகாரியாயிருந்த திருவேங்கடமுடையான் இப்போது கோடீச்வரராக விளங்கா நின்றார். “தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம்” என்று திருவரங்கம் பெரியகோயிலைப் பற்றியருளிச் செய்தது போலத் திருவேங்கடத்தைப் பற்றி ஒருவரும் பேசியிருக்கவில்லை. *கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்* எப்பாடும் வேடுவளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே* என்றும் *குறவர் மாதர்களோடு வண்டு குறிஞ்சி மருளிசை பாடும் வேங்கடம்* என்றும் இப்படிகளிலேதான் பேசியிருந்தார்கள். இப்போது பலவாண்டுகளாகவே தென்னாடும் வடநாடும் மட்டுமன்றிக்கே நாற்றிசையு மெண்டிசையும் நைமித்திகமாகவன்றியே நித்தியமாகவே வந்து தொழுதேத்தியிறைஞ்சு மதிசயம் எம்மனோருரைக்குந் தரமன்று.

“कलौ वेङ्कटनायकः– கலௌ வேங்கடநாயக:” என்கிற புராண வசனம் கலியுகம் தோன்றுவதற்கு முன்னமே தோன்றியதென்று பெரியார் கூறுவர். தெலுங்கு பாஷையில் ஒரு பழமொழி வழங்குவதுண்டு “ஸங்கடமண்டே வெங்கடஸாமி” என்று. ஏதேனும் ஸங்கடம் யாருக்குத் தோன்றினாலும் வெங்கடஸாமி யென்று திருவேங்கடமுடையானை நினைத்தவாறே தொலைந்து போம் என்பது இதன் கருத்து. கலியுகத் தொடக்கத்தில் திருவவதரித்தவரான நம்மாழ்வார் தம்முடைய முதற் பிரபந்தமான திருவிருத்தத்தில் மேலே கூறிய பழமொழியை ஒரு பாட்டில் அற்புதமாக நினைப்பூட்டியுள்ளார்: அப்பாசுரத்தைச் சிறிது விவரிக்க விரும்புகிறோம்;

“உறுகின்ற கன்மங்கள் மேலன வோர்ப்பிலராய்* இவளைப்
பெறுகின்ற தாயர் மெய்ந்நொந்து பெறார் கொல்? துழாய் குழல்வாய்த்

MAH... ADHYAYA
...RY.

துறுகின்றிலர் தொல் வேங்கடமாட்டவும் சூழ்கின்றிலர்
இறுகின்றதாலிவளாகம் * மெல்லாவி யெரிகொள்ளவே.''

இப்பிரபந்தம் ச்ருங்கார தோரணியிலன்றோ பெரும்பாலும் செல்லுகின்றது. பராங்குச நாயகி பரமபுருஷன் விஷயமான வேட்கை நோய் கொண்டு மேனி மெலிந்து வடிவு வேறுபட, அது நோக்கிய தாய்மார் 'மாயப் போர்த் தேர்ப்பாகனூர்க்கு இவள் சிந்தை துழாய் திசைக்கின்றது: வானோர் தலைமகனும் சிராயின தெய்வ நன்னோயிது' என்று தெளியாமல் க்ஷுத்ர தெய்வத்தால் வந்த நோயென்று மாறாகக் கருதி விபரீதமான சில பரிஹார முறைகளைச் செய்விக்க, நோயொன்றும் மருந்தொன்றுமாதலால் சிறிதும் ஏற்றிராத விதனை நோக்கிய தோழி அத் தாய்மார் செவிப்பட முன்னிலைப் படர்க்கையாகக் கூறிய பாசுரம் இது. இந்தத் தெய்வ நன்னோய்க்கு இருவகையான பரிஹார முணர்த்தப்படுகின்ற திங்கு :

[துழாய் குழல்வாய்த் துறுகின்றிலர்.] எம்பெருமானது திருத்துழாயைக் கொணர்ந்து முடியிலே சூட்டினால் தீரும் : அது செய்கின்றிலர் : [தொல்லை வேங்கடமாட்டவும் சூழ்கின்றிலர்] 'இவள் நோய் தீர்ந்தால் திருவேங்கடமுடையானுக்கு இன்னது செய்கிறேன்" என்று ஒரு பிரார்த்தனை செய்துகொண்டு ஒரு மஞ்சள் சீலையை முடிந்து வைக்கலாமே. அதுவும் செய்கின்றிலர் என்பது இங்குப் பரமதாற்பரியம். ''வேங்கடம் ஆட்டவும்'' என்றதற்குப் பலவகையாகக் கருத்துரைக்கலாம். 'ஆட்டவும்' என்றது 'நீராட்டவும்' என்றபடியாய், திருமலையை இவள் தாபந் தீர்ப்பதற்கு உரியதொரு பொய்கையாக நினைத்துச் சொல்லுகிறதாகக் கொள்ளலாம்: அன்றி, இவள் நோய் தீர்ந்தால் இவளைத் திருவேங்கடமலைக்கு அழைத்து வருகிறேனென்று சொல்லிக் கொள்ளலாம்: அப்படியும் சொல்லிக் கொள்ளவில்லையே! என்றதாகவுமாம்.

ஆக, திருவேங்க்டமுடையான் நோய்தீர்க்கும் பெருமாளென்பதும் பிரார்த்தனைகள் செய்து கொள்ளுதற்குரிய பெருமாளென்பதும் ஆழ்வார் திருவாக்கிலிருந்தே விளங்கிற்றென்பது உணர்க.

முக்கியமாக ஒரு விஷயம். ஆஸ்திகர்கள் மெலிந்து நாஸ்திகர்கள் மலிந்த காலமிது! என்று பெரும்பாலர் கொண்டிருக்கிறார்கள். இது மருளென்றே சொல்லலாம்படி திருவேங்கடமுடையான் பெருமை காண்கிறது. எண்ணிறந்த ஜனங்கள் திருமலையப்பன் ஸேவைக்கு நாடோறும் பின்மாலை நான்குமணியிலிருந்து இரவு பத்து மணி வரைக்கும் க்யூ லிஸ்டத்தில் நின்று படும்பாட்டைக் காணுமிடத்து, ஆழ்வார் *பொலிக பொலிக வில் ''அரக்கரசுரர் பிறந்திருள்ளிரேல்'' என்றாப்போலே ஆஸுரப்ரக்ருதிகளைத் தடவிப் பிடிக்கவேண்டும் படியாகவன்றோ இருக்கிறது. பக்த ஜனங்கள் க்யூலிஸ்டத்தில் நிற்பதென்கிற விது நாளடைவில் திருமலையடிவாரத்திலிருந்தே ஏற்படுமோ! என்றும் நினைக்கவேண்டியதாகிறது.

இத்தகைய திருவேங்கடச் செல்வனுருடைய பெரு மேன்மைகளுக்குப் பல்லாண்டு பாடுவோம். ... ... ... ... ...

ஸ்ரீ:

# திருவேங்கடமுடையான் ஸேவையும் சித்ர கவித்வமும்.

நிகழும் புரட்டாசி மாதத்தில் திருமலையில் நடந்த திருவேங்கடமுடையானுத்ஸவத்தில் 26—9—1960 தேதியன்று பெரிய திருவடி மஹோத்ஸவம் ஸேவிக்கத் திருமலை விடைகொண்டிருந்தேன். அவ்விடத்தில் காசி ப்ராந்தத்திலிருந்து ஒரு வித்வான் அடியேனுக்கு நெடுநாளைய நண்பர் வந்திருந்தார். அவரோடு வார்த்தையாடுகையில் அவர் ஒன்று விரும்பினார். (அதாவது) முத்ராலங்காரரீதியில் சித்ரகவித்வமாக உடனே ஒரு ச்லோகம் ஆசுகவித்வமாகவும் சொல்லவேணும்; ச்லோகம் திருவேங்கடமுடையானைத் துதிப்பதாக அமையவேணும். அதில் இன்றைய வருஷம் மாஸம் தேதி திதி வாரம் நக்ஷத்திரம் எல்லாம் ஸூசனையாக அமைந்திருக்கவேண்டும் என்றார். அப்போதே அவ்வண்ணமாகவே சார்தூலவிக்ரீடித விருத்தத்தில் ஒரு ச்லோகம் சொன்னேன். 1960-வது வருடம், (ஸெப்டம்பர் என்கிற) ஒன்பதாவது மாதம், 26 ஆம் தேதி, சார்வரி ஸூ புரட்டாசி மீ அநூராதா நக்ஷத்திரம் ஷஷ்டி திதி திங்கட்கிழமை ஆகிய அன்றைய வருஷ மாஸ தேதி திதி வார நக்ஷத்ரங்களெல்லாம் அமைய வைத்தும் திருவேங்கடமுடையானைத் துதித்தும் அந்த ச்லோகம் அமைக்கப்பட்டது. அது வருமாறு,

एकं ब्रह्म कलौ युगे नवनवोन्मेषोज्ज्वलं षड्गुणै-
राढ्यं शून्यसमाधिकं नवकवीन्द्रेड्यं च षड्विंशकम् ।
शार्वर्योपभववक्त्रमम्बुजलसत्कन्योरसं राधया
श्लिष्टं स्कन्दनुतं सुधांशुसुखदं श्रीवेङ्कटेशं भजे ॥

ஏகம் ப்ரஹ்ம கலௌ யுகே நவநவோந்மேஷோஜ்ஜ்வலம் ஷட்குணை-
ராட்யம் ஶூந்யஸமாதிகம் நவகவீந்த்ரேட்யம் ச ஷட்விம்ஶகம் ।
ஶார்வர்யோபவவக்த்ரமம்புஜலஸத்கந்யோரஸம் ராதயா
ஶ்லிஷ்டம் ஸ்கந்தநுதம் ஸுதாம்ஶுஸுகதம் ஶ்ரீவேங்கடேஶம் பஜே ॥

இதில் 1960-வது வருஷம் என்பதைக் காட்டும் முந்தின நான்கு விசேஷணங்கள். ஒன்பதாவது மாதம் என்பதைக் காட்டும் ஐந்தாவது விசேஷணம். இருபத்தாறுந்தேதி யென்பதைக் காட்டும் ஆறுவது விசேஷணம். ஆக, பூர்வார்த்தத்தினால் ஆங்கில வருஷ மாஸ தேதிகள் காட்டப்பட்டன. இனி உத்தரார்த்தத்திலுள்ள ஐந்து விசேஷணங்கள் சார்வரி வருடம் புரட்டாசி மாதம் அநுஷ நக்ஷத்திரம் ஷஷ்டி திதி திங்கட்கிழமை என்றிவ்வளவையும் காட்டும். ஆகப் பதினொரு விசேஷணங்களும் திருவேங்கடமுடையானுடைய ஸ்துதியாகவும் அமைக்கப்பட்டன. இதுதான் முத்ராலங்கார வகை.

* 𑌸𑍂𑌚𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍂𑌚𑌨𑌂 𑌮𑍁𑌦𑍍𑌰𑌾 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌪𑌰𑍈𑌃 𑌪𑌦𑍈𑌃 *

என்பது சந்த்ராலோகத்திலுள்ள முத்ராலங்கார லக்ஷணம்.

இனி இந்த சுலோகம் விவரிக்கப்படுகிறது.

1. 𑌏𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌕𑌲𑍌 𑌯𑍁𑌗𑍇 — ஏகம் ப்ரஹ்ம கலௌ யுகே.

"கலௌ வேங்கட நாயக:" என்கிறபடியே இக்கலியுகத்தில் அத்விதிய தைவமானவர் திருவேங்கடமுடையானென்கிறது. 1960 ஆம் வருஷமென்று காட்ட வேண்டினபடியால் அதில் முதல் லக்கமான (1) என்பது இதில் காட்டப்பட்டதாயிற்று.

2. 𑌨𑌵𑌨𑌵𑍋𑌨𑍍𑌮𑍇𑌷𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌂 — நவநவோந்மேஷோஜ்வலம்.

இந்த விசேஷணத்தில் (9) என்கிற லக்கம் காட்டப்படுகிறது. "மீனோடாமை கேழலரி குறளாய் முன்னுமிராமனாய்த் தானாய், பின்னுமிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியுமானான் தன்னை" [பெரிய திருமொழி. 8—8—10] என்கிறபடியே தசாவதாரங்கள் செய்பவனான எம்பெருமான் கல்கி யவதாரத்தை பவிஷ்யத்தாக வைத்து இதுகாறும் ஒன்பது திருவவதாரங்களையே செய்தருப்பவனென்கிறது. (நவநவ) என்கிற இரட்டிப்பு — * எப்பொழுதும் நாள் திங்களாண்டூழி யூழி தொறும் அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே * என்னும்படியான அநுபவத்தைக் காட்டும். திருவேங்கடமுடையான் புதிது புதிதான திருக்கோலங்கள் கொண்டு ஸேவை ஸாதிக்கும்படி சொல்லிற்றாயிற்று.

3. 𑌷𑌡𑍍𑌗𑍁𑌣𑍈𑌰𑌾𑌢𑍍𑌯𑌂 — ஷட்குணைராட்யம்.

1960ல் (6) என்கிற லக்கம் காட்டவேண்டி இந்த விசேஷணம் அமைந்தது. ஞானம் ஶக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு என்கிற ஆறு குணங்களுக்கு ஹமென்று பெயர். இக்குணங்களை யுடையவர் ஹவான். இச் சொல்லுக்குத் திருவேங்கடமுடையானே கொள்கலமென்றதாயிற்று.

4. 𑌶𑍂𑌨𑍍𑌯𑌸𑌮𑌾𑌧𑌿𑌕𑌂 — ஶூந்யஸமாதிகம்.

1960ல் மூன்று லக்கங்கள் காட்டியாயிற்று. இனி நான்காவது லக்கம் பூஜ்யமென்று காட்டவேணும். அதற்கு சூந்யமென்றும் பெயராதலால் அச் சொல்லையிட்டு அது காட்டப்படுகிறது. * 𑌨 𑌤𑌤𑍍𑌸𑌮𑌶𑍍𑌚𑌾𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌶𑍍𑌚 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 * என்கிற உபநிஷத்தின்படியும், * ஒத்தார்மிக்காரையிலையாய மாமாயா * என்கிற திருவாய்மொழியின்படியும் ஒத்தாரும் மிக்காருமில்லாதவன் திருவேங்கடமுடையானென்கை.

𑌸𑌮𑌶𑍍𑌚 𑌅𑌧𑌿𑌕𑌶𑍍𑌚 𑌸𑌮𑌾𑌧𑌿𑌕𑍌 ; 𑌶𑍂𑌨𑍍𑌯𑍌 𑌸𑌮𑌾𑌧𑌿𑌕𑍌 𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍.

ஆக இந்நான்கு விசேஷணங்களினால் 1960 ஆம் வருஷமென்று காட்டிற்றாயிற்று,

5. 𑌨𑌵𑌕𑌵𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌡𑍍𑌯𑌮𑍍— நவகவீந்த்ரேட்யம்.

ஒன்பதாவது மாதமென்று ஸூசிப்பிக்கப்படுகிறது. ஆழ்வார்களொன்பதின்மராலே பாடப் பெற்றவரென்கை. ஸ்ரீரங்கநாதன் பதின்மர்பாடும் பெருமாளென்றும் திருவேங்கடமுடையான் ஒன்பதின்மர்பாடும் பெருமாளென்றும் ப்ரஸித்தியுள்ளது. "சோழியன் கெடுத்தான் காணும்" என்கிற பழமொழியின்படி தொண்டரடிப்பொடியாழ்வாரொருவர் பாடிற்றிலராதலால் 𑌨𑌵𑌭𑌿𑌃 𑌕𑌵𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌰𑍀𑌡𑍍𑌯ரானார் திருமலையப்பன்.

6. 𑌷𑌡𑍍𑌵𑌿𑌂𑌶𑌕𑌮𑍍— ஷட்விம்சகம்.

(ஸெப்டம்பர் மீ) இருபத்தாறுந்தேதியன்று என்பது ஸூசிப்பிக்கப்படுகிறது. *பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்காரமனங்களே* என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின்படி அசேதந தத்துவங்கள் இருபத்துநான்காய், ஜீவாத்மா இருபத்தைந்தாவது தத்துவமாய், பரமபுருஷன் இருபத்தாறுவது தத்துவமாயிருப்பனென்று நூற்கொள்கை. திருவாய்மொழியில் (1—10—2) *எண்ணிலும் வரும்* என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரப்படியில்,

> "𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 தத்வமாயிருக்கும் அசித்து: பஞ்சவிம்ஶகன் ஆத்மா; ஷட்விம்ஶகன் ஈச்வரன் ... ... ..."

என்றருளிச் செய்திருப்பதும் காண்க.

ஆக பூர்வார்த்தத்தால் ஆங்கில வருஷ மாஸ தேதிகள் தெரிவிக்கப்பட்டனவாயின.

இனி உத்தரார்த்தத்தினால் வைதிகப்ரக்ரியையில் வருஷம் மாஸம் நக்ஷத்ரம் திதி கிழமை ஆகிய இவை தெரிவிக்கப்படுகின்றன.

1. 𑌶𑌰𑍍𑌵𑌰𑍍𑌯𑍋𑌪𑌮𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑍍— சர்வர்யோபமவக்த்ரம்.

சார்வரி வருஷம் காட்டப்படுகிறதிங்கு. திருவேங்கடமுடையான் திங்கள் திருமுகத்தானென்பது பொருள். 𑌶𑌰𑍍𑌵𑌰𑍀 என்று ராத்ரிக்குப் பெயர். 𑌶𑌰𑍍𑌵𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑌤𑌿𑌃—𑌶𑌰𑍍𑌵𑌰𑍀𑌪𑌃; இரவுக்குத் தலைவனாகிய சந்திரனென்கை. அவனோடு உவமைகொண்ட திருமுகத்தையுடையவனென்கை.

2. 𑌅𑌮𑍍𑌬𑍁𑌜𑌲𑌸𑌤𑍍𑌕𑌨𑍍𑌯𑍋𑌰𑌸𑌮𑍍— அம்புஜலஸந்கந்யோரஸம்.

கந்யாமாஸம் (புரட்டாசி மீ) காட்டப்படுகிறதிங்கு. அலர்மேல்மங்கையுறைமார்பனென்பது பொருள். 𑌅𑌮𑍍𑌬𑍁𑌜𑍇 𑌲𑌸𑌨𑍍𑌤𑍀 𑌕𑌨𑍍𑌯𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌉𑌰𑌸𑌿, 𑌤𑌤𑍍.

3. 𑌰𑌾𑌧𑌯𑌾𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌮𑍍— ராதயாச்லிஷ்டம்.

அன்று அநூராதா நக்ஷத்திரமென்று காட்டப்படுகிறது. "𑌰𑌾𑌧𑌾 𑌵𑌿𑌶𑌾𑌖𑌾" என்கிற அமரகோஶத்தின்படி **ராதா** என்று விசாகத்திற்குப் பெயராயினும் நாமைக தேஶ

க்ரஹணமாகக் கொள்க. அல்லது, 'அநூராதா' என்கிற பெயரானது விசாகத்தை யநுஸரித்ததென்று பொருள்படுவதனால் இங்கு "ராதயாச்லிஷ்டம்" என்னுமளவும் அநூராதா நக்ஷத்ர ஸூசகமென்று கொள்வதில் குறையொன்றுமில்லை. ராதயாச்லிஷ்டமென்றது விசாகத்தை யநுஸரித்ததென்றபடியால் அநூராதாவைக் காட்டிநிற்கும். எம்பெருமான் ராதையோடு கூடினவன் என்பது வாஸ்தவார்த்தம். ராதாரமணனென்றபடி.

4. 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌨𑍁𑌤𑌃— ஸ்கந்தநுதம்.

இன்று ஷஷ்டீ திதி யென்று காட்டுகிறது. ஸ்கந்தன் ஷஷ்டீ தேவதை. "மருவிய மயிலினனறுமுகனிவனே" (திருப்பள்ளியெழுச்சி) என்கிறபடியே ஸுப்ரஹ்மண்யாதிகள் வந்து துதிக்க நின்றவன் திருமலையப்பனென்கை. *பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய* என்றும், *நோலாதாற்றேனுனபாதம் காணவென்னும் நுண்ணுணர்வின் நீலார்கண்டத்தம்மானும் நிறை நான்முகனும்* என்றும் திருவேங்கடமுடையான் ஸன்னிதியில் தொழவருமவர்களைச் சொல்லுமிடங்களில் ஸ்கந்தனும் அவர்ஜநீயனேயன்றோ.

5. 𑌸𑍁𑌧𑌾𑌂𑌶𑍁𑌸𑍁𑌖𑌦𑌃— ஸுதாம்சுஸுகதம்.

அன்று திங்கட்கிழமை யென்று காட்டுகிறது இதனால். ஸுதாம்சுவென்று சந்திரனுக்குப் பெயர். மதிகோள்விடுத்த தேவனென்பது வாஸ்தவார்த்தம். *தேம்பலிளந்திங்கள் சிறைவிடுத்து* என்றும் *மாமதிகோள் முன்னம்விடுத்த முகில் வண்ணன்* என்றும் ஆழ்வார்களருளிச் செய்வது காண்க. இங்கு 𑌸𑍁𑌧𑌾𑌂𑌶𑍁𑌸𑍁𑌖𑌦𑌤𑍍𑌵𑌯𑍋𑌗𑌂 சுக்லபக்ஷமென்பதையும் காட்டும்.

6. 𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌂 𑌭𑌜𑍇— ஸ்ரீ வேங்கடேசம் பஜே.

ஆகப் பதினொரு விசேஷணங்களினால் அறிவிக்கப்படும் பெருமைகளையுடையனான திருவேங்கடமுடையானைத் தொழுகின்றேனென்றதாயிற்று.

அன்பர்களே! இந்த ச்லோகத்தை அர்த்தவிவரணத்தோடுங்கூட அந்த காமீவித்வான் கேட்டுப் பரமானந்த மெய்தினார். திருவேங்கடமுடையான் ஸன்னிதியில் இத்தகைய வாசாகைங்கர்யம் பண்ண ப்ராப்தமாயிற்றே யென்று அடியேனும் 𑌯𑌥𑍇𑌷𑍍𑌟𑌮𑍍 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌨𑍁 மானேன்.

॥ वेङ्कटेशः प्रसीदतु ॥

ஸ்ரீரஸ்து.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சி, பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய

# தேசிக ஹ்ருதயம்

ஸ்ரீமத்தேசிகஹ்ருதயம் நாம க்ரந்தம் யதாமதி ।
ஸம்ப்ரதாயவிசுத்த்யர்த்தம் ஸங்க்ரஹேண விதந்மஹே ॥
ஸம்ப்ரதாயே விசுத்தே ஹ்ருதி நிஹிததியா ...
... தேசிக ... ॥

வேதக் கடல்கடைந்த வேதாந்த வாசிரியன்
போதக் கடலாய்ப் புனிதமாய்க்—கோதற்ற
தேன்மொழிகள் தந்தருளித் தீய பொருள்திரளைத்
தானெழித்தான் தாளே சரண்.

## — முன்னுரை —

"நாயொவஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேயப்ரபந்தை: த்ராதம் ஸம்யக்யதீந்த்ரைரிதமகிலதம: கர்சநம் தர்சநம் ந:=நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேய ப்ரபந்தைஸ் த்ராதம் ஸம்யக் யதீந்த்ரைரிதமகிலதம: கர்சநம் தர்சநம் ந:" என்கிறபடியே, நம்மாழ்வார் திருவருளால் ஸகலார்த்த விசேஷங்களையும் நிதிபெற்முற் போலே பெற்றுவாழ்ந்த ஸ்ரீமந்நாதமுனிகள் அநுஸந்தித்துக்கொண்டிருந்த ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்களை மணக்கால்நம்பி வழியாக லபிக்கப்பெற்ற ஆளவந்தார் அவ்வர்த்த விசேஷங்களைத் தம்முடைய திவ்யகடாக்ஷ மூலமாகவும் பெரியநம்பி திருமலைநம்பி திருக்கோட்டியூர்நம்பி திருமாலையாண்டான் முதலான ஸ்வசிஷ்யவர்க்க மூலமாகவும் எம்பெருமானுர் பக்கலிலே தேக்கியருள, அவை எம்பார் ஆழ்வான் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை முதலான ஆசாரியர்களின் வழியாகவும், திருக்குருகைப்பிரான்பிள்ளான் கிடாம்பியாச்சான் எங்களாழ்வான் நடாதூரம்மாள் முதலான ஆசார்யர்களின் வழியாகவும் ப்ரவஹித்து அஸ்மதாதி ஸம்ஸாரி சேதநஸமுஜ்ஜீவந ஸாதனங்களாய் விளங்கி வாரா நின்றன.

மேலே நிர்தேசித்த ஆசார்யவர்யர்கள் பேசிற்றே பேசும் ஏககண்டர்களாகையாலே இவர்களின் திவ்யஸூக்திகளிலே அர்த்தபேதம் காண்கைக்கு அவகாசமில்லை. ஸ்வல்ப யோஜனுபேதம் கண்டால் காணலாமத்தனை. இவ்வுண்மையை யுணராதார் சிலர், வேதாந்த

வாசிரியர் தனிப்பட்டிருந்து வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருந்தாரென்றும், நம்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் முதலானோர் கொண்டிருந்த கொள்கைகளை அசாஸ்த்ரீயங்களென்று கண்டித்துவிட்டாரென்றும் சொல்லிப்போருவது ஆதாரமற்றதென்பதையும், நவீனர்கள் ஆதரித்துவருகிற அர்த்தங்களுக்கும் ஆசரித்துப் போருகிற அனுஷ்டானங்களுக்கும் வேதாந்ததேசிக க்ரந்தங்களில் ஆதாரமில்லையென்பதையும் ஸாரமாகவும் ஸம்க்ஷேபமாகவும் உபபாதிப்போமிதில். .... .... .... முன்னுரை முற்றும்.

### உபய ஸம்ப்ரதாயத்திலுமுள்ள முக்கியமான ஒருவாசி.

தென்னாசார்ய ஸம்பிரதாயத்தில் ஆதரிக்கப்படும் அர்த்தங்கள் எவை? வடகலை ஸம்பிரதாயத்தில் ஆதரிக்கப்படும் அர்த்தங்கள் எவை? என்று பலர் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். அவற்றை இன்னவை யின்னவையென்று அடுத்தபடியாகத் தெரிவிப்போம். அதற்கு முன்னே ஸாரமாக வொன்று தெரிவிக்கிறோம். நற்கதி பெறவேணுமென்கிற நசை இருகலையார்க்கும் துல்யமாயிருக்கச் செய்தேயும், நாம் பேறு பெறுவதற்கு முக்கிய ஸாதனம் பகவத் ப்ரவ்ருத்தியே யல்லது ஸ்வப்ரவ்ருத்தியன்று என்பது தென்னாசாரியர்களின் கொள்கை. நம்முடைய ப்ரவ்ருத்தியினால்தான் நாம் பேறு பெற முடியுமென்பது மற்றையோர்களின் கொள்கை. இதுதான் இரு கலையார்க்கும் தலையான பேதமென்று ஸாரமாகக் கொள்ளக்கடவது. மற்றைப்படியான பேதங்களாவன ;—

| தென்கலை ஸம்ப்ரதாயார்த்தங்கள். | வடகலை ஸம்ப்ரதாயார்த்தங்கள். |
|---|---|
| 1. பகவத்க்ருபை நிர்ஹேதுகம். | 1. பகவத் க்ருபை ஸஹேதுகம். |
| 2. சேதநனைப்பெறுவது ஈச்வரனுக்குப் பேறு | 2. ஈச்வரனைப்பெறுவது சேதநனுக்குப் பேறு |
| 3. பரகத ஸ்வீகாரமே நன்று | 3. ஸ்வகதஸ்வீகாரமேதான் உள்ளது |
| 4. ப்ரபத்தி அநுபாயம் | 4. ப்ரபத்தி உபாயமும் |
| 5. பிராட்டிக்குப் புருஷகாரத்வமாத்ரமேயுள்ளது; உபாயத்வமில்லை. | 5. பிராட்டிக்கு புருஷகாரத்வத்தோடு மோக்ஷப்ரதாத்ருத்வமுமுண்டு |
| 6. பிராட்டிக்கு அணுத்வமேயுள்ளது | 6. பிராட்டிக்கு விபுத்வமே யுள்ளது |
| 7. பிராட்டிக்கு ஜகத்காரணத்வமில்லை | 7. பிராட்டிக்கு ஜகத்காரணத்வமுண்டு |
| 8. தயை என்பது பரது:க்கது:க்கித்வம் | 8. தயை பரது:க நிராசிகீர்ஷா ரூபம் |
| 9. வாத்ஸல்யம் தோஷபோக்த்ருதா ரூபம் | 9 வாத்ஸல்யம் தோஷாதர்சித்வ ரூபம் |
| 10. ப்ரபந்நனுக்கு விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றம் | 10 விஹிதவிஷய ப்ரவ்ருத்தி அவர்ஜநீயமாகையாலே தத்ஸஜ்ஜநம் ஸமாதேயம். |
| 11. எம்பெருமானுடைய வ்யாப்தி பரிஸமாப்ய வர்த்தநம் | 11. எம்பெருமானுக்கு பரிஸமாப்ய வர்த்தநம் கிடையாது |
| 12. ஜாதி நசிக்கும் | 12. ஜாதி நசிக்கமாட்டாது |
| 13. உபாயாந்தரங்கள் ஸ்வரூப விருத்தம் | 13. உபாயாந்தரங்கள் ஸ்வரூபாநுரூபமே. |
| 14. கைவல்ய மோக்ஷம் புநராவ்ருத்தியற்றது | 14. கைவல்ய மோக்ஷத்திற்குப் புநராவ்ருத்தியுண்டு |
| 15. நமஸ்காரத்தில் ஸக்ருதாவ்ருத்திபோதும் | 15. அஸக்ருந் நமஸ்காரம் வேண்டும் |
| 16. அத்ருஷ்டார்த்தாநுஷ்டானமென்று தனியே யில்லை | 16. அத்ருஷ்டார்த்தாநுஷ்டானம் தனிப்பட ஆவச்யகம் |

இப்படியொரு பதினாறு விஷயங்களை வைத்துக்கொள்வோம். "இப்பதினாறு விஷயங்களில்தானா பேதம்? வேறுகிடையாதா?" என்று கேட்கவேண்டாம். மற்றும் சிலவோ பலவோ இருக்கலாம்; அவை முக்யமானவை யல்லவென்று விடுக்கத் தக்கன. முக்கியமான விஷயங்களை அபேக்ஷிக்கும்போது அவாந்தர விஷயங்களாகக் கிளரும் பேதங்களை இங்குக் கொள்ளவில்லை.

மேலே காட்டிய பேதவிஷயங்களில் தென்கலை ஸம்ப்ரதாயாசார்யங்களென்று நாம் காட்டியுள்ள அர்த்தங்களை தென்னாசார்யர்களென்று ப்ரஸித்தர்களான ஸதாசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளிற் போலவே ஸ்ரீமந் நிகமாந்த மஹாகுரு திவ்யஸூக்திகளிலும் காண்கிறோம். இதை மட்டும் விளக்கவே இச்சிறு நூல் அவதரிக்கின்றது. இதராசார்ய ஸூக்திகளையும் காட்டி விஸ்தரம் செய்யாமல் தேசிகஸூக்திகளை மட்டுமே காட்டி நிற்போமிதில்.

## 1 பகவத்க்ருபை நிர்ஹேதுகம்

பகவத்க்ருபையை நிர்ஹேதுகமென்று கொண்டால் ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வருமென்றும் வைஷம்ய நைர்க்ருண்யாவாப்தியைப் பரிஹரிக்கின்ற "வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" என்கிற ப்ரஹ்ம ஸூத்ரம் விரோதிக்குமென்றும் சில வாதங்கள் கிளம்புவதுண்டு. உலகத்திலுள்ள ஸகல ப்ராணிகளிடத்திலும் எம்பெருமான் நிர்ஹேதுகமாகவே அருள் செய்வதாகக் கூறினால்தான் மேற்சொன்ன வாதங்களுக்கு ப்ரஸக்தியுண்டு. அப்படி யாரும் கொள்வதில்லை. அதிகாரிவிசேஷங்களிடத்தில் நிர்ஹேதுகமாக அருள்செய்கிறானென்றே ஸகலாசார்யர்களுமருளிச்செய்வது. இக் கொள்கையில் தேசிகன் வேறுபாடு கொண்டவரல்லர். நிர்ஹேதுக க்ருபையைப் பற்றிப் பல விடங்களிற் பேசுகிறார். சில விடங்கள் காட்டினால் போதுமன்றோ.

பரமபத ஸோபாநத்தில்—"அஜ்ஞாதயாத்ருச்சிக ஆநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமந்ய புத்திமூல ஸுக்ருத விசேஷங்களை வியாஜமாகக்கொண்டு விசேஷ கடாக்ஷம் பண்ணி." என்றருளிச்செய்தார், இதில் "வ்யாஜமாகக் கோண்டு" என்றதையும் ஸஹியாமல் அவ்யாஜ க்ருபையையும் அருளிச்செய்து போந்தார். அது எங்கே யென்னில்;

திருவாய்மொழியில் முதற்பத்தில் * பொருமா நீள்படையென்கிற பத்தாவது பதிகத்திற்கு ஆறாயிரப்படியிலில்லாத விஷயம் அவ்வாறாயிரப்படிக்குப் பிற்பட்ட வியாக்கியானங்களிலுள்ளது. அதாவது, இப்பதிகத்தினால் ஆழ்வார் எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபாப்ரபாவத்தை யநுபவிக்கிறாரென்று பட்டர் நிர்வஹித்தருளினதாகக் காட்டப்பட்டது. அந்த நிர்வாஹத்தையே தேசிகன் ஆதரித்து த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவளியில் * கூடாவிஷ்டம் வரஸ்வாஸ் * என்கிற ச்லோகத்தில் "ஸ்வத்ராணே சாஸஹாவாஸ்" என்றருளிச் செய்தார். நிர்ஹேதுகக்ருபா விசிஷ்டனாகையாலே என்றபடி. இவ்விடத்தில் இரண்டு விசேஷங்கள். (1) எம்பெருமானை நிர்ஹேதுகக்ருபாவானாகச் சொன்னது ஒன்று; (2) இவ்விஷயம் ஆறாயிரப்படியில் இல்லாமல் அதற்குப்பின் தோன்றிய வியாக்கியானங்களில் மட்டும் விளங்காநிற்கவும் இதையே ஆதரித்துப் பரிக்ரஹித்தது மற்றொன்று. இவற்றால் தேறும் பரமார்த்தம் யாதெனில்; ஆறாயிரப்படிக்குப் பின் தோன்றியுள்ள வியாக்கியானங்

களிற் காணும் அபார்த்தங்களை யெல்லாம் நிகமபரிமளமென்னும் மஹாநாஸிகா பரிமள க்ரந்தத்தில் களைந்தொழித்தார் நம் தேசிகனென்று ஆகாச தாண்டவமாடுமவர்களின் குஜல் பிதங்களைக் கிள்ளிக் களைந்ததேயாம். இந்த வட்டத்தில் முந்துற முன்னமெடுத்துக்காட்டிய பரமபத ஸோபான ஸ்ரீ ஸூக்தியானது, ஸ்ரீவசந பூஷணம் நான்காவது ப்ரகரணம் ஆரம்பத்தி லுள்ளதான

> "த்ரிபாத்விபூதியிலே பரிபூர்ணனுபவம் நடவாநிற்க......என்னூரைச்சொன்னாய் என் பேரைச் சொன்னாய் என்னடியாரை நோக்கினாய் அவர்கள் விடாயைத் தீர்த்தாய் அவர்களுக்கொதுங்க நிழலைக் கொடுத்தாய் என்னுமாபோலே சிலவற்றை ஏறிட்டு மடிமாங்காயிட்டு.......ஜன்ம பரம்பரைகள் தோறும் யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகமென்கிற ஸுக்ருதவிசேஷங் களைக் கற்பித்துக்கொண்டு தானே அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்"

என்கிற ஆச்சரியமான சூர்ணையை தேசிகன் அநவரதம் சிந்தனை செய்து போந்தவரென்பதைப் பேதையருமறியும்படி அமைந்துள்ளது.

தயாசதகத்தில் * நிஷாதாநாம் நேதா கபிகுலபதிஃ காபி ஶபரீ குசேலஃ குப்ஜா ஸா வ்ரஜயுவதயோ மால்யக்ருதிதி । அமீஷாம் நிம்நத்வம் வ்ருஷகிரிபதேருந்நதிமபி ப்ரஸூதைர்தோஷைஃ ப்ரஸமயஸி ஸம்ஸ்கந்தவே! ஸமயஸி ॥ * என்கிற ச்லோக ரத்நத்தின் பொருளை உபந்யஸிக்கப் புக்கால் குஹப்பெருமாள் ஸுக்ரீவ மஹாராஜர் சபரி குசேலர் கூனி ஆய்ச்சியர் மாலாகாரர் என்னுமிவர்கள் இராமபிரானுடையவும் கண்ணபிரானுடையவும் நிர்ஹேதுக கருணைக்கு இலக்கானவர்கள் என்றல்லது வேறொன்று சொல்லிப் பிழைக்க வொண்ணாதாயிற்று.

ஸ்தோத்ர க்ரந்தங்களில் பணிப்பது ப்ரஶம்ஸைகபரமாதலால் அதுதன்னை ஶாஸ்த்ரார்த்தமாகக் கொள்ள வொண்ணாதென்று கூறவருவர்கள். முநிவாஹந போக மென்று பெயரிட்டு ரஹஸ்ய க்ரந்தமாகப் பணித்த அமலனாதிபிரான் வியாக்கியானத்தின் உபக்ரம ஸ்ரீஸூக்தி இது காணீர்;—"காரணவிசேஷம் இன்னதென்று அறுதியிட அரிதா யிருப்பதொரு பகவத் கடாக்ஷத்தாலே ஸ்வதந்த்ரமான......." என்று. இவ்விஷயத்தில் இவ்வளவே போதும். ஒரு ஹேதுவில்லாமல் எம்பெருமான் அருள் செய்யமாட்டா னென்கிற வாதம் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டிகளில் விலை செல்லுமதன்று. ... .... *

## 2. சேதநனைப் பெறுவது ஈச்வரனுக்குப் பேறு.

ஸம்பிரதாயத்தில் சேதநலாபம் ஈச்வரனுக்குப்பேறு? ஈச்வரலாபம் சேதனனுக்குப் பேறு? என்கிற விசாரம் தலைமை பெற்றிருக்கும். இந்த விசாரத்தின் முடிவை உள்ளபடி தெரிந்துகொள்வதே மிகச் சிறக்கும். சாஸ்த்ரங்களை மேலெழப் பார்க்கும்போது 'ஈச்வரனை அடைவது சேதநனுக்குப் பேறு' என்பதாகவே தோற்றி நிற்கும். ஈச்வரனை ப்ராப்ய னென்றும், சேதநனை ப்ராப்தாவென்றும் ஸ்பஷ்டமாகப் பல விடங்களிலும் சொல்லி யிருக் கையாலே 'ஈச்வரலாபம் சேதநனுக்குப் புருஷார்த்தம்' என்றே க்ரஹிக்கநேரும். நவீநர்கள் இப்படியே மதமாகக் கொண்டிருக்கிறார்கள். "ஈச்வரனுக்குத்தான் சேதநலாபம் புருஷார்த் தம்" என்பது ஸித்தாந்த ஸாரம். தேசிகனுடைய திருவுள்ளமும் சேதநலாபம் ஈச்வரனுக்குப்

பேறு என்பதேயாம். இதனை அவர் கீதாபாஷ்யதாத்பர்ய சந்த்ரிகையில் வெகு அழகாகக் காட்டி யுள்ளார். கீதையில் ஒன்பதாமத்யாயத்தின் முடிவிலுள்ள * மந்மநா பவ * என்கிற ச்லோகத்தின் பாஷ்யத்திற்கு விவரணமெழுதுகையில்— "ஆச்ரித ஸம்ரக்ஷணம் ஸ்வலாபம் மத்வா ப்ரவர்த்ததே" [ஆச்ரித ஸம்ரக்ஷணம் ஸ்வலாபம் மத்வா ப்ரவர்த்ததே] என்றருளியிருக்கிறார்.

சேதநனைப் பெறுவது ஈச்வரனுக்குப் பேறு என்றால் இவ்வர்த்தம் ஹ்ருதயத்தில் அவகாஹிப்பது சிரமமேயாகும். ஆனாலும் எளிதாக உணர்த்துகிறோம். சேதநன் முக்தனாகிப் பரமபதத்தில் சென்றபின் அங்கு என்ன கோஷிக்கிறானென்பதை நம் உபநிஷத்து தெளிவிக்கின்றது. [அஹமந்ந மஹமந்ந மஹமந்நம்] என்பது முக்தனுடைய முதல் வார்த்தை. 'பகவானுக்கு நான் அன்னமாகிறேன்' என்று ஒரு தடவைக்கு மூன்று தடவையாக இதில் சொல்லுகிறது. இதனால், ஈச்வரனானவன் சேதனனைப் பெற்று அநுபவிக்க வேணுமென்று பெரும்பசி கொண்டிருந்தானென்றும், அப்பசி முக்தாத்மாவால் முதலில் தீருகிறதென்றும் ஸ்பஷ்டமாகிறது. இல்லையாகில், * அஹமந்நம் * என்று ஓதவேண்டியதில்லையன்றோ.

"கஸ்தூரி கிடைப்பது மிகவும் அரிதாயிருக்கின்றது" என்று ஒருவன் சொன்னால் அவன் கஸ்தூரியைப் பெறுவதற்கு மிகவும் முயற்சி செய்பவன் என்பது எளிதாகத் தெரிய வருமன்றோ. இதேபோல, எம்பெருமான் "வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்று கீதையில் சொல்லுகிறான். 'எல்லாம் கண்ணன்' என்றிருக்கிற மஹாத்மா எனக்குக் கிடைக்கவில்லையே யென்கிற வருத்தத்தையன்றோ இதில் காட்டுகிறான். எம்பெருமான்தான் அப்படிப்பட்ட சேதனனைப் பெறுதற்குப் பெருமுயற்சி செய்பவனென்பது இதனால் ஸ்பஷ்டமாக விளங்கவில்லையா?

ஒரு வஸ்துவைப் பெறுவதனால் ஆனந்தம் உண்டாவது எவனுக்கோ அவன்தான் பேறு பெறுபவன் என்பது நிர்விவாதமான விஷயம். சேதநனைப் பெறுவதனால் ஆநந்திப்பவன் எம்பெருமானென்பது தேறிவிட்டால் அவனே லாபமுடையவன் என்பதும் அநாயாஸமாகத் தேறிவிடுமன்றோ. ஆளவந்தார் * கதா ஹமைகாந்திக நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாதஜீவித: * என்றார். இதில் ப்ரஹர்ஷயிஷ்யாமி என்கிற க்ரியாபதம் ஆச்சரியமாக அமைந்தது. உனக்குத் தொண்டு செய்து நான் எப்போது ஆநந்திக்கப்போகிறேனென்னாமல் 'நான் எப்போது உன்னை ஆநந்திப்பிக்கப்போகிறேன்' என்றார். ணிஜந்தப்ரயோகம் நோக்குக. இங்கு வியாக்கியானத்தில்—"தன்னுடைய அநுவ்ருத்தியால் ஈச்வரனுக்குப் பிறக்கும் ஹர்ஷமேயிறே சேதநனுக்கு ப்ராப்யம்" என்று பெரியவாச்சான்பிள்ளையருளிச் செய்ததை ஸ்தோத்ரபாஷ்யத்தில் தேசிகன் மொழிபெயர்த்தார்—"[ப்ரஹர்ஷயிஷ்யாமி] ஸ்வகைங்கர்யேண த்வாம் ப்ரஹ்ருஷ்டம் கரிஷ்யாமி; த்வத் ப்ரஹர்ஷ ஏவ ஹி மம ப்ராப்ய: ப்ரயோஜநமிதி பாவ:" என்று. இவற்றுக்கெல்லாம் சிகரமாக விளங்குவது "நது பரமபுருஷ: ஸத்யஸங்கல்ப: அத்யர்த்தப்ரிய ஜ்ஞாநிநம் லப்த்வா ஆநந்தயிஷ்யதி" என்கிற ஸ்ரீபாஷ்ய ஸூக்தி. இதில் "பரமபுருஷ: ஜ்ஞாநிநம் லப்த்வா" என்றது உயிரான ஸூக்தியன்றோ. இதையே தேசிகன் பலவிடங்களில் பலமுகமாக விவரித்தருளினாராயிற்று.

ஞானங்களில் மேலெழுந்த ஞானமென்றும் ஆழ்ந்த ஞானமென்றும் இருவகையுண்டு அப்படியே விஷயங்களும் இருவகைப்பட்டிருக்கும். சேதநலாபம் பரமபுருஷனுக்குப்

பேறு என்னுமிவ்விஷயமும், பரமதஸ்வீகாரமே ப்ராப்யமென்னும் அடுத்த விஷயமும் ஆழ்ந்த ஞானத்தினுல் அறியத்தக்கவை. இவ்விஷயங்களில் ஸாதாரணாதிகளுக்கு ப்ரவேச ப்ரஸக்தியே கிடையாது. இவற்றை ஆழ்ந்து அநுபவிக்க ஸ்ரீ வைஷ்ணவர்களே இட்டுப் பிறந்தவர்கள். ஏனென்ருல், இவை ரஹஸ்யங்களில் நுட்பமாகத் தேறுமவை. ரஹஸ்யாதிகாரிகள் எம்பெருமானர்திருவடி ஸம்பந்திகளான ஸ்ரீவைஷ்ணவர்களே யல்லது மற்றையோர்களல்லர். தேசிகன் குருபரம்பராஸாரத்தில் எம்பெருமானர் இன்னரிடம் இன்னது அதிகரித்தாரென்பதைச் சொல்லுமிடத்து திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்தங்களை அதிகரித்தாரென்னுமல் சிக்ஷித்தார் என்ருர். அதிகரித்தாரென்கிற சொல்லுக்கும் சிக்ஷித்தாரென்கிற சொல்லுக்கும் நெடுவாசியுண்டு. குளத்து நீரை அப்படியே யெடுத்துப் பருகுவதற்கும் வடிக்கட்டிப்பருகுவதற்கும் வாசியில்லையா? அங்ஙனம் வடிக்கட்டின அர்த்தங்களை எம்பெருமானருடைய பரம்பரையிலே படிந்தவர்கள் ரஸிக்கத்தக்கவர்களே யொழிய மற்றையார்க்கு இவற்றின் சுவை தெரியவிரகில்லை. இவற்றை அவர்கள் தூஷிக்கிருர்களென்பதில் வியப்பில்லை. இதையிட்டும் இவர்களை நாம் ரஸிகர்களென்பது.

இராமபிரானை * சந்த்ரகாந்தாநநம் * என்ருர் முனிவர். இங்கு உபமிதஸமாஸம் கொண்டு சந்திரனைப்போலே அழகிய முகமுடையவர் பெருமாள் என்று பொருள்கூறினரொருவர். மற்ருெருவர் அப்பொருளைக் கண்டித்து, “சந்திரன்போலழகிய முகமுடையவரென்று பொருளன்று; சந்திரனிற் காட்டிலும் அழகிய முகமுடையவரென்று பொருளப்பா!” என்கிருர். சந்த்ரவத்காந்தாநநம் என்பது சிறந்ததா? சந்த்ராத்காந்தாநநம் என்பது சிறந்ததா? என்பதை ஆராயகில்லாமல் ‘உபமித ஸமாஸந்தான் சாஸ்த்ர ஸம்மதம்; பஞ்சமீதத்புருஷன் இங்குப் பொருந்தாது’ என்று சிலர் விவாதத்தை வளர்த்திக் கொண்டு கிடந்தால் ‘இந்த அரஸிக சிகாமணிகளோடு நமக்கென்ன விவாதம்? * உங்களோடெங்களிடையில்லையே* என்று நாம் விலகவேண்டியதே’ என்று நினைத்து விலகுவதே ரஸிகர்கள்பணியாம்.

இராமனுக்கு வநவாஸக்கட்டளை கைகேயியிடமிருந்து கிடைத்தபோது இராமனுடைய திருமுகச்செவ்வி எங்ஙனே யிருந்ததென்பதைத் தெரிவிக்கப் புகுந்த கம்பர் “இப்பொழுதெம்மனோரா லியம்புதற்கெளிதோ?” என்று செய்யுள் தொடங்கினர் “ஹஸிதம் பாஷிதஞ்சைவ கதிர்யா யச்ச சேஷ்டிதம் ‘தத்ஸர்வம் தர்மவீர்யேண யதாவத் ஸம்ப்ரபச்யதி” என்று உள்ளது உள்ளபடியே பேச வரம் பெற்ற வால்மீகி மஹானும் பேசாது விட்டிட்ட விஷயத்தைக் கம்பர்தாம் பேச விழிந்து “இப்பொழுதெம்மனோரா லியம்புதற்கெளிதோ?” என்றது உண்மையான வார்த்தை. “ஆழி சூழுலகமெல்லாம் பரதனேயாள நீ போய்த் தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந்தவம் மேற்கொண்டு பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணிய புனல்களாடி ஏழிரண்டாண்டின் வா வென்று” கைகேயி கூறினபோது இராமனது திருமுகச் செவ்வியிருந்தபடியை அப்போது உடனிருந்து நேராகக் கண்டவர்கள் பேசவேண்டுமே யல்லது பல பல வாயிரமாண்டுகட்குப் பின் தோன்றிச் சில பண்டிதர்களிடம் ராமாயண கதை கேட்டு ஏதோ எழுதத் தொடங்கிய நானே இதைப் பேசவல்லவன்! என்று வெறுத்து ஏடுகளையும் எழுத்தாணியையும் சேரக் கட்டி வைத்திட்டுக் கண்ணுறங்கினராம் கம்பர். பின்னர் கனவிலே தோற்றமளித்த காகுத்தன் தன் திருமுகச் செவ்வியைத் தானே காட்டிக் கொடுக்கக் கண்டவராய் உடனே யெழுந்து, அச்செய்யுளைப் பூர்த்தி செய்தனராம்; * ஒப்பதே முன்பு, பின்பு வாசகமுணரக்கேட்ட அப்பொழுதலர்ந்த

செந்தாமரையினை வென்றதம்மா! * என்றார். வநவாஸ ப்ரஸ்தாவத்திற்கு முன்பு இராமனது திருமுகம் தாமரைமலரை யொத்திருந்ததென்றும், வனவாஸக்கட்டளைபெற்றபின்பு அத் திருமுகம் அப்போதலர்ந்த செந்தாமரையை வென்றிட்டதென்றும் கூறினராயிற்று. இது அநுபவ ரஸிகர் சொல்லக்கூடிய வார்த்தையே யல்லது அநுபவ மற்றவர்கள் சொல்லக் கூடியதேயன்று. எங்ஙனே சொல்லமுடியும்? சொல்லத்தான் வாயெழும்புமோ?

இது போலவே ஸத்ஸம்ப்ரதாயவரர்கள் எம்பெருமானைப்பற்றிச் சொல்லுமவையெல் லாம் தாம் தாம் நேராக அநுபவித்துச் சொல்லுமவை. அப்படிப்பட்ட அநுபவரஸிகர்களில் தேசிகனும் ஸஹ்ருதயரே யொழிய அஹ்ருதயரல்லர். அன்னார் உருகி யுள்கனிந்து வெளியிட்ட அர்த்தவிசேஷங்களில் நவீனர்களுக்கு அவகாஹனம் ஏற்படாதது ஆச்சரியமன்று. இடை யறாத தொடர்புவந்திருந்தாலன்றோ அவ்வர்த்தச்சுவைகளில் அபிநிவேசமுண்டாகும். (2)

## 3. ஸ்வகத ஸ்வீகாரமே நன்று.

சேதநன் தான் எம்பெருமானைப் பற்றுவது ஸ்வகதஸ்வீகாரமென்றும், எம்பெருமான் தானே சேதநனை வரிப்பதானது பரகத ஸ்வீகாரமென்றும் வழங்கப்படுகின்றது. முறையே மர்க்கடகிசோர ந்யாயமென்றும் மார்ஜாரகிசோர ந்யாயமென்றும் வழங்குவர். நாம் அநு ஸந்திக்கிற த்வய மென்னும் மந்த்ரத்தில் ப்ரபத்யே என்று நாம் அவனைப் பற்றுவதாகச் சொல் லப்படுகிறதேயொழிய அவன் நம்மைப் பற்றுவதாக ஒரு மந்த்ரமும் ஏற்பட்டிருக்கவில்லை. ஆழ்வார்களும் * உன்னை நானடைந்தேன் * உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே * பற்றிலார் பற்ற நின்றானே * என்றிப்புடைகளிலே பணித்துள்ளார்களே யல்லது வேறு வகையாகப் பணித்திருக்கக் காண்கின்றிலோம். இப்படியிருக்க, ஸ்வகதஸ்வீகாரமென்று ஒன்றைப் பேசுவதும், 'நாம் பற்றும் பற்று அநிஷ்டகரம், அவன் பற்றும் பற்றே க்ஷேமங்கரம்' என்று கூறுவதும் அர்த்தமில்லாத வார்த்தைகள் என்று ஏசுவர் நவீநர். இவர்கள் ஏசுகிற ஸ்வகதஸ்வீ காரத்தை தேசிகன் நிலை நாட்டியிருக்கும் பரிசு காட்டப்படுகின்றதிங்கு.

* அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய நெறியெல்லாமெடுத்துரைத்த நிறை ஞானத்தொரு மூர்த்தி * என்னப்பட்ட பரமபுருஷன் ஸ்ரீகீதாசாஸ்த்ரமருளிச்செய்தது மஹா மஹிமம். அதற்கு நம்மிராமானுசன் பாஷ்யமருளிச்செய்ததும் அதற்கு ஸ்வாமி தேசிகன் தாத்பர்யசந்த்ரிகை பணித்ததும் பேரின்பமான பரமபாக்யம். கீதையில் எட்டாவது அத்யா யத்தில் பதினான்காவது ச்லோகம்—

அநந்யசேதா: ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶ: ।
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந: ॥
[அநந்ய சேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶ: ।
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந:.] என்பது.

"ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" என்று பகவான் தான் தனக்கு உயிர்நிலையாகக் கொண்டாடும் ஞானியானவன் தன்னை உபாஸிக்க வேண்டியபடியையும் பேறுபெறும் பரிசையும் இனியருளிச் செய்கிறான் (கண்ணபிரான்)—என்று அவதாரிகையிட்டு சுலோகத்தை வியாக்கியானித்தருளியுள்ளார் பாஷ்யகாரர். இந்த சுலோகத்தின் கருத்து என்னவென்றால்,

அர்ஜுநா!, எவன் இடைவிடாமல் எப்போதும் வேறொன்றிலும் நெஞ்சைச் செலுத்தாதவனாய் என்னையே ஸ்மரிக்கிறானோ, என்னோடு நித்ய ஸம்ச்லேஷத்தை விரும்பியிருக்கின்ற அந்த பக்தனுக்கு நான் ஸுலபன்—என்பதேயாம். இதில் [तस्याहं सुलभः], 'அவனுக்கு நான் ஸுலபன்' என்கிற பகுதிக்கு பாஷ்யம் செய்தருளி யிருக்கின்ற வகையாவது,

[तस्य नित्ययुक्तस्य–नित्ययोगं काङ्क्षमाणस्य योगिनः, अहं सुलभः–अहमेव प्राप्यः, न मद्भाव ऐश्वर्यादिकः। सुप्रापश्च, तद्वियोगम् असहमानः अहमेव तं वृणे। मत्प्राप्त्यनुगुणोपासनविपाकं तद्विरोधिनिरसनं अत्यर्थमत्प्रियत्वादिकं च अहमेव ददामीत्यर्थः। * यमेवैष वृणुते तेन लभ्यः * इति हि श्रूयते। वक्ष्यति च–* तेषां सततयुक्तानाम्........ इति।]

இவ்வளவும் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகள். (இவற்றின் பொருளாவது—) என்னோடு எப்போதும் கூடியிருக்கவேணுமென்கிற விருப்ப முடையவனுக்கு அடையத்தகுந்தவன் நானேயாகிறேன். மிக எளிதாக அடையத் தகுந்தவனுமாகிறேன் நான். (அதாவது) அவனுடைய பிரிவைப் பொறுக்க மாட்டாதவனாய் [அவனைப்பிரிந்து தரித்திருக்க மாட்டாதவனாய்] நானே அவனை வரிக்கிறேன். என்னை யடைவதற்கான உபாஸனத்தின் பரிபக்குவ நிலைமையையும், அதற்குற்ற இடையூறுகள் நீங்குதலையும், என்னிடத்தில் அதிகமான ப்ரீதி முதலியவைகளையும் நானே கொடுக்கிறேன். * नायमात्म ச்ருதியில் இவ்வர்த்தம் ப்ரஸித்தமாயிருப்பதோடு இந்த கீதையிலே மேலே பத்தாவது அத்யாயத்தில் 10, 11 ச்லோகங்களாலும் சொல்லப்படுகின்றது—என்பதாம்.

கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியை ஒவ்வொன்றாக எடுத்து விளக்குவோம். [* तद्वियोगम् असहमानः अहमेव तं वृणे *] ஞானியான சேதநனைப் பிரிந்திருப்பதை எம்பெருமான் தான் பொறுத்திருக்கமாட்டாதவனாய் தானே அந்த சேதநனை வரிப்பதாகக் கூறுகின்றவிது தான் பரமத ஸ்வீகார மென்பது.

[* मत्प्राप्त्यनुगुणोपासनविपाकं अहमेव ददामीत्यर्थः] இந்த வாக்கியமானது ஸ்வமத ஸ்வீகாரப்பற்றுசை நன்றாகக் கழிக்கிறது. இத்தலையில் விளைவதெல்லாம் எம்பெருமானுடைய க்ருஷிபலமாக விளைகின்றதேயன்றி இவன் தலையாலே விளைவித்துக் கொள்ளுமது ஒன்றுமில்லை என்கிற ஸத்ஸம்பிரதாய ஸாரார்த்தம் தெளிவிக்கப்பட்டது. இந்த இடத்தில் * नायमात्म ச்ருதியையும் எடுத்துக்காட்டியருளின பாஷ்யகாரர், பரகத ஸ்வீகாரத்திற்கு அதுவே பிரமாண மென்று நிரூபிக்கிற முகத்தாலே பிறருடைய அசட்டு வாதங்களை அகற்றினாராயிற்று.

இவ்விடத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ள திவ்ய ஸூக்திகள் தேனே பாலே கன்னலே யமுதே யத்தனை; [उक्तस्य अतिवादशङ्कापरिहाराय व्याख्यानाय श्रुतिमुदाहरति–यमेवैषेति।] என்றருளிச் செய்திருப்பது ஆழ்ந்து நோக்கத்தகக்கது.

பாஷ்யகாரரருளிச் செய்ததில் * नायमात्म ச்ருதியானது ஜீவகாடியாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்த ச்ருதிக்குப் பிறர் எழுதியுள்ள அபார்த்தங்களுக்கு ஈஷத்தும்

இடமில்லாதபடி செய்தருளியிருக்கிறார் ஸ்வாமி தாத்பர்ய சந்த்ரிகையில். சேதநன் தலையிலே ஒன்றையும் வைத்திடாமல் "ஸஹைவ தம்வரணே.......ஸஹைவ ப்ரதீக்ஷ்யதே" என்று ஒவ்வொன்றையும் எம்பெருமான்தலையிலே யாக்கி பாஷ்யகாரர் அருளிச்செய்திருப்பதை அக்காலத்தில் சிலர் அதிவாதமென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள் போலும். அது தேசிகன் திருச்செவியில் விழுந்தபடியால் அதை ஸஹித்திருக்கமாட்டாமல் "உக்தஸ்ய ஸதி வாதித்வஸம்பாவநாயா ப்ரதிஷேதாஸஹத்வமேவேதி." என்று ப்ராமாணிகமான அவதாரிகையை இட்டருளினர். பரகதஸ்வீகாரமென்பது உபநிஷத்ஸித்தமான அர்த்தமாகையாலே அதிவாதமென்று நெஞ்சாலும் நினைக்கத்தகாது என்று வெட்டொன்று துண்டிரண்டாக அருளிச்செய்தாராயிற்று தேசிகன்.

எம்பெருமானுக்குப் பெருமையாகச் சொல்லப்படுகின்ற எதையும் அதிவாதம் ஸ்துதிவாதமென்றே பிறர் ஒதுக்குகின்றவர்களாகையாலே அவர்கள் வாக்கை அவலீலையாகக் கண்டித்தொழித்தார் தேசிகன். இங்கு முக்கியமாகத் தேறினது என்னவென்றால், * நாயமாத்மா ச்ருதியில் *யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:* என்றது பரகதஸ்வீகாரந்தன்னையே யென்பதை பாஷ்யகாரரும் தேசிகனும் ஸமகண்டமாக வெளியிட்டார்களென்பதேயாம்.

இங்கு ஸாரமாகத் தெரிவிக்கவேண்டியதிவ்வளவே; * த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே * என்றும் * புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே * என்றும் நாம்பற்றுகிறோமாகக் காட்டிக்கொண்டு திருவடிகளிலே விழுந்தாலும், 'இது நாம் பற்றின பற்றன்று; எம்பெருமான் தானே பற்றுவித்தானத்தனை; அவன் நெடுநாளாகப் பண்ணிப் போந்த க்ருஷி பலித்ததத்தனை' என்கிற அநுஸந்தானம் ஊடுருவச் செல்லவேணுமென்பதேயாம். இவ்வநுஸந்தானம் ஹார்த்தமாகவும் ஸத்யமாகவுமிருந்தால் பரகதஸ்வீகாரமென்பதைப் பழிக்கவும் ஸ்வகதஸ்வீகாரமென்று வாய்திறக்கவும் அவகாஶமேயிராது. (3)

## 4. பக்தி உபாயமன்று.

எம்பெருமான் நிர்ஹேதுகமாக அருள்செய்கிறானென்பது கொண்டு நாம் வாளா இருக்ககில்லோம். "நிஜகர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித:। உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத் தேவே து தாமபீ:॥" என்று கீதார்த்தஸங்க்ரஹத்திலே ஆளவந்தாரருளிச் செய்தபடியே முறைவழுவாது செய்யக்கடவோம். "ஸ்ரீபகவதாஜ்ஞயா பகவத்கைங்கர்யரூபம்" என்று ஸங்கல்பித்துக்கொண்டு சிலபல செய்யாநின்றோம். ஸாதநாபாயஸம்பந்தர்களாய் ஸ்வயோக்யதா நிரூபணத்தாலே பக்திஸித்தியும் பெறுகிறோம். அது தனக்கு உபாயத்வமுண்டென்று சொல்லுமவர்களை முக்கியமாகக் கண்டிப்பவர் நிகமாந்த மஹா குருவேயாவர். மேலே உதாஹரித்த கீதார்த்தஸங்க்ரஹச்லோக வியாக்கியானத்தில் (ரக்ஷையில்) தேசிகனருளிச் செய்வது காணீர்;—

"ஸ்வயம் ஸாத்யோபாயக்ஷணிகஸ்ய காலாந்தரபாவிபலஸாதநத்வாநுபபத்தி
ரூபாநாத்ய நாஸ்ய ஸ்வஸ்யாபாரே தேவேக்ஷாபாயதாபத்திரபி ஸ்வாதிந்த்ரிய:,
அத: தேவஸ்யைவாராத்யஸ்ய ஸர்வநிவஹி ஸாக்ஷாதுபாய:" என்று.

இந்த வொரு ஸ்ரீஸூக்திபோதும் இவ்விஷயத்தில் தெளிவுபெற. * உபபத்தேஶ்ச *, (3-2-4) * ஃபலமத உபபத்தே: * (3-2-37.) என்கிற ப்ரஹ்மஸூத்ரங்களின் ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்வாமி விபுலமாக அருளிச்செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகளின் ஸாரமாகவே மேலே உதாஹரித்த தீதார்த்த ஸங்க்ரஹரக்ஷாஸூக்தி அமைந்தது.

ந்யாஸதஶகத்தில் "ஸ்வாமிந் ஸ்வஶேஷம் ஸ்வவஶம் ஸ்வபரத்வேந நிர்பரம், ஸ்வதத்தஸ்வதியா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மிந் ந்யஸ்யஸி மாம் ஸ்வயம்," என்னும் சுலோகத்தில் ஒன்பதின்கால் ஸ்வஶப்தப்ரயோகம் செய்தருளியுள்ளார் தேசிகன். இதனால் சேதனனுடைய முயற்சிநாற்றம் வேற அறுக்கப்படுகின்றமை யறிந்தால் உபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் வாய் திறக்க வழியில்லை. ஸாத்யோபாயமென்றால் யாரால் ஸாதிக்கப்படுமுபாயம்? என்று கேள்வி வரும். சேதனனால் ஸாதிக்கப்படுவதாகச் சொல்லியாகவேணும். இச் சொல்லை ஒன்பது வாள்கள் கொண்டு வண்டிக்கின்றதன்றே கீழே காட்டிய தேசிக சுலோகம்.

ப்ரபத்தியாவது என்ன? * ஸ்வஶக்த்யோபாயஸந்த்யாகோ ஹ்யவேதி ப்ராயச்சித்தாத்மக: ஶரணாகதி: * என்று ஶாஸ்த்ரம் கூறுகின்றது. எம்பெருமானையே உபாயமாக அத்யவஸிக்குமதுவே ப்ரபத்தியென்பது. இத்தகையதான ப்ரபத்தியானது தன்னிடத்தில் உபாயத்வபுத்தியை எங்ஙனம் ஸஹிக்கும்? ப்ரபத்தியென்கிற வஸ்து தேறும்போதே அதன் அநுபாயத்வமும் தேறியே தீரும் என்று ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் ஸ்பஷ்டமாகவருளிச் செய்கிறார். (அதில் ஜீவபரிச்சேதத்தில்) * ஊயம் கேவலஶக்தி ஶோவாயத்வப்ரதீயாத்மிகா | ஸ்வஹேதுக்ஷயிணம் ரக்ஷேத்கிம் வா நஸ்ஸஹகாரிணாம் * என்கிற சுலோகம் ஸித்தாஞ்ஜநமேயாகும். இந்த சுலோகத்தினால்—ப்ரபத்தியின் அநுபாயத்வம் யதிஶேகரஸூக்தமாணஸித்தம் என்று ஶிலாலிகிதமாக்கினபடி. ஶாஸ்த்ரஜ்ஞர்களில் தலைவரான தேசிகன் ஶாஸ்த்ரவிருத்தமாக ப்ரபத்தி உபாயமென்று நெஞ்சாலும் நினைக்கமாட்டாரன்றே.

சாஸ்த்ரங்களில் ஒன்று விதிக்கப்படுமானால் அது உபாயமாக (ஸாதனமாக) இருந்து தீரும் என்பது பொதுவானவொரு கொள்கை. உபாயமாக மாட்டாததை சாஸ்த்ரம் எதற்காக விதிக்கும்? எப்போது விதி ஏற்படுகிறதோ அப்போது விதிக்கப்படுகின்றவதின் உபாயத்வமும் கூடவே ஸித்திக்குமாதலால் சரம ச்லோகத்தில் * மாம் ஏகம் சாரணம் வ்ரஜ * என்று விதிக்கப்படுகிற ப்ரபத்திக்கு உபாயத்வம் அநிவார்யம்—என்று பிறர் நினைக்கக்கூடியதுண்டு. இதனையும் ந்யாஸ திலகமென்கிற க்ரந்தத்தில் தேசிகனே எடுத்துக்காட்டி ஸமாதானமும் வகுத்துள்ளார். * ஹேதுர் வைதே விமர்சே * என்கிற ச்லோகம் காண்க. இதன் கருத்தாவது—ப்ரபத்தியானது விதிக்கப்பட்டிருப்பதனால் உபாயமென்று சொல்லவேண்டியிருந்தாலும் இங்கு அப்படி கொள்ளவேண்டா; ஒவ்வொரு வித்யையிலும் எம்பெருமானுக்கு ஒவ்வொரு ரூபம் அறியக்கடவதாயிருக்கிற கணக்கிலே இந்த ப்ரபத்தி வித்யையில் இதராநபேக்ஷ உபாயத்வம் (பிறிதொன்றை எதிர்பாராத உபாயத்வம்) அறியத்தக்க ரூபமாதலால்—என்று இந்த ச்லோகத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ரஹஸ்யங்களிலும் இஃது உள்ளது.

இங்கு மற்றொரு வாதம். ஸித்தோபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் உபாயம் இருவகைப்படும். எம்பெருமான் ஸித்தோபாயமானாலும் ஸாத்யோபாயமாக ஒன்றை அங்கீகரித்தே யாகவேண்டுமென்பர் நவீனர்; இதற்கு மீண்டுமறிவிக்கும் ஸமாதானமாவது-ஸாத்யோபாயமென்றால் "சேதநனுடைய முயற்சியால் ஸாத்யமான உபாயம்" என்று தானே பொரு

ளாகும். உண்மையில் இது சேதநக்ருதியாலே ஸாத்யமானதா? என்று ஆராய்ந்தால் மேலெ ழுந்தரீதியில் அப்படிச் சொல்லலாமாயினும் * இசைவித்தென்னை யுன்தாளிணைக் கீழிருத்து மம்மானே * என்பதுபோன்ற பல பாசுரங்களைக் கண்டால் இது நம்முடைய முயற்சியால் ஸாத்யமன்றிக்கே ஸர்வேச்வரனுடைய க்ருஷிபலமாகவே விளையுமதாக உண்மைதெரிவதால் ஸாத்யோபாயமென்கிற வ்யபதேசமும் இதற்கு ஏலாது. இவ்விஷயம் "ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது; ஸ்ருஷ்டி அவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிபலம்" என்ற பிள்ளை லோகாசார்யருடைய ஸ்ரீஸூக்திக்குச் சார்பாக தேசிகன் *நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:* என்று ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஒன்பதாவதான உபாய விபாகாதிகாரத்தின் முகப்பில் ஸாதித்துள்ள சுலோகம் வடிக்கட்டின சாஸ்த்ரார்த்தமாகவன்றோ விளங்குகின்றது.

> "உபாய: ஸ்வப்ராப்தே: பகவதி பரஸ்தஸ்ய பஜநம்
> ப்ரஸக்தேஸ் தத்பூர்த்யை ப்ரபதநமிதி ப்ராஹ பகவாந் ।
> ததாதேர் ஆஹு: ஸம்பந்நம் ஸுக்ருத பரிபாகேந மஹதா
> நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண: ॥" என்பதாம் அந்த சுலோகம்.

இதன் பொருளை நாம் விவரிக்கவேண்டுமோ? அக்ஷரஸ்புடமான பொருளை யாரும் மாறு படுத்த முடியாது. அவனைப் பெறுதற்கு அவனே உபாயமென்னுமிடம் உபநிஷத் ஸித்தம். பக்தி ப்ரபத்திகளானவை அவன் திருவுள்ளமுகக்கைக்காகவாமவை. அந்த பக்தி ப்ரபத்திகள் அமைவது மஹத்தான ஸுக்ருதபரிபாகத்தினால்தான். அந்த ஸுக்ருதந்தானும் எளியெறும்பனை சேதநனடியாக விளைவதன்று; நிகில நிர்மாண நிபுணனான பரமபுருஷன் தானே அதற்கும் மூலகாரணமாவன்—என்பது இந்த ச்லோகத்தின் பொருள். இதில் * நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண: * என்கிற நான்காம்பாதமானது தென்னாசார்ய ஸித்தாந்த ஸர்வஸ்வமென்று கொள்ளக்கடவது. சேதனன் தலையிலே சிறு நாற்றத்தையும் ஸஹியாதே அறவே துடைத்தொழிக்கும் வார்த்தையன்றோ இது.

நிதாநமென்கிற சொல்லுக்கு என்ன பொருளென்பதை அமரகோசங்கொண்டு அறிவது. * நிதாநம் த்வாதிகாரணம் * என்றான் அமரஸிம்ஹன். சேதநன் தலையிலுள்ளதாக எந்த ஹேதுவாபாஸத்தைக்காட்டினாலும் அதுவும் பரமபுருஷனடியாகவந்ததேயொழிய இத்தலையாலேவந்தது லவலேசமுமில்லையென்று தேசிகன் கல்வெட்டாக்கி வைத்திருக்க, இதற்கு நேர் விருத்தமாகச் சொல்லிக்கொண்டு போராடுவது என்னோ? "ஸ்ருஷ்ட்யவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிபலம்" என்ற பிள்ளை லோகாசார்யருடைய ஸ்ரீ ஸூக்தியே * நிதாநம் தத்ராபி * த்யாதி ஸ்ரீஸூக்தியாக மொழிபெயர்ந்தது என்பதில் ஸந்தேஹமுண்டோ?

இப்படி ஸாரமாக எடுத்துக்காட்டப் படுகிற விஷயங்களை விட்டு விட்டு "* ரக்ஷ்யா பேக்ஷாம் ப்ரதீக்ஷதே * என்றிருக்கிறது பாருங்கள்; இத்தலையில் அபேக்ஷையைப் பரமபுருஷன் எதிர் பார்த்திருப்பதாகச் சொல்லியிருப்பதைக் காண்மின்" என்று அபூர்வ விஷயம் போலச் சொல்ல வருவர்கள் நவீநர்கள். *நிதாநம் தத்ராபி ஸ்ரீஸூக்தியின்கீழ் எந்த வசனமும் தலைகாட்டாதே புக்கொளிக்குமென்பதை மூலாகுலவாஸம்பண்ணியேயறியவேணும்.

தேசிகனுடைய திவ்ய ஸூக்திகளில் *ப்ரணதஜநவிகடீ ஸம்பாதக ப்ரணிபாதிந: பாதிந:* என்பது ஆச்சரியமானவொரு ஸூக்தி. இது எங்குளதென்பதையுமறியார்கள் நவீனர்கள். ரஹஸ்யமாகத்தானுள்ளது. இதன்பொருளென்னவென்றால்; நாம் எம்பெருமானிடத்திலே சென்று சேருவதானது நம் இச்சையினாலேயன்று; ப்ரணாக்ஷர ந்யாயத்தாலே

யாமத்தனே. அந்த நியாயமாவதென்னென்னில்; புழுவானது நேராகச் செல்லமாட்டாது; சுருங்கியும் மடங்கியும் குடிலமாகச் செல்லுவதே அதன் இயல்வு. அங்ஙனம் செல்லுவதை நாம் உற்றுநோக்கினல் ஏதேனுமொரு பாஷையிலே சில எழுத்துக்கள் எழுதினாற்போல் தேறும். எழுத்து எழுதவேணுமென்கிற நினைவு அதற்கு இருக்க ப்ரஸக்தியில்லை. ஆயினும் யாத்ருச்சிகமாக எழுத்துத் தேறுகின்றதென்பதைக் காணுகின்றோம். இதுதான் குணாக்ஷர ந்யாயமென்பது. * குணாக்ஷரதயா விசித்ராஸ் * என்று ஸ்வாமி ஸாதித்ததும் இதுவேயாம். நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளைகள் "புழுக்குறித்தது எழுத்தாமாப்போலே" என்றருளிச் செய்திருப்பதையே ஸ்வாமி தேசிகன் இங்ஙனம் மொழிபெயர்த்தாரென்னத் தட்டில்லை. இந்த நியாயத்தைக்கொண்டு ஸ்வாமி என்ன ஸாதிக்கிறாரென்னில் "விசித்ராஸ் உபநிபாதிந: ந: பாதி" என்கிறார். புழு குறித்தது எழுத்தாகிற க்ரமத்திலே, உபநிபாதிந:— தன்னிடம் வந்து சேருமவர்களான, ந:— நம்மை, பாதி— எம்பெருமான் காப்பாற்றியருள்கிறான் என்று ஸாதித்துள்ளார். புத்திபூர்வகமாக வன்றிக்கே கடலலைவழியாகக் கரையிலே தள்ளுண்டு வந்து சேரும் துரும்புபோலே யாத்ருச்சிகமாகத் தன் பக்கலிலே வந்து சேருமவர்களை எம்பெருமான் தன்னுடைய இயற்கையின்னருளாலே குளிரக்கடாக்ஷித்து அருள் செய்கின்றானென்கிற பரமார்த்தம் இதனால் தெளிவிக்கப்பட்டதாயிற்று.

நநு, ப்ரபத்தி அநுபாயமென்கிற வாதத்தை யெடுத்து தேசிகன் கண்டித்துமிருக்கவில்லையா? என்று கேட்க வருவர்கள் நவீனர்கள். இதைப்பற்றி நம்முடைய நூல்களிலே மிக விரிவாக வரைந்திருக்கிறோம். சுருக்கமாகவிங்குணர்த்துவோம். அங்ஙனம கண்டித்திருக்குமிடங்களை நீங்கள் அறிவீர்களாதலால், அவற்றைவிட்டு அவற்றுக்கு அநுதபித்தவராய் ஸமர்த்தனம் செய்தருளியிருக்குமிடங்களை நாமெடுத்துக் காட்டுகிறோம்.

தேசிக ரஹஸ்யங்களில் ஸாரஸாரமென்பது ரஹஸ்யத்ரயஸாரத்திற்கு அடுத்ததான பத்தொன்பதாவது ரஹஸ்யம். ரஹஸ்யத்ரயஸாரத்தில் விபுலமாக ஸாதித்தவற்றை ஸாரமாக வெடுத்துரைப்பதென்னுங் காரணத்தினால் இதற்கு ஸாரஸாரமென்றே திருநாமமிட்டனர். அதில் சரமச்லோகாதிகாரத்தில்—

> "இப்படி விதேயமான ப்ரபதநத்தைச் சிலர் அதிகாரி விஶேஷணம் ஸம்பந்த ஜ்ஞாந மாத்ரம் ஸித்தோபாய ப்ரதிபத்திமாத்ரம் அநிவாரணமாத்ரம் அநுமதிமாத்ரம் அசித் வ்யாவ்ருத்திமாத்ரம் சைதந்யக்ருத்யம் சித்தஸமாதாநம் என்றாற்போலே சொல்லுமது வும் இவ்விதிக்கும் இத்தை விஸ்தரிக்கிற சாஸ்த்ரங்களுக்கும் இவற்றுக்குச் சேர்ந்த உப பத்திகளுக்கும் பாஷ்யஶ்ருதாதிகளுக்கும் நிபுண ஸம்ப்ரதாயங்களுக்கும் அநுகுணமாக வேண்டுகையாலே * நானே நானாவித நரகம்புகும் பாவம் செய்தேனென்று நிற்கிற நம்மை ஈச்வரன் ரக்ஷிக்கிறவிடத்தில் * வந்தடைந்தேனென்று நாம் பண்ணுகிற அல்ப மான வஶீகரணயத்நம் * அதுவுமவனதின்னருளே * இசைவித்தென்னை இத்யாதிகளிற் படியே அவன்தானே காட்டி ப்ரவர்த்திப்பித்ததொரு வ்யாஜமாத்ரமன்றோவென்று ஸித்தோபாய ப்ராதாந்யாநுஸந்தாநத்தில் அவர்களுக்கு தாத்பர்யம்."

என்றருளிச்செய்திருப்பது காணீர். உண்மையான ஶாஸ்த்ரார்த்தம் எதுவோ அதைத்தான் இங்கு வெளியிட்டருளினர். "அவர்களுக்கு தாத்பர்யம்" என்ற விதனையே பல விடங்களில் தம்முடையதாத்பர்யமாகவே வெளியிட்டிருப்பதைக் கீழே காட்டியுள்ளோம்.

> "உபநிஷத்துக்களிலே நிர்குணமாக வோதப்பட்ட பரப்ரஹ்மத்தை ஸகுணமென்பார்க்கு கல்யாணகுணவத்தாநுஸந்தானத்திலே தாத்பர்யம்"

என்பதற்கும் இதற்கும் ஏதேனும் வாசியுண்டோவென்று பார்க்க. .... (4)

# 5, 6, 7. பிராட்டிவிஷய விமர்சங்கள்

இதர ஆசார்யர்கள் பிராட்டி விஷயமாக அபார்த்தங்களை யெழுதி அவளுடைய பெருமைகளைக் குலைத்துவிட்டார்களென்றும், தேசிகன் திருவவதரித்து அந்த அபார்த்தங்களையெல்லாம் களைந்து பிராட்டியின் பெருமைகளை ஆச்சரியமாக ஸ்தாபித்துவிட்டாரென்றும் நவீனர்கள் எழுதிப்போருவதும் ஸ்வகோஷ்டிகளில் பேசுவதும் எவ்வளவு பொருத்தமானதென்பது உலகுக்குத்தெரிய இங்கு விரிவாக நிரூபிப்போம். பிற ஆசார்யர்கள் பேசியிருப்பது நிற்க. தேசிகன் ஸுஸ்பஷ்டமாக அருளிச்செய்திருப்பவையே இங்கு நிரூபிக்கப்படுகின்றன.

ஜகத்காரணத்வம் மோக்ஷப்ரதத்வம் விபுத்வம் ஆகிய இவற்றைப் பிராட்டியிடத்தில் தனிப்பட நிரூபிக்கும் விஷயத்தில் தேசிகன் சிறிதும் இறங்கவில்லை. இதை க்ரமேண எளிதாக நெஞ்சில் பதியவைத்திடுவோம். யாதவாப்யுதயமென்னும் மஹாகாவ்யம் ஸ்வாமி தேசிகன் பணித்தது; இதில் பன்னிரண்டாவது ஸர்க்கம் ருக்மிணிப் பிராட்டி விஷயமானது. அதில் 1, 2. ச்லோகங்களினால் ஸாக்ஷாத் ஸ்ரீ மஹாலக்ஷ்மியே ருக்மிணிப்பிராட்டியாகத் திருவவதரித்ததாய்ச் சொல்லப்பட்டது. உடனே மூன்றாவது சுலோகம் வருமாறு—

"𑌶𑌿𑌖𑌣𑍍𑌡𑌕𑌂 𑌨𑌿𑌷𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌨𑌾𑌂 𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌲𑍀𑌲𑍋𑌪𑌮𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑍃𑌤𑍍𑌯𑌮𑍍 ।
𑌅𑌧𑍀𑌯𑌤𑍇 𑌤𑌨𑍍𑌮𑌿𑌥𑍁𑌨𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌜𑍀𑌵𑌾𑌤𑍁𑌮𑌨𑌨𑍍𑌯𑌭𑍋𑌗𑍍𑌯𑌮𑍍" ॥

["சிகண்டகம் நிஷ்ப்ரதிமம் ச்ருதீநாம் ச்ருங்கார லீலோபம விச்வக்ருத்யம்
அதீயதே தந்மிதுனம் ஸ்வபாவாத் அந்யோந்ய ஜீவாது மநந்ய போக்யம்"]

என்பதாகவுள்ளது. இதற்கு மேலுள்ள சுலோகங்களெல்லாம் ருக்மிணிப்பிராட்டியை மாத்திரமே நோக்கியவை. முதலிரண்டு ச்லோகங்களும் அப்படிப்பட்டவை. இடையில் மூன்றாவதான ச்லோகமொன்று மாத்திரம் மிதுநம் என்கிற நிர்தேசத்தையுட்கொண்டு தோன்றியுள்ளது. இந்த ச்லோகத்தில், * ச்ருங்கார லீலோபம விச்வக்ருத்யம் * என்பதற்கு வியாக்கியானமென்னவென்றால், "ச்ருங்கார லீலாவத் அநாயாஸ ஸாத்ய-விநோதரூப-ஜகத் ஸ்ருஷ்டிஸம்ஹாராதிக்ருத்யம்" என்பதேயாம். இப்படிப்பட்ட க்ருத்யத்தைப் பிராட்டியினிடத்தில் தனியாக இட்டுப் பேசுவதற்குத் திருவுள்ளமில்லாமையினாலேயே தேசிகன் மிதுநம் என்கிற பதத்தை ப்ரயோகித்து இடையிலே இந்தவொரு சுலோகத்தை விலக்ஷணமாக அமைத்தார். முன்னும் பின்னும் பிராட்டியை மாத்திரமே குறித்து ச்லோகங்களை யருளிச்செய்து போருகிறவர் இவ்வொருச்லோகத்தில் மிதுநம் என்று இருவரையும் சேர்த்தருளிச்செய்ததை உற்று நோக்கினால் ஜகத்ஸ்ருஷ்டிஸ்திதிகளில் பிராட்டிக்குத் தனிப்பட்ட அந்வயமில்லையென்று தேசிகன் நிச்சயித்திருப்பது திடமாக விளங்கும்.

ஸ்ரீஸ்துதியிலும், "𑌯𑌤𑍍𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌾𑌦𑍍𑌭𑌵𑌤𑌿 𑌕𑌮𑌲𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌦𑍇𑌹𑌿𑌨𑍍𑌯𑌮𑍀𑌷𑌾𑌂 𑌜𑌨𑍍𑌮𑌸𑍍𑌥𑍇𑌮𑌪𑍍𑌰𑌲𑌯𑌰𑌚𑌨𑌾 𑌜𑌙𑍍𑌗𑌮𑌾𑌜𑌙𑍍𑌗𑌮𑌾𑌨𑌾𑌮𑍍 । 𑌤𑌤𑍍𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌂 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌯𑌮𑌿𑌨𑌾𑌮𑍇𑌕𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌧𑍌 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌤𑍇𑌜𑌃 𑌸𑍍𑌫𑍁𑌰𑌤𑌿 𑌭𑌵𑌤𑍀𑌪𑌾𑌦𑌲𑌾𑌕𑍍𑌷𑌾𑌰𑌸𑌾𑌙𑍍𑌕𑌮𑍍"—* யத்ஸங்கல்பாத் பவதி கமலே யத்ர தேஹிந்யமீஷாம் ஜந்மஸ்தேமப்ரலயரசநா ஜங்கமாஜங்கமாநாம்; தத் கல்யாணம் கிமபி யமிநாம் ஏக

லக்ஷ்யம் ஸமாதேள பூர்ணம் தேஜ: ஸ்புரதி பவதீபாத லாக்ஷாரஸாங்கம் * என்கிற இவ்வொரு ச்லோகமே போதும் பிராட்டி விஷயத்தில் தேசிகன் திருவுள்ளத்தை உள்ளபடியுணர. பிராட்டியை ஸ்துதிக்க இழிந்தவர் பிராட்டியினிடத்துள்ளதையன்றோ பேசவேண்டும். * ஜங்கமா ஜங்கமாநாம் ஜந்ம ஸ்தேம ப்ரலயரசநாம் இந்திரே த்வம் கரோஷி * என்று ச்லோக மியற்ற அருமையில்லையே. இப்படிச் சொன்னலன்றோ பிராட்டியின் ஸ்துதியாகும். உண்மையில் இவளிடத்திலில்லாததை இருப்பதாகவைத்து எங்ஙனே கவிபண்ணுவர்? கூரத்தாழ்வான் முதலான பூர்வாசார்யர்கள் * ஆபவர்க்கிகபதம் ஸர்வஞ்ச குர்வந் ஹரி:, யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோ விதத்தே * இத்யாதியாக அருளிச் செய்ததைப் பின்பற்றியேதான் தேசிகனுமருளிச் செய்கிருறென்பது ஸ்பஷ்டம்.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலும் பரிபூர்ணப்ரஹ்மாநுபவாதிகாரத்தில் "ஈச்வரனுக்கு ச்சத்ரசாமராதிகளைப்போலே லக்ஷணமாகச் சொன்ன ஜகத்காரணத்வ--மோக்ஷப்ரதத்வ—ஸர்வாதாரத்வ—ஸர்வநியந்த்ருத்வ—ஸர்வசேஷித்வ - ஸர்வசரீரத்வ – ஸர்வசப்தவாச்யத்வ – ஸர்வவேதவேத்யத்வ-ஸர்வலோகசரண்யத்வ-ஸர்வபலப்ரதத்வ-லக்ஷ்மீஸஹாயத்வாதிகள் ப்ரதிநியதங்கள்" என்றருளிச் செய்யப்பட்டது. இந்த மஹா வாக்கியத்தில் ஜகத்காரணத்வத்தை முந்துறச்சொல்லி முடிவில் லக்ஷ்மீஸஹாயத்வத்தைச் சொல்லியிருக்கையாலே, லக்ஷ்மியினிடத்தில் லக்ஷ்மீஸஹாயத்வம் எப்படி அஸம்பாவிதமோ அப்படியே ஜகத்காரணத்வமும் அவளுக்கு அஸம்பாவிதமென்றும் இவையெல்லாம் பரப்ரஹ்மத்திற்கே பொருந்துமென்றும் காட்டப்பட்டதாயிற்று. இப்படியருளிச் செய்ததும் ஸ்ரீ பாஷ்யத்தில் * விநதவிவித பூதவ்ராதரக்ஷைகதீக்ஷே * என்றவிடத்துச்ருதப்ரகாசிகையில் "ஜகத்காரணத்வ மோக்ஷப்ரதத்வே ஹி ராஜ்ஞ:ச்சத்ரசாமரவத் ப்ரஹ்மண: அஸாதாரண சிஹ்நம்." என்றருளிச் செய்திருப்பதைப் பின்பற்றியதே. முனிவாஹந போகத்தில் ஆதி என்றவிடத்தும் இப்படியேதானுள்ளது. ந்யாயஸித்தாஞ்சந ஜீவபரிச்சேதத்திலுமிப்படியேதான். தேசிகன் சில்லரை ரஹஸ்யங்களென்றும் சில ரஹஸ்யங்கள் ஸாதித்திருக்கிறர். அவற்றை ஸேவித்தால் நல்ல தெளிவு உண்டாகும். ரஹஸ்யரத்நாவளி யென்று ஒரு சிறு ரஹஸ்யம். அதில்

> "ஸ்ரீ மானன நாராயணனேருவனுமே ஸர்வ ஜீவர்களுக்கும் தஞ்சம்.......ஸர்வஸ்வாமிநியாய் ஸர்வேச்வரனுக்கு சேஷமாய் ஸஹதர்மசாரிணியான பெரிய பிராட்டியார் இத்தலையில் வாத்ஸல்யாதிசயத்தாலும் அத்தலையில் வால்லப்யாதிசயத்தாலும் புருஷகாரமாய்க் கொண்டு இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிருள்"

என்றருளிச் செய்து இதை ரஹஸ்யரத்நாவளீ ஹ்ருதய மென்கிற அடுத்த ரஹஸ்யத்தில் தாமே விவரித்தருளினர். உண்மையில் விவரணுபேக்ஷையேயில்லாத வாக்யமன்றோவிது. இப்படி நிஸ்ஸந்தேஹமாகவருளிச் செய்த விடங்கள் ஒன்றிரண்டல்ல: பலபல விடங்களுண்டு. சதுச்ச்லோகியில் மூன்ருவது ச்லோகத்தின்பாஷ்யத்தில் "மோக்ஷப்ரதே பகவதி முமுக்ஷூணாம் வடகதயா ஏஷா திஷ்டதீதி ஸர்வஸம்மதம்]" என்றருளிச் செய்ததொன்று போதுமே. "எம்பெருமான்தான் மோக்ஷ மளிப்பவன்; அதனைப் பெறுவிப்பவளாகமாத்திரம் பிராட்டி இராநின்ருள்" என்பது இந்த ஸம்ஸ்க்ருத ஸ்ரீ ஸூக்தியின் பொருள். அதற்குமேலுள்ள ஸ்ரீஸூக்திகளும் பிராட்டிக்கு உபாயத்வமில்லையென்பதையே நிலைநாட்டுவன.

த்வயத்தில் பூர்வகண்டத்தில் பிராட்டிக்கு உபலக்ஷணத்வமா? விசேஷணத்வமா? என்று ஒரு விவாதத்தைக் கிளப்பிக்கொண்டு உபலக்ஷணத்வமென்று சிலர் சொல்லுவதாக வைத்து, அதைக் கண்டித்துவிசேஷணத்வமே யுக்தமென்று ஸ்தாபிக்கப்படுகிறது ரஹஸ்யத்ரய ஸாரத்தில். இது நம்முடைய பூர்வாசார்யர்களின் திருவுள்ளத்தைக் கண்டிப்பதென்று நவீனர்கள் மருண்டிருப்பதுண்டு. இது மிகத்தவறு. இங்குப் பிராட்டிக்கு விசேஷணத்வமில்லையென்று ஒரு ஆசார்யரும் உரைத்ததில்லை. முமுக்ஷுப்படியில் த்வயப்ரகரணத்தில் "இப்போதிவளைச் சொல்லுகிறது புருஷகாரமாக" என்ற சூர்ணையின் வியாக்கியானத்திலே மணவாளமாமுனிகள்—"(புருஷகாரமாக) என்கையாலே உபாயவஸ்துவிசேஷணமாயிருக்கிற ஆகாரத்தையிட்டு இவளுக்கு முபாயத்வத்தில் அந்வயம் சொல்லும் பக்ஷம் நிரஸ்தம்" என்றருளிச் செய்திருக்குமிடத்து விசேஷணத்வத்தைக் கண்டோக்தியாகவே யருளிச்செய்திருப்பது காண்க. இங்கு உபலக்ஷணத்வம் கொண்டாலும் விசேஷணத்வம் கொண்டாலும் வாசி சிறிதுமில்லை யென்பதை சாஸ்த்ரமர்மஜ்ஞர்கள் உணர்வர்கள். பிராட்டிக்குப் புருஷகாரத்வமுண்டு என்று இசைந்தானபின்பு அவளுக்கு உபாயத்வமுமுண்டு என்று வாய் திறக்க வழியே கிடையாது. உபாயத்வமாவது-தானேகொடுக்க சக்தியுடைத்தாகை. அஃதிருக்குமாகில் புருஷகாரக்ருத்யத்திலே நின்று துவளவேண்டிய ப்ரஸக்தியே கிடையாதாகையால் நவீனர்களின் உத்வேலப்ரஸங்கமெல்லாம் உதறித்தள்ளப்பட்டன.

## — இவ்விஷயத்தில் நிர்ணயம் —

பிராட்டிக்குப் புருஷகாரக்ருத்யம் தவிர, தனியே மோக்ஷப்ரதாத்ருத்வமுண்டென்பதை தேசிகன் நெஞ்சாலும் நினைத்தவரல்லர். அப்படியே அவளுக்குத் தனியே ஜகத்காரணத்வமுண்டென்றும் நினைத்தவரல்லர். அதுச்ச்லோகீ பாஷ்யத்தில் * ஸஹஸ்ரீகஸ்ய ஸாம்ராஜ்யம் ஸர்வதா ஸம்ப்ரதிஷ்டிதம் * என்றருளிச் செய்திருப்பதை உணர்வாராருமிலர். இதற்கு என்ன பொருள் தெரியுமோ? எவ்விதமான பெருமை சொல்லவேணுமானாலும் தனிப்படச் சொல்லாதீர்கள்; பிராட்டியோடு கூடிய பெருமானுக்குச் சொல்லுங்கள். "இவளோடே கூடியே வஸ்துவினுடைய உண்மை" என்று பிள்ளை லோகாசார்யர் முமுக்ஷுப்படியிலருளிச் செய்தபடியே ஸலக்ஷ்மீகனான ஸர்வேச்வரனுக்கே ஸாம்ராஜ்யம் ஸம்மதமாம். என்று * ஸஹஸ்ரீகப்ரஹ்மாதமானகணக்கிலே சொல்லித் தலைக்கட்டியானபின்பு பிராட்டியைத் தனியே பிடித்துக்கொண்டு மன்றாட இடமேது?

இனி விபுத்வமா அணுத்வமா என்கிற விசாரத்தில் தேசிகனுடைய திருவுள்ளத்தை ப்ராமாணிகரான ரங்கராமானுஜஸ்வாமி கண்டறிந்து நியாயஸித்தாஞ்ஜந வியாக்கியானத்திலே சேமக்காப்பு செய்து போந்தார். எங்ஙனே யென்னில்; நியாயஸித்தாஞ்ஜநத்தில் ஜீவ பரிச்சேதத்தின் தொடக்கத்தில் "அத ஜீவ:; ஸ்வபரிஜ்ஞானகோசரத்வே ஸதி ஜ்ஞாத்ருத்வம்; சேஷத்வே ஸதி ஜ்ஞாத்ருத்வம் வா தல்லக்ஷணம்." என்றருளிச்செய்தார் தேசிகன். ஜீவாத்மாவுக்குச் சொன்ன இந்த லக்ஷணமானது பிராட்டியிடத்திலும் ஸமன்வயமடைகின்றதென்பதில் ஐயமில்லை. இவ்விடத்தில் வ்யாக்க்யாதா கர்த்தாவான ரங்கராமாநுஜஸ்வாமி இந்த ஜீவலக்ஷணத்திற்குப் பிராட்டியை லக்ஷ்யமாகாதபடி செய்துவிடலாமென்று ஒரு வழியில் நுழைந்து பார்த்தார்; அதாவது, பிராட்டியையும் ஈச்வரகோடியிலேயாக்கி அவளுக்கு சேஷித்வமுள்ளதேயொழிய சேஷத்வம் கிடையாதென்று சொல்லப்பார்த்தார். "ஶூக்ஷ்மா:........

ஶேஷத்வாஹாவாச் நாதிவ்யாப்தி:" என்று எழுதியும் வைத்தார். உண்மையில் அவர் ப்ராமாணிகராகையாலே இதில் அவருடைய மனம் த்ருப்திகொள்ளவில்லை. அதனால் உடனே யெழுதினார்—"லக்ஷ்ம்யா ஜீவாந்தர்பாவபக்ஷேது ந தோஷ:" [பிராட்டியை ஜீவகோடியில் சேர்ந்தவளாகக் கொள்ளில் விரோதமில்லை] என்று நிர்வாஹம் செய்தார். பிராட்டிக்கு ஜீவகோட்யந்தர்பாவபக்ஷம் ஹேயமாகில் இப்படி எழுத நெஞ்சிலும் நினையாரன்றோ. "ப்ரஹ்மணோ நிர்குணத்வபக்ஷேது ந தோஷ:"—'ப்ரதாநஸ்ய காரணத்வபக்ஷேது ந தோஷ:" என்றாற்போன்ற வசநவ்யக்திகள் எங்கேனும் கண்டதுண்டோ? ஸகல பூர்வாசார்ய ஸித்தாந்தம் பிராட்டிக்கு ஜீவகோட்யந்தர்பாவபக்ஷமேயாம்" என்கிற ஸௌஹார்த்தப்ரதிபத்தியாலன்றோ அந்த மஹான் அங்ஙனமெழுதிவைத்தார். தேசிகதிவ்யஸூக்திக்கு வியாக்கியானமெழுதுகையில் அவர் இங்ஙனம் எழுதிவைக்கையாலே 'தேசிகனுக்கும் அபிமதமான பக்ஷமிது' என்று காட்டினவராயுமாயினர். ஆக இவ்வளவால் பிராட்டிக்கு அணுத்வமேயொழிய விபுத்வாதிப்ரஸக்திதானுமில்லையென்றதாயிற்று.

அரசாணிபாலை வேங்கடாத்ரி இயற்றிய லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் ஐச்வர்யஸ்தபகத்தில் (7) "ஜனாகாஶே ஜீவகோடிப்ரவேஶம் ஸம்ப்ராப்தா யே ரமே கல்பயந்தி" இத்யாதிச்லோகங்களால் தூஷித்திருப்பது தேசிகனையும் ரங்கராமாநுஜஸ்வாமியையுமே யென்பது விமர்சநிரபேக்ஷம். அந்த ஸ்தபகத்திலேயே (ச்லோ. 14) * ஸ்ரீரங்காராமராஜத்ரமணிம்ப்ரேயஸீராஶ்ரிதாநாம் ஆயஸ்தாநாந்வித........ * என்கிறார். அங்கு வியாக்கியானத்தில் "ஹ்ருத்வராம்பராந்தீநாந்வித" என்றெழுதியிருக்கையாலே இந்த நவீனர்களுக்கு பட்டரிடத்திலும் மாத்ஸர்யமுள்ளமை விளங்கிற்று. .... .... .... (5, 6, 7.)

## 8. தயை யென்பது பரது:கது:கித்வம்.

எம்பெருமானை தயாளுவென்று போற்றுகிறோம். தயையாவது என்ன? என்னில், பிறர் படும் துயரத்தைக்கண்டு தானும் துயருறுவதுதான் அது என்று ஸதாசார்யர்களின் திருவுள்ளம். ஆநந்தமயனான எம்பெருமானுக்கும் துயருண்டென்று கொள்வது அவத்யமாகையாலே பிறர்படும் துயரத்தைத் தவிர்க்க நினைப்பதுமாத்திரமே தயை என்னத்தகும் என்பர் பிறர். எம்பெருமானிடத்தில் பரது:க்க நிராகரணேச்சை [அதாவது பிறர்படும் துயரத்தைத் தவிர்க்க நினைக்கை] இல்லையென்று யாரும் சொல்லகில்லார். அதுவுள்ளதென்பது ஸம்ப்ரதிபந்நம். அது ஒரு ஸாமாந்ய குணமே யல்லது விசேஷகுணமன்று. பிறர்படும் துயரத்தைக்கண்டு ஐயோவென்று தானும் துயருறுகையே தயையென்றும் இதுவே மிகச் சிறந்த விசேஷகுணமென்றும், இதனை இல்லைசெய்வது நிர்க்குணப்ரஹ்மவாதத்தோடொக்குமென்றும் ஆழ்வார்களும் எம்பெருமானார் முதலான ஆசார்யர்களும் திருவுள்ளம் பற்றுகிறார்கள். அடுத்தபடி வரப்போகிற வாத்ஸல்யவிசாரம் போலே இந்த தயாவிசாரமும் மிக முக்கியமானது. பரது:க்க து:க்கித்வமென்பது மிகவுயர்ந்த குணமென்றும் இதுவே எம்பெருமானுடைய குணங்களிலேயுருகும் மெய்யன்பர்களின் உள்குழைவுக்கு உறுப்பானதென்றும் உண்மையைத் தெளிய வுணரவேணும். பிறர்படும் துயரத்தைக்கண்டு ஐயோவென்றிரங்குகை குணமா? தோஷமா? என்று முதலில் ஆராயவேண்டும். இதை தோஷமென்று

யாரும் சொல்லார். * நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க * என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தை நோக்குங்கால் பரதுக்கங்களிலே முறுவலிப்பது ஹேயமென்றும், கரைந்து ஏங்குவது உற்றதென்றும் நன்கு தெரிகின்றது. கரைந்து ஏங்குமவர்களையே நல்லுற்றாரென்கிறது. துக்கத்தின் எல்லையிலே நிற்பதுதான் கரைந்து ஏங்குவது. இதை நல்லுற்றாருடைய செயலாக அருளிச் செய்கின்ற ஆழ்வாருடைய திருவுள்ளம் இது குணமென்பதே யன்றோ. இது குணமன்று என்று சொல்வதற்கு ஒரு விதமான உபபத்தியும் இருக்க நியாயமில்லை. மநுஷ்யர்களுக்கு இது குணந்தானென்று தேறி விடுமானால் இக்குணம் எம்பெருமானிடத்தில் அதிசயிதமாக இருந்து தீரவேணுமென்பது புநருக்தம்.

ஒருவரிடத்தில் ஒரு குணமுள்ள தென்பதை நாம் எங்ஙனம் தெரிந்து கொள்ளுகிறோம்? குணவானுடைய நடத்தையைக் கண்டும், அந்த நடத்தையைக் கண்ட ஆப்தர்கள் சொல்லுமதுகொண்டும் தெரிந்துகொள்ளுகிறோம். எம்பெருமான் தனது தயாகுணத்தை எந்தெந்த நடத்தைகளினால் காட்டினானோ அந்த நடத்தைகளெல்லாம் ஸ்ரீராமாயண பாரத பாகவதாதிகளில விசதம். அவன் அவதாரங்கள் செய்தருளினது எதற்காக வென்றால் தன்னிடத்துள்ள சிறந்த திருக்குணங்களை வெளியிடுதற்காகவே யென்பது பரமார்த்தம். இதைத் தான் பட்டர் * குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம் * என்கிற ஸ்ரீஸூக்தியால் நன்கு காட்டியருளினார். இந்த உபந்யாஸ விஸ்தரங்கள் நம்முடைய ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதி முதலானவற்றில் மிக விரிவாகக் காணத்தக்கன. அந்த விரிவுகள் இங்கு வேண்டா. இதில் தேசிகன் திருவுள்ளம் மட்டும் இங்கு நுட்பமாகக் காட்டப்படுவது காண்மின்.

* ஏவம் ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: । ஜீவே து:காகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே ॥ * என்கிற க்ருபாச்லோகம் ஸுப்ரஸித்தம். துக்கப்படுகிற ஸம்ஸாரி சேதநனிடத்திலே எம்பெருமானுக்கு க்ருபையுண்டாகிறதென்று இதில் சொல்லிற்று. இதை யடியொற்றி * ஸ்வத்ருஷ்டிவிசேஷிதாநுபூயஸீதி ஸம்ஸார: * என்கிற ச்லோகமருளிச்செய்த பட்டர் * தயாதந: * என்றுமட்டுமருளிச்செய்தார். இவ்விரண்டையும் விவரித்தருளாநின்ற தேசிகன் தயாசதகத்தில் * ஸ்வத்ருஷ்டிவிசிஷ்டாநுபூயே ஜந்தோரநவதிகது:க ஜாதநிர்வேதா * என்றருளிச்செய்தார். அந்த ஸ்துதியில் தயாளுவான எம்பெருமானை நோக்கிச் சொல்லவேண்டிய வார்த்தைகளையே தயையைநோக்கிச் சொல்லுகிறாரென்பது நிர்விவாதமாகையாலே ஸம்ஸாரிகளை நோக்கி எம்பெருமான் ஜாதநிர்வேதனாகிறானென்று ஸ்பஷ்டமாகச் சொன்னாராயிற்று. து:காவாஹிநயம் காட்டினபடியேயொழிய வேறில்லை யென்னில், அவதாரசேஷ்டிதங்களெல்லாம் அபிநயமாத்ரமே யென்று சொல்லி இதிஹாஸ புராணங்களைக் கட்டி உள்ளே வைத்திடவேண்டுமத்தனை. ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அநுஸந்தித்திருக்கின்ற திருக்குணங்களை உபபாதிக்குமாசாரியர்கள் ஸ்ரீ விஷ்ணுபுராண ஸ்ரீ ராமாயணாதி ச்லோகங்களைக் கொண்டே உபபாதிக்கக் காண்கிறோம். இதை ஸ்ரீபாஷ்யாதிகளிலும் காணலாம். அவ்விதிஹாஸ புராணங்களில் எம்பெருமான் காட்டியருளின சரிதைகளைக்கொண்டு * ஸஞ்ஜாதபாஷ்ப: ஸஹஸா ஹரோ ராஜா து:கஹதோ விநா பஹுதேவ * இத்யாதி ச்லோகங்கள் அவதரித்தன. அந்த ச்லோகங்களை * உள்ளெலாமுருகிக் குரல்தழுத்தொழிந்து உடம்பெலாம் கண்ணநீர் சோர நின்று உபந்யஸிக்கிறார்கள் மஹாவிதர்கள். இதெல்லாம் அபிநயமத்தனையென்று கூடவே சொல்லிக்கொண்டு போவதிற்காட்டிலும் நிர்குணப்ரஹ்மவாதமே நிர்மூலம். ... (8)

## 9. வாத்ஸல்யம் தோஷபோக்யதா ரூபம்.

கீழே த்யாகுணத்தைப்பற்றிப் பேசினேம்; இப்போது வாத்ஸல்யகுணத்தைப்பற்றிப் பேசுவோம். இதர மதஸ்தர்களிற்காட்டிலும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தன்னேற்றம் எம்பெருமானுடைய திருக்குணங்களில் உருகி நைவதுபற்றியே. * வல்வினையேனை யீர்கின்ற குணங்களையுடையாய்! * என்று ஆழ்வார் கதறுகிருர். அவர்தாம் பாசுரம் பாடத்தொடங்கும்போதே * பொய்ந் நின்ற ஞானமும்......அழுக்குடம்பும் * என்று தம்முடைய தேஹத்தின் ஹேயத்வத்தைக் காட்டினர். இப்படி இவர் ஹேயமாகக் காட்டின தேஹத்திலே அவன்தான் பண்ணுகிற ஹோமதீதாபுத்தியை * செஞ்சொற்கவிகாள் * என்கிற திருவாய்மொழியிலே ஆழ்வார் தாமே கூசாமல் கூறியருளினர். அதை தேசிகனும் தாத்பர்யரத்நாவளியிலும் ஸாரத்திலும் அபலபியாமலருளிச் செய்கிருர். அதில் ஒரு விசேஷமும் அற்புதமாக வுள்ளது; அதாவதென்னென்னில், ஸாரத்தில் * செஞ்சொற்கவிகாள் பதிகத்தின் ஸாரத்தைக் கூறுமிடத்து * ஸ்வஜநதநுக்ருதாத்யாதரம் வ்யாஹ ஆஜெ * என்றுர். எம்பெருமான் தம்முடைய திருமேனியில் வ்யாமோஹம் செய்தபடியை ஆழ்வார் அருளிச்செய்திருக்கிருரேயொழிய மற்றையோர்களுடைய உடம்பில் வ்யாமோஹம் செய்திருப்பதாகப் பேசியிருக்க வில்லை. அதற்குச் சேர * ஸ்வதநுவிஹிதாத்யாதரம் * என்று ச்லோகமிட வேண்டியிருக்க * ஸ்வஜந தநுக்ருதாத்யாதரம் * என்று ச்லோகமிட்டிருக்கிருர். இங்கு ஸ்வாமியின் தாத்பர்யமென்னவென்ருல், ஆழ்வார் தம்முடைய அழுக்குடம்பிலுள்ள வழுக்கை விரும்பி அவன் வியாமோஹித்திருப்பதாகச் சொன்னவிது தம் விஷயத்தோடு நிற்பதன்று; தன்னடியார்களெல்லாருடைய வுடலிலும் இப்படி விருப்பம் செய்துபோருமவன் என்றதாகக் காட்டினபடியென்று திருவுள்ளம்பற்றியே தேசிகன் 'ஸ்வஜந' என்று பணித்தார்.

"ஔத்ஸுக்யே மஹதி ஸ்த்திதி ஸாஹஸாநி ஸ்வாமேத்ய தேஹஸ்நேஹஸ்தாபி ஸஹஸ்யத ஸர்வதா! ஸஞ்சலம்சிதம் ஸ்வாஸ்ரிதம் ஸாஹஸ்ரம் ஜாதம்கஸ்ய! கஸ்மாதஸ்ராணாமத்யந்தே! * என்கிற ச்லோகத்தினுல் தம்பக்கலிலும் அப்படிப்பட்ட பரிமாற்றம் நிகழ்ந்தபடியைப் பேசினர். இதில் 'ஆதாரணஸ்பதம்' என்கிற வாசகம் விசேஷித்து நோக்கத்தக்கது. 'என்னுடைய ஹேயமான களேபரத்தில் நீ எப்படி வஸிக்கிருய்?' என்று கேளாதே பலாப்பழத்தை ஈ மொய்த்துக்கொண்டு கிடக்குமாபோலேயும் தண்டாமரையின் தேனை வண்டுகள் மொய்த்துக்கொண்டு கிடக்குமாபோலேயும் பரமாதரம் காட்டிக்கொண்டு கிடக்கிருயே! இது என்னே! என்று வியந்து கேட்கிறபடி கண்டீரே. (இங்கு கரூர் ஸ்ரீமாச்சார் வியாக்கியானம் பொருத்தமாக அமைந்திருக்கின்றது.)

கடோபநிஷத்தில் (2-4-12) * அங்குஷ்டமாத்ர: புருஷோ மத்ய ஆத்மநி திஷ்டதி. ஈசாநோ பூதபவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே * என்றுள்ள ருக்குக்கு பாஷ்யமிடாநின்ற ரங்கராமாநுஜஸ்வாமி "பூத பவ்யேஸ்வரஸ்யாபி வாத்ஸல்யாதிஸயாத் தேஹகதாநபி தோஷாந் போக்யதயா பஸ்யதீத்யர்த:." என்றுரைத்தார். இங்கு மூலத்தில் "ந விஜுகுப்ஸதே" என்றிவ்வளவே யுள்ளது. அதற்கு இவ்வளவு பாஷ்யமிட வேண்டிய அவசியமில்லை. வெறுப்பில்லாதே யிருக்கிருனென்று எழுதிப்போகலாம். "தோஷாந் போக்யதயாபஸ்யதி" என்றெழுதியதும் "வாத்ஸல்யாதிஸயாத்" என்று அதற்குக் காரணமெழுதியதும் நவீநர்களின் து:ர்வாதங்களைத் தொலைத்திடவே யென்க.

“வாத்ஸல்யம் நாம தோஷேபி குணத்வபுத்தி:” என்று ச்ருத ப்ரகாசிகாபட்டர் தாம் அம்மாள் திருவடிகளில் கேட்டபடியே யெழுதியிருக்க, அதுவுமன்றோ இவர்களுக்கு தூஷணீயமாகிறது. உடையவர் திருவடிகளிலே கேட்ட அருளாளப் பெருமாளெம்பெருமானார் ஞானஸாரத்தில் “எற்றே! தன் கன்றினுடம்பின் வழுவன்றோ காதலிப்பது, அன்றதனை ஈன்றுகந்த ஆ.” என்றருளிச் செய்கிறார். இப்படி பூர்வாசார்யர்களெல்லாரும் ஒருமிடறாகப் பேசின இந்த அர்த்த விசேஷத்திலே ஸ்ரீவைஷ்ணவர்களா வசை கூறுவது! “கேசவம் தோஷபோக்யம்” என்று தூஷித்த விச்வகுணாதர்சகாரர் ஆழ்வாராசார்ய ஸ்ரீ ஸூக்தி ரஸாநுபவத்திற்கு ஸுதூரம் வைதேசிகராகையாலே அவர் தூஷித்ததில் வியப்பில்லை. இக்காலத்தில் “ஸ்ரீ ஸூக்திகளிலே நாங்களும் ஆதரம் காட்டுகிறோம்” என்பாரும் விஷயமின்னதென்று புரிந்து கொள்ளாதே இவ்வர்த்தத்தை தூஷித்துக் கொண்டு கிடப்பது இவர்களுடைய நிஜஸ்வரூபத்தை நிலைகாட்டித் தரவில்லையா?

வாத்ஸல்யம் என்னுஞ் சொல்லுக்கு ப்ரக்ருதியான வத்ஸலபதம் படுபடுகாத்யர் குருலோசநாதி பதங்களைப் போலே வழிப்போக்கான பதமன்று; விசேஷித்து வியாகரண ஸூத்ரத்தினால் நிஷ்பந்நமான பதம். * வத்ஸாம்ஸாப்யாம் காமபலே * என்கிற பாணினி ஸூத்ரம் பெறுவித்த பதமிது. உலகில் வியாகரணம் வாசிப்பார் பதினாயிரவருளர். அவர்கள் இங்கு கவயாநம் செலுத்தப் பிறந்தவர்களல்லர். கவஹிதர்களாய் கவிஹ்ருதயத்தைக் காட்டியருளின ஸதாசார்யர்களை தூஷித்துக் கொண்டு போதுபோக்குமவர்களா ஸ்ரீ வைஷ்ணவர்கள்? நவீநர்களென்று பல்லாயிரமுறை பேசத் தட்டுண்டோ?

ஸஹஸ்ரநாமத்தில் வத்ஸல: என்பது ஒரு திருநாமம்; அதற்கு ஆதிசங்கராசார்யருடைய பாஷ்யமும் பட்டருடைய பாஷ்யமுமிருக்கிறது, இரண்டையுமெடுத்துப் பார்க்கலாமே. [இடையில் ஒரு வார்த்தை; இந்நூலில் நாம் தேசிகஸூக்திகளை மட்டுமே காட்டுவதாக முகப்பில் கூறியுள்ளோம்; இதராசார்ய ஸ்ரீ ஸூக்திகளையும் ஊடேயூடே எடுத்துக் காட்டுவது ப்ரதிஜ்ஞாபங்கமன்றோ வென்னவேண்டா; தேசிகனும் உச்சிமேல் வைத்து மெச்சும்படியான ஸ்ரீ ஸூக்திகளைக் காட்டுவது தேசிக ஸ்ரீ ஸூக்திகளைக் காட்டுவதேயாகும்.] வத்ஸல நாமத்திற்கு பட்டருடைய பாஷ்ய ஸூக்திகள் வருமாறு;—

“ஸஹி ஸ்ரீமத் வரீயஸோபி ஸ்வஸ்மின் சரணாகதேஷு கதாசிதபி ஜாதா: ஸத்ய:
ப்ரஸூதேவ வத்ஸேஷு ஸஹஸாகாரா: ஸ்வயமேவ ஸ்வஸ்தநவேதநா: கிங்கரத்வ
ஸ்தாநாக்ருதா யேநவதீவ ஸந்நஹ்யதி.”

இத்தகைய ஸ்ரீ ஸூக்திகள் பரவஸ்துவாணாதிநீ காண ப்ரஸக்தியுண்டோ? கவிவர அநுசமவாதிநஸ்தவஸ்யா ஸந்தேஹ? ... .... (9)

## 10. விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றமென்பதுபற்றி

க்ருஹஸ்தாச்ரம தர்மமாக விஹித விஷய போகம் ப்ராப்தமானாலும், அநந்யார்ஹ சேஷத்வ அநந்ய சரணத்வங்களோடுகூட அநந்ய போக்யத்வமென்கிற விலக்ஷணமான தன்மையையும் பெற்றிருக்கின்ற விசேஷாதிகாரிக்கு அந்த விஹித விஷய போகம் அருவருக்கத்தக்க

தாய் விடத்தகுந்ததேயாகுமென்பது ஸதாசார்ய ஸித்தாந்தம். சாஸ்த்ரங்களில் ஸ்வதார போகம் நியமமாக விதிக்கப்பட்டு அது தவிர்ந்தால் தோஷமும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கையாலே விஹிதவிஷய நிவ்ருத்தி அசாஸ்த்ரீய மென்பர் நவீநர். ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டு மூன்றிடங்களில் உத்தமாதிகாரிக்கு விஹிதவிஷய நிவ்ருத்தியைத் தன்னேற்றமாக அருளிச் செய்கிறார். மிகுஞானச் சிறுகுழவியான எம்பெருமான் சோதிவாய் திறந்து பணித்த கீதையில் (8-3) எட்டாவது அத்யாயத்தில் மூன்றாவது ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் வெளியிட்டருளினதும் தாத்பர்ய சந்திரிகையில் தேசிகனால் விவரிக்கப்பட்டதுமான விசேஷார்த்தமிது. இதனை விவரிப்போமிங்கு:—

கீழ் ஏழாவது அத்யாயத்தின் முடிவில் கண்ணபிரான் * ஜராமரண மோக்ஷாய * என்கிற இருபத்தொன்பதாம் ச்லோகத்தில் * தே ப்ரஹ்ம தத் விது: க்ருத்ஸ்நமத்யாத்மம் கர்மசாகிலம் * என்று ஒரு வார்த்தை சொன்னான். அதகேட்ட அர்ஜுனன் அந்த வார்த்தைக்கு உண்மையான பொருளைத் தெரிந்துகொள்ளவேண்டிக் கண்ணனையே கேள்வி கேட்கிறான் எட்டாவது அத்யாயத்தின் 1, 2-ச்லோகங்களினால் * கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம * என்று தொடங்கிக் கேள்விகள் உள்ளன. மூன்றாவது ச்லோகம் தொடங்கிக் கண்ணனுடைய விடை வெளிவருகின்றது. கிம் கர்ம என்ற கேள்விக்குக் கண்ணனுடைய விடை * பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:* என்பது. இங்கு விஷயமென்ன வென்றால், கேண்மின்.

சிலவற்றை அறியவேண்டும் என்று பகவான் நியமித்துவருகையில் கருமத்தை அறிய வேண்டும் என்று சொல்லியிருந்ததனால் கருமமென்றால் எது? என்று அர்ஜுனன் கேட்க நேர்ந்தது. அதற்கு பகவான் விடை கூறியுள்ளார். ஒருவன் ஒன்றை யறிவதானது, பற்றுவதற்காகவும் ஆகலாம். விடுவதற்காகவும் ஆகலாம். நல்லதாயிருந்தால் பற்றுவது. கெட்டதாயிருந்தால் விடுவது. ஆகவே நல்லதையும் தெரிந்துகொள்ளவேண்டும் கெட்டதையும் தெரிந்துகொள்ளவேண்டும். இங்கே தெரிந்துகொள்ளவேண்டியதாகக் கூறப்பட்ட கருமம் நல்லதன்று, கெட்டது—என்பதாக பகவானுடைய விடையினால் தெரிகின்றது. பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித: * என்பதற்கு நம்முடைய ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்திருக்கிற அர்த்தம் வருமாறு:—

> "𑌭𑍂𑌤𑌭𑌾𑌵𑌃 — 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌾𑌵𑌃; 𑌤𑌦𑍁𑌦𑍍𑌭𑌵𑌕𑌰𑍋 𑌯𑍋 𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑌃 * 𑌪𑌞𑍍𑌚𑌮𑍍𑌯𑌾𑌮𑌾𑌹𑍁𑌤𑌾𑌵𑌾𑌪𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌚𑌸𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 * 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌯𑍋𑌷𑌿𑌤𑍍𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌃। 𑌸 𑌕𑌰𑍍𑌮𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌃. 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌂 𑌸𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌂 𑌉𑌦𑍍𑌵𑍇𑌜𑌨𑍀𑌯𑌤𑌯𑌾 𑌪𑌰𑌿𑌹𑌰𑌣𑍀𑌯𑌤𑌯𑌾 𑌚 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌭𑌿𑌃 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌮𑍍. 𑌪𑌰𑌿𑌹𑌰𑌣𑍀𑌯𑌤𑌾 𑌚 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍇𑌵 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 * 𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑍀𑌤𑌿."

என்பது கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி. இதன் கருத்தாவது—ஸ்த்ரீ புருஷஸம்யோக மென்பது தான் இங்கே கருமமென்கிறது. இது மிகவும் அருவருக்கத்தக்கதாகையால் விடத்தக்கதாக இதனை யறியவேண்டும். இதை விடவேண்டுமென்பது மேலே பதினோராவது சுலோகத்திலும் காட்டப்படுகிறது என்பதாம். இதனால் நாம் தெரிந்துகொள்வது, க்ருஹஸ்தாச்ரம தருமமாக விஹிதவிஷயபோகம் ப்ராப்தமேயானாலும் அது விசிஷ்டாதிகாரிக்கு ஜுகுப்ஸநீயமேயென்று. ஆகவே இவ்விஷயத்திலும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம் நிரவத்யமென்றுணர்க. மேலேகாட்டிய கீதாபாஷ்யத்திற்கு தாத்பர்ய சந்த்ரிகையை நன்கு ஸேவிப்பது (10)

## 11. எம்பெருமானுடைய வ்யாப்தி பரிஸமாப்ய வர்த்தநம்.

உபநிஷத்தானது *அந்தர் பஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:* என்று ஸகல பதார்த்தங்களிலும் எம்பெருமான் உள்ளும் புறமும் வியாபித்திருப்பதாக ஓதியிருக்கின்றது. அணுவான பதார்த்தங்களில் உள்ளீடாக வ்யாப்தி ஸம்பவிக்கமாட்டாதென்று ஒருவாதம். அவயவியான பதார்த்தங்களுக்கே உள் வெளி என்று சொல்லக்கூடுமாதலாலும் நிரவயவமான அணு பதார்த்தங்களுக்கு ‘உள்ளே வெளியே’ என்று சொல்வதற்கு ப்ரஸக்தியில்லாமையாலும் அணுபதார்த்தங்களிலே எம்பெருமானுக்கு உள்ளுற வ்யாப்தி சொல்லவொண்ணாது என்கிறார்கள் பிறர். அன்றியும், ஒரு பொருளிலும் எம்பெருமானுக்குப் பரிஸமாப்ய வர்த்தித்வம் [அதாவது - பரிபூர்ண வ்யாப்தி] கொள்ளவொண்ணாது. ஒரு பதார்த்தத்திலே அவனுக்குப் பரிபூர்ண வ்யாப்தியை அங்கீகரிக்குமளவில் [அதாவது பகவானுடைய ஸ்வரூபம் ஒன்றிலே பரிஸமாபித்து வர்த்திக்கிறதென்னில்] மற்றொரு பதார்த்தத்தில் வியாபிக்க ப்ரஸக்தியில்லாமையாலே பரிஸமாப்ய வ்யாப்தியை அங்கீகரிக்க லாகாதென்றும் மற்றொரு வாதம் கூறுவர் பிறர்.

அணுபதார்த்தங்களிலும் அந்தர் வ்யாப்தி உண்டென்றும், ஒவ்வொரு பொருளிலும் பரிஸமாப்யவர்த்தித்வமும் பொருந்துமென்றும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம். . சாரீரக மீமாம்ஸையில் (ப்ரஹ்ம ஸூத்ரத்தில்) * க்ருத்ஸ்நப்ரஸக்திர் நிரவயவத்வஶப்தகோபோ வா * என்கிற பூர்வபக்ஷ ஸூத்ரத்தின்மேல் * ஶ்ருதேஸ்து ஶப்தமூலத்வாத் * என்கிற ஸித்தாந்த ஸூத்ரம் அவதரித்துள்ளது. சாஸ்த்ரங்களினால் தேறுகின்ற விஷயங்களில் குதர்க்க மூலமான குசோத்யங்களைச் செய்யாமல் சாஸ்த்ரம் சொன்ன கட்டளையிலே இசையவேண்டுமென்று இந்த ஸூத்ரம் சிக்ஷிக்கின்றது. * அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: * என்று சுருதி ஸ்பஷ்டமாகச் சொல்லி வைத்தது. வேதஞ் சொன்னது ஒருபுறமிருக்கட்டும். வேதார்த்த நிர்ணயகர்களான வேதாந்த தேஶிக ஶ்ரீஸூக்திகள் நிஸ்ஸந்தேஹமாக அருளிச் செய்திருப்பது என்ன? என்று பார்ப்போம்.

ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸாக்ஷாத் திருவடியான திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மொழியில் (1–1–10) * பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன் * என்கிற பாசுரத்தின் ஆறாயிரப்படியில் இங்ஙனே யருளிச் செய்கிறார்:—“அதி ஸூக்ஷ்மமாயிருந்த அசித் வஸ்துக்களிலும் வியாபித்து அவற்றினுள்ளே ப்ரகாசிக்கிற சித் வஸ்துக்களிலும் ஸ்தூலமான அண்டத்தில் வியாபித்தாற்போலே அநாயாஸத்தாலே அஸங்குசிதனாய்” என்று. தசோபநிஷத் பாஷ்யகாரரான ஸ்ரீரங்கராமாநுஜ ஸ்வாமி திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி யென்று ஸம்ஸ்க்ருத ப்ரதிபதார்த்தடீகை பணித்துள்ளார். [அச்சிட்டு மிருக்கிறது.] அதில் இப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் அவர் பணித்திருப்பதாவது—* ஸர்வேஷ்வபி ஜலபரமாணுஷு அதிஸூக்ஷ்மேஷ்வபி ப்ரத்யேகம் வ்யக்திஷு ஜாதிவத் பர்யாப்தவ்ருத்தி: * என்று. இதன் பொருளாவது, வ்யக்திகளில் ஜாதியானது எப்படி பரிஸமாப்யவர்த்திக்கின்றதாக ஜாதிவாதிகளால் கொள்ளப்பட்டிருக்கின்றதோ அப்படி எம்பெருமான் ஒவ்வொரு ஜலபரமா

ணுவிலும் அதி விசாலமான ப்ரஹ்மாண்டத்திலிருப்பதுபோல (நெருக்குண்ணுமல்) நிறைந்திருக்கின்றான் என்பதாம். இங்கு * பர்யாப்த வ்ருத்தி: * என்று இம்மஹான் பணித்திருப்பது பூருவர்களின் ஸித்தாந்தத்தை நன்கு அடியொற்றியதாம். பரிஸமாப்ய வர்த்தமாநத்வமே சொல்லிற்று. ரங்கராமாநுஜஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியென்றால் அது தேசிக ஸூக்தியோடொப்ப ஆதரணீயமன்றோ. நேராக தேசிக ஸூக்தியையே காட்டுவோம். நியாயஸித்தாஞ்ஜந—ஈச்வர பரிச்சேதத்தில் இவ்வாக்ஷேபத்தை யெடுத்துக்காட்டி * ஸர்வத்ர ப்ரஸித்தோபதேஶாத் * என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தையே தஞ்சமாகக்கொண்டு * யதாஶாஸ்த்ரம் ஸர்வத்ர பூர்ண ஏவ ஹீஶ்வர: * [சாஸ்த்ரம் சொன்னபடி எம்பெருமான் எங்கும் பூர்ணனே] என்று தலைக்கட்டியருளினர். இதில் சிலர்க்கு உள்ள மருளைப் போக்குவோமிங்கு.

இந்த ஸித்தாஞ்ஜனத்தில் "அதஸ்ஸர்வத்ர ஸர்வதா பரிபூர்ண ஏவ" என்றருளிச்செய்துவிட்டு, உடனே "கதம் ஸ்வல்பதேஶவர்த்தின: ஸ்வல்பஸ்ய பூர்ணத்வம் ஸம்பாதிதம்" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. இந்த ஸூக்திக்கு உதயம் எப்படி? என்பதொன்றையே விவேகிகள் விமர்சிக்கவேணும். * ஸர்வத்ராபி பூர்ண ஏவ * என்று ஸாதித்தவுடனே "வேறிடங்களிலுமிருக்கின்ற ஈச்வரன் ஒரேயிடத்தில் எப்படி பூர்ணனுயிருக்கமுடியும்?" என்று ஒருவன் ஆக்ஷேபிப்பதாக எழுதப்பட்டிருக்கிறதே, கீழ் வாக்யத்திலிருந்துதானே இந்த ஆக்ஷேபம் தோன்றவேண்டும். இப்படி ஆக்ஷேபிக்கவேண்டும்படியான விஷயமே கீழ்வாக்கியத்தில் சொல்லி முடிக்கப்பட்டிருக்கிறதென்பது கைகொள் கனியாகக் காண்கிறதே. இதை இல்லைசெய்ய யாரால் முடியும். சாகுந்தல நாடகத்தின் முடிவில் மஹாகவி ஒரு வாஜ்விநோதம் காட்டியுள்ளார்; அதைச் சுருக்கமாக நினைப்பூட்டுகிறோம்; குழந்தையான துஷ்யந்தகுமாரனெதிரில் ஒருத்தி ஒரு பதுமைப்பறவையைக்கொண்டு காட்டி "ஸர்வதமந! சகுந்தலாவண்யம் பச்ய" [குழந்தாய்! இந்த பக்ஷியின் அழகைப்பார்] என்று சொன்னவளவிலே 'அப்படியா? என் தாயான சகுந்தலையா? எங்கே?' என்றதாம் அக்குழந்தை. சகுந்தமென்று பக்ஷிக்குப் பெயராகையாலே 'சகுந்தத்தினுடைய லாவண்யத்தைப்பார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. குழந்தையானது (சகுந்தலா...) என்று தன் தாயின் பெயரை ப்ரஸ்தாவித்ததாகக் கொண்டு சகுந்தலை எங்கே? என்று கேட்டதாக அமைப்பு உள்ளது. இங்கு 'சகுந்தலாவண்யம்' என்று சொல்லாமல் "விஹங்கம லாவண்யம்" என்றோ 'பக்ஷிலாவண்யம்' என்றோ சொல்லியிருந்தால் அப்போது குழந்தை 'என் தாய் எங்கே? என்று கேட்பதற்கு ப்ரஸக்தியுண்டோ? இது கவி தானாக வைத்தவொரு சமத்காரம். அப்படி ஏதேனும் இங்கு விசித்ரவாக்கின் அமைப்பு உள்ளதோ? ருஜுவான வாக்கேயுள்ளது. "ஸர்வத்ராபி பூர்ண ஏவ" என்று ஸாதித்த ஸ்வாமியின் திருவுள்ளத்தில் "கதம் ஸ்வல்பதேஶவர்த்தின: ஸ்வல்பஸ்ய பூர்ணத்வம் ஸம்பவதி?" என்று சங்கிப்பதற்கு உறுப்பான அர்த்தமே உறைந்து கிடந்ததென்பது அசைக்கமுடியாதபடி தேறிவிட்டது. அந்த பூர்ணத்வந்தான் வஸ்துதோறும் ஸ்வரூப ஸமாப்தி யென்பது. கடைசியாக இவ்விஷயத்தை முடிக்குமளவிலும் வேறொரு சப்தத்தை யிட்டுமுடிக்காமல் * "யதாஶாஸ்த்ரம் ஸர்வத்ர பூர்ண ஏவ ஹீஶ்வர:" * என்று முதல் முதலிலெடுத்த பூர்ண சப்தத்தையேயிட்டு முடித்தார். இவ்விடத்தில் * க்ருத்ஸ்நப்ரஸக்திரித்யாதிபூர்வ பக்ஷஸூத்ரத்தையும் * ச்ருதேஸ்து சப்தமூலத்வாத் * என்கிற ஸித்தாந்த ஸூத்ரத்தையும் தஞ்சமாகக் கொண்டன்றோ விவாத விஷயம் உபஸம்ஹரிக்கப் பட்டது. பிறர் சொல்லுகிறபடி ஸ்வாமிக்குத் திருவுள்ளமாயிருந்தால் இங்கு இந்த ஸூத்ரத்தை உதாஹரித்தது ஸர்வாத்மநா அப்ரஸக்தமாகுமே. லோக விஸஜாதீயமான அத்புத சக்திவாய்ந்த பரமபுருஷனிடத்

திலே 'இது எப்படி ஸம்பவிக்கும்? அது எப்படி ஸம்பவிக்கும்? என்று வாயைத் திறவாதே என்றன்றோ ஸூத்ரகாரர் முடித்திட்டது. அது தானே இங்கு ஸ்வாமியின் முடிவுக்குக் கைகொடுத்தது. அகடிதகடநாசக்தன் பக்கலிலே கூடாததொன்றில்லை யென்று சொல்லித் தலைக்கட்டினாராயிற்று. இவ்விஷயத்தை நாம் ப்ரஹ்மவ்யாப்திவசிஷ்டியா என்கிற க்ரந்தத்திலும் ஸித்தாந்தஸௌபாக்யத்விதீய கண்டத்திலும் வெகு விரிவாக உபபாதித்திருக்கிறோம். ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதியில் தமிழிலேயே மிக விரிவாக விளக்கியிருக்கிறோம். ... (11)

## 12. ஜாதி நசிக்கும்

* தத்கர்ம யந்நபந்தாய ஸாவித்யா யா விமுக்தயே। ஆயாஸாயாபரம் கர்ம வித்யாந்யா ஶில்பநைபுணம்॥ * என்கிற ப்ரமாணம் ஸர்வஸம்ப்ரதிபந்நம். மோக்ஷார்த்தமாக உபயோகப்படும் வித்யை எதுவோ அதுவே வித்யையாகும்; அப்படியல்லாதது செருப்புக்குத் தக் கற்ற கல்வி போன்றதேயாகும் என்று இதனால் சொல்லிற்று. ஆகவே தர்க்க பாண்டித்யத்தைக் கொண்டே பெருமைபாவிக்கலாகாதென்பது விளங்கிற்று.

ஜாதியினால் ஏற்றமும், ஆச்ரமத்தினால் உயர்வும், கல்வியினால் சிறப்பும், ஒழுக்கத்தினால் உத்கர்ஷமும் பக்திப் பெருஞ்செல்வமில்லாதபோது சிறிதும் பயன்படாதென்பது தெளிவாயிற்று. இவ்வர்த்த விசேஷங்களை ஸ்ரீ வசநபூஷணமும் ஆசார்ய ஹ்ருதயமும் பரக்கப் பேசியுள்ளன. இவ்வர்த்த விஷயமான விவாதம் ஸம்பிரதாயத்தில் ஒரு பெரிய விஷயமாக வுள்ளது. வர்ணாச்ரம வ்யவஸ்தையை மீறி இதர வர்ணத்தவர்களை உபசரிப்பதோ கௌரவிப்பதோ தகாது என்னுமபிஸந்தியினால் இவ்வர்த்தத்தில் வாத விவாதங்கள் வளர்ந்திருக்கின்றன. இக்காலத்தில் இதர வருணத்தவர்கள் யோக்யதை மிகுந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் திறத்திலே நாம் எங்ஙனம் நடந்து கொள்ளுகிறோமென்பது அனைவர்க்கும் அபரோக்ஷம். நாமும் பிறரும் நடத்தையில் ஒரு வாசியின்றிக்கே யிருப்பது ப்ரத்யக்ஷ ஸித்தம். ஆனால் இவ்வர்த்த விசேஷங்களை நம் பூருவர்கள் அவசியமாக எழுதிவைத்தது எதற்காகவென்றால், அவர்களுடைய காலத்திலும் பண்டைக்காலத்திலும் இருந்த லோகாதீத பரம விலக்ஷண பரமபக்த சிகாமணிகளைப் பற்றியே முக்கியமாக அருளிச் செய்ததாகும். இக்காலத்திலும் அப்படிப்பட்ட மஹா பாகவதோத்தமர்கள் * க்வசித் க்வசித் * என்றபடியே ஒரோ விடங்களிலே தோன்றுகை அஸம்பாவிதமன்று. அன்னவர் திறத்திலே நாம் ப்ரதிபத்தி குன்றாமேயிருக்கவேணு மென்பதை சிக்ஷிப்பதும் பூருவர்களின் கருத்தாகும். ஆகவே ஈண்டு இதில் விசேஷித்து விளக்கவேண்டிய அவசியமில்லையெனினும், சாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷ ஸரணியில் ஒரு விஷயம் மாத்திரம் இங்கு நன்று தெளிவிக்க வேண்டியதாகவுள்ளது.

அவ்விஷயம் யாதெனில்; ஜாதி ஆச்ரயாபாயியே யொழிய நசிக்காமலிருக்கக் கூடியதன்று. இதை தேசிகன் அதிகரண ஸாரத்தில் * நமஸ் தஸ்மை கஸ்மைசந பவது * என்று தொடங்கும் சுலோகத்தில் * ஸம்ஸாரீப்ரத்யோரக்ஷணகலிவித பாவாயவ்யய ப்ரஸக்தாஜாதவ்யக்தநவஸ்தாநஹோஜஸஜஸ * என்பதனாலும் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் * பும்ஜாத்யேஷ்வேஷ்வாதி: * என்பதனாலும் விளக்கியருளினர். ஸ்த்ரீஜாதிபோய் பும்ஜாதி ஏற்பட்டது முதலில்; பின்னை அந்த பும்ஜாதி போய் ஸ்த்ரீஜாதி ஏற்பட்டது. ஆகவே ஜாதி ஆச்ரயாபாயியென்று தேசிகன் திருவுள்ளமாக முடிந்தது. .... ... (12)

## 13. உபாயாந்தரங்கள் ஸ்வரூப விருத்தம்.

ப்ரபத்தியொழிந்த மற்றையுபாயங்கள் உபாயாந்தரங்களெனப்படும். உபாஸநம் முதலானவற்றிலே ப்ரபந்நர்களான நமக்கு ப்ராப்தியில்லை யென்பது ஸர்வஸம்ப்ரதிபந்நம். ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ள அந்த உபாயாந்தரங்களை நாம் விடுகைக்கு ஹேது என்ன? என்கிற விசாரத்திலே, அவ்வுபாயாந்தரங்களை அறிகைக்கும் அநுஷ்டிக்கைக்கு மீடான ஜ்ஞான ஶக்திகளில்லாமையே ஹேதுவென்று நினைக்கலாம். ஆனல் அப்படிப்பட்ட ஜ்ஞாந ஶக்திகள் நம்போல்வார்க்கு இல்லையாகிலும் ஜ்ஞாநஶக்தி புஷ்கலர்கள் [பூர்வாசார்ய ப்ரப்ருதிகள்] பலருண்டே; அவர்கள் அநுஷ்டித்ததுண்டோ? அநுஷ்டிக்கத்தகுமோ? என்னில்; தகாது. உபாயாந்தரபரித்யாகத்திற்கு ஜ்ஞான ஶக்திகளில்லாமையே ஹேதுவன்று; எம்பெருமானுக்கு அத்யந்தம் பாதந்திரப்பட்டிருக்கையாகிற ஸ்வரூபத்துக்குச் சேராதென்னு மதுவே முக்யஹேதுவென்று ஸதாசார்யஸித்தாந்தம். அஜ்ஞானமும் அஶக்தியுமடியாக விடுவதானல் ஜ்ஞானஶக்திகளுண்டாகில் அவற்றைப் பரிக்ரஹிக்கவேண்டி வருமன்றே; ஸ்வரூபவிரோதியென்று விட்டாலன்றே மறுவலிடாதொழிவது. ஆகவே ஸ்வரூபவிருத்தமென்னுமதுவே ப்ரயாநஹேது.

இதை ஸ்வாமி தேசிகன் நியாஸதிலகத்திலே வெகு சாதுர்யமாகக் காட்டியருளினர்; எங்ஙனே என்னில்; அதுதன்னிலுள்ள சுலோகமிது;—

"ஆர்த்தேஷ்வாஶுபலா ததந்யவிஷயேப்யுச்சிந்ந தேஹாந்தரா
வஹ்ந்யாதேரநபேக்ஷணாத் தநுப்ருதாம் ஸத்யாதிவத் வ்யாபிநீ ।
ஶ்ரீரங்கேஶ்வர யாவதாத்மநியத த்வத்பாரதந்த்ர்யோசிதா
ஸ்வீயைவ ஸ்திதிவாருணீயவிஹித ஸ்வோபாயபாவாஸ்து தே ॥" என்பது.

இதில் ப்ரபத்திக்கு இட்டிருக்கிற விசேஷணங்களத்தனையும் பக்திவேஷவ்யாவர்த்தகங்கள். விவரித்துக் காட்டுகிறோம் காண்மின்; [ஆர்த்தேஷு ஆசுபலா] பக்தியானது விளம்பித்துப் பலனளிக்கும்; ப்ரபத்தி அங்ஙனன்றிக்கே விரைவில் பலனளிக்கும் — ஆர்த்தப்ரபந்நர்திறத்தில். [ததந்யவிஷயேபி உச்சிந்ந தேஹாந்தரா] பக்தியானது தேஹாந்தர ஸம்பந்தத்தை யறுத்துத் தருவதில் நியதியுடையதன்று; ப்ரபத்தி நியமேந தேஹாந்தர ஸம்பந்தத்தை யறுத்துத் தரும். [வஹ்ந்யாதே: அநபேக்ஷணாத் தநுப்ருதாம் ஸத்யாதிவத் வ்யாபிநீ] பக்தியாகிற உபாயத்தின் அநுஷ்டானத்தில் அக்நிகார்யம் முதலியவை அபேக்ஷிதமாயிருக்கையாலே அது அதிக்ருதாதிகாரமாயிருக்கும். ப்ரபத்தியில் அவ்வபேக்ஷை யில்லாமையாலே ஸத்யம் சொல்வதற்கு எப்படி ஸர்வரும் அதிகாரிகளோ அப்படியே ப்ரபத்தியிலும் ஸர்வரும் அதிகாரிகள். இனி இதற்கு அடுத்த விசேஷணமே ப்ரக்ருத விஷயத்திற்கு உற்று நோக்கத்தக்கது. [யாவதாத்ம நியத த்வத் பாரதந்த்ர்யோசிதா] பக்தி ஸ்வரூபவிருத்தம். ப்ரபத்தி ஸ்வரூபாநுரூபம் என்கிறது. யாவதாத்மநியதமான அத்யந்த பாரதந்த்ர்யத்துக்கு ப்ரபத்தி உசிதமாயிருக்குமென்றபோதே ப்ரபத்திப்ரதிகோடியான பக்தியானது அந்த பாரதந்த்ரியத்திற்கு விருத்தமாயிருக்குமென்னுமிடம் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டதாயிற்றன்றே; ஆகவே தேசிகன் திருவுள்ளமும் உபாயாந்தரம் ஸ்வரூப விருத்தமென்பதே யென்று தேறுகின்றது, இதனையே

* பத்திமுதலாமவற்றில் பதியெனக்குக் கூடாமல் * என்ற அடைக்கலப்பத்துச் செய்யுளும் காட்டிநின்றது. அவற்றில் பதி ஏன் கூடவில்லை? என்று கேட்கவேணும்.

"உபாயாந்தரங்களை ஸ்வரூப விருத்தமென்ன வொண்ணாது. இவை * அகிஞ்சநோநந்ய கதி: * என்றிருக்கும் அதிகாரிக்கு ஸ்வாதிகார விருத்தங்களென்ன ப்ராப்தம்" என்றும் தேசிகன் ரஹஸ்யத்தில் பேசியிருப்பதுண்டு. ந்யாஸதிலகத்தி லருளிச்செய்தபடியே இவை அத்யந்தபாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்குப் போராதென்கிற ஸத்ஸம்ப்ரதாய நிஷ்கர்ஷம் சாலவினிது.

## 14. கைவல்ய மோக்ஷத்தைப்பற்றி

கைவல்யமாவது ஸ்வாத்மாநுபவம். இதற்கொரு ஸ்தான விசேஷமுண்டு. அதுவும் மீட்சியில்லாத மோக்ஷமே யென்பது நம் ஆசார்யர்களின் ஸித்தாந்தம். இதை மோக்ஷமென்பது ஔபசாரிகமென்றும், மீட்சியுண்டென்றும் கூறுவர் பிறர். இவ் விவாதம் பூருவர்களின் காலத்தில் விசேஷமாக வளரவில்லை. பிற்காலத்தவர்கள் இதைப்பற்றி வெகு விரிவான க்ரந்த கோலாஹலங்களை வளர விட்டார்கள். ஸ்தோத்ரரத்நத்தில் நான்காம் ச்லோகத்தில் * [போகாபவர்க்க ததுபாயகதீ:] * என்ற விடத்துக்கு வியாக்கியானஞ் செய்யுங்கால் பெரியவாச்சான் பிள்ளைக்கும் தேசிகனுக்கும் அபிப்ராயபேதம் விளைந்திருப்பதுண்டு. கைவல்யாநுபவமென்னும் ஆத்மாநுபவத்தை அபவர்க்க பதத்திற்கு அர்த்தமாக வுரைத்தருளினர் பெரிய வாச்சான்பிள்ளை; முந்தின போக பதத்திற்கே அது அர்த்தமென்றார் தேசிகன்.

ந்யாய ஸித்தாஞ்ஜநத்திலே தேசிகன் இது விஷயமாகச் சில சொல்லிக்கொண்டு போம்போது ஸ்ரீ பாஷ்யஸூக்திகள் ஸ்வமதாநுகூலங்களென்றும், கீதாபாஷ்ய ஸூக்திகள் மாத்திரம் தம் கருத்துக்கு இணங்கவில்லை யென்றும் திருவுள்ளம்பற்றி * "ஸாக்ஷாத் ப்ரஹ்மஸூத்ரகாராணாம் பகவத் ப்ரஹ்மஸூத்ராணாம் சாந்யாயத்வாத் ப்ரஹ்மஸூத்ரோக்தி:" என்ற ஒருவாக்யத்தினால் கீதாபாஷ்யஸூக்திகளுக்கு அஸ்வாரஸ்யம் கல்பித்தருளினர். ஸ்ரீபாஷ்யஸூக்திகளையும் கீதாபாஷ்ய ஸூக்திகளையும் ஸமரஸமாக நிர்வஹிக்க இயலாமையாலே அந்யதரக்ரந்தத்திற்கு அஸ்வாரஸ்ய கல்பநம் அவர்ஜநீயம் என்று தேசிகனுடைய திருவுள்ளமாயிருந்தது. ஒன்றுக்கும் அஸ்வாரஸ்யம் கல்பிக்கவேண்டாமல் எல்லாம் நன்குபொருந்தும்படியைப்பெரியார் நிரூபிக்கிறார்கள்.

கீதாபாஷ்யத்தில் பஞ்சாக்நி வித்யாநிஷ்டனான கேவலனுக்கு ப்ரஹ்மாத்மக ப்ரக்ருதி வியுக்த ஆத்மஸ்வரூப உபாஸநத்தையும் ப்ரக்ருதிவியுக்த ஆத்மஸ்வரூபாவாப்திரூபபலத்தையும் அர்ச்சிராதி கதியினால் பரமபத ப்ராப்தியையும் புநராவ்ருத்தியில்லாமையையும் அருளிச் செய்துள்ளார்; ஸ்ரீ பாஷ்யத்தில * அப்ரதீகாலம்பநாந்நயதீதி பாதராயண: * என்ற ஸூத்ர விவரணத்தில்— "ஏவம் அசித்விநிர்முக்த ஆத்மஸ்வரூப ப்ரஹ்மாத்மகத்வாநுஸந்தாநேந உபாஸீநா: அதத்க்ரதவ: பஞ்சாக்நிவிதஸ்ச ப்ரஹ்மாத்மகாத்மோபாஸநாத் ப்ரஹ்ம ப்ராப்நுவந்தி" என்றருளிச்செய்திருக்கையாலே கேவலனுக்கு ப்ரஹ்ம ப்ராப்தியாகிற பலன் ஸ்ரீ பாஷ்யத்தில் சொல்லிற்றாகத் தேறுகின்றது. ஆகவே, ஆத்மஸ்வரூபாவாப்தியைப் பலனாகச் சொல்லுகிற கீதாபாஷ்யத்திற்கும், ப்ரஹ்ம ப்ராப்தியைப் பலனாகச் சொல்லுகிற ஸ்ரீ பாஷ்யத்திற்கும் பரஸ்பரவிரோதம் இருப்பதாகத் தோற்றும்.

இந்த விரோதத்தை விலக்கமுயன்ற தேசிகன் மதுவித்யாந்யாயத்தை மனத்திலே கொண்டு ப்ரக்ருதிவியுக்த ஆத்மாநுபவத்தை அவாந்தரபலனாகவும் ப்ரஹ்மாநுபவத்தை ப்ரதான பலனாகவும் கல்பித்து நிர்வஹித்தருளினர். இப்படி நிர்வஹிக்குமளவில் கீதாபாஷ்ய ஸூக்தியில் அஸ்வாரஸ்யம் ஏறுகின்றது. அவ்வளவேயல்ல; அவாந்தர பலனைக் கல்பிக்க வல்ல ப்ரமாணமும் துர்லபமாகின்றது. மதுவித்யாந்யாயம் இங்கே ஸூதராம் அப்ரஸக்தம். ஒரு விரோதமும் வாராதபடி நிர்வஹிக்கும் வழி ஏதென்னில்;

ப்ரக்ருதிவியுக்த ஆத்மாநுபவமே கேவலனுக்கு ப்ரதானபலன்; கீதாபாஷ்யத்திலருளிச் செய்தவிதுவே ஸித்தாந்தம். ஆனால் ஸ்ரீ பாஷ்யத்தில் * ப்ரஹ்மப்ராப்த்யவநராவ்ருத்திஶ்ருவணாத் * என்று ப்ரஹ்ம ப்ராப்தியை ப்ரதிபாதித்திருப்பது விரோதிக்கின்றதே யென்கிற சங்கை நிற்கின்றது. கேண்மின், விரோதமில்லை. அங்கு அடுத்தபடியாகவே "அத ஏவ தக்க்ரதுந்யாயாத் ப்ரக்ருதிவிநிர்முக்த ப்ரஹ்மாத்மகஸ்வாத்மாநுபவ ஸம்பாநம் விஜ்ஞேய" என்றருளிச் செய்திருக்கையாலே தத்க்ரதுந்யாயத்தைக் காட்டினதற்கேற்ப ப்ரஹ்மாத்மகஸ்வாத்மப்ராப்திதான் ப்ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸநத்திற்கு ஏற்றதான பலனாகத் தேறும். ஆகவே விசேஷணதயா ப்ரஹ்மத்திற்கு ப்ராப்யத்வம் தேறுகையாலே ப்ரஹ்ம ப்ராப்தி சொன்னது பொருந்தும். ப்ரதானமாயிருக்கவேண்டிய ப்ரஹ்மாநுபவம் அப்ரதானமாய் ஆத்மாநுபவமே ப்ரதானமாய்நிற்கையாலே கைவல்ய மோக்ஷம் இழிவுற்றது.

இப்படி நிர்வஹிக்கில் ஸர்வம் ஸமஞ்ஜஸமாகிறது. இப்படியல்லாமல் ப்ரக்ருதிவியுக்த ஆத்மாநுபவத்தை அவாந்தர பலனாகவும் ப்ரஹ்மாநுபவத்தை முக்கிய பலனாகவும் கல்பிப்பது நிராதாரமென்னுமளவே யல்ல, கீதாபாஷ்யஸூக்திக்கு அஸ்வாரஸ்ய கல்பகமாகவும் முடிகின்றது. பஞ்சாக்நிவித்யா நிஷ்டனுக்கு மூர்த்தந்ய நாடியினால் நிஷ்க்ரமணமும் அவாந்தர பலனாகிற வொரு வ்யவதானமின்றிக்கே பலனைப்பெறுவதென்கிற விஷயமும் ச்ருதப்ரகாசிகையில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே கீதாபாஷ்யத்தில் அருளிச் செய்தபடி ப்ரக்ருதிவியுக்த ஆத்மஸ்வரூபாவாப்திரூபமான பலனே கேவலனுக்கு நியதமாகவுள்ளது. அதுதானும் ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸநஸித்தமான பலனாகையாலே விசேஷணதயாப்ரஹ்மப்ராப்தியுமுள்ளதாகையாலே ப்ரஹ்ம ப்ராப்தியாகிற பலனை யருளிச்செய்த ஸ்ரீபாஷ்யமும் அவிருத்தமாகிறதென்று கொள்க. இதில் ஸாரமாகத் தெரிவிக்கவேண்டியது இவ்வளவே. ஸ்ரீ கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியில் அஸ்வாரஸ்ய மிருப்பதாகவும் அதை ஸஹித்துக்கொள்ள வேண்டியதேயென்றும் தேசிகன் ஸ்பஷ்டமாக ஸாதித்திருக்கிறாரென்பது அபலபிக்க முடியாமலுள்ளது. அப்படிப்பட்ட அஸ்வாரஸ்யம் கிடையவே கிடையாதென்கிற நிர்வாஹ ஸரணியும் காட்டப்பட்டது. இவ்விஷயத்தில் இது போதுமென்று நிற்கிறோம். .... ... .... (14)

## 15. ஸக்ருத்ப்ரணாமத்தைப்பற்றி

ஸத் ஸம்ப்ரதாயத்தில் ஒரு தடவை நமஸ்கரிப்பதென்றுள்ளது. 'பலமுறை நமஸ்காரம் செய்வதனால் ப்ரத்யவாயமுண்டோ? நமஸ்காரம் என்பது நல்ல காரியமேயொழிய

கெட்ட காரியமன்றே. பகவத் பாகவத விஷயங்களில் ஒரு தடவைக்குப் பல தடவையாக நமஸ்கரிப்பதனால் ஸ்வரூபம் நிறம்பெறுமே யல்லது கெட்டுப்போய்விடாதே. ஆகவே ஒரு தடவையே நமஸ்கரிக்க வேணுமென்று ஒரு நிபந்தனை கொள்ளவேண்டுமோ? பல தடவை நமஸ்கரிக்கக் கூடாதென்று சாஸ்த்ரம் மறுக்குமோ? அப்படி சாஸ்த்ரம் மறுத்திருப்பதாகவும் தெரியவில்லையே. தேஹத்தில் சக்தியற்றவர்கள் ஒரு தடவையோ அரை தடவையோ நமஸ்கரிக்கட்டும்; சக்தியும் உத்ஸாஹமுமுள்ளவர்கள் பலமுறை நமஸ்கரித்தால் அதைக் குற்றமாகக் கொள்ளும்படி ஒரு ஸம்ப்ரதாயம் இருக்கத்தகுமோ?' என்றிங்ஙனே சங்கைகள் தோன்றக்கூடியவையுள. இதில் நம்மாசாரியர்களின் திருவுள்ளத்தை விளங்கவுரைக்கிறோம் கேண்மின். எந்த விஷயத்திலும் சாஸ்த்ரங்களின் போக்கு உச்சாவசமாயிருக்கும். "மறைப் பாற் கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து" என்னுமா போலே நூற்கடல்களை நன்கு கடைந்து நுண்பொருள்களைக் கடைப்பிடித்துப் பரமாசாரியர்கள் காட்டியருளின அனுஷ்டானமே பரம சாஸ்த்ரம். ஸக்ருத் ப்ரணம விஷயத்தில் என்ன நுண்பொருள் காணலாகும்? என்னில்; கேண்மின். நமஸ்காரத்தின் ப்ரயோஜனம் என்ன? என்பதை முந்துற முன்னம் விமர்ஶிப்போம். * நஞ்ஞ நஞ்ஞவஞ்ஞஹாவொயம நவூயொஜநவ-வெ-ஃகஃ। நீவெஅாஅயொஃ ஹ வஹாவொயம நஞ்ஞ நஞ்ஞவஞ்தாகஃ॥ * என்று அஹிர்ப்புத்ந்யஸம்ஹிதையிலுள்ள வசனத்தை தேசிகனும் எடுத்துக் காட்டியுள்ளார். பெரியாரைக் கண்டால் சிறியார், தங்களுடைய சிறுமைக்கும் எதிர்த்தலையின் பெருமைக்கும் ப்ரதர்சகமாக நமஸ்காரம் செய்யவேணுமென்றது. வேறொரு ப்ரயோஜநமும் இதற்கில்லையென்றும் சொல்லிற்று. ஒருகால் தொழுதமாத்திரத்தினால் ஸ்வநிகர்ஷமும் பரோத்கர்ஷமும் ப்ரகாஶிதமாயிற்று. பலகால் தொழவேணுமென்கிற நிர்ப்பந்தத்திற்கு ப்ரஸக்தியில்லை.

சாஸ்த்ரங்களில், ஒற்றைக்கையால் நமஸ்கரிப்பது அபசாரம், ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணுகை அபசாரம் என்று சொல்லியிருப்பதுபோல ஒரு முறை நமஸ்கரிப்பது அபசாரம் என்று சொல்லப்படவில்லை. "ஏகேநவாணிநா யஸ்து ப்ரணமேத் ஸக்ருதேவ ஹி। நஶ்யந்தி ஸுக்ருதாநி" என்றும், "ஏகஹஸ்தப்ரணாமஶ்ச ஏகம் சாபி ப்ரதக்ஷிணம்" என்றும் இத்தகைய ப்ரமாணங்களையே ஸ்தோத்ர பாஷ்யாதிகளில் உதாஹரிக்கக் காண்கிறோம்.

எம்பெருமானார் ஸ்ரீவைகுண்ட கத்யத்தில் "ப்ரணம்ய உத்தாயோத்தாய புந: புந: ப்ரணம்ய" [தொழுது எழுந்தெழுந்து மீண்டும் மீண்டும் தொழுது] என்றருளிச் செய்திருக்கும் விஷயத்தில் தெளிவு பிறப்பிக்கிறோம். இங்கு "ப்ரணம்ய உத்தாயோத்தாய புந: புந: ப்ரணம்ய" என்றது ஓரிடத்திலேயே இருந்துகொண்டு பலமுறை நமஸ்கரிப்பதைச் சொல்துவதன்று. அந்த வாக்யத்திற்கு முன்னே "தூராதேவ" என்றருளிச்செய்திருப்பதனால், எம்பெருமானைக் கிட்டுமளவும் காலால் நடந்து செல்லாமல் தெண்டனிட்டுக்கொண்டே வழியைக் கடந்து ஸ்ரீமந்நாராயணனை அணுகுவதாகவே அங்குப் பொருள்படும். இக்காலத்தில் இந் நிலத்தில் அஸக்ருத் ப்ரணமகர்த்தாக்கள் செய்வது போன்ற செயல் அங்கு விவக்ஷிதமன்று. தெண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டே போய் வழியைக்கடந்து எம்பெருமானைக் கிட்டினபிறகு அங்கு ஒரே தடவை நமஸ்கரிப்பதென்னுமது அவ்விடத்திலேயே அடுத்தபடியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "யாவந்த: ப்ரணம்ய க்ருதாஞ்ஜலி ஸந்நிதௌ நிவேதயேத்" என்று அந்த வாக்யஸமாப்தியுள்ளது காண்க. இங்ஙனல்லாமல் ஓரிடத்திலேயே நின்றுகொண்டு பலமுறை தொழுவதைத்தான் "உத்தாயோத்தாய புந: புந: ப்ரணம்ய" என்கிற வாக்

கியம் சொல்லுகிறதென்று கொண்டாலும் குறையொன்றுமில்லை. “ந சாஸ்த்ரம் நைவ ச க்ரம:” என்கிற ரீதியிலே நூல்வரம்புக்கு அடங்காத அவ்விபூதியிலே நிகழுமது கொண்டு என்ன ஸாதிக்கலாகும்? இந்நிலத்தில் நம்பூருவாசாரியர்களின் அநுஷ்டானம் ஸக்ருத் ப்ரணமமே யென்பதை அந்த எம்பெருமானர் தாமே ஸ்பஷ்டமாகக் காட்டியுள்ளபடிபாரீர். அவ்வாசிரியர் திருவாராதனக்ரம மருளிச் செய்கிற நித்யக்ரந்தத்தில்—“ஶூராய நாஹிஶக்ஷவொ ஹவெதி ஶ்ரீமச்சரணௌ ப்ராயஃ ஶ்ரீமச்சரணௌ ஶரணவக்ஷ்யமாணஶ்ச உத்தாய ஸாமதண்டவந்ப்ரணாமஃ யாவதாராய நமஸ்கார்வா ஸம்ஸ்தூய அநந்யப்ரயோஜநஃ.” என்றருளிச் செய்திருப்பது ப்ரஸித்த மிறே. இது கொண்டு ஸ்ரீ வைகுண்டகத்ய ஸ்ரீஸூக்தியின் பொருளை நாம் விவரித்தபடியே தெளிய ப்ராப்தம்.

ஸ்தோத்ர ரத்நத்தில் இருபத்தோராம் ச்லோகத்தில் ‘நமோ நம: நமோ நம:’ என்று பலகால் அருளிச் செய்திருப்பதை ஸமந்வயப்படுத்தத் திருவுள்ளம் பற்றிய தேசிகன் அவ்விடத்து (ஸ்தோத்ர) பாஷ்யத்தில், * ஸம்ஸாயாம் ப்ரதிஜ்ஞாயாம் ப்ரஶாவேதஜஷ்டேநவிசா । ஹயெ ச விஜயெசைவ வெளநஃ வக்த்ர்யலங்க்ருதிஃ ॥ * என்கிற வொரு ச்லோகத்தை யெடுத்துக் காட்டியுள்ளார். இந்த ச்லோகத்தின் பொருளை விவேகிகள் விமர்சிக்கவேண்டும். ஸ்தோத்ரம் செய்தல், ப்ரதிஜ்ஞை செய்தல், அழுதல் வெருட்டுதல், அச்சந்தோற்றச் சொல்லுதல் முதலிய ஸந்தர்ப்பங்களில் ஒருசொல்லையே அடுத்தடுத்துச் சொல்வதானது ஒருவகையான அலங்காரமாகும் என்பது இந்த ச்லோகத்தின் பொருள். உலகத்தில் இதை நாம் நன்ருகக் காண்கிறோம். ‘பாம்பு பாம்பு பாம்பு’ என்று பலமுறை சொன்னாலும் உள்ளது ஒரு பாம்பேயல்லது பலபாம்புகள் வந்துவிடமாட்டா. * பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் * என்று நூறாயிரந்தடவை சொன்னாலும் ‘விஜயீபவ’ என்று ஒருகால் சொல்வதற்கு என்ன அர்த்தமோ அந்த அர்த்தமேயன்றோ தேறுவது. அப்படியே * நமோ நம: * தொழுது தொழுது தொழுது * என்று எத்தனை பரியாயம் சொன்னாலும் அது ஸப்ரணாமாலங்காரமத்தனையென்று தேசிகன் நிர்ணயித்தருளினாராயிற்று. ஸக்ருத்ப்ரணாமாநுஷ்டானம் நம் தேசிகனிடத்தில் இருந்திருக்குமாகில் இங்ஙனே யெழுதியிருப்பரா வென்பதை ப்ராமாணிகர்கள் விமர்சிப்பது. ... ... ... .... ... (15)

## 16. அக்ருஷ்டார்த்தமென்னும் சரணகதியனுஷ்டானத்தைப்பற்றி.

பரமபுருஷார்த்தமான அரும்பெருப்பேறு பெறுதற்கு உறுப்பாக நாம் ஒரு ஸதாசார்யனை ஆச்ரயிக்கிறோம்; என்றைக்கு ஆச்ரயிக்கிறோமோ அன்றைக்கு நமக்கு ஸமாச்ரயணமானதாகத் தொன்றுதொட்டு வ்யவஹாரம் நிகழ்ந்துவருகிறது. திருவாழி திருச்சங்கு களினுல் இலச்சினை பெறுகையாகிற சக்ராங்கனத்தையே ஸமாச்ரயணமென்று உலகம் க்ரஹித்திருக்கின்றது. உண்மையில் ஸமாச்ரயணமென்பது அவ்வளவேயன்று. “ஆசார்யனை ஆச்ரயித்து அவன் மூலமாக எம்பெருமானையடிபணிதல்” என்னும் பொருளதான ஸமாச்ரயணமென்கிற சொல்லானது ஆசார்யனுல் பெறுவிக்கப்படுகிற பேறுகளுக்கெல்லாம் ஸூசகமாக நிற்கின்றது. ஆசார்யனுல் க்ருதக்ருத்யனுகச் செய்விக்கப் பெறுகையே ஸமாச்ரயணமெனப்படுகிறது. பகவதாச்ரயணத்தில் பர்யவஸிதமாகிறது. இந்த ஸமாச்ரயணத்

தையே பஞ்ச ஸம்ஸ்காரமென்கிற சொல்லாலும் வழங்கிவருகிறார்கள். "தாப: புண்ட்ரஸ் ததா நாம மந்த்ரோ யாகச்ச பஞ்சம:, அமீ பரமஸம்ஸ்காரா: பாரமைகாந்த்ய ஹேதவ:" என்று யாவருமறிந்த ச்லோகமானது பஞ்ச ஸம்ஸ்காரங்கள் இன்னின்னவை யென்பதை விவரித்துக் காட்டுகின்றது. தாப: என்பது முதல் ஸம்ஸ்காரம். அதுதான் தப்தசக்ராங்கனமென்பது. திருவிலச்சினை யென்பது ஸம்ப்ரதாயவழக்கு. இரண்டாவதான புண்ட்ரஸம்ஸ்காரமாவது த்வாதசோர்த்வபுண்ட்ர தாரணம் செய்வித்தல். மூன்றாவதான நாமஸம்ஸ்காரமாவது 'இந்த சிஷ்யன் ஸ்ரீவைஷ்ணவனாயினன்' என்பதை விளக்கக் காட்டுகின்ற தாஸ்யநாமகரணம். அவரவர்களின் ஸம்ப்ரதாயப்படி ராமாநுஜதாஸனென்றும் மதுரகவிதாஸனென்றும் ஸ்ரீவைஷ்ணவதாஸனென்றும் இப்படிகளிலே வழங்கிவருவன காண்க. இனி நான்காவதான மந்த்ர ஸம்ஸ்காரமாவது—திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகம் என்கிற ரஹஸ்யத்ரயத்தை உபதேசிக்கப் பெறுகை. ஐந்தாவதான யாகமாவது 'யஜ—தேவபூஜாயாம்' என்கிற தாதுவிலிருந்து தேறுகிற யாகசப்தம் திருவாராதனத்தைச் சொல்லுகிறதாகையாலே பகவதாராதனத்திற்கு அதிகாரம் பெறுகை. இதற்கு மற்றொரு வகையாகவும் பொருள் கூறுவர். அது நிற்க.

இவற்றுள் நான்காவதான மந்த்ரஸம்ஸ்காரத்தில் த்வயமென்கிற மந்த்ரரத்நமே மிகச் சிறந்தது. ஸமாச்ரிதனான சிஷ்யனை அந்த மந்த்ரரத்நமே க்ருதக்ருத்யனாக்குகின்றதாக நம் ஆசார்யர்களனைவருடையவும் ஸமகண்டமான ஸித்தாந்தம். இதனாலேயே ஸமாச்ரயணை நிஷ்பத்தி யென்றுணர்க. இதுதன்னை ரஹஸ்ய க்ரந்தத்திலே ஸுவ்யக்தமாக எழுதிவைத்து சிலாலிகிதமாக்கிவைத்தவர் வேதாந்த தேசிகன். எங்ஙனே யென்னில்; ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் க்ருதக்ருத்யாதிகாரத்திலே—

"அநாதிகாலம் ஆஜ்ஞாதிலங்கனமடியாகவுண்டான பகவந்நிக்ரஹத்தாலே ஸம்ஸரித்துப் போந்த நமக்கு அவஸரப்ரதீக்ஷையான பகவத்க்ருபையடியாகவுண்டான ஸதாசார்ய கடாக்ஷவிஷயீகாரத்தாலே வந்த த்வயோச்சாரணாநுச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு சரண்ய ப்ரஸாதநங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே நிக்ரஹ ஹேதுக்களையெல்லாம் க்ஷமித்துத் தீர்ந்தவடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல ஸர்வசேஷியான ச்ரிய:பதி தன்பேறாகத் தானே ரக்ஷிக்குமென்று தேறி நிர்ப்பரனாயிருக்கை. இது *மாசுச:* என்கிற சரண்ய வாக்யத்திலும் தீர்ந்தபொருள்."

என்றுள்ள வாக்கியங்கள் நிஸ்ஸந்தேஹவிபர்யயமாக உண்மைப்பொருளையுணர்த்துகின்றன. மேலே உதாஹரித்த வாக்கியராசியில் "த்வயோச்சாரணாநுச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு" என்றும் "சரண்ய ப்ரஸாதநங்களில் இதுக்கு மேல் ஒன்றில்லாமையாலே" என்றுமுள்ள ஸ்ரீஸூக்திகள் ஸாரமானவை. மந்த்ரஸம்ஸ்கார ஸமயத்தில் த்வயமென்னும் மந்த்ரத்தை ஆசார்யன் சொல்ல அதை சிஷ்யன் பின்சொல்லுவதுண்டே இதுதான் ப்ரபத்த்யனுஷ்டானமென்று சொன்னதோடு நில்லாமல் இதற்குமேல் வேறொன்று கிடையாதென்றும் ஸுவ்யக்தமாக அருளிச் செய்தாராயிற்று.

இங்ஙனே தமிழில் அருளிச்செய்ததை ஸமாராதந நிக்ஷேபரக்ஷாவின் முடிவில் ஸம்ஸ்க்ருதத்திலுமருளிச்செய்துள்ளனர்; இவை பலகால் எடுத்துக்காட்டப்பட்டவை.

இப்படியிருக்க, நவீனர்கள் அத்ருஷ்டார்த்தமென்று ஒன்று நடத்திப்போருவதானது சாஸ்த்ரங்களிலும் ஸதாசார்யாநுஷ்டாந பரம்பரையிலும் எங்கும் அத்ருஷ்டமான அர்த்தமாதலால் அத்ருஷ்டார்த்தமென்று இதற்குப் பெயரிட்டது மிகவும் பொருத்தமானதே. எம்பெருமானாருடைய சிஷ்ய பரம்பரையிலே ஜனித்தவர்களுக்கு ப்ரபந்நத்வமோ சரணாகதத்வமோ ஜன்மஸித்தமேயாகும். அன்னவர்கள் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துகொள்வதானது வைஷ்ணவ தீக்ஷார்த்தமாக வத்தனையல்லது மோக்ஷஸாதனமாகவன்று. நம்முடைய குலகூடஸ்தரான எம்பெருமானார்க்கு ஸ்ரீரங்கநாதனிடமிருந்து விசேஷித்து வரமும் கிடைத்திருக்கிறது. அதையும் தேசிகனே ந்யாஸதிலகத்தில் "த்ருத்வா வரம் தததுபந்த மதாவலிப்தே" என்

பதனல் நன்கருளிச் செய்துள்ளார். அந்த திவ்யக்ரந்தத்தில் * அந்தோநந்தக்ரஹண * என்றும், * உத்யா தநஞ்ஜய * என்றுமுள்ள இரண்டு ச்லோகரத்னங்கள் நிதியானவை.

அந்யோநந்யக்ரஹணவசமோ யாதி ரங்கேச யத்வத்
பங்குர் கௌகாகுஹரநிஹிதோ நீயதே நாவிகேந,
புங்க்தே போகாந் அவிதிதந்ருபஸ் ஸேவகஸ் யார்ப்பகாதி:
த்வத்ஸம்ப்ராப்தௌ ப்ரபவதி ததா தேசிகோ மே தயாலு:"

இந்த ச்லோகத்தில் ஜ்ஞாநஹீநனுன ஒருவன் குருடனுடைய ஸ்தானத்திலும், ஆசாரஹீநனுன வொருவன் நொண்டியினுடைய ஸ்தானத்திலும் கொள்ளப்படவேண்டியதாகத் தேறும். இப்படிப்பட்ட அதிகாரிகள் ஞானமனுஷ்டானமிவை நன்ருகவேயுடையனை குருவையடைந்தே புருஷார்த்தஸித்தி பெறவேண்டுமென்றதாயிற்று.

இதற்குமேல், மூன்ருவதானவொருத்ருஷ்டாந்தம் (மூன்ருவது பாதத்தில்) வெகு அற்புதமாகக் காட்டப்பட்டிருக்கிறது. *புங்க்தே போகாந் அவிதிதந்ருபஸ் ஸேவகஸ்ய ஸுத-காதி:* என்கிற த்ருஷ்டாந்தம் மிக அற்புதமானது. ராஜஸேவை பண்ணின அமாத்யனுடைய ஸந்ததியார்கள் பலனையநுபவிக்கும்போது அந்த ராஜாவின் முகத்தைப்பார்த்திருக்கவேண்டியதில்லையன்ருே; அந்த ராஜாவைப்பற்றி ஒன்றுமே தெரிந்துகொண்டிருக்கவேண்டியதில்லையே. 'தாம் அமாத்யனுடைய ஸந்ததியே' என்னுமிடத்தை மூதலிக்கவேண்டியதொன்று தவிர வேருெரு க்ருத்யமும் இல்லையன்ருே ஸந்ததியார்க்கு; இதுதான் 'அவிதிதந்ருப:' என்கிற விசேஷணத்தினல் தெரிவிக்கப்படுகிறது. இதுபோலவே, அமாத்ய ஸ்தாநீயரான எம்பெருமானுருடைய ஸந்ததியான நாமும். 'நாம் எம்பெருமானுரைச் சேர்ந்தவர்கள்' என்பதை மூதலிப்பது தவிர பேற்றின்ஸித்திக்காகப் பெருமாளுடைய திருமுகத்தையும் காணவேண்டிய ஆவச்யகதையில்லையென்று ஸ்பஷ்டமாகத் தெரிவித்ததாகிறது.

நம்முடைய பூர்வாசார்யர்களின் சரிதைகளில் திருவிலச்சினைக்கு மேற்பட்ட வொரு அத்ருஷ்டார்த்தானுஷ்டானமென்பது எங்குங்காணக்கிடைக்காதது. இவர்கள் புதிதாகக் கொண்டாடத் தொடங்கிய இந்த நடத்தையொன்றே இவர்களின் நவீநத்வத்தை நன்கு நிலைநாட்டித் தருமென்று கொள்ளக் குறையில்லை. ... .... (.... 16)

— உபஸம்ஹாரம் —

நிகழும் சார்வரி வருடத்துப் புரட்டாசி மஹோத்ஸவத்தின் நீடுழி ஞாபக சின்னமாக தேசிகஹ்ருதய மென்னுமிந்நூல் உண்மையான தேசிக பக்தர்களுக்கு * ஓவாதவூணக உண்ணக் கொடுக்கப்பட்டது. ஸ்வாமி யதிராஜ ஸப்ததியில் * ஸுநவாயவிஷ்ணுவஷ ஸம்ப்ரயம் ஸஜெ * என்கிற சுலோகத்தில் யதிராஜனை விலக்ஷண சந்திரனுகப் பேசுமடைவிலே * கலயா கயாவி கலயாவத்ருநஷ்ஜிதழ * என்று ஒரு கலையும் குறையாத சந்திரனென்ருர். அந்த யதிராஜ சந்திரனைப்போலவே நம் நிகமாந்த ஸூரி திவாகரனும் நித்யம் ஷோடசகலா பரிபூர்த்தி குன்றப் பெருமைபற்றிப் பதினறு கலைகளின் ஸ்தானத்திலே பதினறு சிறந்த விஷயங்கள் இங்குக் கொன்ளப்பட்டு அவற்றில் அம் மஹாசார்யனுடைய யதாவஸ்திதமான திருவுள்ளம் ஸப்ரமாணமாக நிரூபிக்கப்பட்டது. ஆக்ரஹாதிகளாலே ஆரோபித்துச் சொல்லுகை யென்பது அணுவளவுமின்றிக்கே உள்ளது உள்ளபடியே உரைக்கப் பட்டுளதென்பதை உணர்விலுயர்ந்தோர் எளிதினுணர்வர். ... .... ... *.

ஶ்லோ ॥ [illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய

**தேசிகஹ்ருதயம் முற்றிற்று.**

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# உபந்யாஸவிம்சதி—முன்தொடர்ச்சி

## ஒன்பதாவது உபந்யாஸம்—லோகாபிராமம்

உத்தேசித்த இருபது உபந்யாஸங்களில் எட்டு உபந்யாஸங்கள்மட்டுமே முன்னிதழில் வெளியிடப்பட்டன. ஒன்பதாவது முதல் இப்போது வெளியிட ஆரம்பமாகிறது. பல மஹான்களின் ஸ்ரீமுகங்களைப்பற்றியும் மற்றுஞ் சில செய்கைகளைப்பற்றியும் தெரிவிக்கின்ற இந்த வியாஸத்தையும் ஒரு உபந்யாஸமாகவே இடுகிறேன். அடியேன் வெளியிடுகிற ஸம்ஸ்க்ருத—த்ராவிட—ஆந்த்ர—ஹிந்தீபுஸ்தக-பத்ரிகைகளை வாசிப்பவர்கள் நாற்றிசையிலும் மலிந்துள்ளார்கள். அவரவர்கள் அவற்றை வாசித்துவிட்டு வாளாவிருப்பதில்லை; தம்தம் மனத்தில் தோன்றும் உவப்பையும் வியப்பையும் அப்போதைக்கப்போது லிகித மூலமாகவும் நேர்முகமாகவும் தெரிவித்துக்கொண்டே யிருப்பர்கள். அங்ஙனம் தெரிவிக்கின்ற வ்யக்தி விசேஷங்களையும் தெரிவிக்கும் விஷயங்களையும் பிரசுரப்படுத்தவேண்டியது அவசியமாயினும், அவரவர்களின் அநுமதி பெருமல் தெரிவிப்பது உசிதமன்றென்று ஸமயவிசேஷ ப்ரதீக்ஷையுடன் நிற்கின்றேனிப்போது. ஒருவர் தப்பாமல் யாவரும் தெரிவிப்பது ஒன்றுண்டு; (அதாவது) "எதிர்த் தலையில் வெளிவந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிற புத்தகம் எதுவும் எங்களுடைய பார்வைக்குக் கிடைப்பதில்லை. ஆனாலும், அவை கிடைக்கவில்லையே யென்று குறைபடுவதற்கு அவகாசமே யில்லாதபடி [D. R. ஸ்வாமி தெரிவித்திருக்கிற விதமாக] விஷயங்கள் தேங்கா யுடைத்தாற்போல் விளங்குவதால் எதிர் நூலின் அசட்டு வாதங்களும் விளங்கியே தீருகின்றன. பரிகணிதர்களாயிருப்பவர்களுக்கும் இத்தகைய துஷ்ப்ரவ்ருத்தி ஏதுக்கென்று சில ஸமயங்களில் நினைக்கிறோம். அதுவும் உலக நன்மைக்காகவேயென்று ஸமாதானமும் கொள்ளுகின்றோம்"—என்று இதை வாசகபேதங்களால் எழுதாதவர்களே கிடையாது. இங்ஙனம் உவப்பையே காட்டித் திருமுகங்கள் விடுக்கின்றார்கள்.

உவப்பைத் தெரிவிப்பவர்கள் பலர் இருப்பதுபோல் வெறுப்பைத் தெரிவிப்பவர்களும் இருப்பர்களன்றோ! என்று சிலர் நினைக்கவும் கேட்கவுங்கூடும். நிலாத் தென்றல் சந்தனம் புஷ்பம் விளக்கு முதலிய ஸ்ப்ருஹணீய வஸ்துக்களையுங்கூட வெறுப்பவர்கள் உலகில் இல்லாமற்போகவில்லையே; அப்படி நமது பத்ரிகைகளையும் நூல்களையும் வெறுப்பாருமிருக்கவே யிருப்பர். ஆனால் வெறுப்பை நமக்குத் தெரிவிக்க முன்வருவாராருமிலர். விஷயங்கள் ஒரு வகுப்பினர்க்கு (அல்லது) சில வ்யக்திகளுக்கு மிக்க வருத்தத்தைத் தருமவையெனினும் அவர்களும் உகப்பையே தெரிவிக்கின்றார்கள். அதற்குக் காரணம் விஷயங்களில் லவலேசமும் மறுப்புரைக்க முடியாமலிருப்பதேயாம்.

ஸ்ரீராமாநுஜன் 140 செ. ஸஞ்சிகை முழுதும் ஞானச்சுடர்விளக்கென்று விபரீதலக்ஷணையாகப் பெயர்பெற்ற அஜ்ஞான விளக்குக்குக்கண்டனமென்பதை அறியாதாரில்லை. அதமபக்ஷம் 500 ரூ. செலவு செய்து அந்த நிந்தைச் சுவடியை எழுதியவர்களும் வெளியிட்டவர்களும் இன்னரென்பதை வெட்டவெளிச்சமாக ருஜுப்படுத்தியாயிற்று. "அடித்தால்கூட அழத்தெரியாது" என்று சில ஜடங்களைப்பற்றிச் சொல்லுவது வழக்கம். அப்படிப்பட்ட நபர்களில் முன்னம்

எண்ணக்கூடிய ஒரு அவ்யபதேச்ய வ்யக்தியை முன்னிறுத்திச் சிலர் மறைந்திருந்து விஷமங்கள் செய்துவருகிறார்களென்பதை உலகம் முழுவதுமுணர்ந்திருக்கின்றது. இதனால், இந்தப் பிரதிபக்ஷிகள் தெரிவிக்கும் விஷயங்களில் நேர்மையென்பது சிறிதும் கிடையாதென்று ஸ்பஷ்டமாக விளங்கிற்று. விஷயமிருந்தால் வித்வான்களும் விவேகிகளும் தங்களை மறைத்திடாமல், தங்களுடைய உருவப்படங்களையும் வெளியிட்டுக்கொண்டு நேர்மை குன்றாமல் 'இதற்கு இது பதில், இதற்கு இது பதில்' என்று கண்ணாடிபோல் காட்டமாட்டார்களோ? அதற்கு ஈஷத்தும் சரக்கில்லாமையால் மிகவும் நிஹீனமானவழிகளில் நுழைந்து அஸுராராக்ஷஸ க்ருத்யங்களைச் செய்து த்ருப்திபெறப் பார்க்கிறார்கள். சதுர்த்தோபாயத்தை நிறைவேற்றுவதுதான் சரியான ப்ரதிக்ரியை யென்று அதிலே துணிந்தார்கள். இது, ஸமீபத்தில் ஜகத்ப்ரஸித்தமானதால் விரிவுவேண்டா.

அதனிலும் நிஹீனமான மற்றொரு காரியமும் செய்தார்கள், செய்கின்றார்கள். (அதாவது) ஊர்பேர் ஒன்றுமில்லாமல் கடூரமான ஆசார்ய நிந்தைகளைச் செய்து லெத்தோ என்கிற அச்சிலேற்றிச் சில காகிதங்களை நூற்றுக்கணக்கான பேர்களுக்கு (8 நயா பைசா செலவில்) புக்போஸ்டு மூலம் அனுப்பிவருகிறார்கள். அஜ்ஞானவிளக்கு வெளியீட்டில் அச்சுக்கூடம் கண்டுபிடிக்கப்பட்டு உண்மை வரலாறுகள் வெளியிடப்பட்டுப் போயினவேயென்று வருந்தி இந்த வழியில் நுழைந்திருக்கிறார்கள். இத்தகைய ஸாமர்த்தியங்கள் இவர்களுக்குத் தாராளமாக வுண்டென்றும், இவற்றில் வெற்றி இவர்களுடையதே யென்றும் நாம் அஞ்ஜலிபந்தத்துடன் அங்கீகரிக்கத் தடையில்லை. இத்தகைய கீழ்வெட்டான காரியங்களையே இவர்கள் மேன்மேலும் செய்துகொண்டு க்ருதக்ருத்யர்களாகுக. க்ராந்திக விஷயங்களில் இவர்கள் பதில்சொல்லித் தீரவேண்டியவை ஒன்றிரண்டல்ல; பத்தெட்டல்ல; இருபது முப்பதுமல்ல; நூற்றுக்கணக்கில்தானுள்ளன. அவற்றில் இவர்களுக்கு மௌனமே தஞ்சமென்பதை நெடுநாளாக உலகமறிந்துள்ளது அது ஒருவிதமான கௌரவமேயாகும். அதைவிட்டு அஸுராராக்ஷஸ க்ருத்யங்களில் கைவைத்துப் பரிபவப்படுவது உற்றதன்றென்று ஹிதபுத்தியுடன் உபதேசித்து நிற்கிறோம். இது D. R. அவர்களை உத்தேசித்ததல்ல. (9)

## 10. திருவிருத்தம் ஸேவிப்பதைப்பற்றி

விளக்கொளி தேசிகன் திருவீதிப் புறப்பாடுகளில் சில ஸமயவிசேஷங்களில் நம்மாழ்வாருடைய முதற்பிரபந்தமான திருவிருத்தம் ஸேவிப்பது நெடுநாளைய ஆசாரமாக இருந்து வருகின்றது. இது, மிகவும் ஸம்ப்ரதிபந்நமான காரண விசேஷத்தாலேயல்லது, ப்ரதிபக்ஷிகள் நினைக்கிறபடி மாத்ஸர்யாதி ப்ரயுக்தமன்று. திருநாட்டுக்கெழுந்தருளினவர்களுக்கு ப்ரஹ்மரதத்தின் முன்னே ஸேவிக்கப்படுவதை தேசிகன்முன்னே ஸேவிப்பது விஷமபுத்தியினாலென்று பிரதிபக்ஷிகள் பிரசாரம்செய்வது உண்மையுணர்ச்சியின்மையாலாயது.

சில மாதங்களுக்கு முன்பு ஓர் உத்தமாச்ரமி ஸ்ரீமுஷ்ணம் சென்றிருந்தாராம். அங்கே தம்முடைய இடத்திற்கு ஸ்ரீபூவராஹப்பெருமாளை யெழுந்தருளச் செய்தாராம். அங்கிருந்து புறப்பாடு கண்டருளும்போது அத்யாபகஸ்வாமிகள் திருவிருத்தம் ஸேவிக்கத் தொடங்கினார்களாம். யாரோ சிலர் அவரிடம் போய் "ஸ்வாமிந்! நம்மவுத்ஸவத்தில் வேணுமென்று திருச்சந்தவிருத்தம் ஸேவிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் விஷமிகள்" என்று சொல்ல; அதைக்கேட்டு அவர் 'என்னுத்ஸவத்தில் திருச்சந்தவிருத்தம் ஏதுக்கு? இது கூடவே கூடாது' என்று கத்தினாராம். கிரமமாக கோஷ்டி நடந்ததாம். திருவிருத்தம்—திருச்சந்த

விருத்தம் என்கிற பேதமும் அறியாமலும், இதில் இன்னது விஷயம் என்பதைக் கூட அறியாமலும் கத்துகின்றவர்களைப்பற்றி நாம் என்ன சொல்லுவது !

தேசிகன் திருமுன்பே திருவிருத்தம் ஸேவிப்பதன் உபபத்தியை உணர்த்துகிறோம். நாலாயிரதிவ்யப் பிரபந்தத்தினுள் தேசிகன் வியாக்கியான மிட்டருளினது திருவிருத்தத்தின் முதற்பாசுரத்திற்கும், பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தான அமலனாதிபிரானுக்கும் ஆக இவையிரண்டுக்குமே. அமலனாதிபிரானைத் திருவீதிகளில் ஸேவிப்பதில்லாமையாலே தேசிகனுடைய ஆஸ்தானங்களில் மட்டும் அது ஸேவிக்கப்படுகிறது. திருவிருத்தத்திற்கும் தேசிகனுக்குமுள்ள ஸம்பந்த விசேஷத்தை நவீனர்கள் தெரிந்துகொள்ள ப்ரஸக்தியேது? முனிவாஹநபோகமென்று பெயரிட்டு அமலனாதிபிரான் வியாக்கியானம் பணித்து அதை ஒரு ரஹஸ்ய க்ரந்தமாக்கினதுபோல, உபகார ஸங்கிரஹமென்று பெயரிட்டுத் திருவிருத்த முதற்பாட்டுக்கு மிகவிபுலமான வியாக்கியானமருளிச்செய்து அதையொரு ரஹஸ்யக்ரந்தமாக்கியுள்ளார். முப்பத்திரண்டு ரஹஸ்யங்களுள் இஃது இருபத்தைந்தாவது ரஹஸ்யமாக விளங்குகின்றது. இது மூன்று அதிகாரங்கள் கொண்டது. இந்த ரஹஸ்யத்தின் முகப்பில்தான் "தந்தையென நின்ற தனித்திருமால்தாளில் தலைவைத்தோம் சடகோபனருளினாலே" என்று தலைக்கட்டும் பாசுரமருளியுள்ளார். உபகாரஸங்க்ரஹமென்று விலக்ஷணமான திருநாமம் சாற்றியருளினர் இந்த ரஹஸ்யத்திற்கு. இதன் முடிவில் *அயமப்யபரோ மஹோபகார:* என்றொரு அற்புதமான சுலோகம் பணித்துள்ளார். நம்மாழ்வார் செய்தருளின உபகாரத்திற்கு மேலே தாம் இந்த ரஹஸ்யத்தை இயற்றியது மஹோபகாரமென்று தலைக்கட்டினார். இதில் க்ருதஜ்ஞதை காட்டவேண்டியே ஸ்வாமி திருவுள்ளத்திற்கு மிகவுகப்பாய்ப் பரமோபகார ப்ரகாசகமான திருவிருத்தத்தை ஸ்வாமியின் திருமுன்பே ஸ்வாமியின் திருவவதாரநன்னாளில் ஸேவித்து வருவது முறை.

இது தவிர மற்றொரு காரணமுமுண்டு. கோயில் திருமலை பெருமாள் கோயிலென்று சிறப்புறும் மூன்று திவ்யதேசங்களை விசேஷித்து ஸ்ரீவைஷ்ணவ வுலகம் போற்றி வருவதானது இம்மூன்று திவ்யதேசங்களையே நம்மாழ்வார் தமது முதற்பிரபந்தமான திருவிருத்தத்தில் மங்களாசாஸனம் செய்தருளினாரென்பதுபற்றி. பெருமாள் கோயிலென்பது காஞ்சீபுரி. இம்மஹாபுரியில் தேவப்பெருமாளை *இமையோர் தலைவா !* என்று முதற்பாட்டிலே போற்றினார். திருவெஃகாவென்கிற ஸ்ரீயதோக்தகாரி ஸன்னிதியை *நானிலம் வாய்க்கொண்டு* என்கிற இருபத்தைந்தாம் பாட்டில் "கண்ணன் வெஃகாவுது" என்று போற்றினார். அப்பாசுரத்திலேயே "அம்பூந்தேனிளஞ்சோலை அப்பாலது" என்றதனால் திருத்தண்காவெனும் விளக்கொளி யெம்பெருமான் ஸன்னிதியை மங்களாசாஸனம் செய்ததாகச் சொல்லிப்போருவதுமுண்டு. இந்த நிர்வாஹத்தை நம்முடைய திவ்யார்த்த தீபிகையுரையிலே விசதமாகக் காணலாம். தீபப்ரகாசன் ஸன்னிதிக்குத் தண்கா என்று திருநாமம்; குளிர்ந்த சோலையென்று பொருள். அதுவே வடமொழியில் ஸ்ரீமோபவநமெனப்படுகிறது. மேலேகாட்டின திருவிருத்தப்பாசுரத்தில் 'அம்பூந்தேனிளஞ்சோலை திருவெஃகாவுக் கருகிலுள்ளது' என்று சொல்லப்பட்டிருப்பதால் இப்பாசுரம் திருத்தண்காவுக்கும் மங்களாசாஸனபரம் என்று திருவுள்ளம்பற்றிய பெரியார்கள் இக்காரணத்தினாலும் விளக்கொளி வேதாந்தவாசிரியர் திருமுன்பே அவரது திருநக்ஷத்திரத்தன்று அவருடைய திருமுகமலர்ச்சிக்காகவே திருவிருத்த ஸேவையை நியமித்து நடத்திவருவது நெடுநாளைய அனுட்டானம்.

இப்போது இங்கு நாம் காட்டிய இரண்டு காரணங்களும் ஸமப்ரதானங்கள். திருவிருத்தத்தில் அச்லீலமான பொருள் யாதொன்றும் கிடையவுங் கிடையாது. "புதுத்தெய்வங் கொண்டாடுந் தொண்டீர்!" என்று அழைக்க நின்ற நவீநர்கள் நன்று தீதென்கிற விவேகமின்றிக்கே எதிலும் ஆக்ஷேபம் காட்ட வேண்டியதென்று கடமையாகக்கொண்டு இந்த திருவிருத்த ஸேவையில் ஹாஹாகாரம் செய்துவந்தபடியால் இவ்வாண்டில் நேற்றுப் புரட்டாசித் திருவோண மஹோத்ஸவத்தில் இதை நிறுத்தச்செய்தோம் நாம். இது *துஷ்யதுந்யாயத்தாலே செய்ததத்தனை; அப்படி நாம் நிறுத்தினது தேசிகன் திருவுள்ளத்திற்கு மிகவும் அநபிமதமாயிருந்ததென்பதை அன்று அசிந்திதமாக நமக்கு நேர்ந்த சாரீரக்லேசத்தினாலுணர்ந்து க்ஷமைவேண்டித் துயர் தீர்ந்தோம். (10)

## 11. கீதாதாத்பர்ய தீபமும்—நிகமபரிமலமும்

அடியேன் மணவாள மாமுனிகள்வைபவ மெழுதியதில் மாமுனிகளின் திவ்ய ஸூக்திகளைப்பற்றி யெழுதுகையில் "கீதைக்குத் தாத்பர்யதீப மென்றொரு வியாக்கியானமிட்டருளினார்" என்றெழுதி அதன்கீழ் ஒரு டிப்பணியிட்டிருக்கிறேன்; அதாவது,

"யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்தில் "கீதைக்குத் தாத்பர்ய தீபமென்றொரு வியாக்கியானமிட்டருளி" என்றுள்ளது. சில ஆண்டுகட்கு முன் காஞ்சி ஸுதர்சன அச்சுக்கூடத்தில் தேவநாகரலிபியில் மாமுனிகளருளிச்செய்ததாக ஒரு வியாக்கியானம் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த வியாக்கியானம் மாமுனிகளருளிச்செய்ததுதானென்று அதில் விரிவான பூமிகையும் (அஸ்மதாசார்ய பாதரால்) வெளியிடப்பட்டிரா நின்றது. இருந்தாலும், அதைப்பற்றி ஆராய்ச்சிசெய்த காலத்தில் அது மாமுனிகளருளிச்செய்ததன்றென்றும் மாமுனிகளுக்குப் பிற்பட்டவரான அபிராமவராசார்ய ரென்கிற வொருவரால் பணிக்கப்பட்டதென்றும் தேறிற்று. அதீந்த்ரியமான விஷயத்தில் சிறியேனாகிய அடியேன் நிர்ணயித்துக்கூற அநதிகாரி. மாமுனிகளருளிச்செய்த கீதாதாத்பர்யதீபம் இப்போது கிடைக்கவில்லையென்றே அடியேனுடைய கொள்கை."

என்றெழுதியிருக்கிறேன். இதைக்கண்ட பிரதிபக்ஷிகள்—"மாமுனிகள் பணித்த கீதாவியாக்கியானம் இப்போது கிடைக்காமலிருக்கச் செய்தேயும் அது அவதரித்திருந்ததாகவும் லுப்தமாய்விட்டதாகவும் எழுதியிருக்கின்ற அண்ணங்கராசாரியர் நிகமபரிமலத்தைப்பற்றியும் இவ்வண்ணமாகவே ஏன் எழுதியிருக்கக் கூடாது; தேசிகன் திருவாய்மொழிக்கு வியாக்கியானமாக நிகமபரிமலமென்றொரு க்ரந்த மருளிச்செய்திருந்து அது லுப்தமாய்விட்டதென்று நாங்களெழுதிக் கொண்டால் இதை எதற்காக இவர் க்ஷேபிக்கிறார்? உலகில் எத்தனையோ மதங்களில் எத்தனையோ நூல்கள் தோன்றியிருந்து பிரசாரமடையாமல் லோபமடைந்திருக்கவில்லையா? அப்படி நிகமபரிமலமும் தோன்றியிருந்து லோபித்துவிட்டதென்றால் இதைக்கூட இவர் பொறுக்கமாட்டாமல் ஏசுகின்றாரே; எவ்விதமாக ஏசியிருக்கிறாரென்றால்;

"ஒரு தீர்க்க ப்ரஹ்மசாரி நெடுநாளாகத் தனக்கு விவாஹமாகாதிருந்த அவமானத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டி உப்பிலியப்பன் ஸன்னிதிக்குச் சென்று, நாளது தைமீ 5௳ தனக்கு விவாஹம் நடத்த நிச்சயித்திருப்பதாக ஒரு பெண்ணின் பெயரைக் குறிப்பிட்டு சுப முஹூர்த்த பத்திரிகை அச்சிட்டு பந்துமித்திரர்களுக்கு அது தைமீ 6௳க்குப் பிறகு சேரும்படியாக அனுப்பி

விட்டு அங்குமிங்கும் சிலநாள் திரிந்திருந்து பிறகு ஒருநாளில் அந்தப்பெண் ஆசாரியன் திருவடி யடைந்திட்டதாக அனைவர்க்கும் மரணக்கடிதங்க ளனுப்பிவிட்டு 20 நாள் பொறுத்து வீடுவந்து சேர்ந்து "ஐயோ! அவ ளுடைய முகம் எவ்வளவு அழகு! தெரியுமா? கூந்தல் என்ன அழகு தெரியுமா! குரல் என்ன கம்பீரந் தெரியுமா?' என்று பலபலவுஞ் சொல்லிப் புரண்டழுது போதைப் போக்கினனும். இக்கதைதான் நினைவுக்கு வருகின்றது."

என்றன்றோ ஏசியிருக்கிறார். இந்த ஏச்சு மணவாளமாமுனிகள் ஸாதித்திருந்த தாகவும் லுப்தமாய் விட்டதாகவும் சொல்லப்படுகிற கீதா வியாக்கியான விஷயத்தில் சேராதோ?" என்றிப்படி யெழுதுகிறார்கள்.

இதற்குப் பண்டித போக்யமாக பதில் தெரிவிக்கிறோம். மேலே உதா ஹரிக்கப்பட்ட தீர்க்க ப்ரஹ்மசாரி கதை நாமெழுதியதன்று. ஆனாலும் நாமுகந்ததே அது. அக்கதையைக் கீர்த்தி மூர்த்தியான இஞ்சிமேட்டழகிய சிங்கர் கடாக்ஷித்தருளித் திருவுள்ளம் மிகவுகந்து 'இக்கதை மிகவும் பொருத்த மான த்ருஷ்டாந்தமே; வீணன கல்பனைகளுக்கு இதுதான் தகுந்த வாய்மூடி' என்று ஸதஸ்ஸிலருளிச் செய்யும்படியாயிருந்ததென்று அக்காலத்தில் மிகவும் ப்ரக்க்யாதமான விஷயமிது.

"நிகமபரிமலம் அவதரித்திருந்தது; அது லோபித்து விட்டது" என்று இவ்வளவே எழுதப்பட்டிருந்தால், இதைப்பற்றி யாரும் வாய்திறக்க வழியே யிராது. இதன் ப்ரஸ்தாவமெடுத்த D. R. அவர்கள் என்ன எழுதியிருக்கிறு ரென்றால்; அதை நாம் ஒருகால் அநுவதிப்பதும் மஹாபசாரமாயிருக்கப் பல கால் அநுவதிக்க நேருவது அஸஹ்யாபசாரமேயாகும். தேசிகன் ஸங்கல்ப ஸூர்யோதயத்திலே "தோஷாநுசிந்தநார்த்தா ஸ்ம்ருதிரபி தூரீகரோதி வைராக்யம்" என்று ஸாதித்த கணக்கிலே இந்த அநுவாதந்தானும் நமக்கு மஹாபாதகமாகு மென்பதில் ஐயமில்லை; ஆனாலும் ஆசாரியர்களின் திருவடித்தாமரைகளிலே க்ஷமாப்ரார்த்தனையை முன்னிட்டுக்கொண்டு அநுவதிக்கலாகிறது.

"ஆறாயிரப்படிக்குப் பின் தோன்றிய பல வியாக்கியானங்களிலுள்ள தோஷங்களைக் கண்ணுற்று அவற்றையெல்லாம் களைந்து தேசிகனருளிச் செய்த எழுபத்திநாலாயிரம் கிரந்தங்கள்கொண்ட நிகமபரிமல மென்னும் ஓர் அழகிய வியாக்கியானம் ஸ்வாமியால் தம் குமாரர்க்கு முன்பே கால க்ஷேபமாக ப்ரவசனம் செய்யப்பட்டிருந்தது" (D. R.)

என்றெழுதப்பட்டுள்ள இவ்வொரு விஷயத்தை யெடுத்துக்கொள்வோம். ஆறு யிரப்படியென்பது திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளானருளிச் செய்த வியாக்கியானம். இது மிகவும் சுருக்கமானது. இதற்குப் பின் தோன் றிய வியாக்கியானங்களாவன—நஞ்சீயரருளிய ஒன்பதினாயிரப்படியும், பெரிய வாச்சான் பிள்ளையருளிய இருபத்துநாலாயிரப்படியும், வடக்குத் திருவீதிப் பிள்ளையருளிய ஈடுமுப்பத்தாறாயிரப்படியும், வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயரருளிய பன்னீராயிரப்படியுமாம். இவை தவிர வேறு ஒருவியாக்கியானமும் தேசிகன் காலத்திற்குமுன் தோன்றியதில்லை. ஒன்பதினாயிரப்படி முதலிய அந்த நான்கு வியாக்கியானங்களிலும் தோஷங்கள் இருப்பதாகவும் அவற்றை தேசிகன் கண்டு மனம் நொந்ததாகவும் அந்த தோஷங்களையெல்லாம் களைவதற் காக அவர்தாம் நிகமபரிமலமென்கிற விஸ்தார வியாக்கியானமொன்று வெகு அழகாக இட்டதாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

அந்த நிகமபரிமலம் இப்போது உள்ளதோவென்று கேட்டால், ஐயோ! அன்றைக்கே அது அந்தர்த்தானமாய்விட்டதே! யென்று கண்ணீர்மழை பெருக்குகிறார். அது எப்படியாவது போகட்டும்; ஒன்பதினாயிரப்படி முதலிய நான்கு வியாக்கியானங்களில் தோஷங்களிருப்பதாக எழுதுகிறவர் ஆறாயிரப் படியையும் அந்த நான்கு வியாக்கியானங்களையும் சிறிதாவது ஸேவித்தவராக இருத்தல் வேண்டும். ஒன்றிலும் ஓரக்ஷரத்தையும் பாராதவரும் பார்க்கவில்லாத வருமானவர், தம்முடைய ஸம்பிரதாயத்தில் அப்படிப்பட்ட வியாக்கியானங்கள் இல்லையேயென்கிற வருத்தத்தினாலும் இதர ஸம்ப்ரதாய ஆசார்யர்களைப்பழிக்க வேணுமென்கிற பாரிப்பினாலுமே மேலே காட்டியவிதமாக எழுதி அஸஹ்யாப சாரப் படுகுழியில் விழுந்திருக்கிறார். உண்மையில், இந்த அட்வகேட் சுத்த ஸம்பிரதாயமென்று தாம் அபிமானித்திருக்கின்ற வொருநூதன ஸம்பிரதாயத் திற்கு ஆறாயிரப்படியோ மற்ற வியாக்கியானங்களோ எல்லாம் வாசியற விருத்தமானதே. இதில் ஸந்தேஹலேசமுமில்லை. மற்ற வியாக்கியானங்களிற் காட்டிலும் ஆறாயிரப்படியே முந்துற முன்னம் இவர்களுக்கு விலக்காகத்தக்க தென்பதும் சிலாலிகிதம், இது ப்ரதிஜ்ஞாமாத்ரமன்றிக்கே விசதீகரிக்கப்பட வேண்டியே தேசிகஹ்ருதயமென்னும் நூலை இத்துடன் வெளியிட்டிருக்கிறோம்.

உண்மை இப்படியிருக்க, ஆறாயிரப்படியில் மஹார்த்தங்கள் கண்டுவிட்ட தாகக் காட்டிக்கொண்டு, இதர வியாக்கியானங்களை துஷ்டங்களென்று பழிப் பது மஹத்தான ஸாஹஸம். வியாக்கியானங்கள் நிற்க; வியாக்கியேயங்க ளான [மூலமான] திவ்யப்ரபந்தங்களே இவர்கள் கொண்ட ஸம்பிரதாயத்திற்கு நேர்முரணா யிருக்கும்போது வியாக்கியானத்தில் அனுகூலமாக ஓரக்ஷரமாகிலுங் காண அவகாசமேது? மூலத்திற்கு விருத்தமாக ஆறாயிரப்படி எங்ஙனே அமையு மென்று ஆராயமாட்டிற்றிலரே இவர். விஷயங்களை யெடுத்துக்கொண்டு அலசி யலசி ஆராய்ச்சி செய்யும் சிரமத்தை ஏற்றுக்கொண்டாலல்லவோ ‘ஆறாயிரப் படியில் நமக்குள்ள அனுகூலமென்ன? இதர வியாக்கியானங்களில் நமக்குள்ள பிரதிகூலமென்ன?’ என்பதைப்பகுத்துணரமுடியும். ஈடுமுதலானவியாக்கியானங் களில் தோஷமிருப்பதாக தேசிகன் திருவுள்ளம் பற்றியிருந்தால் அந்த தோஷம் ஆறாயிரப்படியிலுமிருப்பதாகவே திருவுள்ளம்பற்றி யிருக்கவேணுமென்பது திண்ணம். இவ்விஷயம் திருவாய்மொழியின் ஸகல வியாக்கியானங்களையும் தேசிகனுடைய ஸகல ஸ்ரீஸூக்திகளையும் கரதலாமலகமாகக் கண்டவர்களுக்கே தெரியலாகும். இவையொன்றிலும் அந்வயமில்லாதவரும் ஏதோ சில ஸ்தோத் ரங்களில் கண்ண நீரைச் சொரியுமவருமானவர் உலகமெல்லாம் கொண்டாட நின்ற ஸதாசார்ய வியாக்கியானங்களை தோஷமுடையனவாகப் பழிப்பதும் ககநாரவிந்த கசச்ருங்காதி ஸஹோதரமானவொரு வியாக்கியானத்தை அழகிய வியாக்கியானமென்பதும் வீணானவொரு அபிமானத்தின் க்ருத்யமா மத்தனை யன்றோ. இதனிலும் கொடிய அபசாரம் வேறில்லை.

இவ்வபசாரம் இவர்க்கு மனஸ்பூர்த்தியாகவே நேர்ந்ததென்று நினைக்க லாகிறது. இவ்விருள் தருமாஞாலத்தின் செயலுக்கு ஆட்படாதாருமுளரோ? *அநுதாபாத் உபரமாத் ப்ராயச்சித்தோந்முகத்வத:, நந்பூரணர் சாபராதாஸ் ஸர்வே நச்யந்தி பாதகா:* என்ற அற்புதமான வசனத்தை ஸ்ரீதேசிக ரஹஸ்யங்களிற் கண்டிருப் பரேயிவர். அதனைப் புந: புந: ஆவர்த்தனஞ் செய்து தூய்மை பெறுவதே இவர்க்குப் பாங்காகும். இவ்வையங்கார் மாத்திரமேயன்று; இவரைப்போன்ற மற்றுஞ் சிலரும் தேசிக சரித்திரமென்று எழுதியுள்ள நவீனச்சுவடிகள் யாவும் ப்ராமாணிகமான ஆசார்ய சம்பூக்ரந்தத்தோடு சிறிதும் இணங்காதவை. இவர்

கள் வீணுகப் பூர்வாசாரியர்களேயும் அவர்களின் திவ்ய ஸூக்திகளேயும் நிந்திப்ப தற்கென்றே தேசிக சரித்திரமெழுதினவர்கள்.

இனி ப்ரக்ருத விஷயத்திற்கு வந்து அதனே உபஸம்ஹரிப்போம். மணவாளமாமுனிகள் கீதைக்கு ஒரு வியாக்கியானமிட்டருளினர்—என்று இவ்வளவே யெழுதி யுள்ளார்களதத்னே போக்கி வேருரெழுத்து மெழுதிற்றிலர். அந்த வியாக்கியானம் கீதாபாஷ்யத்திலுள்ள அஸ்வாரஸ்யங்களே யெடுத்துக் காட்டத் தோன்றியதென்ருே, தாத்பர்ய சந்த்ரிகையிலுள்ள அபார்த்தங்களேக் களேயத் தோன்றியதென்ருே ஒருவரால் எழுதப்பட்டிருக்குமாளுல், அந்த க்ரந்தம் இருந்ததாகவும் லுப்தமாய் விட்டதாகவும் நமது கையால் எழுதப் பட்டிருக்கவேமாட்டாது. ஸ்ரீமந்நாதமுனிகள் ந்யாயதத்வமென்றெரு க்ரந்தம் அருளிச்செய்திருந்ததாகவும் அது லுப்தமாய் விட்டதாகவும் சொல்லி வருகிறோம். அதிலுள்ள விஷயம் இன்னதென்று ஒருவர்க்கும் தெரியாததலால் விஷயத்தைப்பற்றி யாருமே வாய்திறப்பதில்லே. அதுபோல, "நிகமபரிமலமென்று ஒரு வியாக்கியானம் தோன்றியிருந்து அது லோபித்து விட்டது" என்று இவர்களெழுதியிருந்தால் இதில் ஏச்சுக்கு இடமேது? தீர்க்கப்ரஹ்மசாரி கதை வெளிவர ப்ரஸக்திதானுண்டோ?

"நிகமபரிமலமென்னும் ஓர் அழகிய வியாக்கியானம்" என்றெழுதுவதே அஸமஞ்ஜஸம். அதைக் கண்டவர்களுக்கன்ருே அதனழகைப் பேச உரிமையுண்டு. தேசிகனுடைய ஸமகாலத்தவர்கள் யாரேனும் நிகமபரிமலத்தையும் அதன் அழகையும் கண்டிருந்து எழுதிவைத்திருந்தால் அதனே அநுவதிக்கிற முறையிலே 'அழகிய வியாக்கியானம்' என்று இவருமெழுதலாம், ககநாரவிந்தசேகரனை வந்த்யாஸூதனழகை வருணிப்பது போன்றதன்ருே இவ்வழகு பேச்சு. இதற்குமேலே, தேசிகனுக்கு எதையும் கண்டிப்பதுதான் தொழிலென்று கொண்டு அவரை மூஷிகாவதாரமாக்கி "அந்த நிகமபரிமலத்தில், ஆறுயிரப்படிக்குப் பின்தோன்றிய வியாக்கியானங்களேயெல்லாம் கண்டித்தொழித்து விட்டார்" என்கிறவர் ஆறுயிரப்படியையும் கண்டித்து விட்டதாக எழுதலாமே.

தேசிகனெழுதிய முநிவாஹநபோகமென்னும் அமலனுதிபிரான் வியாக்கியானம் லுப்தமாகவில்லேயே. இதில், பெரியவாச்சான்பிள்ளே வியாக்கியானம் எவ்வளவு கண்டிக்கப்பட்டிருக்கின்றதென்பதைக் கண்டறிந்து காட்டலாமேயிவர்கள். தேள் பாம்பு முதலிய விஷஜந்துக்கள்போலே கொட்டியும் கடித்தும் தலேமறைந்தோடுமாபோலே அபத்தங்களேயெழுதி வைத்திட்டு நேர்நின்று விடையிறுக்கமாட்டாதே கிடக்குமிவர்களேப் பொருளாக்கி நாமெழுதுவதும் பழுதே. ஆக, வீணன அபவாதத்திற்கு ஆஸ்பதமாயொழிந்த நிகமபரிமலத்தின் ஸத்தையை மறுப்பது நியாயமென்றும், எவ்விதமான அபவாதத்திற்கும் இலக்காகாததும் முன்னேர்களால் காட்டப்பட்டதுமான கீதாவியாக்கியானத்தின் ஸத்தையை மறுக்க ஔசித்ய லேசமுமில்லேயென்றும் நிகமித்தாயிற்று.

## 12. பன்னிரண்டாவது உபந்யாஸம்—கம்பர் காலத்தைப்பற்றி

எந்த விஷயத்திலும் ஆர அமர ஆராய்ச்சி செய்வதற்கு முன்பு ஒரு வகையான ஞானமும், தக்க மிக்க ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்யப்பெற்ற பின்பு வேறுவகையான ஞானமும் உண்டாவது பெரும்பான்மையான இயல்பு. இது நமக்கு மட்டுமன்று, உலகிற்பிறந்த மானிடரனேவர்க்குமொத்ததேயாம், இவ்வகையில் இளமையில் விசேஷ ஆராய்ச்சி தோன்றப்பெருத காலத்தில் சிலரோ பலரோ சொல்லிப்போரும் விஷயங்களே உண்மையென நம்பிவிடு

கிறோம். பிறகு ஆராய்ச்சிகளாலும் ஆப்தோபதேசங்களாலும் முன்னைய கொள்கையை மாற்றிக்கொள்ள நேர்ந்தால் அதுகண்டு 'இவன் பிராமாணிகன்' எனப்புகழ்வதும் மகிழ்வதும் பொருந்துமேயல்லது இகழ்வது ஏலாது. 'முன்னம் நாம் எழுதி வைத்ததற்கு மாறாக அதனை வேறுபடுத்தி எழுதுவது தகாது' என்று கொண்டு பிடிவாதமாக முந்தியதையே ஸ்தாபிக்கமுயல்பவர் மூர்க்கரெனப்படுவர். அந்த மூர்க்கத்தனத்தை விட்டு உய்வது விசேஷஸுக்ருத பலனுகுமத்தனை.

இதற்குச் சார்பாக இங்கு ஒரு விஷயம் கேண்மின். பெரிய திருமொழியில் ஒன்பதாம்பத்தில் மூன்ருவதான திருப்புல்லாணிப்பதிகத்தின் முதற் பாட்டை "தன்னை நைவிக்கிலேன்" என்றே பெரியார் பலருங்கூட ஓதிவருகிருர்கள். அடியேனுக்கும் இதுவே பாடமாயிருந்ததனால் இந்தப் பாடத்தின்படியே திவ்யார்த்த தீபிகையுரையும் எழுதி (ஹூ1930ல்) அச்சிட்டு விட்டேன். பிறகு ஒரு ஸமயம் கோயிலுக்கு விடைகொண்டிருந்தபோது அவ்விடத்தில் உபய வேதாந்த ப்ரவசந துரந்தரராக எழுந்தருளியிருந்த (வைகுண்டவாஸியான) ஸ்ரீமத் பத்தராவிஸ்வாமி தமது திருக்கையால் சோதித்திருந்த பெரியதிருமொழி வியாக்கியான ஸ்ரீகோசம் (தெலுங்குலிபி) ஒரு ஸ்வாமியிடத்தில் ஸேவிக்கக் கிடைத்தது. அதில் நைவிக்கிலேன் என்றவிடத்து (லே) என்பதை யடித்து (லெ) என்று திருத்தப்பட்டிருந்தது. அதைக்கண்டவுடனே அடியேனுக்குண்டான ஆனந்தம் மனமொழிகளுக்கு எட்டாதது. அப்பாடத்தின் ஸ்வாரஸ்யம் அநாயாஸமாக உடனே மனத்திறபட்டது. இதுவொரு பெரியபாக்கியமடியேனுக்கு அந்தத் திருப்புல்லாணிப்பதிகத்தில் (2, 6 பாட்டுக்களில்) "உருகி நெஞ்சே நினைந்திங்கிருந்து என்?" "எள்கிநெஞ்சே நினைந்திங்கிருந்து என்?" என்று வருவதால் இப்பாட்டில் "தன்னை நைவிக்கில் என்?" என்றிருப்பது தான் பொருத்தமானதென்று பட்டது. உடனே பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தை ஊன்றி ஸேவிக்கையில் இந்தப் பாடமே பிராமாணிகமென்கிற உறுதியுமுண்டாயிற்று. அப்போது அடியேனுடைய பெரியதிருமொழி திவ்யார்த்ததீபிகை மறுபதிப்பு நடந்து கொண்டிருந்தது. அதில் திருத்தினதோடு நில்லாமல் "சிலகாலம் நாமும் இங்குத் தவருன பாடம் கொண்டிருந்ததற்கு அநுதபித்தோம்" என்றுமெழுதி அநுதாபம் காட்டியிருக்கின்றேன். இவ்வண்ணமாக அடியேன் காட்டக்கூடிய விஷயங்கள் ஒன்றிரண்டல்ல; பலபலவுள. உண்மை மனத்திறபட்டால் ஈஷத்தும் ஆத்மவஞ்சனை செய்யகில்லேன். என்னுடைய தவறையே ஸ்தாபிக்க ஆசை கொள்ளமாட்டேன்.

என் விஷயமிருக்கட்டும்; ப்ராமாணிகாக்ரேஸரரான தேசிகன் விஷயமொன்று காட்டுகிறேன். ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்னத்தில் *வபுராதிஷு யோபிகோபிவா* என்கிற ச்லோகத்தில் 'அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:' என்று தாம் ஆத்ம ஸமர்ப்பணம் செய்ததாக ஸாதித்து, உடனே *மம நாத! யதஸ்தி* என்கிற அடுத்த சுலோகத்தில் "ப்ரபுத்ததீ: அதவா கிம் நு ஸமர்ப்பயாமி தே" என்று, கீழ்ப்பண்ணின ஸமர்ப்பணத்திற்கு அநுதாபம் காட்டியிருக்கிருர். ஸ்வாமி தேசிகன் அவ்விடத்திற்கு பாஷ்யமிட்டருளினபோது '*மம நாதேத்யாதியான இந்த சுலோகம் முந்தின ச்லோகத்திற்கு விவரணரூபமேயல்லது அநுசயம் காட்டுகிறதன்று' என்று திருவாய் மலர்ந்தருளினர். பிறகு ஸமயாந்தரத்தில் ஆழ்ந்த விமர்சம் செய்தருள நேர்ந்தபோது *மம நாதேத்யாதியான ச்லோகத்தை அநுசயபரமென்று சொல்லுவதில் பிழையொன்றுமில்லையென்று திருவுள்ளத்திற்பட்டதனால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாங்க ப்ரபதநாதிகாரத்திலே—"ஸ்தோத்ரத்தில் *வபுராதிஷு......" என்று தொடங்கி

யருளிச்செய்து வருகையில் "இதுக்குமேல் *மம நாத! யதஸ்தி* என்கிற ச்லோகத்தில் இஸ் ஸமர்ப்பணத்தைப்பற்ற அநுசயம் பண்ணிற்றும்" என்றருளிச் செய்திருக்கக் காண்கிறோம். 'ஸ்தோத்ர பாஷ்யம் செய்தருளும்போதிருந்த அபிப்ராயமேதான் இங்கும்' என்னப்போகாது. 'அநுசயபரமன்று' என்றது அங்கு. அநுசய பரந்தானென்று திருவுள்ளம்பற்றினமை இங்கு வ்யக்தம். இவற்றுள் எது முந்தின க்ரந்தம் என்கிற விவாதமேற்பட்டு 'அநுசயபரமன்று என்றதுதான் ஸித்தாந்தம்' என்றாலும் அதில் இப்போது விசாரமில்லை. விமர்சத்தினால் அபிப்ராயத்தை மாற்றிக்கொள்வது ப்ராமாணிக க்ருத்யம் என்றது ஊர்ஜிதமேயாகுமன்றோ. ர. ஸாரத்திற்கு சேட்லூரார் ஓர் உரையும், ஸ்ரீமத் பரமஹம்ஸ. இஞ்சிமேட்டழகிய சிங்கர் ஒரு வியாக்கியானமும் வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றில் அநுசயம் என்பதற்கு பச்சாத்தாபம் பொருளென்று காட்டினதொழிய வேறொரு விமர்சமும் கண்டதில்லை. இஞ்சிமேடு ஸ்வாமி தாம் ஸ்தோத்ர பாஷ்யம் ஸேவித்தவரென்னுமிடத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறார்; சேட்லூரார் அது செய்திலர் என்னுமித்தனையே வாசி. நம்முடையதாக வொரு வியாக்கியானம் வெளிவரவேணுமென்னு மாசையையே இருவரும் தலைக்கட்டிக்கொண்டார்களாயிற்று. நிற்க.

இனி ப்ரக்ருத விஷயத்திற்கு வருவோம். கம்பர் தாம் இராமாயணமியற்றி ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமந்நாதமுனிகள் திருமுன்பே அரங்கேற்றினர் என்பதாகவொரு ப்ரவாதம் ப்ரஸித்தமாயிருந்ததனால் [இருப்பதனால்] இது கொண்டும், அடியேனுடைய ஈடுபாட்டிற்கு மிக வுரியவராயிருந்த கீர்த்திமூர்த்தியான வைத்தமாநிதி சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமியும் அங்ஙனே எழுதிவைத்திருந்தபடியாலும் அதில் விப்ரதிபத்தி யொன்றும் தோன்றாமல் கம்பர் நாதமுனிகளின் காலத்தவர் என்று கொண்டிருந்தேன், அங்ஙனமே எழுதியுமிருந்தேன். பிறகு ஸமயவிசேஷத்தில் சில விமர்சங்கள் தோன்றின. உலகமுணரத் தெரிவிக்கிறேனதை.

கம்பராமாயணம் கிட்கிந்தாகாண்ட முடிவில் மகேந்திரப்படலத்தில் (26) அனுமன் பேருருவங்கொள்ளுதலைத் தெரிவிக்குமதான—

"பொருவருவேலைதாவும் புந்தியான் புவனந்தாய
பெருவடிவுயர்ந்த மாயோன் மேக்குறப் பெயர்ந்ததாள்போல்
உருவறிவடிவினும்ப ரோங்கின னுவமையாலும்
திருவடியென்னுந் தன்மை யாவர்க்குந் தெரியநின்றான்."

என்கிற பாட்டில் அனுமானுக்குத் திருவடியென்கிற திருநாமம் அன்வர்த்தமாயிற்றென்று தெரிவிக்கப்பட்டுளது. ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில்—சக்ரவர்த்திதிருமகனுரைப்பெருமாளென்பது, லக்ஷ்மணனை இளையபெருமாளென்பது, ஜடாயுவைப் பெரியவுடையாரென்பது, அனுமனைத் திருவடியென்பது............ இத்தகைய வ்யபதேசங்கள் எம்பெருமானார் காலத்திற்கு முன்பு இருந்ததில்லையென்றும், அவர் காலத்தில் தோன்றி பட்டர் காலத்தில் அபிவிருத்தி பெற்றனவென்றும் பெரியார் கூறுவர். திருவடியென்கிற சொல்லால் அனுமனைக் குறிப்பிட்ட கம்பர் நாதமுனிகள் காலத்தவராயிருக்க ஔசித்யமில்லை. பட்டர் காலத்தவராகவே யிருத்தல் வேண்டும். பட்டர் ஸாதித்தருளும் அர்த்தவிசேஷங்களும் கம்பராமாயணத்தில் காணக்கிடைப்பதனால் இதுகொண்டும் பட்டர் காலத்தவரேயென்று கொள்ளலாகிறது.

மற்றொரு முக்கிய காரணம் ; சடகோபரந்தாதியில் "கூட்டங்கள் தோறும் குருகைப்பிரான்குணங் கூறுமன்பரீட்டங்கள் தோறுமிருக்கப் பெற்றேம்" என்றொரு பாட்டுப் பாடியிருக்கின்றார். ஸ்ரீமந்நாதமுனிகள் திவ்யப்பிரபந்த மூலத்தை ஸம்பாதிக்கப்பட்ட பாடுகள் பிரபலமாயிருந்தன. அக்காலத்தில் குருகைப்பிரான் குணங்கூறுமன்பர்களின் கூட்டமும் ஈட்டமும் காண்பதரிதாக வேயிருக்கும். இதுவும் பட்டர் காலத்திலேதான் ஸம்பாவிதம். ஆக இத்தகைய காரணங்களை நாம் உபபாதித்துச் சில ஆராய்ச்சியாளரிடம் சொன்னபோது, அவர்கள் யாவரும் ஒருமிடறாகச் சொன்னார்கள்—"நாங்கள் கம்பரையும் நாத முனிகளையும் ஸமகாலத்தவர்களாகக் கொண்டவர்களல்லோம்; ஏற்கெனவே நாங்கள் வேறு சில காரணங்களைக் கொண்டு கம்பரை கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டிலிருந்தவராகவே அறுதியிட்டிருக்கிறோம்; இப்போது தேவரீர் கூறின காரணங்களையும் அவற்றோடு சேர்த்துக் கொண்டு எங்களுடைய உறுதியைத் திடப்படுத்திக் கொண்டோம்" என்று. .... .... .... (12)

## 13. பதின்மூன்றாவது உபந்யாஸம்—மணவாளமாமுனிகளின் திருவவதாரஸ்தலத்தைப்பற்றி

மணவாளமாமுனிகள் திருவவதரித்தது ஆழ்வார் திருநகரியிலென்றும், கிடாரம் என்கிற அக்ரஹாரத்தில் மாதுலக்ருஹத்தில் சிலகாலம் வளர்ந்தருளினாரென்றும் பெரியோர் பகர்வர். எறும்பியப்பாபணித்த ஸ்ரீவரவரமுநிசம்பூக்ரந்தத்தில் இங்ஙனேயுள்ளதென்றும் கூறுவர். திருவவதரித்தது திருநகரியிலன்று; கிடாரத்தில்தான்' என்று வாதம் கிளம்புமாகில் இதை மறுக்க முன்வருவாராருமில்லை. நாச்சியார் திருமொழியில் பாஞ்சசன்னியப்பதிகத்தில் இரண்டாவது பாட்டு, "கடலிற்பிறந்து கருதாது, பஞ்சசனனுடலில் வளர்ந்துபோய் ஊழியான் கைத்தலத்திடரில் குடியேறித் தீயவசுரர் நடலைப்பட முழங்குந் தோற்றத்தாய் நற்சங்கே!" என்பது. அதை இங்கு அநுஸந்தித்துப் போருவது. எந்த ஸ்தலத்திற்கும் ஸ்வதः ஏற்றமென்பது கிடையாது. மஹான்களின் அவதாரத்தினால்தான் அவ்வோவிடங்கள் ஏற்றம் பெறுகின்றன. "மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த் தொண்டரடிப்பொடி தொன்னகரம்" "குலசேகரனூரெனவுரைப்பர் வாய்த்த திருவஞ்சிக்களம்" என்னும் பாசுரங்களினால் அறியப்படுகிற மண்டங்குடியும் வஞ்சிக்களமும் ஸாமான்யமான ஊர்களேயொழிய புராணக்ஷேத்ரமுமல்ல, திவ்யதேசமுமல்ல. திருவரங்கம் பெரியகோயிலிலே வந்து சேர்ந்து ப்ரதிஷ்டிதர்களாகப்பெற்ற ஆசிரியர்கள் பலபலர். அவர்கள் அவதரித்தது ஓரோவிடங்களிலேயாயிருக்கும். மணக்கால்நம்பி, நடாதூராழ்வான் இத்யாதி திருநாமங்களில் செவிப்படுகிற ஊர்கள் ஸாமான்யங்களென்று இகழ்வாராருமிலர். 'தீர்த்தீகுர்வந்தி தீர்த்தாநி' என்னும்படியான பெருமைபெற்ற மஹநீயர்கள் அவதரித்த ஸ்தலம் எதுவானாலும் அது விண்ணாட்டினுஞ் சீரியதேயாம்.

வேதாந்தவாசிரியரின் திருவவதார ஸ்தலத்தை இகழ்வாகக்கூறினதாய்க் கொண்டு அஜ்ஞான விளக்குச்சுவடி இந்த விசாரத்தைக் கிளப்பியுள்ளது. இவர்களது மருளை மாய்ப்போமிங்கு. தேசிகன் மிகச் சிறந்த திவ்ய ஸ்தலத்தில்தான் திருவவதரித்தார். 'நகரேஷு காஞ்சி' என்னும்படியான காஞ்சி க்ஷேத்ரத்தில் திருத்தண்காவென்று ப்ரஸித்தமான விளக்கொளி யெம்பெருமான் ஸந்நிதி பரிஸரத்தில்தான் ஸ்வாமி தேசிகன் திருவவதாரம் செய்தருளிற்று. நவீ

னர்கள் அவரோடு ஸம்பந்தத்தை யேறிட்டுக்கொண்டு கொண்டாட்டங்கள் செய்யப்புகுந்த காலத்தில், அப்பய தீக்ஷிதர் பிரதிஷ்டைசெய்த அக்ரஹாரமான தும்பைவனமென்பது துப்பல் என்றும் தூப்பல் என்றும் தூப்பில் என்றும் தூப்புல் என்றும் சிதைந்து வழங்கி வந்ததனால் இவர்கள் அதன் தத்துவத்தை யுணராதவர்களாய் அந்தத் தூப்பல் சொல்லையிட்டுக் கவிகளியற்றத் தொடங்கினர்கள். இதை நாமும் வெகுகாலம் தெரிந்துகொள்ளாம லிருந்தோம். தீக்ஷிதருடைய ஸந்ததியைச் சேர்ந்த வித்வான்களோடு வார்த்தையாட நேர்ந்தபோது அவர்களின் வாக்கிலிருந்து நமக்குத் தூப்பல் தத்துவம் விளங்கிற்று. பிறகு நன்கு ஆராய்ச்சி செய்யத் தொடங்கினேம். ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகளில் ஸுப்ரஸித்தமான திருத்தண்கா என்னும் வியபதேசத்தைவிட்டு, ஸ்ரீவைஷ்ணவர்கள் யாரும் கையாளாத தூப்பல் சொல்லைக் கைப்பற்றினவர்கள் பிராசீனர்களாக இருக்க நியாயமில்லையென்றும் இரண்டு மூன்று நூற்றாண்டுகட்கு உட்பட்டவர்களாகவே யிருக்கவேண்டுமென்றும் நிர்ணயிக்கலாயிற்று. அதனை வெளியிட்டோம். இது மிகப் பொருத்தமான ஆராய்ச்சியேயென்று பிராமாணிகர்கள் புகழ நின்றேம். இதை மறுக்கச் சரக்கில்லாதவர்கள் "மணவாள மாமுனிகள் கிடாரத்தில் திருவவதரித்தார்" என்று எழுதுமளவால் தும்பைவனமே தூப்பலாயிற்றென்கிற தத்துவம் எள்ளளவும் பங்கடைந்திடாதென்று தெளிக. .... .... .... .... .... .... (13)

## பதினான்காமுபந்யாஸம்—வைசாகோத்ஸவவாஹனவ்யவஸ்தைபற்றி

நாமெழுதிய வரதன் ஸன்னிதி வரலாறென்னும் நூலில் தேவப்பெருமாளுடைய வைசாகோத்ஸவத்தில் நடைபெறும் வாஹனங்களின் வ்யவஸ்தை அந்தந்த வேளைகளில்நடந்துவரும் திவ்யப்ரபந்த இயல்ஸேவைக்குப் பொருத்தமாக முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டதென்று விபுலமாக மூதலித்திருக்கிறேம். இதில் வைமத்யம்காட்ட முன்வருமவர்கள் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் ப்ராவண்யமுடையவர்களாக இருக்க நியாயமில்லை. தங்களுக்கும் ஆழ்வார் திவ்யஸூக்திகளில் ப்ராவண்யமுண்டென்று அபிநயிப்பது ஒருபுறம். அந்த ஸ்ரீஸூக்திகளுக்குப் பெருமை பேசினல் அதை ஸஹியாமல் ஹாஹாகாரம் செய்வது மற்றொருபுறம். "ஸர்வாத்மநா அஸம்பத்தமாக எழுதினல் ஹாஹாகாரம் செய்யாதிருக்க முடியுமோ?" என்றும், "இதனல் திவ்யஸூக்திகளில் ப்ராவண்யம் குலைந்ததாகுமோ?" என்றும் இவர்கள் சொல்ல முன்வரக்கூடும். ஸர்வாத்மநா அஸம்பத்தமாக எழுதுவதென்பது நம்முடைய நூல்களில் லவலேசமும் காட்டமுடியாது. ரஸோக்தியின்பாற்படுத்தி ரஸிகர்கள் உள்குழைந்து அநுபவிக்கக் கூடியதாக விருக்குமேயல்லது அஸம்பத்தமாக எழுதப்பட்டதென்று பழிக்கத் தக்கதாக இராதென்னுமிடம் வித்வத் ரஸிக ஹ்ருதயைகவேத்யம். ப்ரக்ருத விஷயத்தை மறுக்கவேண்டுமானல் நம்முடைய வரதன்ஸன்னிதி வரலாற்றுக்கு லக்ஷ்யபூதரான D. R. ஐயங்கார் மறுக்க வேணும்; வேறொருவர் மறுப்பதாக இருந்தால் அவர் தம்முடைய நிஜநாமதேயத்தை வெளியிட்டுக்கொண்டு விஷயங்களை விளம்பவேணும். இந்த விம்சதியின் முகவுரையில் நாம் ஸஸாக்ஷிகமாக விளக்கியிருக்கிறபடி க்ருத்ரிமமான முறையில் வெளிவந்ததான அபத்தச் சுவடியைப் பொருள்படுத்தி நாம் அருமருந்தன்ன அர்த்த விசேஷங்களை வாரியிறைப்பதுபற்றி நாம் மிகமிக அநுதபிக்கவேண்டியிரா நின்றது.

தேவப்பெருமாள் ஸன்னிதியில் மட்டுமன்று; பொதுவாக ஸ்ரீவைஷ்ணவாலயங்களில் ஸர்வப்ரகாரத்திலும் திவ்யப்ரபந்தங்களுக்கே ஏற்றம் கொடுக்

கப்பட்டிருக்கின்றது. அதை நாம் ஔசித்யத்தைக் கடவாமல் பொருத்தமான பத்ததியில் வெளியிட்டால் இதற்கு வயிறு வீங்கிச் சாகுமவர்கள் ஆழ்வார் கோஷ்டியில் அந்வயம் பெறவேணுமென்று ஆசைப்படுவது அத்யந்த ஸாஹஸ மல்லவா? .... .... .... .... .... (14)

## 15. பதினைந்தாவது உபந்யாஸம்—ப்ரகீர்ண விஷயங்களைப்பற்றி

அஜ்ஞானவிளக்குச்சுவடியில் சாஸ்த்ரார்த்த சர்ச்சைகளுக்கு ஈஷத்தும் ஸம்பந்தப்படாத பலவிஷயங்கள் வீண்வம்பாக வரையப்பட்டிருக்கின்றன வென்பதை முகவுரையில் விபுலமாக நிரூபித்தோம். இன்னமும் சில கேளீர். (1) தேவப்பெருமாள் ஸன்னிதி இயல்கோஷ்டியில் இவர்களை "எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்" என்று சொல்லித் தடுப்பதாக வைத்து இதற்காக வசைமொழி. (2) இயல்கோஷ்டி சில இடங்களிலும் சில ஸந்தர்ப்பங்களிலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வைத்து அதற்காக உபாலம்பம்............ இங்ஙனே இவர்கள் ஏடுகளை நிரப்புவதற்காகப் பெய்த வம்பு விஷயங்களைப் பற்றி நாம் பேசவேண்டிய அவசியமேயில்லை ஆயினும், இவர்கள் எந்த விஷயத்திலும் ஆர்ஜவமற்றவர்கள் என்பதை மூதலிக்கவேண்டி இவற்றைப் பற்றியும் தத்துவமுணர்த்துவோம். *எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்* என்ற விஷயம் மிகத்தவறு. திவ்யப்ரபந்த பாராயணத்தில் இவர்கள் விருப்பமேறிட்டுக்கொண்ட காலத்தில் தாங்கள் தனி கோஷ்டியாகவிருந்து தங்களிஷ்டப்படி எதையும் சொல்ல விரும்பிப் பெருமாளுக்குப் பின்னால் இயல்கோஷ்டி ஆரம்பித்தார்கள். நீதிமன்றத்தில் வியவஹாரம் விசாரணையிலிருந்தபோது அப்படிச் சில வருஷங்கள் நடத்திவந்தார்கள். அப்போது "இவர்கள் திவ்ய ப்ரபந்தம் ஸேவிக்க விரும்பினால் எங்களுடைய கட்டுப்பாடுகளுக்கு இணங்கி எங்களோடு கலந்து ஸேவிக்கலாமேயல்லது தனிகோஷ்டியாக வரத்தகாது" என்பது பிரபலஆக்ஷேபமாக இருந்தது. முடிவுவரையில் இதைத்தான் நியாயாதிகாரிகள் ஆமோதித்தார்கள். "எங்களுடைய குருவின் துதிகளைச் சொல்லாமல் இவர்களின் குருவின் துதிகளைச் சொல்லி ஸேவை நடத்துகிற கோஷ்டியில் நாங்கள் கலந்துகொண்டால் குருத்ரோஹம் பண்ணினவர்களாவோம்" என்பது நீதிமன்றந்தோறும் இவர்களுடைய மறுப்பாக இருந்துவந்தது. இதை ஒரு அதிகாரியும் ஆமோதிக்கவில்லை. குருத்ரோஹம் செய்யக்கடவோமல்லோமென்று இவர்களாக விலகினார்கள். காலைப்பிரண்டிச் சண்டையிடுவோமென்று புகுவாருமுளர். *வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமுங் கொண்மின்* என்பதுதான் ஸாத்விகர்களின் க்ருத்யமாயிருந்து வருகிறது. (2) இயல்கோஷ்டி சில ஸமயங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படுகிறதென்னும் விஷயத்தைப்பேச வழிப்போக்கர்களுக்கு என்ன அதிகாரம்? கோவில்களில் புராதனமாக ஏற்பட்டுள்ள உத்ஸவங்களைத்தான் செய்வது, புதிதாக எந்த உத்ஸவமும் செய்வதில்லை என்று நிபந்தனை ஏற்பட்டிருக்கவில்லை. நடந்து கொண்டிருந்த உத்ஸவங்களை நிறுத்துவதும், புதிய உத்ஸவங்களைத் தொடங்குவதும் அதிகாரிகளின் இஷ்டத்தையும் ஸௌகரியத்தையும் பொறுத்து ஆகின்றது. அப்படியே இயல்கோஷ்டியும். இதில் இந்த அநாமதேயர்களுக்கு என்ன விசாரம்? "காகஸ்ய கதிவா தந்தா:" என்றாற்போன்ற வீண்விசாரங்களிலே இவர்கள் கைவளரட்டும். நாம் கொண்ட சாஸ்த்ரார்த்த விசாரங்களுக்கு இவர்கள் மறுமொழி கூறுவதை விட்டு இத்தகைய கதைகளைப் பரப்புவது இவர்களுக்கு மிகவும் அவசியமே. .... .... .... .... .... (15)

## ந்ருஸிம்ஹ ப்ரியா நிரீக்ஷணம்.

### 16. பதினுருமுபந்யாஸம்—பிரபந்தாநுஸந்தான தீபிகாவிமர்சம்.

சார்வரிஷு புரட்டாசி ஐப்பசிமீ 1960 ஸெப்டம்பர் அக்டோபர்மீ வெளி வந்த ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகையில் அபத்தங்களும் அஸம்பத்தங்களுமான வியாஸங்கள் பல வெளிவந்திருக்கின்றன. அவற்றைக் களைந்திடுவோமினி. விஷயப்பிழைகள் ஒருபுற மிருக்க, எழுத்துப் பிழைகளோ அபாரம். வடமொழியோ தென் மொழியோ எதிலும் தேர்ச்சி பெருதவர்கள் புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாய் எழுதத் தொடங்கிவிட்டால் "ஜநாவு ாதாவதூம் ஸஹ-ஹ-ணவரீணாஹி உநவொஷ-ஹாநம வொளஹாஷ-ஐ" என்று ஹட்டரருளிச் செய்த சொல்நயமும் பொருள்நலமும் எங்ஙனே வந்துபுகும். "ஸ்ரீ அஹோபில மடம்" என்று மகுடமிட்டு எழுதப்பட்டதோர் நீண்ட வியாஸத்தில் "ஊாOாவதூம் யதிঃ க-ய-ஶாக" என்றொரு வசனம் காட்டப்படுகிறது. உOவதெঃ கஊஷ—ஊாOவதூழ என்ருகுமேயல்லது மாடாபத்யம் என்ருவதற்கு வழியில்லை யென்கிற இச்சிறு விஷயத்தையுமறியாதவர்கள் ஏடுகளை நிரப்புகிருர்கள். இந்த வசனத்தைப் பாமரர்கள் மாடாபத்யம் என்று வழங்கி வருவதுண்டு. பண்டிதர்களென்று பெயர் சுமப்பவர்களும் அதையே பின்பற்றுகிருர்களென்ருல் இவர்கள் விவேகிகளா? ப்ரஹ்மபுரம் ஸ்வாமியொருவர் ஸாதித்தார்—(மடாதிபதி) என்கிற சொல்லில் (டா) என்று நீண்டு கிடப்பதனுல் அதற்குச் சேர மாடாபத்ய மென்றிருப்பதும் தகுதிதானே யென்று. மற்ருெருவர் ஸாதித்தார்—உOெ ஷிதாঃ—ஊாOாঃ; ஊாOாநாழ சுவதூம் ஊாOாவதூழ; தக யதிঃ க-ய-ஶாக. என்று. மேன்மேலும் அபத்யம் இல்லையானுல் விஷ்ணுபூஜாபிவிருத்தி ஆகமாட்டாதாகையால் ஊாOாநாழ சுவதூம் ஆகும்படி செய்து போரவேணுமென்று பொருத்தமாகத்தானே சொல்லியிருக்கிறது என்ருர். ஹாஹா! இவர்களுடைய சொல்நலங்களும் பொருள் நயங்களும் பரம விலக்ஷணங்களென்பதற்கு இவ்வளவே போதும். 'ஶஷ-ஊஹ ஶாநெ ஸ-ர ஶாஜவிஷயঃ' என்னுமா போலே இவர்களெழுதுமவற்றை இவர்களினத்தாரே மெச்சவும் நச்சவும் ப்ராப்தியுடையார்.

பிரபந்தாநுஸந்தான தீபிகை யென்று ஒரு அபத்தச்சுவடியை 70, 80 ஆண்டுகட்குமுன் கடல்மங்கலம் வீராச்சி யென்பாரொருவர் ஶாஜெூகி நிஷிஃமாக எழுதி வெளியிட்டதுண்டு. அதை இப்போது ந்ருஸிம்ஹ ப்ரியை கிளப்பிப் புநர்முத்ரணம் செய்திருக்கின்றது. இது இன்னருடைய க்ருதி என்பதை ஒருமூலையிலும் காட்டாமல் ஆதியோடந்தமாக அபத்த கதைகளைக் கூசாமல் பெய்திருக்கின்றது. இருக்கட்டும். திருவாய்மொழியில் (4—10—5) *இலிங்கத்திட்ட புராணத்தீரும்* என்கிற பாசுரத்தின் வியாக்கியானம் வெகு அற்புதம். ஆழ்வார் 'இலிங்க புராணத்தீரும்' என்றருளிச்செய்யாமல் *இலிங்கத்து இட்ட* என்றருளிச் செய்திருப்பதன் சுவையை யறிந்து நம்பிள்ளையருளிச் செய்ததாவது,

"ராஜஸமாயும் தாமஸமாயுமுள்ள புராணங்களிற் காட்டில் வாசி இதுவாயிற்று; அவ்வவற்றினுடைய நிஷ்கர்ஷம் அந்த அந்தப் புராணங்களினுடைய உபக்ரமத்திலே காணலாயிருக்கும். *யங்மயஞ்ச ஜகத் ப்ரஹ்மந்* என்று பொதுவிலே ப்ரச்நம்பண்ண *விஷ்ணோஸ் ஸகாஶாதுத்பூதம்* என்று கொண்டு கோல்விழுக்காட்டாலே பரிஹாரமாயிருக்கையன்றிக்கே, ஒரு வ்யக்தியை நிர்தேஶித்து அதுக்கு உத்கர்ஷத்தைப் பண்ணித்தா

வேணுமென்று சொன்னவனும் தமோகுணபிபூதனைச் சொல்லி, கேட்டவனும் தமோ குணபிபூதனைக் கேட்க, ஒரு லிங்க விஷயமாக இடப்பட்ட புராணமாயிற்று. இனி கண்ணனைப் புண்டரீகாக்ஷனைக் கவிபாடித்தரவேணுமென்றும், எருமையை யானை யாகக் கவிபாடித்தா வேணுமென்றும் சொல்ல அப்படியே கவிபாடுவாரைப்போலே யிருப்பதொன்றிறே அவர்களுக்கு இல்லாத உத்கர்ஷங்களையிட்டுச்சொல்லுமது. தான் சொல்லப்புக்க வஸ்துவுக்கு உத்கர்ஷத்தை ஸாதிக்க மாட்டாதே மற்றுள்ளவற்றி னுடைய உத்கர்ஷத்தைக் கழிக்கமாட்டாதே யிருப்பதொன்றாயிற்று."

என்று. ஈட்டு ஸ்ரீஸூக்திகளை ஸங்க்ரஹித் தெழுதப் புகுந்த பரகால ஜீயர் பதினெண்ணா யிரப்படியில் இவ்விடத்திற்கு எழுதியுள்ளதும்

"யஞ்மயஞ்ச என்னும்படி ஸாமாந்யமாக ஆக்ஷேபம் பண்ணுமதன்றியே ஒரு வ்யக்தியை நிர் தேஶித்து அதுக்கு உத்கர்ஷத்தைப் பண்ணித் தரவேணுமென்று தமோகுணபிபூதன் அர்த்திக்க, சொல்லுமவனும் தமோகுணபிபூதனை லிங்கத்துக்கு உத்கர்ஷத்தை ஏறிட் டுப் பண்ணினன்" என்றே.

அங்ஙனம் ஏறிட்டு இவர்களெழுதிவைத்த அபத்தச் சுவடிகளில் *ஹபாவரு ஈஜை:* என்ற கணக்கிலே இப்போது பிரபந்தாநுஸந்தான தீபிகை தலைகாட்டுகிறது. இப்போது இதை வெளியிட்டவர்களின் கருத்து யாதெனில்; இவர்களின் அபத்த அஸம்பத்தங்களை யெல்லாம் நாம் விபுலமாக மூதலித்திருப்பவற்றுக்கு இந்த ப்ரபந்தாநுஸந்தானதீபிகை விடையளித்து விடுமென்றும்; இதனால் நம்முடைய வாதங்களெல்லாம் கண்டிக்கப்பட்டு விடுமென்றும் இவர்கள் கருதியது. உண்மையில் பேர்க்கவும் போராத நம்முடைய ஸகல வாதங்களுக்கும் வெற்றிக்கொடி நாட்டுவதற்கே இந்த ப்ரபந்தாநுஸந்தான தீபிகை இத் தருணத்தில் கிளம்பியதென்பதை ஊர்ஜிதப்படுத்துவோமாக. .... .... (16.)

### 17. பதினேழாமுபந்யாஸம். இதுவுமது.

இந்த ப்ரபந்தாநுஸந்தான தீபிகையின் ஆரம்பத்தில் சில வரிகளுக்குப்பின்

"இவைகளின் விரிவைக் கலியனருள்பாடு ப்ரபந்தநிர்வாஹம் பன்னீராயிரப்படி மூவா யிரப்படி குருபரம்பரா ப்ரபாவம் நாலாயிரத்தனியன் வியாக்கியானம் ஆகிய இவை களிற் பறக்கக் கண்டு கொள்க."

என்றெழுதப்பட்டுள்ளது. மேலெடுத்த வாக்யத்தில் பறக்க என்றே இவர்கள் எழுதியும் அச்சிட்டு மிருப்பது. (விரிவாக) என்று பொருளாகில் (பரக்க) என்று இடையினரகரமிட்டு எழுதியிருப்பர்கள். 'காற்றிலே பறந்தோடும்படி' என்னும் பொருளையே இவர்கள் விவக்ஷித்தார்களென்பதை தெய்வம் வ்யக்தமாக்கி வைத்தது. அது கிடக்க. மேலே உதாஹரித்த வாக்யத்தில் கலியனருள்பாடு என்றும், ப்ரபந்த நிர்வாஹம் என்றும், பன்னீராயிரப்படி மூவாயிரப்படி யென்றும், நாலாயிரத்தனியன் வியாக்கியான மென்றும் சில புத்தகங்கள் காட்டப் பட்டிருக்கின்றன. அவற்றில் கலியனருள்பாடென்பது பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்ததாக ஆலித்தம். அதில் இவர்களுடைய பொய்யுரைகளுக்கு ஆதாரலேசமும் கிடை யாது. இருந்தால் அந்த கலியனருள் பாட்டை அடுத்த ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகை வெளி யிடட்டும். ப்ரபந்த நிர்வாஹம் என்று காட்டப்படுகிற தமிழாரவிந்தமும் ந்ருஸிம்ஹ ப்ரியா விலேயே நறுமணம் கமழட்டும். பன்னீராயிரப்படி யென்பது வைதிக புத்ரவத் பிறப்பகத்தே மாண்டொழிந்ததாக இவர்களே எழுதி முடித்திட்டார்கள். மூவாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தை ஸ்ரீ பரகால மடம் அச்சிட்டு வைத்தது. அது படுகிறபாடு (ஸ்ரீராமாநுஜன்

140ல் வெளி வந்த) ராமசாமி ராமாயணத்தில் கண்டிருப்பதே. அந்த மடம் அதைத் தவறுக அச்சிட்டுவிட்ட தென்றால் இனி இந்த மடம் தவறின்றிக்கே ஒழுங்காக அச்சிட்டு வெளி யிடட்டும். அதுகாறும் அதைப்பற்றின பேச்சு வேண்டா. பிறவாதவர்களையும் பிறந்து முடிந்து போனவர்களையும் ஸாக்ஷியிடுவது பரிஹாஸ்ய மென்பதை அறியார்களா இவர்கள்?

முடிவாக, நாலாயிரத்தனியன் வியாக்கியானமென்று ஒன்று காட்டப்படுகிறது. அது யார் செய்தது? எங்குள்ளது? வஸ்து உள்ளதானுல் அதையும் ந்ருஸிம்ஹப்ரியாவே வெளியிடட்டும். எழுதத் தெரியாதவர்களையும் 'ஸ்ரீமதே வேதாந்தகுருவே நமஹா' என்று நீட்டுமவர்களையும் எழுதக் கிளப்பிப் பத்ரிகையை ரஸா பாஸமாக்குவதிற் காட்டிலும் முன்னோர்கள் எழுதிவைத்திருப்பதாக இவர்கள்தாம் காட்டுகிற நூல்களை சுத்த ஆதியாக வெளியிட்டுப் பத்ரிகையை ஸுமனோமனோஹரமாக்குவது நலமன்றோ!

நாலாயிரத்தனியன் வியாக்கியானம் தங்களுக்கு முண்டென்று காட்டிக்கொள்ள விரும்பிய இவர்கள் ராமாநுஜ தயாபாத்ரத்தனியன் வியாக்கியானத்தைத் தமிழ் தெலுங்கு லிபிகளில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்களே; அதிலிருந்து கக்கின சாயம் பலகால் வெளி வந்துளது. அதன் ஸாரம் கேளீர்; ராமாநுஜ தயாபாத்ரத் தனியன் நவீனமன்று, புராதனமே யென்று இவர்கள் வாதிக்கும்போது ஒரு காரணம் வெளியிட்டார்கள்: அதாவது, இந்தத் தனியனுக்கு வாத்ஸ்ய அஹோபிலா சாரியர் என்பவர் வியாக்கியானம் செய்திருப்பதாகவும், அவர் ஐந்நூறு வருஷங்களுக்கு முற்பட்டவ ரென்றும் ஆகவே இத்தனியன் நவீனமாயிருக்க முடியாதென்றும் எழுதினார்கள். அந்த வாத்ஸ்ய அஹோபிலாசாரியர் செய்த வியாக் கியானம் அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் அவருடைய அழுகை ஸ்பஷ்டமாகக் காண்கிறது. அதாவது, இந்த ராமாநுஜ தயாபாத்ரத் தனியன்தான் கோவில்களிலெல்லாம் சொல்ல வேண்டும்; ஆனல் இதைச் சொல்லாமல் வேறு தனியனே [ஸ்ரீசைலேச தயாபாத்ரத் தனியனே] எங்கும் வெற்றிபெற்றிருப்பதானது கலியின் கோலாஹலம்; பொறாமைக்காரர் களின் துஷ்ட சேஷ்டை என்று நிந்தித்திருக்கிறார். இதனல் இந்தத் தனியனுடைய பங்கமே அவராலும் வெளியிடப்பட்டதாயிற்று. உண்மையில் அந்த அஹோபிலாசாரியார் சில வருஷங்களுக்கு முன்பிருந்தவரே யொழிய 500 வருஷங்களுக்கு முன்பிருந்தவருமல்ல. இந்த பாத்ரத் தனியனைப் புராதனமென்று காட்டிக்கொள்வதற்கு இவர்கள் படுகிறபாடு வாசாமகோசரம். எப்பாடு பட்டாலும் அது நவீனமென்பதே கல்வெட்டாகி நிற்கிறது. ராமாநுஜா பாத்ரம் ஒரிடத்திலும் செல்லுபடியாகவில்லை யென்றும் எங்கும் ஸ்ரீசைலேச தயாபாத்ரமே ஓங்கிவருகிற தென்றும் ஸ்பஷ்டமாக வெடுத்துக்காட்டி, தென்கலையார்களை எம்பெருமான் தீவ்ரமாக தண்டிக்க வேணுமென்று பெருங்குரலிட்டு அழுதிருக்கிற வாத்ஸ்ய அஹோபிலாசார்யருடைய வியாக்கியானத்தைக் கண்ட பாடம் செய்து ஸதா அநுஸந்திப் பதுதான் இவர்களுக்குத் தஞ்சமாகக் கடவது. அந்த வாத்ஸ்ய அஹோபிலாசார்யர் பரகாலமடத்துப் பதினைந்தாவது பட்டக்காரரிடத்தில் காலக்ஷேபம் செய்தவர் என்றெழுது கிறது அந்த மடம். அஹோபிலாசார் காலத்தில் ராமாநுஜா பாத்ரம் பங்கப்பட்டதே யொழிய பரிசு பெறவில்லை யென்பதுதான் அவருடைய விபுலநிந்தோக்திகளால் விசத மாகிறது. ஆக, இவர்கள் காட்டும் நவீநகல்பிதங்களான நூல்களினல் இவர்களின் பங்க மொழிய வேறொன்றும் தேருதென்பது வெளிப்படை.

தாதாசாரியர்கள் ஸ்ரீபெரும்பூதூர் எம்பெருமானர் ஸன்னிதியில் மௌரவமாக மரி யாதைகளை யநுபவித்துக் கொண்டிருந்த காலத்தில் [அதாவது, மணவாளமாமுனிகளிடத்தில்

த்வேஷம் கொள்ளாமலும் அபசாரப்படாமலுமிருந்த காலத்தில்] *சீராருமெதிராசர் திருவடிகள் வாழி* இத்யாதிகளான வாழி திருநாமப் பாசுரங்கள் மூன்றையும் கோஷ்டியார் ஸேவிக்கும்போது அஸூயை கொள்ளாமல் ஆச்ரம் காட்டி வந்தார்கள். கண்டா சேஷாசாரி கலஹங்களுக்குத் தொடக்கம் செய்த காலத்தில் இந்த வாழி திருநாமப் பாசுரங்கள் மணவாள மாமுனிகளருளிச் செய்த ஆர்த்திப் பிரபந்தத்திலுள்ளவை யென்றறிந்து, இவை இங்கே புதிதாகச் சொல்லப்படுகின்றன வென்று ஆக்ஷேபித்தும், தான்வேறு ச்லோகங்கள் சொல்லிக் கூச்சலிட்டும், இதற்காக 40 ரூ. அபராதம் விதிக்கப்பட்டுச் செலுத்தி முடிந்தார். இதெல்லாம் நியாயாலய ரிகார்டுகளில் அசைக்க முடியாதபடி ஏறியுள்ளவை. இந்த பிரபந் தாநுஸந்தான தீபிகை யெழுதுவது என்னவென்றால்

"முன்னொருகால் பிள்ளான் ஆச்சான் ஆண்டான் இவர்களருளிச்செய்த *சீராருமெதிராசர்* அறுசமயச் செடி *சங்கரபாஸ்கர* ஆகிய இம்மூன்று பாட்டுகளையும் ஸ்ரீபெரும்பூதூரில் நித்யமாக அநுஸந்திக்கும்படிக்கு நைனாராசாரியரும் ப்ரமதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும் கட்டளையிட்டதாக"

எழுதுகிறது. வெட்கம் சிக்கமென்பது இப்படியும் மறைந்தொழியுமா? இதற்குமேல்

"*கோதை பிறந்தவூர்* பாதகங்கள் தீர்க்கும்* என்கிற இரண்டு பாசுரங்களைத் திருப்பாவை நாள் பாட்டு சாத்தினபின்பு சில திவ்ய தேசங்களில் அநுஸந்தித்துக்கொண்டு வருகிறார்கள். அங்குள்ளார்களும் தேசிக ப்ரபந்தம் சாத்தும்போது அவ்விரண்டு பாசுரங்களை அநுஸந்தியாமல் திருப்பாவை நாள்பாட்டுக்குப் பின்பு தேசிகர் பிரபந்தத்தையே சாத்திக்கொண்டு வருகிறார்கள்"

என்றெழுதுகிறது. இந்த வாக்யத்திற்கு ஏதேனும் அர்த்தமுண்டோ? சில திவ்ய தேசங்களென்றால் அவை எவை? அங்குள்ளார்களுமென்பதனால் விவக்ஷிதர்கள் யார்? என்று விசாரங்களைச் செய்தால், சில தேவாலயங்களில் இவர்கள் ஈட்டிப் போட்டிச் சண்டை தொடங்கின காலத்தில் பிரபந்தசாரம் பிள்ளையந்தாதி முதலானவை போலே இந்த தீபிகையும் கல்பித்தெழுதிவைக்கப்பட்ட தென்பது நிஸ்ஸந்தேஹமாக விளங்கும். ... ... (17.)

### 18. பதினெட்டாவது உபந்யாஸம்.—யதிகளின் ஸஞ்சாரப்பெருமை.

"ஸ்ரீ அழகிய சிங்கரின் ஸஞ்சாரக்ரமம்" என மகுடமிட்டுப் பிரசுரம் செய்துள்ளதொரு சிறுவியாஸத்தில்–, 11–9–60 தேதியில் குடவாசல் திருவாரூர் போவதற்கு முன் ஓரிடத்தில் தங்கினதாக எழுதிவருகையில் அங்கே

"திருவெண்ணழி ப்ரதக்ஷிணமானவுடன் ஸ்ரீ அழகிய சிங்கர் அரத்தமண்டபம் எழுந்தருளியிருந்து.........ஸ்ரீராமாநுஜ தயாபாத்ரம் சொல்லி உபக்ரமித்து நித்யாநுஸந்தானம் பூராவும் ஸேவித்து முடித்து ப்ரஸாத விநியோகங்களும் ஸ்ரீ வேதாந்த தேசிகன் வாழி திருநாமம் ஸ்தோத்ரபாடங்களுடன் அதிவிமரிசையாக நடந்தேறியது"

என்றெழுதப்பட்டுள்ளது. இங்கே ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒருவர் ஆங்காங்கு நடக்கும் ததியாராதன கோஷ்டிகளில் புஜிக்கப் போவராம். அநபிஜாதரான அவரை ஓரிடத்திலும் பங்க்தியில் சேர்த்துக்கொள்ளாமல் நடையிலே உட்காரவைத்துச் சோறிடுவர்களாம். அந்த அவமானம் பொறுக்கமாட்டாத அவர் ஒன்று செய்தாராம்; அஃதென்னவென்றால், யாராவது அவருடைய க்ருஹத்தில் வந்து 'அவர் இருக்கிறாரா?' என்று வினவினால் "உள்ளே முதல் பங்க்தியில் அமுது செய்து கொண்டிருக்கிறார்" என்று விடை கூறும்படி தேவியாருக்கும் மக்களுக்கும் கட்டளையிட்டு வைத்தாராம். அதன்படி அவர்கள்,

யார் எந்த ஸமயத்தில் வந்து கேட்டாலும் "உள்ளே பெருமாள் ஸன்னிதியில் முதல் பங்க்தியில் அமுது செய்து கொண்டிருக்கிறார் ஸ்வாமி" என்று விடை கூறிக்கொண்டிருப்பர்களாம். இக்கதை மெய்யாயிருக்குமோ என்கிற நமது நெடுநாளைய ஸந்தேஹம் தீர்ந்து விட்டது. இவர்கள் கல்பித்த பாத்ரத்தனியனில் ஸ்ரீமஹுயோமம் இல்லையே யென்கிற குறையையும் இவர்கள் எளிதாகத் தீர்த்துக் கொண்டாரானார்கள் "ஸ்ரீராமாநுஜதயாபாத்ரம் சொல்லி உபக்ரமித்து" என்று மம்ஸீரமாக வெழுதியதனால். .... .... .... (18)

## 19 பத்தொன்பதா முபந்யாஸம்—சுடராழிவ்யாஸவிமர்சம்.

இதே ந்ருஸிம்ஹப்ரியாவில் "சிறிய திருமடல் பாடல்கள்" என மகுடமிட்டுப் பிரசுரம் செய்யப்பட்டுள்ள வியாஸம் வெகு அற்புதமானது. இதை யெழுதினவருடைய பெயர் சுடராழி யென்பதாம். D. T. என்பவர் திருமடல்களைப் பலபாட்டுக்களாகப் பிரித்துக் காட்டிச் செய்த மஹோபகாரத்திற்கு இன்னது கைம்மாறென்று தெரியாமல் திகைத்து நிற்கிறாராம் இந்த சுடராழி ஸ்வாமி. தலையல்லால் வேறில்லை யென்கிறார். அவருடைய தலைவிதிக்குத் தப்பிப்பது தவிர வேறில்லை யென்று பொருளா மிதற்கு. என்? அவர்க்கு நித்ய போக்ய அம்ருதமாக அவதரித்துள்ள உபந்யாஸ விம்சதியை நிச்சலும் அவர் திருச்செவி சாத்தும்படி வாசிப்பது தக்க கைம்மாறு செய்ததாகுமே. "தமிழிலக்கணப்படி ஒரே பாட்டான சிறிய திருமடலில்" என்று தமது கையாலெழுதிக் கொண்டே காடுபாய்ந்து எழுதுவதும் ஒரு தலைவிதிதான். மடலூரப்புகுந்த ஆழ்வார் இலக்கணவரம்புக்கு உட்பட்டுப் பாடமுடியாமல் போய்விட்டதாம். கைக்கிளைக்காமங் கொண்டு ஆழ்வார் புலம்புகிறாராம். அதனாலும் திருமடலைப் பலபாட்டுக்களாகவே பிரிக்க வேண்டுமாம். முடிவில் எழுதுகிறார்கள்—

"மடல்களைப் பலபாட்டுகளாகப் பிரித்தது ஒருவகையில் தகும் என்று பெருமாள்கோயில் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமியும் இசைந்துள்ளார்" என்று. இந்த ஒரு அஸ்த்ரமே போதுமேயிவர்களுக்கு. இதையே கொட்டை கொட்டையான எழுத்தில் அச்சிட்டு ஊர்தோறும் வீதிதோறும் ஒட்டவைத்து க்ருதக்ருத்யர்களாகலாமிவர்கள். (19)

## 20. இருபதாவது உபந்யாஸம்—நிகமனம்.

இந்த உபந்யாஸ விம்சதியின் முகவுரைக்கு முன்னே (ஸ்ரீ ராமாநுஜன் 140ல் பக்கம் 6ல்) "முடிவாக இந்த விஷயமொன்று கவனிக்கத்தக்கது" என்று மகுடமிட்டு நானெழுதியிருப்பதை மீண்டும் இங்கு நினைப்பூட்டுகிறேன். அதாவது,

"மாத்வ மடங்களில் உடுப்பி ஸ்ரீபண்டாரகேரி மடமென்பது ஒன்று. இந்த மடாதிபதி தற்காலம் பெங்களூரில் வாழ்கிறார். அங்கிருந்து நேற்று 1—9—60 தேதியில் ஸம்ஸ்க்ருத பாஷையில் ஒரு சிறு விளம்பரமச்சிட்டு நாடெங்கும் பிரசுரம் செய்திருக்கிறார். விஷயமென்ன வென்றால், ப்ரஹ்ம ஸ்ரீ அனந்தக்ருஷ்ணசாஸ்த்ரிகள் மத்வமத க்ரந்தமொன்றை தூஷித்து ஏதோ எழுதி யிருக்கிறாராம். அது விரைவில் கண்டிக்கப்படுமென்று எழுதிவிட்டு

"நீர் எழுதியிருக்கிற தூஷணைகளை பண்டிதர்களின் முன்னிலையில் ஸரியானதென்று ஸ்தாபித்து விடுவீரானால் ஒவ்வொரு தூஷணத்திற்கும் ஆயிரம் ரூபாய் வீதம் த்ரவிய ராசியை உமக்குப் பரிசளிக்கக்கடவோமென்று ப்ரதிஜ்ஞை பண்ணுகிறோமிதனால்"

என்று தெரிவித்திருக்கிறார்கள் அந்த மாத்வ மடாதிபதிகள். நாமும் (P.B.A.) இப்படி

ப்ரதிஜ்ஞை பண்ணத் தடையில்லை. ஆனால் மடாதிபதிகளைப்போல் பொருட்குவியல் கொடுக்க சக்தியில்லை. அதற்கு பதிலாகப் பலநூற்றுக் கணக்கான தோப்பிக்கணம் ஸன்னிதி வீதியில் போடத் தடையில்லை. ஸ்ரீ. D. ராமஸ்வாமி ஐயங்கார் தாம் எழுதியிருக்கிற தென்னசார்ய தூஷணைகளைப் பண்டிதர்கள் முன்னிலையில் ருஜுப்படுத்தினால்.

(1) தேசிகர் காலத்தில் ஸ்ரீரங்கத்தில் ஆசார்யபதவியில் வாழ்ந்தவர்களுக்கு ஸ்ரீபாஷ்ய பரிசயம் கிடையாது. (2) அந்த ஆசார்யர்களும் தச்சிஷ்யர்களும் தேசிகனைப் பல வகையாக ஹிம்ஸித்தார்கள். (3) ஆசார்ய ஹ்ருதயகாரர் பொறாமைகொண்டு தேசிகனோடு போட்டியிட்டார். (4) திருவாய்மொழியின் வியாக்கியானங்களான 9, 12, 24, 36 ஆயிரப்படிகளிலுள்ள தோஷங்களை யெல்லாம் தேசிகர் களைந்துவிட்டார்.

என்று இவர் (D. R.) எழுதியுள்ள இந்த நான்கு தூஷணைகளை இவர் ஸமர்த்திக்க முன் வருவரா? சே. கி. வ. என்றும், ஐயா, ஸ்ரீநி....என்றும் அபத்தக்கையொப்பங்களை அறவே விட்டொழித்து நேரான பெயருடன் நேர்மையாக விஷயம் சொல்லுவரா?
ஸ்ரீ காஞ்சி P. B. அண்ணங்கராசாரியர், 3—9—1960." என்றெழுதியிருந்தோம்.

மேலே உதாஹரிக்கப்பட்ட மாத்வமடாதிபதியின் விளம்பரத்தைக் கண்ட ப்ரஹ்மஸ்ரீ அனந்தக்ருஷ்ண சாஸ்த்ரிகளவர்கள் 12-9-60 தேதியில் பெங்களூரில் அந்த மடாதிபதியிடம் நேராகச் சென்று இரண்டு நாள் அங்கே வஸித்து அந்த மடாதிபதிகளிடம் வார்த்தையாடி "இப்போது எனக்கு அவகாசமில்லை; நான் காஸீயாத்ரை போகவேண்டியிருக்கிறது; எட்டு மாதங்கள் எனக்கு அவகாசமளிக்கவேணும்; அடுத்த ஜூன் மாஸத்தில் நாம் சாஸ்த்ரார்த்த ஸபை வைத்துக் கொள்ளலாம்; இப்போது எனக்கு ஸௌகரியமில்லாமையால் செலவு பெற்றுக்கொண்டு போகிறேன்" என்று சொல்லிப் புறப்பட்டுப் போனாராம். இதை அந்த மடாதிபதிகள் 12-10-60 தேதியினன்று ஸம்ஸ்க்ருத பாஷையில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அதில் எழுதியிருப்பதாவது, 'சாஸ்த்ரிகளே! நீங்கள் காலதாமதம் செய்வதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது; இதை நேரிலேயே சொல்லியிருக்கிறோம்; இப்போது பலரறியப் பிரசுரமும் செய்கிறோம்.' இத்யாதிகள் எழுதியிருக்கிறார்கள். இந்த மடாதிபதிகள் முதன் முதலாக வெளியிட்ட விளம்பரத்தை ஸ்ரீ அனந்தக்ருஷ்ண சாஸ்த்ரிகள் அலக்ஷியம் செய்யாமல் 'நாம் பதில் சொல்லித் தீரவேண்டியது அவசியமே' என்று தம்முடைய கடமையை யுணர்ந்து மடாதிபதிகளிடம் நேரில் சென்று எனக்கு அவகாசமளிக்கவேணுமென்று கேட்டுக் கொண்டது ப்ராமாணிகமான வழி, ருஜுவான ஸரணி. நம்முடைய ஸம்ப்ரதாயத்தையும் ஸதாசாரியர்களையும் வாசாமகோசரமாக தூஷிக்குமிவர்கள் இத்தகைய ப்ராமாணிக ஸரணியை அவலம்பித்து விடையிறுக்க முன்வருமவர்களல்லர். இவர்கள் அஸ்தானே அகாண்டே செய்திருக்கிற தூஷணைகளை உலக முணர எடுத்துக்காட்டியிருக்கிறோம். "அப்படி நாங்கள் தூஷித்தது பிசகுதான்." என்று க்ஷமை வேண்டுவதோ, "நாங்கள் தூஷித்ததை இதோ ஸ்தாபிக்கிறோம்" என்று பதில் விஷயங்களை யெழுதிப் பிரசுரம் செய்வதோ இரண்டத் தொன்று இவர்களுக்கு உற்றதாகும். சே. கி. வ. என்றும்; ஐயா. ஸ்ரீநி என்றும் அபத்தக் கையொப்பமிட்டு அஸம்பத்த ப்ரலாபங்கள் வெளியிட்டவற்றுக்கு அநுதாபமும் காட்டவேணும். ... ... ... ... (20)

---

ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசாரியர் எழுதிய
உபந்யாஸவிம்சதி முற்றிற்று.

---